30.00

கற்பகதரு · பயிற்சியா?

பக்கம் 02 சூரியகாந்தி · பக்கம் 05 சூரியகாந்தி · பக்கம் 15 · பக்கம் 25 சூரியகாந்தி

www.onlineuthayan.com

பக்கங்கள் : 60

# உதயன்

சுடர் 27
கதிர் 232

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை (15/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# கிழக்கில் அரசுடன் சேர மு.கா. முடிவு
# இதனால் கட்சி பிளவுபடும் அபாயம்

## தனித்து நிற்பதற்கு ஒரு பகுதியினர் தயார்

கொழும்பு, ஜூலை 15
கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. கட்சித் தலைமையின் இந்த முடிவு கட்சியை இரண்டாக உடைக்கும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தன.

கட்சியின் அதியுயர்பீடத்துக்குள்ளேயே இந்த முடிவு தொடர்பில் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

''முஸ்லிம்கள் மீதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் இந்த அரசுடன் சேர்ந்து தேர்தலைச் சந்திப்பதில் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலருக்கு உடன்பாடில்லை. பிரிந்து சென்று தனித்துப் போட்டியிடுவதற்கு அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கொண்டு போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து அவர்கள் யோசிக்கிறார்கள். இதனால் கட்சியில் விரைவில் பிளவு தோன்றும்'' 04

## ஹக்கீமின் கோரிக்கையை நிராகரித்தார் ஹசன் அலி

பிந்திய செய்தி

கொழும்பு, ஜூலை 15
கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடும்படி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளை கட்சியின் செயலாளர் ஹசன் அலி நேற்று மாலை உறுதியாக நிராகரித்து விட்டார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

அரசுக்கும் மு.காவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது என்றும்

முதலாம் பிரிவு ஆசனப் பங்கீடுகள் குறித்தும் இரண்டாவது பிரிவு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது மற்றும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கி இருந்தது என்றும் -

இருப்பினும் முதலாவது பிரிவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மட்டுமே அரசு உடனடியாக கையெழுத்து இட முன்வந்தது என்றும் -

இரண்டாவது பிரிவில் கையெழுத்து இடுவதற்கு அரசு 04

## டில்றுக்ஷன் தொடர்ந்தும் கோமாவில்

யாழ்ப்பாணம், ஜூலை 15
கொடூரமாகத் தாக்கப்பட்டுத் தொடர்ந்தும் கோமா நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அரசியல் கைதியான டில்றுக்ஷனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே கொழும்பு றாகம வைத்தியசாலையில் சிகிச்சை 04

## இலங்கையில் காணாமற் போனோர்
## ஜெனிவா கூட்டத்தில் விரிவாக ஆராய்வு

ஜெனிவா, ஜூலை 15
உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய - இலங்கையில் காணாமற் போனோர் விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின், பலவந்தமாக அல்லது தன்னிச்சையாகக் காணாமற் போனோர் தொடர்பான செயற்பாட்டு அமைப்பின் 97ஆவது கூட்டத்தொடரில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமற் போனோர் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய 13 சம்பவங்கள் தொடர்பாக இந்தச் செயற்பாட்டு அமைப்பு ஆராய்ந்துள்ளது.

அத்துடன் 04

## இந்திய வீட்டுத் திட்டத்தின் 2ஆம் கட்டம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூலை 15
மக்களுக்கே நேரடியாகப் பணத்தை வழங்கி வீட்டுத் திட்டப் பணிகளை முன்னெடுக்கும் வகையில், இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்ட ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்திய அரசின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் இரண்டாம் கட்டமாக வடக்கு-கிழக்கில் 43 ஆயிரம் வீடுகள் அமைக்கப் பட்டுள்ளன.

இந்திய அரசு வடக்கில், முன்னோடித் திட்டத்தில் 1000 வீடுகளை அமைத்து வருகின்றது. இந்த ஆயிரம் வீடுகளை அமைப் பதையும் இந்திய நிறுவனமே மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிறுவனம் வீடுகளை மக்களுக்கு கட்டிக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் அமைக்கப்படும் வீடுகள் தரமற்றவையாக இருப்ப 04

## கூட்டமைப்பு சுயேச்சையாக போட்டியிட்டால் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 15
கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுயேச்சையாகப் போட்டியிட வேண்டும். அவ்வாறு சுயேச்சையாகப் போட்டியிட்டால் தாமும் ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

தமிழத் தேசிய மக்கள் முன்னணி 04

## கூட்டமைப்புடன் களமிறங்க முஸ்லிம் வேட்பாளர் ஆர்வம்

### பரிசீலிப்போம் என்கிறார் மாவை



கொழும்பு, ஜூலை 15
கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இணைந்து போட்டியிடுவதற்கு முஸ்லிம் வேட்பாளர்கள் ஆர்வத்துடன் விண்ணப்பித்துள்ளதாக கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

முஸ்லிம் வேட்பாளர்களின் இந்த விண்ணப்பங்கள் குறித்து கூட்டமைப்டன் உயர் பீடம் இன்று ஞாயிற்றுக்கிழமை கூடித் தீர்மானிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்குத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. அவர்களின் இந்தத் தீர்மானம் முஸ்லிம் மக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸின் இந்தத் தீர்மானத்துக்கான பதிலை 04

## வேட்பாளர் பட்டியல் திங்களன்று

கொழும்பு, ஜூலை 15
கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பற்றிய விவரங்களைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பாலும் நாளை திங்கட்கிழமை அறிவிக்கும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்துக்குள் உள்ளடங்கும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து கிடைத்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து வேட்பாளர் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருகோணமலைக்கான வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கான வேட்பாளர் பட்டியல்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை 04

## விசாரணையில் இருந்த போராளி காயங்களுடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,ஜூலை 15
பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரின் விசாரணையிலிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவர் கழுத்தில் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 7 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சின்னோடையை சொந்த இடமாகக் கொண்ட முருகேசு கதிரமலை (வயது-59) என்பவரே நேற்றுமுன்தினம் காலை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையில் கிழக்கு மாகாண, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசி 04

## ஆளும் தரப்பு வேட்பாளருக்கு பொலிஸ் 'கிளியரன்ஸ்' தேவை

கொழும்பு, ஜூலை 15
நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் ஆளும் தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் பொலிஸ் 'கிளியரன்ஸ்' சமர்ப்பிக்க வேண்டும். இது ஜனாதிபதியின் கண்டிப்பான உத்தரவு.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் உயர் மட்டக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ, வடமத்தி மற்றும் கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் 04

## உருத்ரகுமாரனை இலங்கைக்கு அழைக்கிறார் அமைச்சர் கருணா

கொழும்பு, ஜூலை 15
இலங்கைக்கு வந்து இங்கு நடைபெறும் அபிவிருத்திகளை நேரில் பார்வையிடுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான வி.உருத்ரகுமாரனுக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) அழைப்பு விடுத்துள்ளார்.

புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர்ந்த மக்கள் புலிகளால் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். உருத்ரகுமாரன் 04

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி சிவநகரில் நேற்று மீள்குடியமர்வு

### 162 குடும்பங்கள் அந்தரிப்பு

கிளிநொச்சி, ஜூலை 15
அடிப்படை வசதிகள் எதுவுமே செய்து கொடுக்கப்படாத நிலையில் புதுக்குடியிருப்பு - சிவநகர் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நேற்று மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

சிவநகரில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 384 பேரும், முள்ளிவாய்க்காலில் 21 04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசுடன் இணைந்து தமிழர்களை காட்டிக்கொடுத்துவிட்டது மு.கா.

## சரவணபவன் எம்.பி. சாடல்



வடமராட்சி, ஜூலை 15

தமிழ் பேசும் மக்களின் காணி, நிலம் காப்பாற்றப்படவேண்டுமானால் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இருக்கவேண்டும். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியோ அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களையும் காட்டிக்கொடுத்து, முஸ்லிம்களின் காணி, நிலம் உள்ளிட்ட பல்வேறு உரிமைகளையும் பறிகொடுக்கப் போகின்றது. இதனை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதன் தலைவர் ரவூப் ஹக்கீமும் என்றோ ஒரு நாள் உணரத் தான் போகிறார்கள்.

இவ்வாறு அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கூறினார்.

சனசமூக நிலையத் தலைவர் க.நிதர்சன் தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் பேசுகையில் கூறியதாவது-

இன்று அரசியலில் சமகாலப் பிரச்சினை குறித்து சில விடயங்களை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

சிறுபான்மை இனங்களாக தமிழர், முஸ்லிம்களுக்கிடையே பிளவினை ஏற்படுத்த அரசு முயன்று கொண்டிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் நிலையை உணராமல் செயல்படுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையில் தீர்மானம் எடுத்தவேளை அப்போது தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் அஷ்ரப் அங்கிருந்து ஆதரவு தெரிவித்திருந்தார். இதனை ரவூப் ஹக்கீம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்காகச் செயலாற்றியவர் அமரர் அஷ்ரப் அன்னாரின் வழியைப் பின்பற்றாமல் பதவிக்காகவே ஹக்கீம் அரசுக்குத் துணைபோகின்றார். ஐ.தே.கவில் இணைந்து போட்டியிட்டுவிட்டு, மற்றையவர்கள் அரசுடன் இணைந்து விட்டார்கள் என்று கூறியே அவரும் அரசுடன் இணைந்துகொண்டார்.

தம்புள்ள பள்ளிவாசல் தொடர்பாக அரசு தீர்க்கமான பதிலைக் கொடுத்ததா? புனித பிரதேச மாக்கப்பட மாட்டாது என அரசு சொன்னதா, இல்லவே இல்லை. அனுராதபுரத்தில் பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டன. அதுவும் அரசினால் பூசி மெழுகப்பட்டு விட்டது. கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுற்றதும் தம்புள்ளையில் பள்ளிவாசல் இருக்காது. கிழக்கு மாகாண முஸ்லிம்களின் காணிகளும் பறிக்கப்படும். இதனைப் பற்றி இணக்க அரசியல் பேசியும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கிழக்கு முஸ்லிம்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் சிறுபான்மை இனமாக இருந்து உரிமைகள் இல்லாத நேரத்தில் ரவூப் ஹக்கீம் அரசுக்குக் கைகொடுக்கின்றார். முடிந்தால் இதற்கு அவர் பதில்கொடுக்கட்டும். காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்று அரசிடம் முஸ்லிம் காங்கிரஸ்கட்சி கேட்டது. இதனை அரசாங்கம் கொடுக்குமா. கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர்தான் தெரியும். சிறுபான்மையினருடன் சேர்ந்து தனி அலகு வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கேட்டது. அவர்கள் கேட்காமலேயே அரசியல் தீர்வு வரும் வேளை முஸ்லிம்களுக்கென தனி அலகு தருவோம் என நாம் உறுதி அளித்திருந்தோம். தனி அலகைப் பெற்றுக்கொள்ளாமல் அரசுடன் சேர்ந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அரசு எதனையும் கொடுக்காது - என்றார். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பரிசில்களை வழங்கினார். (த-8-253)

## சந்திரிக்காவை ஜனாதிபதியாக்க முயற்சி செய்கிறாராம் ரணில்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவை போட்டியிடச் செய்ய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் இணைந்து இந்தத் திட்டத்தைத் தீட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பின் செயலாளர் லால் பெரேரா இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த இரகசியத் திட்டம் பற்றிய ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசிகளைக் கொண்டதாகவும், அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் ரணில் இவ்வாறான முயற்சிகளை எடுத்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (த)

## தமிழ் உணர்வு பற்றிக் கதைக்க ஜெயலலிதாவுக்கு அதிகாரமில்லை

### கருணாநிதி காட்டம்

சென்னை, ஜூலை, 15

எனக்கு தமிழ் உணர்வு இருக்கிறதா இல்லையா என்று முடிவு செய்வதற்கு இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் ஜெயலலிதாவின் சான்றிதழ் தேவையில்லை என்று கருணாநிதி காட்டமாகப் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் கருணாநிதி நேற்றுப் பிற்பகல் வெளியிட்ட அறிக்கையில் விரிவாக ஜெயலலிதாவுக்கு பதிலளித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஜெயலலிதா தமிழகத்தின் முதல் அமைச்சர். இலங்கை விமானப் படையினரைத் திருப்பி அனுப்ப வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு. எனவே ஜெயலலிதா மத்திய அரசையே இதற்கு பதில் அளிக்க கோர வேண்டும். இதை விடுத்து எனக்கு எதிராக பிரசாரம் செய்கிறார்.

முதல்வர் ஜெயலலிதாவுடன் 24 மணிநேரமும் கூடவே இருக்கும் உடன்பிறவாச் சகோதரியின் கணவர், ஜெயலலிதாவின் மீதும், அரசின் மீதும் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் என்று கேட்டதற்குப் பதிலளிக்க முடியாமல், திராணியில்லாமல் வீணாக என் மீது பாய்ந்து குதறுகிறார்.

தமிழினத் தலைவர் என்று எனக்கு நானே பட்டம் சூட்டிக் கொள்ள வில்லை என்று தெரிவிதுள்ள கருணாநிதி, அம்மா, அம்மா என்றும், என் தலைமையிலான அரசு என்றும், நானே ஆணையிட்டேன் என்றும், வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக் கொள்வது யார் என்பது நாட்டுக்குத் தெரியும். என்னைத் தாக்கி அறிக்கை விடுவதைத்தான் ஜெயலலிதா அன்றாடக் கடமையாகக் கருதுகிறார் என சாடியுள்ளார்.

ஜெயலலிதா விடுத்த அறிக்கைக்கு பதிலடி கொடுத்து கருணாநிதியின் நீண்ட அறிக்கை விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

## போதனா வைத்தியசாலையில் பணம் திருடியவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் விடுதியினுள் நுழைந்து பணம் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றைத் திருடிய சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றது. 2 லட்சத்து 79 ஆயிரம் ரூபா பணமும் 25 ஆயிரம் பெறுமதியான கைத்தொலைபேசியும் திருடப்பட்டன. இது தொடர்பாக யாழ். பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் கைதடி தெற்கைச் சேர்ந்த சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்தனர். கைத் தொலைபேசி மீட்கப்பட்டது.

(த-4)

## எனது கோரிக்கைக்கு இணங்கினால் ஐ.தே.கவுடன் இணைவதற்குத் தயார்

### சரத் பொன்சேகா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

எனது கொள்கைகளுக்கு அமைவாக ஐக்கிய தேசியக் கட்சி தன்னை மாற்றிக் கொண்டு கட்சியில் அதிகாரமுள்ள பொறுப்பை என்னிடம் ஒப்படைக்குமானால் நான் அதில் இணைந்து கொள்ளத் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா. கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; ஐக்கிய தேசியக் கட்சிக்கு நான் எதிரானவன் அல்ல, ஐ.தே.கவும், ஜே.வி.பியுமே என்னை அரசியலில் களமிறக்கிவிட்டன. ஐ.தே.கவில் நான் இணைய வேண்டும் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டாரவின் வேண்டுகோளுக்கு இணங்க நான் இணைந்து கொள்வதானால் எனது கொள்கைகளுக்கு அமைய மக்கள் நலன் சார்ந்ததாக ஐ.தே.க தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்.

அதற்கமைய கொள்கை ரீதியில் நான் ஐ.தே.கவில் இணைந்து கொள்வதானால் சாதாரண வெறும் தொகுதி அமைப்பாளர் என்ற சிறு பதவியொன்றை வகிப்பதற்கு நான் எந்த விதத்திலும் தயாரில்லை.

இவ்வாறு பொறுப்புகள் கையளிக்கப்பட்டால் சஜித் பிரேமதாச, கருஜயசூரிய ஆகியோருடன் இணைந்து வடமத்திய மாகாணத்தில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டிலும் ஐ.தே.கவை வெற்றிபெறச் செய்ய முடியும். (த-16-22)

## கணித, விஞ்ஞான மாணவருக்கு வினாத்தாள் விளக்க கருத்தரங்கு

கொழும்பு, ஜூலை 15

மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் ஜி.சீ.ஈ. உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் பற்றிய கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களையும் பரீட்சை வினாத்தாள் சம்பந்தமான மேலதிக விளக்கங்கள் தேவைப்படுவோரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## புலமைச்சுடர்

வழமையாக திங்கட் கிழமைகளில் வெளிவரும் தரம் 5 மாணவர்களுக்கான விசேட கையேடான 'புலமைச்சுடர்' (42 ஆவது வெளியீடு) தவிர்க்கமுடியாத காரணத்தினால் இவ்வாரம் மேலதிக விசேட ஆக்கங்களுடன் புதன்கிழமை வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

-புலமைச்சுடர் ஆசிரியர்-

(8/1332)

## கொத்மலை மின் உற்பத்தித் திட்டம் ஜனாதிபதி நேற்று திறந்து வைத்தார்



கொழும்பு,ஜூலை 15

இலங்கையில் மிகப் பெரியதும் இறுதியாக மேற்கொள்ளப்பட்டதுமான மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தித் திட்டம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேல்கொத்மலை நீர்மின் திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் 150 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்கு ஜப்பான் யென் 37, 817 மில்லியனும், இலங்கையின் நிதியமைச்சு மற்றும் மின்வலு, எரிசக்தி அமைச்சின் ஊடாக 8, 548 மில்லியன் ரூபாவும் முதலிடப்பட்டுள்ளது.

நீர் மின்திட்ட ஆரம்ப விழா [illegible] வும் பங்கேற்றிருந்தார்.

(த)

## யாழ். ஆஸ்பத்திரி முறைகேடு சுகாதார அமைச்சருடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் உட்பட மூவரை இடம் மாற்றக் கோரி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் நாளை மறுதினம் மருத்துவர் சங்கம் பேச்சுநடத்தவுள்ளது.

பேச்சில் இணக்கப்பாடு காணப்படாத பட்சத்தில் எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் வடமாகாணத்தில் உள்ள வைத்தியர்கள் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது. தமது கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருடனும் மருத்துவர் சங்கம் நாளை பேச்சு நடத்தவுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா, வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.பிரசாத் மற்றும் வைத்தியசாலை ஊழியர் ஒருவர் ஆகிய மூவரும் முறைகேடுகளில் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்பது சுகாதார அமைச்சிலிருந்து வைத்தியசாலைக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட குழுவினரின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இதனால் அவர்களை இடமாற்றம் செய்துவிட்டு முறைகேடுகள் தொடர்பான தொடர் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவர் சங்கம் கோரியுள்ளது. சங்கம் முன்னரும் இவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தது. முறைகேடுகள் தொடர்பாக பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டது என்று சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் உட்பட மூவரும் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளதனால் மூவருக்கு எதிராகவும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து விசாரணை நடத்த வேண்டுமென சங்கம் ஏற்கனவே சுகாதார அமைச்சிடம் வலுயுறுத்தியது. அதன் அடிப்படையில் விசாரணை தொடருமென அமைச்சின் அதிகாரிகள் மருத்துவர் சங்கத்துக்குத் தெரிவித்ததாகச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாளை சுகாதார அமைச்சின் செயலாளருடனும் நாளை மறுதினம் சுகாதார அமைச்சருடனும் பேச்சு நடத்தவுள்ளதாகவும், அதில் இணக்கப்பாடு எட்டப்படாது விடின் எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் வடமாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம் கடந்த வாரத்தில் மிக அதிகம்

## இவற்றுடன் தொடர்புடைய சிலர் தலைமறைவு

*யாழ்ப்பாணம்,ஜூலை 15*

***யாழ்.மாவட்டத்தில் சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் கடந்த வாரத்தில் மிக அதிகளவில் இடம்பெற்றுள்ளன. இவற்றுடன் தொடர்புடைய சிலர் தலைமறைவாகியுள்ளனர். அத்துடன் கடந்த வாரத்தில் 15 குற்றச்செயல்கள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லிக் பெரேரா தெரிவித்தார்.***

யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான வாராந்த பத்திகையாளர் சந்திப்பு நேற்று சனிக்கிழமை யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்புத்துறை மற்றும் கட்டுவன் பகுதிகளில் சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளனர். தொடர்ச்சியாக இவ்வாறு சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸார் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

65 லட்சம் ரூபா பெறுமதியான வானைக் கடவத்தையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து பணத்தைக் கொடுக்க மறுத்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிறந்து 4 நாள்களேயான குழந்தையை 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

3 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை கொடுத்து மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ந்தும் பொலிஸ் வீதி ரோந்து நடவடிக்கைகளும் சிவில் பாதுகாப்புக் குழுக்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்று வருகின்றன.

வீதிகளில் நின்று பெண்கள் மீது சேஷ்டை செய்கின்ற இளைஞர்கள் மற்றும் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னரும் பாடசாலை நிறைவடைந்த பின்னரும் பெண் பிள்ளைகளுடன் சேஷ்டை விடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-5-86)

## வடமாராட்சி கிழக்கில் 90 பேருக்கு சைக்கிள்கள்

வடமாராட்சி,ஜூலை 15

வன்னியிலிருந்து பருத்தித்துறை,வடமாராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறியோரில் 90 பேருக்கு இந்திய அரசின் உதவியுடன் வழங்கப்பட்ட சைக்கிள்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் கி.த.ஜெயசீலன் தலைமையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரீன் சைக்கிள்களை வழங்கினார்.

சைக்கிள்களைப் பெற்ற 90 பேரில் பாடசாலை மாணவர்கள் மற்றும் சைக்கிள்களை நம்பி தொழில் புரிவோர் அடங்குவார்கள்.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் சைக்கிள்களை வழங்குவதற்கான அனுசரணையை வழங்கியது. (த-8)

## நிகழ்வுகள் இன்று

**டெங்கு ஒழிப்பு**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் களக சம்மேளனம், இளைஞர் விவகாரத்திறன் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வும் விழிப்புணர்வு செயற்பாடும் இன்று தேசிய ரீதியாக நடைபெறுகின்றது.

''டெங்குவை ஒழிப்போம் வாழ்வைக் காப்போம்'' என்ற தொனிப் பொருளில் நடைபெறுகின்ற நிகழ்வில் அனைவரையும் பொறுப்புடன் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (10)

**விளையாட்டு விழா**

புலோலி விக்கினேஸ்வரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முறாவில் பிள்ளையார் ஆலய முன்றலில் புலோலி மெ.மி.த.க.பாடசாலை அதிபர் கே.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கே.பஞ்சலிங்கம் கலந்து கொள்வார். (வ-8)

**கட்டடத் திறப்புவிழா**

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (த-14)

**நினைவுப்பேருரையும் கௌரவிப்பும்**

பருத்தித்துறை மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தின் ஏற்பாட்டில் மணியம் கணபதிப் பிள்ளையின்நினைவுப்பேருரையும் கல்விக் கௌரவிப்பும் காலை 8.30 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நிதியத்தலைவர் ராஜ்.எஸ்.குகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ரி.ஜெயசீலன் கலந்து கொள்வார். (வ- 14)




*பனை அபிவிருத்திச் சபையின் கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தின் கட்டடப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. போரால் சேதமடைந்த இந்தக் கட்டம் இந்திய அரசின் 68.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.இந்தக் கட்டடம் எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரால் திறந்து வைக்கப்படவுள்ளது. (த-17)*

## வடதாரகை நேற்றும் கையளிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை 15

நெடுந்தீவுக்கான அரச படகான வடதாரகையைக் கடற்படையினரிடமிருந்து நேற்று சனிக்கிழமை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் கையேற்பார்கள் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதும் அப்படியான நிகழ்வு எதுவும் நேற்று நடைபெறவில்லை.

நேற்றுக் காலை 10 மணிக்கு வடதாரகை நெடுந்தீவுக்கான தனது பயணத்தைத் தொடங்கும் வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் எவருமே குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு வரவில்லை.

படகில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் படகு கையளிப்பது பற்றி எதுவுமே தெரியாது எனவும் பத்திரிகை மூலமே தாம் அதனை அறிந்து கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (த-7)

## காரைநகரில் கடும் வரட்சி கிணறுகளிலும் நீர் இல்லை

### மக்களும் கால்நடைகளும் அந்தரிப்பு

காரைநகர் பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் பொதுமக்களும், கால்நடைகளும் நீரின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

காரைநகரில் உள்ள நீர் நிலைகள் வற்றி வரண்டு வருவதனால் நீருக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பொன்னாவளை, பாலாவோடை, களபூமி, ஊரி, தோப்புக்காடு போன்ற கிராமங்களில் உள்ள கிணறுகள் உள்ளிட்ட நீர் நிலைகள் அனைத்தும் வற்றி வரண்டு போய் உள்ளன.

இதனால் இந்தக் கிராம மக்கள் நீருக்காக அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குளிப்பதற்கோ உணவுப் பாத்திரங்களைக் கழுவுவதற்கோ மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ நீர் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களுக்குக் கடந்த காலங்களில் சமூக சேவைப்பகுதி ஊடாக பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வந்த பவுஸர் மூலமான இலவச நீர் விநியோகம் இம்முறை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நீரைப்பெற்றுக் கொள்வதில் மக்கள் அதிக நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது பிரதேச சபையினால் பணத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த காலங்களைப் போன்று இலவச குடிதண்ணீர் விநியோகத்தைப் பிரதேச சபை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தக் கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான கடும் வரட்சி தொடருமானால் இந்தக் கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும் என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கால்நடைகள் குடிப்பதற்கு நீர் இன்றி உண்பதற்கு புல், பூண்டு ஏதுமின்றி வனாந்தர[illegible] திரிகின்றன என்றும் கூறப்படுகிறது. (த-250)

## வடமராட்சிப் பிரதேசத்துக்கு தனியான தீயணைப்புப் படை அவசரம் தேவை

### கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி,ஜூலை 15

வடமராட்சிப் பிரதேசத்தில் தீயால் பாதிப்பு ஏற்படும்போது தீயை அணைக்க வடமராட்சிப் பிரதேசத்துக்கெனத் தனியான தீயணைக்கும் படைப் பிரிவு ஒன்று நிறுவப்பட வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று கரவெட்டி பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினரான எஸ்.பரஞ்சோதி இந்தத் தீர்மானத்தை முன்மொழிய எதிர்க்கட்சி உறுப்பினரான சி.கணபதிப் பிள்ளை வழிமொழிந்தார்.

யாழ்.மாவட்டத்தில் யாழ்.மாநகர சபையில் மட்டுமே தீயணைப்புப் படை உள்ளது. வடமராட்சியில் தீ விபத்து ஏற்படும்போது அங்கிருந்து வருவதற்கு நீண்ட நேரம் எடுக்கும். எனவே வடமராட்சிக்குத் தனியான தீயணைப்புப் படை நிறுவப்பட வேண்டும். இது வடமராட்சியின் மையப்பகுதியில் நிறுவப்பட்டால் பயனுள்ளதாக இருக்கும்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர், வடமாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்குக் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானகள் வருமாறு:-

துன்னாலைவேரொண்டை பொதுமயானத்தைப் புனரமைப்பதற்காக அந்தப் பகுதி மக்களால் ஒரு தொகைப் பணம் திரட்டப்பட்டுள்ளது. அந்தப் பணத்தின் மூலம் மயானமடத்தை இடித்துப் புதிதாக மடம் அமைப்பதற்கும் குழாய்க் கிணறு இடித்து அதற்கு மோட்டார் இயந்திரம் அமைக்க ஒரு சிறு அறை அமைத்து இதற்குப் பூட்டுப் போட்டு பாவிப்பதற்கும் துன்னாலை கோயிற்கடவையைச் சேர்ந்த என்.ஜெகநாதன் என்பவர் சபையிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார். இதனை சபை ஆராய்ந்து இந்தக் கோரிக்கைக்கு அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரதேச சபை எல்லைக்குள் விபத்து நடைபெறுவதைத் தடுப்பதற்குப் பிரதான வீதிகளை இணைக்கும் கிளை வீதிகளுக்குத் தடை அமைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் சபைக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கிணங்க பொருத்தமான கிளை வீதிகளில் பிரதான வீதிகளிலிருந்து 10 அடி மற்றும் 15 அடி தூரங்களில் இரு தடைகளை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் கோவிற்சந்தை புனரமைப்புச் செய்யப்படவில்லை. ஆகையால் சபை நிதி மூலம் சந்தை திருத்தப்படும் இந்தச் சந்தையின் இருபக்கமும் வீதி காணப்படுவதால் அவற்றை எல்லைப்படுத்தும் போது சிறிய பகுதியே சந்தைக்கு வருவதால் அதனை எல்லைப்படுத்தாமல் கட்டடத்தை மட்டும் புனரமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்புடன் களமிறங்க முஸ்லிம் வேட்பாளர் ஆர்வம்

01 எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மக்கள் வழங்குவார்கள் என்று நாம் நம்புகிறோம். முஸ்லிம் காங்கிஸின் இந்த முடிவினால் அதிருப்தி அடைந்துள்ள பல முஸ்லிம் வேட்பாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இணைந்து போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளனர். அவர்களின் இந்த விண்ணப்பம் குறித்து கூட்டமைப்பு பரிசீலிக்கவுள்ளது. அவர்களையும் எமது பட்டியலில் இணைத்துப் போட்டியிடுவது தொடர்பில் நாம் விரிவாக ஆராயவுள்ளோம்- என்றார். (த)

## இலங்கையில் காணாமற் போனோர் ஜெனிவா கூட்டத்தில் விரிவாக ஆராய்வு

01 தற்போது புதிதாகக் கிடைக்கப் பெற்ற மற்றும் ஏற்கனவே கிடைக்கப் பெற்ற காணாமற்போனோர் தொடர்பான 200 சம்பவங்களையும் இந்த அமைப்பு தனது கவனத்தில் எடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தான், அல்பேனியா, அல்ஜீரியா, ஆர்ஜென்ரீனா, பங்களாதேஷ், பெலாரஸ், பூட்டான், மத்திய ஆபிரிக்க குடியரசு, கொலம்பியா, ஜனநாயக மக்கள் குடியரசான கொரியா, எகிப்து, ஜோர்ஜியா, கென்யா, குவைத், லாவோஸ், லிபியா, மெக்சிக்கோ, மொரோக்கோ, மியன்மார், பாகிஸ்தான், பெரு, ரஸ்யா, சவுதி அரேபியா, ஸ்பெயின், இலங்கை, சுவிற்சர்லாந்து, சிரியா, ரஜிகிஸ்தான், தாய்லாந்து, துருக்கி, உஸ்பெகிஸ்தான், ஜேமன் போன்ற நாடுகளில் இடம்பெற்ற காணாமற்போன சம்பவங்கள் தொடர்பாக இக்கூட்டத் தொடரில் ஐந்து மனித உரிமை வல்லுநர்கள் ஆராய்ந்துள்ளனர்.

ஜெனீவாவில் 2012 யூலை 09 தொடக்கம் 13 வரை இடம்பெற்ற 97ஆவது கூட்டத் தொடரில், காணாமற் போனோர் தொடர்பான கோரிக்கைகள், பொதுவான குற்றச்சாட்டுக்கள் மற்றும் பல்வேறு அரசுகளின் பதில்கள் போன்றவையும் மீளாய்வு செய்யப்பட்டன.

பலவந்தமாக காணாமற்போன பெண்கள் மற்றும் சிறார்கள் தொடர்பில் அனைத்து நபர்களையும் பலவந்தமாக காணாமற் போதலிலிருந்து பாதுகாத்தலுக்கான இரு ஏற்பாடுகள் தொடர்பான பொதுவான கருத்துக்களும் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துரையாடப்பட்டன.

இதன் 98ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் 2012 ஒக்ரோபர் 31 தொடக்கம் நவம்பர் 09 வரை நடைபெறும்.(த)

## இந்திய வீட்டுத் திட்டத்தின் 2ஆம் கட்டம் கைச்சாத்து

01 தாகவும் மக்களாலும் அரச அதிகாரிகளாலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இந்தியா தனது இரண்டாம் கட்ட வீட்டுத் திட்ட பணிகளை பயனாளிகளுக்கு நேரடியாக பணத்தை வழங்கி மேற்கொள்வதுடன் அதனை முகவர் நிலையங்களினூடாகவும் கண்காணிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்த இரண்டாம் கட்டத்தை யு.என்.ஹபிற்றா, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், வீடமைப்பு அதிகாரசபை, மனிதாபிமானத்துக்கான குடியிருப்பு ஆகிய அமைப்புகளே நடைமுறைப்படுத்தவுள்ளன.

இலங்கையில் ஏற்கனவே வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மேற்படி நிறுவனங்கள் கொண்டுள்ள அனுபவங்களைக் கருத்திற் கொண்டு போட்டி முறைமையொன்றுக்கு ஊடாகவே இந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டதிற்குத் தெரிவு செய்யப்படும் பயனாளிகள் தமது வீட்டை நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வர். இதற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை மேற்படி நிறுவனங்கள் வழங்கும் . வீடுகளுக்கான நிதியை நிர்மானப் பணிகளின் முன்னேற்றங்களின் அடிப்படையில் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு இந்திய தூதரகம் நேரடியாக அனுப்பவுள்ளது.

மேற்படி 50 ஆயிரம் வீட்டுத்திட்டமானது 3.060 கோடி இலங்கை ரூபா மதிப்பில் மேற்கொள்ளப்படுகின்றது.(த-5)

## ஆளும் தரப்பு வேட்பாளருக்கு பொலிஸ் 'கிளியரன்ஸ்' தேவை

01 தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்துள்ளவர்கள் தொடர்பாக பொலிஸ் 'கிளியரன்ஸ்' பெறும்படி ஜனாதிபதி, கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவுக்குப் பணித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த ஆலோசனை கட்சியின் உயர்மட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸவினால் முன்மொழியப்பட்ட பெயர்கள் நிராகரிக்கப்பட்டனவாம். இதனால் விமல் வீரவன்ஸ குழப்பம் அடைந்துள்ளாராம்.

அதேவேளை, அரசுடன் இணைந்து போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குத் திருகோண மலையில் மூவரும், அம்பாறை மாவட்டத்தில் 6 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவரும் போட்டியிட இடமளிக்கப்பட்டுள்ளது.

தாம் எதிர்பார்த்த அளவு இடம் ஒதுக்கப்படாததால் அமைச்சர் ஹக்கீமும் சந்தோசமாக இல்லை என ஆளும் தரப்பு பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (த-2)

## ஹக்கீமின் கோரிக்கையை நிராகரித்தார் ஹசன் அலி

01 தயக்கம் காட்டியது என்றும் -

இதன் காரணமாகவே மு.கா. சார்பில் கையெழுத்து இடுவதற்கு ஹசன் அலி மறுத்தார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது பிரிவில் அரசு கையெழுத்து இடாதவரை எந்தவொரு புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் அரசுடன் தான் கையெழுத்திடப்போவதில்லை என ஹசன் அலி ஹக்கீமிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து கட்சிக்குள் ஏற்கனவே இருந்து வந்த கருத்துப்பிளவுகள் மேலும் அதிகரித்துள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (உ-10)

## வேட்பாளர் பட்டியல் திங்களன்று

01 பூர்த்தி செய்யப்படும் எனவும் அந்த வட்டா ரங்கள் மேலும் கூறின.

மூன்று மாவட்டங்களுக் கான வேட்பாளர் தெரிவுகள் அனைத்தும் முடிவடைந்த பின்மாகாணசபைத் தேர்தலுக்கான இறுதிப் பட்டியலை பெரும்பாலும் திங்கட்கிழமை மாலை வெளியிடவுள்ளதாக கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (த)

## டில்றுக்ஷன் தொடர்ந்தும் கோமாவில்

01 பெறும் டில்றுக்ஷனைச் சென்று பார்வையிட்டனர்.

கோமா நிலையில் இருக்கும் அவருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டுள்ளது. அவரது ஒரு கால் சங்கிலியால் கட்டிலுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

அவரது தந்தை தினமும் மகர சிறைச்சாலைக்குச் சென்று சிறை அதிகாரியின் அனுமதிபெற்ற பின்னரே கொழும்பு றாகம வைத்தியசாலைக்குச் சென்று டில்றுக்ஷனைப் பார்வையிட்டு வருகிறார். ஒவ்வொரு நாளும் அனுமதி பெறவேண்டியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் வைத்தியசாலையில் டில்றுக்ஷனைப் பார்வையிடச் சென்றபோது முதலில் காவலர்கள் அனுமதி அளிக்கவில்லை. அவர்களிடம் ஒரு அறிவித்தல் அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மக்கள் பிரதிநிதிகளோ, சட்டத்தரணிகளோ, வெளிநாட்டு இராஜ தந்திரிகளோ எவரும் உட்செல்ல அனுமதியில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுபற்றி சிறை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு பேசி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிறப்புரிமை உண்டு. அதனடிப்படையில் உள்ளே செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கூறியிருந்தோம். அதன்பின்னர் டில்றுக்ஷனைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். (த-4)

## விசர்ரணையிலிருந்த போராளி காயங்களுடன் வைத்தியசாலையில்

01 யல் பிரிவில் இவர் கடமையாற்றியிருந்தார்.

2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை விட்டு விலகிய பின்னர் அவர் மட்டக்களப்பில் வசித்துள்ளார்.

முஸ்லிம் வியாபாரியொருவரிடமிருந்து இவர் கார் ஒன்றைக் கடந்த வருடம் வாங்கியுள்ளார். குறித்த காரை கடந்த மாதம் அவர் வேறொருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

குறித்த கார் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் பயன்படுத்தப்பட்டது என்றும் அந்தக் கார் எவ்வாறு கதிரமலைக்கு கிடைத்தது என்பது தொடர்பிலும் விசாரணை மேற்கொள்வதற்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவரைக் கைது செய்து கொழும்பில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் தன்னைத்தானே கழுத்தில் வெட்டினார் எனத் தெரிவிக்கப்பட்டு அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-5)

## உருத்ரகுமாரனை இலங்கைக்கு அழைக்கிறார் அமைச்சர் கருணா

01 போன்றோர் நாடுகடந்த அரசு எனக்கூறப்படுவதை அமைத்ததுடன் மக்களைத் திரட்டுகின்றனர். நாம் அவர்களை இங்கு நடைபெறும் அபிவிருத்திகளையும் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதையும் நேரில் பார்வையிடுமாறு அழைக்க வேண்டும் என பிரதியமைச்சர் முரளிதரன் கூறினார்.

புலம்பெயர்ந்த மக்களை நாம் புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில் அவர்கள் இலங்கையர்கள். புலம்பெயர்ந்த மக்களை புறக்கணித்தால் பிரச்சினை மேலும் நீடிக்கும். நாம் அவர்களுடன் தொடர்புகொண்டு, கலந்துரையாடி, விடயங்களை அவர்களுக்கு விளக்க வேண்டும். இதன்மூலம் தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்' என அவர் கூறினார்.

'இத்தகையதொரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்படுவதை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும். நாட்டுக்கு வந்த பலர் என்னிடம் உரையாடும்போது, [illegible] நிலவரத்தை கண்டுகொண்டதாகக் கூறினர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (த)

## கிழக்கில் அரசுடன் சேர மு.கா. முடிவு இதனால் கட்சி பிளவுபடும் அபாயம்

01 என்று அந்த வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் முடிவால் அதிர்ச்சியுற்றுள்ள கட்சியின் ஒரு பிரிவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து போட்டியிடுவது அல்லது கூட்டமைப்பை ஆதரிப்பது என்ற முடிவுக்கும் வந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணசபைத் தேர்த லில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் ஒரே அணியாகப் போட்டி யிடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம் வெளியிட்டுப் பேச்சு நடத்தியது.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி வைப்பதை விட, அரசுடன் கூட்டணி அமைப்பதி லேயே ஆர்வம் காட்டியிருந்தது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைக்கப் போவது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கி, அரசுடனான பேச்சுக்களில் தனது பேரம் பேசும் பலத்தை அதிகரித்துக் கொண்டது.

முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய உயர்மட்டக்குழுவின் கூட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட முடிவு செய்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த போன்றோருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நடத்திய பேச்சுக்களை அடுத்து, நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக்குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே, ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் 6 வேட்பாளர்களையும், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 3 வேட்பாளர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் நிறுத்தவுள்ளது.

கிழக்கு மாகாண முதல்வர் பதவி தமக்குத் தரப்படும் என்ற வாக்குறுதி தரப்பட்டால் மட்டுமே, ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிட முடியும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறிவந்தது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு முன்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நிச்சயம் செயற்படுத்த வேண்டும் என்றும் முஸ்லிம்களின் காணி அபகரிப்புகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர்களின் சமய சுதந்திரம் பேணப்பட வேண்டும் என்றும் சரத்துக்கள் சேர்க்கப்படவுள்ளதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்வது என்பது கொள்கையளவில் காணப்பட்ட இணக்கம் மட்டுமே என்று அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இந்த இணக்கம் எவ்வளவு தூரத்துக்கு நடைமுறைச் சாத்தியமானது என்பது கேள்விக்குரியது என்றும் அவர் கூறினார். (உ-த)

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி சிவநகரில் நேற்று மீள்குடியமர்வு

01 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும் நேற்று மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவுமே செய்து கொடுக்கப்படவில்லை எனவும், இந்த மக்கள் பாவிப்பதற்கு ஒரு குடிதண்ணீர் கிணறுகூடச் சுத்தப்படுத் திக் கொடுக்கப்படவில்லை எனவும், மலசலகூட வசதி கள் எதுவும் இல்லை எனவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் வீடுகள் அனைத்தும் அழிவடைந்துள்ளதாகவும் மழை வந்தால் நனையாமல் இருப்பதற்கு ஒரு கூரை விரிப்புக் கூட வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் கூறினர். இதனால் கைக்குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர்கள் உள்ள குடும்பங்கள் எந்தவித வசதிகளும் இல்லாமையால் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

செட்டிக்குளம் மனிக்பாம் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த இந்த மக்கள் நேற்றுமுன்தினமே 10 பஸ்களில் ஏற்றப்பட்டுப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்ட பின்னர் நேற்று மீள்குடியமர்த்தப்பட்டனர். (த-6-435)

## கூட்டமைப்பு சுயேச்சையாக போட்டியிட்டால் ஆதரவு

01 யைச் சேர்ந்த, பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செல்வராஜா கஜேந்திரன், வி. மணிவண்ணன் ஆகியோர் நேற்றுக் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மாகாண சபை முறைமை ,13 ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்வில்லை. அத்துடன் ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களின் அபிலாசைகள் எதனையும் நிறைவேற்ற முடியாது .

எனவே கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில், தமிழத் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடக் கூடாது. அவ்வாறு போட்டியிட்டால் மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொண்டதாகிவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரித்துள்ள வேட்பாளர் பட்டியலில் உள்வர்களை அப்படியே சுயேச்சையாக நிறுத்திப் போட்டியிடலாம். அவ்வாறு சுயேச்சையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டால் நாமும் ஆதரவு வழங்கத் தயார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தட்டிக் கழிப்பதன் உள் நோக்கம்

கிழக்கு மாகாணசபை உட்பட 3 மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் தீவிர அக்கறையும் அவசரமும் காட்டி வருகின்றது. அவற்றுக்கான ஆயத்தங்கள் ஒரே தடல்புடல். நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஒரு வகை அமிலச் சோதனையே இந்தச் செயற்பாடு என்பது வெளிச்சம். ஆனால் நீண்ட காலமாக நடத்தப்படாமல், வடக்கு வாழ் மக்களின் ஜனநாயக உரித்தான மாகாண சபைத் தேர்தலைப் பிற்போட்டு வருவதில் அரசு அதீத அக்கறை காட்டி வருகிறது.

போரின் பின்னரான இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் வட மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்து சர்ச்சைக் குரியதாக இருந்து வருகிறது. மூன்று மாகாணங்களுக்குமான தேர்தல்களை நடத்துவதற்குமுன், வட மாகாணத் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்து வருகிறது. அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று 'இந்து' பத்திரிகைக்குக் கொழும்பில் வைத்து அளித்த பேட்டியில் ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்தமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமல்ல தென்னிந்திய அரசியல் கட்சிகளுக்கும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

சமீபத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கொழும்பில் சந்தித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதியை வலியுறுத்தினார். அதற்கான அறிவிப்பை ஜனாதிபதி பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார் என்றும் கூறப்பட்டது. அதனாலேயேதான் இன்னமும் 15 மாத காலம் இருக்கும்போதே இந்த அறிவிப்பை இப்போது அவசரமாக வெளியிட வேண்டிய நிலைமை ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

கொழும்பில், அலரி மாளிகையில் 'இந்து' பத்திரிகைக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியில், வட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த முடியாமல் இருப்பதற்கு இரு பிரதான காரணங்களை முன்வைத்துள்ளார். அவற்றில் ஒன்று, புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது. மற்றையது தேர்தல் வாக்காளர் இடாப்பு சம்பந்தப்பட்டது. 30 வருட காலப் போரினால் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறியவர்கள் தற்பொழுது தான் படிப்படியாகத் தமது முன்னைய இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது பெயர்கள் தற்போதைய வாக்காளர் இடாப்புக்களில் இல்லை. அவற்றைச் சேர்த்துக்கொண்ட பின்புதான் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.-என்கிறார் அவர்.

ஜனாதிபதி தெரிவித்துள்ள காரணங்கள் ஒன்றும் புதியவை அல்ல. வட மாகாண சபைத் தேர்தல் பின் போடப்படுவதற்கு இதே காரணங்கள்தான் முன்னரும் தெரிவிக்கப்பட்டன. ஒரே ஒரு வித்தியாசம்; இம்முறை கண்ணி வெடி ஆபத்து என்ற காரணம் விடுபட்டுவிட்டது. போர் முடிவுற்ற பின்னர், வட மாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. வட மாகாண சபைத் தேர்தலுக்குத்தான் தேர்தல் வாக்காளர் இடாப்பும், மீள்குடியமர்வும் தடையா என்ற கேள்விக்கு ஜனாதிபதியோ அல்லது அமைச்சர்களோ ஏற்றுக்கொள்ளக் கூடிய விளக்கத்தை இன்னமும் வெளிப்படுத்தவில்லை. வட மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் கூட்டமைப்பு வெற்றி பெற்றுவிடும்; போரின் பின்னரான அரசின் நிகழ்ச்சி நிரல் தடைப்பட்டுவிடும் என்ற ஒரே காரணத்தைவிட வட மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்புக்கு வேறு காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதனைச் செயற்படுத்த வேண்டிய அழுத்தம் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில், வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் நல்லிணக்கத்துக்கான ஒரு சமிக்ஞையை இலங்கை அரசு சர்வதேசத்துக்குக் காட்ட முடியும். அரசு அடைந்த போர் வெற்றி மூலம் சமாதானத்தை எட்டுவதற்கு நல்லிணக்கம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு அதனை நாடாளுமன்றில் நிறைவேற்றி செயற்படுத்தும் காலம்வரை தமிழ் மக்கள் தமது பகுதியை நிர்வகிப்பதற்கு வட மாகாணசபைத் தேர்தல் அவசியம். வட மாகாணசபைத் தேர்தலைப் பின்போடுவதன் மூலம் தமிழ் மக்கள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணையும் வாய்ப்பை அரசு தடுக்கிறது. அரசின் போர் வெற்றியும் அர்த்தமற்றதாகி விடுகிறது.

இலங்கை விவகாரங்களில் குறிப்பாக தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள் தொடர்பான விடயங்களில், இந்திய மத்திய அரசு வரையறை இன்றித் தலையிடுகின்றது. தலையில் குட்டிப் பணிய வைப்பதற்கு முனைகிறது என்று அரசு உள்ளூரக் கறுவிக் கொள்கிறது. போரில் இலங்கை அரசு வெல்வதற்கு இந்தியாவும் பேருதவி செய்தது என்பது மிக்க வெளிச்சமான ஒன்று அதனையும் பொருட்படுத்தாது இந்தியாவை இனப்பிரச்சினைத் தீர்விலிருந்து தள்ளி வைக்க முனைகிறது அரசு.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற இந்தியத் தரப்பின் அழுத்தத்தை தனக்கு வசதியாகப் புனைந்த காரணங்களை மேலெடுத்துத் தட்டிக் கழிக்கிறது அரசு. வடக்கில் தான் செய்வதற்குத் திட்டமிட்டுள்ள ஒவ்வாத காரியங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு காலம் வாங்கும் உத்தியே இது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. வடக்கு மாகாண சபைத் தேர்தல் சர்ச்சைக்கு உரியதாக்கப்படுவதன் சூட்சுமம் இதுவேயன்றி வேறில்லை.

# வடக்கு மாகாணத்தில் தற்போது 468 ஆரம்பப் பாடசாலைகள்

## உயர்தரப் பாடசாலைகள் 147

யாழ்ப்பாணம்,ஜூலை 15

வடமாகாணத்தில் 468 ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும், 299 ஜி.சீ.ஈ.சாதாரணதரம் வரையான பாடசாலைகளும், 147 ஜி.சீ.ஈ.உயர் தரம் வரையிலான பாடசாலைகளும் உள்ளன.

வலய ரீதியாக வலிகாமம் வலயத்திலேயே அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகள் உள்ளன. முல்லைத்தீவு வலயத்திலேயே குறைந்தளவான பாடசாலைகள் உள்ளன என கல்வித் திணைக்கள புள்ளி விவரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**முல்லைத்தீவு வலயத்திலேயே குறைந்தளவான பாடசாலைகள் உள்ளன என கல்வித் திணைக்கள புள்ளி விவரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.**

இந்தப் புள்ளி விவரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வலிகாமம் வலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை 73 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 4 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 2 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 43 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 21 பாடசாலைகளும் உள்ளன.

யாழ்.வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 44 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை ஒரு பாடசாலையும், தரம் 1 தொடக்கம் தரம் 10 வரை ஒரு பாடசாலையும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 41 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 16 பாடசாலைகளும் உள்ளன.

வடமராட்சி வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 33 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 2 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 32 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 12 பாடசாலைகளும் உள்ளன.

தென்மராட்சி வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 27 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 4 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 24 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 10 பாடசாலைகளும் உள்ளன.

தீவக வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 46 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 19 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 6 பாடசாலைகளும் உள்ளன.

வவுனியா தெற்கு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 53 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 3 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 28 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 18 பாடசாலைகளும் உள்ளன.

வவுனியா வடக்கு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 53 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 5 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 17 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 9 பாடசாலைகளும் உள்ளன.

கிளிநொச்சி வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 40 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 4 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 40 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 17 பாடசாலைகளும் உள்ளன.

முல்லைத்தீவு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 17 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 7 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 5 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 16 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 7 பாடசாலைகளும் உள்ளன.

துணுக்காய் வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 31 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 2 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 3 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 13 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 6 பாடசாலைகளும் உள்ளன.

மன்னார் வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 3 வரை 2பாடசாலைகளும் தரம்1 தொடக்கம் தரம் 5 வரை 27 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 6 வரை ஒரு பாடசாலையும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 6 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 7 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 16 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 19 பாடசாலைகளும் உள்ளன.

மடு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 18 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 8 வரை 3 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 5 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 10 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 12 வரை 2 பாடசாலைகளும், தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 6 பாடசாலைகளும் உள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-4)

## படையெடுக்கும் பாம்புகள்

வடமராட்சி, ஜூலை 15

கடுமையான வெப்பத்தையடுத்து வடமராட்சிப் பிரதேசத்தில் புற்றுகளில் தங்கியிருந்த பாம்புகள் குடிமனைகள் மற்றும் வீதிகளை நோக்கி நகர்ந்து வருகின்றன.

நகர்ந்து வரும் பாம்புகளை பகல் வேளைகளில் பல்வேறு இடங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர் தம்பசிட்டி, மந்திகை ஆகிய பகுதிகளில் உள்ள சில வீடுகளில் 5 அடி நீளமான பெரிய நாகபாம்புகள் இருக்கக் காணப்பட்டு அவை பிடிக்கப்பட்டு பெரிய போத்தல், பானைகளில் அடைக்கப்பட்டு வல்லிபுரக் கோயில் சுற்றாடல்களில் கொண்டு போய் விடப்பட்டன.

இதேவேளை துன்னாலைப் பகுதியில் உள்ள வீதி ஒன்றில் முன்னிரவு வேளை 5 அடிக்கு அதிகமான நீளத்தைக் கொண்ட நாகபாம்புகள் சில காணப்பட்டன.

அதனைக் கண்ட அந்தவீதியால் சென்று வருவோர் சற்று நேரம் தாமதித்து பாம்புகள் அந்த வீதியை விட்டு அகன்றதும் தமது இடங்களுக்குச் சென்றனர். (த-8)

## பொதுமுகாமைத்துவ உதவியாளர் அதி சிறப்புத் தரத்துக்கு இருவர்

தென்மராட்சி, ஜூலை 15

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் பொது முகாமைத்துவ உதவியாளர் அதி சிறப்பு சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் உட்பட ஐந்து தமிழர்கள் அதி சிறப்புச் தரத்திற்குச் சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதங்கள் பெற்றுள்ளனர்.

இதன் அடிப்படையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் க. கார்த்திகேசு, நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் செல்வி.ச.தம்பிராசா ஆகியோர் யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த 2011 ஏப்ரல் 30 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (த-9)

## 340 தேசியப் பாடசாலைகளுக்கு 31,675 ஆசிரியர்கள் நியமனம்

கொழும்பு, ஜூலை 15

நாடு முழுவதும் அமைந்துள்ள 340 தேசிய பாடசாலைகளில் கற்பித்தலுக்காக 31 ஆயிரத்து 675 ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள்.

இவர்களில் 319 பேர் அதிபர்களாகவும், 14 பேர் பதில் அதிபர்களாகவும், 333 பேர் பிரதி அதிபர்களாகவும், 594 பேர் உதவி அதிபர்களாகவும், 674 பேர் பகுதித் தலைவர்களாகவும் பணியாற்றி வருகின்றனர் என்று கல்வி அமைச்சின் அண்மைக்கால புள்ளி விவரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியோர் தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசு ஏற்படுத்தும் கடைகளை அகற்றுவதில் நகரசபை தீவிரம்

## மன்னாரில் நடவடிக்கை

மன்னார், ஜூலை 15

மன்னார் நகரில் இடம் பெற்று வரும் அங்காடி வியாபாரத்தால் நகரம் மாசடைவதாகத் தெரிவித்து அவற்றை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் மன்னார் நகரசபையினர் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் நகரசபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் தலைமையிலான நகரசபையின் அதிகாரி கொண்ட குழுவினர் இதற்கான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



மனிதாபிமான அடிப்படையில் மன்னார் நகரசபையினர் பல்வேறு நிபந்தனைகளை வழங்கி அங்காடி வியாபாரிகளை வியாபாரம் மேற்கொள்வதற்கு அனுமதித்துள்ளனர். ஆனால் அவர்கள் பாதசாரிகளுக்கு இடையூறாகவும், நகரம் மாசு அடையும் விதத்திலும் வியாபாரப் பொருள்களின் கழிவுகளைக் கொட்டி வருவதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

> பாதசாரிகளுக்கு இடையூறாகவும், நகரம் மாசு அடையும் விதத்திலும் வியாபாரப் பொருள்களின் கழிவுகளைக் கொட்டி வருவதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நகரசபையினர் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளனர். (க-12)

# மன்னாரில் சூடு பிடித்தது ரம்புட்டான் பழ விற்பனை

மன்னார், ஜூலை 15

மன்னார் நகரில் ரம்புட்டான் பழங்களின் விற்பனை சூடுபிடித்துக் காணப்படுகின்றது. கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் 15 அல்லது 20 பழங்கள் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன. தற்போது 30 அல்லது 35 பழங்கள் 100 ரூபாவுக்கு விற்கப்படுகின்றன.

தென்பகுதியைச் சேர்ந்த வியாபாரிகளே ரம்புட்டான் வியாபாரத்தில் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். உள்ளூர் வியாபாரிகளும் இதில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

ரம்புட்டான் பழ விற்பனை அதிகரித்துள்ளதால் அதன் கோதுகள் நகரின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன.

மன்னார் நகர சபையைச் சேர்ந்த சுத்திகரிப்புப் பணியாளர்கள் இவற்றை அகற்றும் நடவடிக்கையில் தினமும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, குழந்தைகளுக்கு ரம்புட்டான் பழம் கொடுக்கும் போது அவதானம் தேவை. ரம்புட்டான் விதைகளை விழுங்கி தொண்டையில் சிக்கியதால் கடந்த மாதத்தில் இரு உயிரிழப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# முல்லையிலும் அதிகரித்தது கடலுணவுகளின் விலை

முல்லைத்தீவு ஜூலை 15

முல்லைத்தீவில் கடலுணவுகளின் விலை என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது நல்ல வகைமீன் ஒரு கிலோ 600 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

தற்போது இங்கு மீனவர்களின் வலையில் மிகக் குறைந்த அளவிலேயே மீன்கள் பிடிபடுகின்றன. இதன் காரணமாகவே அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் பிற இடங்களைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் சட்ட விரோதமான மீன்பிடித் தொழிலால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சட்ட விரோத மீன்பிடித் தொழில் தடுக்கப்படாது விட்டால் தாம் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதோடு மீனின் விலையும் உயர்ந்து செல்லுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

# முல்லைத்தீவு பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை

## மாணவர்கள் அசௌகரியம்

வவுனியா, ஜூலை 15

முல்லைத்தீவு வலயத்திலுள்ள பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மனிக்பாம் நலன்புரி பாடசாலைகளான ஆனந்தகுமாரசாமி மற்றும் கதிர்காமர் பாடசாலைகளில் 500 க்கும் மேற்பட்ட மேசைகளும் கதிரைகளும் பயன்படுத்தப்படாமல் ஓரிடத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

தற்போது மீள்குடியமர்வு இடம்பெற்று வருவதால் அங்குள்ள வீடுகளிலிருந்து பெருமளவான தளபாடங்கள் பாடசாலை நிர்வாகத்தால் சேகரிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலயம், கொக்குத் தொடுவாய் வித்தியாலயம், கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, கருநாட்டங்கண்டல் அ.த.க.பாடசாலை உட்பட்ட பல பாடசாலைகளில் மாணவர்கள் பயன்படுத்துவதற்கான தளபாடங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நலன்புரி பாடசாலைகளின் அதிபர்களால் மேலதிகமாகவுள்ள தளபாடங்கள் தொடர்பான விவரங்கள் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

ஆனால் அவற்றைப் பெற்று தளபாடங்கள் பற்றாக்குறையான பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை மேலதிகமாகக் காணப்படும் மேசைகள், கதிரைகள் என்பன திருடப்பட்டு இரும்பு வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-410)

# ஓட்டோ சாரதிகளின் மோதலால் பயணிகள் பாடு திண்டாட்டம்

## வவுனியாவில் நாளாந்தம் சம்பவங்கள்

வவுனியா, ஜூலை 15

ஓட்டோ சாரதிகள் தம்முடன் முட்டி மோதிக் கொள்வதால் பயணிகள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரசபையால் ஓட்டோ தரிப்பதற்கென தரிப்பிடங்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. அவை தவிர்ந்த இடங்களில் தமது ஓட்டோக்களை நிறுத்தி வைத்திருக்கும் சாரதிகள் போக்குவரத்தில் ஈடுபடும் ஏனைய ஓட்டோ சாரதிகளுடன் முட்டி மோதிக் கொள்கின்றனர். இதனால் அதில் பயணம் செய்யும் பயணிகள் தாம் பலத்த இடர்களை எதிர்நோக்குவதாகக் கூறுகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புளியங்குளம் பகுதியில் இருந்து பஸ் மூலமாக வவுனியாவுக்கு வருகை தந்த பயணி ஒருவர் தான் வழமையாகப் பயணிக்கும் ஓட்டோ சாரதியுடன் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு அதனை வரவழைத்துப் பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது வவுனியா செயலகத்துக்கு முன்பு தரித்து நின்ற ஓட்டோ சாரதிகள் இருவர் பயணி பயணம் செய்த ஓட்டோவை வழிமறித்து அவருடன் முரண்பட்டு முட்டிமோதிக் கொண்டனர்.

இரு பகுதியினரும் நீண்ட நேரமாக வாக்குவாதத்தில் ஈடுபட்டதனால் வேறுவழி இன்றிச் சுமார் 10 மணிக்குப் பின்னர் ஒரு கிலோ மீற்றர் தூரத்தை நடந்து தனது வீட்டை அந்தப் பயணி அடைந்துள்ளார்.

இது தொடர்பாக ஓட்டோ சங்கத் தலைவரிடம் முறையிட முயற்சி மேற்கொண்ட போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை எனப் பாதிக்கப்பட்டவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (க-410)

# மன்னாரில் ஓட்டோ சாரதிகளை அடையாளம் காணச் சீருடை

## பாலியல் தொந்தரவுகளை தடுக்க யோசனை



மன்னார், ஜூலை 15

மன்னாரிலுள்ள ஓட்டோ சாரதிகளை அடையாளம் காணும் வகையில் அவர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட வேண்டும் என்று மன்னாரிலுள்ள பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மன்னார் ஓட்டோச் சாரதிகள் சிலரால் தொடர்ந்தும் இளம்பெண்களுக்குப் பாலியல் ரீதியான தொந்தரவுகள் இடம் பெறுவதாகக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால் இதற்கு ஓட்டோ சாரதிகள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள ஓட்டோ தரிப்பிட சாரதிகளில் ஒரு சிலரே இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதனையும் மறுக்கும் ஓட்டோ சங்கத்தின் தலைவரும், ஓட்டோ உரிமையாளர்களும் இத்தகைய குற்றச்சாட்டுக்களால் தமது தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். மேலும் ஒரு சிலரின் தவறான செயல்களால் தாம் அனைவருமே பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே குற்றச்செயல்களில் ஈடுபடுகின்ற ஓட்டோச் சாரதிகளை அடையாளம் காணும் பொருட்டு அவர்களுக்கு இலக்கம் பொறிக்கப்பட்ட சீருடையை வழங்குவதற்கு மன்னார் நகரசபையும், ஓட்டோ சங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் நகரசபையின் கட்டளையையும் மீறித் தனியார் பஸ் தரிப்பிடத்தினுள் உட்பிரவேசிக்கும் ஓட்டோக்களால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தகைய ஓட்டோக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

## ஒன்றுகூடல்

உளவளத் துணையாளர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளது. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை வவுனியா தெற்குக் கல்வி வலயத்தின் முதன்மை மண்டபத்தில் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் உளவளத் துணையாளர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (க-402)

## 20 லட்சம் ரூபா அதிர்ஷ்டம்

மஹாஜன சம்பத சீட்டிழுப்பில் மன்னாரைச் சேர்ந்த ஒருவருக்கு 20 லட்சம் ரூபா அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

தேசிய லொத்தர் சபையின் விநியோகத்தரான என். மகேந்திரன். இவரிடமிருந்து கடந்த 11 ஆம் திகதி லொத்தர் ரிக்கற்றைக் கொள்வனவு செய்த ஒருவருக்கே இந்த அதிர்ஷ்டம் அடித்துள்ளது. (க-12)

## புதுக்குடியிருப்பில் நூலகம்

# போர்ச் சூழலில் மூன்று இன்று ஒன்று மட்டுமே

போர்க்காலச் சூழலில் மூன்று பொது நூலகங்கள் இயங்கி வந்த புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தற்போது ஒரேயொரு நூல் நிலையம் மட்டுமே இயங்கி வருகின்றது.

இந்த நிலை குறித்துக் கவலையும் விசனமும் தெரிவித்துள்ள பொதுமக்கள் போரினால் பல வகையிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதிச் செயற்படாமலிருக்கும் நூலகங்களை விரைவாக இயங்க வைப்பதற்கு உரியவர்கள் முன் வர வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இரு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய புதுக்குடியிருப்பு பிரதேச சபை 968 சதுரக் கிலோ மீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்டதாகும். 46 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட இச்சபை பரந்துபட்ட பெரிய பிரதேசமாகும்.

போரின் போது புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திலும் ஒட்டுசுட்டான், ஒலுமடு ஆகிய இடங்களில் இயங்கி வந்த உப அலுவலகங்களிலும் பொது நூலகங்கள் இயங்கி வந்தன. போருக்குப் பின்னர் சமாதான சூழ்நிலையில் தற்பொழுது பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் மட்டுமே வசதியீனங்களுக்கு மத்தியில் பொதுநூல் நிலையம் இயங்கி வருகின்றது. [illegible] ஒலுமடு ஆகிய உப அலுவலகங்களில் இயங்கி வந்த நூலகங்கள் தற்பொழுது இயங்கவில்லை. ஒலுமடுவிலுள்ள உப அலுவலகத்தில் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டுள்ளதால் அங்கு எந்த வித செயற்பாடும் இல்லை. இதே போல் ஒட்டுசுட்டானில் இயங்கி வந்த உப அலுவலகம் தற்பொழுது முறிகண்டியிலுள்ள தனியார் வீட்டில் இயங்கி வருகின்ற போதிலும் நூல் நிலையம் ஆரம்பிக்கப்படவில்லை.

போர்க் காலச் சூழ்நிலையில் மக்களின் நலன் கருதி மூன்று நூல் நிலையங்கள் இயங்கிய நிலையில் தற்போது ஒரேயொரு நூல் நிலையம் மட்டுமே இயங்கி வருவது குறித்து மக்கள் விசனமும் [illegible] கவலையும் தெரிவித்துள்ளார்கள். (க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர்பார்ம் லிமிட்டெட் நிறுவனத்துக்கு உள்நாட்டு உற்பத்தியாளருக்கான விசேட விருது



இலங்கையில் மருந்துப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடும் இன்டர்பார்ம் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்துக்கு, 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த உள்நாட்டு உற்பத்தியாளருக்கான விசேட விருது வழங்கப்பட்டுள்ளது. தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வழங்குநர்களுக்கான 15ஆவது ஒன்றுகூடல் நிகழ்வின் போது, இந்த விசேட விருது வழங்கப்பட்டிருந்தது. இந்த விருது வழங்கும் நிகழ்வு, கடந்த ஜுன் 30ஆம் திகதி நீர்கொழும்பு ஜெட்விங் ப்ளு ஹோட்டலில் இடம்பெற்றது. இன்டர்பார்ம் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்துக்கான தலையாய சிறப்பு சான்றிதழ் (Certificate of Excellance) , அந் நிறுவனம் சுகாதாரசேவை பணிமனையின் மூலம் அரச துறைக்கும், தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் தனியார் துறைக்கும் உயர் தரம்வாய்ந்த மருந்துப்பொருள்களை காலம் தாழ்த்தாது வழங்குவதை கௌரவிக்கும் வகையில் வழங்கப்பட்டிருந்தது.

கெமா பார்மசியுட்டிகல்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் அங்கத்துவ நிறுவனமாக செயலாற்றி வரும் இன்டர்பார்ம் (பிறைவேட்) லிமிடெட், 1990ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டிருந்தது. 1995ஆம் ஆண்டு கட்டுப்பாட்டு முறைமை இணங்கபடுத்தலின்பன், முதல் மருந்துப் பொருள்களை அரச மற்றும் தனியார் துறைகளுக்கு விநியோகிக்க ஆரம்பித்தது. அன்று தொடக்கம் இன் நிறுவனம் அரச துறைக்கான மருந்துப்பொருள்கள் விநியோகத்தில் தொடர்ந்து இடைவிடாது ஈடுபட்டு வருகின்றதுடன், தனியார் துறைக்கும் தரமான குறியீடான மருந்துப்பொருள்களை இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தனது சேவைகளை விஸ்தரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கௌரவமிக்க விருதை இன்டர்பார்ம் நிறுவனம் பெற்றுக் கொண்டமை குறித்து நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவ பணிப்பாளருமான கலன ஹேவமல்லிக கருத்து தெரிவிக்கையில், இன்டர்பார்ம் (பிறைவேட்) லிமிடெட் என்பது, 100 வீதம் இலங்கை கம்பனி என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், மௌபம லங்கா அமைப்பின் மூலம் வழங்கப்படும் சூரிய சிங்க வர்த்தக சின்னத்தை கொண்ட ஒரே மருந்துப் பொருள்கள் உற்பத்தி நிறுவனமுமாகும். இந்த விசேட விருது எமக்குக் கிடைத்தமையையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். எமது தரங்களில் நாம் பேணும் உயர் பெறுமதியும், அனைவருக்கும் தரமான சுகாதாரத்தை வழங்குவதில் பாண்டித்தியம் பெறுவது என்பதற்கு எமது நோக்கத்திற்கும் எமது அடிப்படைமதிப்பீட்டுக்கும் (Coer Values) அமைவாக இந்த விருது அமைந்துள்ளது. இந்தத் துறையில், நாம் எம்மக்களின் உயிர் தொடர்பான உற்பத்திகள்ில் ஈடுபட்டுள்ளோம். எனவே நாம் உற்பத்தி செய்யும் மருந்துப் பொருள்களின் தரம் குறித்து நாம் அதிகளவு கவனம் செலுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கை அரசாங்கத்துக்கும், எமது இதர பங்காளர்களுக்கும் அவர்கள் எமக்கு வழங்கும் ஒத்துழைப்புக்காக நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இவர்களின் ஒத்துழைப்பின் மூலம் எம்மால் அந்நியச் செலாவணியை மீதப்படுத்திக் கொள்ளவும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்காற்றவும் முடிந்தது.

அரசாங்கம் உற்பத்தி துறையை மேலும் ஊக்குவிக்கும் வகையில் உதவிகளை வழங்கும் என எதிர்பார்க்கிறேன். இந்த விருதை பொறுத்தமட்டில், எமது நிறுவனத்தின் ஒவ்வொரு ஊழியரும் தமது பங்களிப்பை இந்த விருதைப் பெற்றுக் கொள்வதற்காக நல்கியிருந்தார் என்றார்.

இன்டர்பார்ம் நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையும், செயற்பாடுகள் பிரிவும், பிலியந்தலை, மடபாத்த பகுதியில் அமைந்துள்ளன. உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளுக்கு அமைவாக அதிசிறந்த உற்பத்தி முறைமைகள் இங்கு கடைப்பிடிக்கப்படுகின்றன. இலங்கையின் சுகாதார அதிகார பிரிவுகளின் மூலம் இந்த உற்பத்தி நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# TVS லங்கா நிறுவனத்தின் சிறந்த செயற்பாட்டாளர் விருது




TVS லங்கா நிறுவனம் 2012ஆம் ஆண்டுக்கான அதன் வருடாந்த சேவை விநியோகத்தர்கள் மாநாட்டை மொறட்டுவ கோரளவெலயில் உள்ள றன்திய ஹோட்டலில் அண்மையில் நடத்தியது

நாடு முழுவதிலும் இருந்து 350இற்கும் அதிகமான TVS விநியோகத்தர்கள் TVS அன்ட் சன்ஸ், TVS மோட்டார் கம்பனி என்பனவற்றின் பிரதிநிதிகள், யுனைட்டட் மோட்டார்ஸ் நிறுவனத் தலைவர் ரஞ்சித் பொ்ணான்டோ TVS நிறுவன முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

வேகம் என்ற தொனிப்பொருளில் இந்தக் கண்கவர் நிகழ்வு இடம்பெற்றது.இன்றைய மாறிவரும் வாடிக்கையாளர் தேவை, அதற்கு முகம் கொடுக்கும் வகையில் நாம் முன்னணி வகிக்கவேண்டியதன் அவசியம், ஒரு நிறுவனம் என்ற ரீதியில் இந்த ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்று வெற்றியீட்டவேண்டிய அவசியம், அதற்கான எமது விநியோகச் சேவையின் துரிதம், என்பனவற்றை வலியுறுத்தும் வகையில் இந்தத் தொனிப்பொருள் அமைந்திருந்தது விற்பனைக்குப் பிந்திய சேவை என்ற போட்டி மிக்க பிரிவில் TVS எப்போதும் முன்னணி வகிக்கின்றது. இதனால்தான் TVS வாடிக்கையாளர்கள் எப்போதும் எமது வர்த்தக முத் திரைக்கு விசுவாசமானவர்களாகக் காணப்படுகின்றனர் என்று சந்தைப்படுத்தல் பிரிவுத் தலைவர் கீதால் அந்தனி கூறினார்.

இந்த மாநாட்டில் கம்பனியின் மிகச்சிறந்த விநியோகத்தர்களுக்கு அவர்களின் மகத்தான சேவையை கௌரவிக்கும் வகையில் பல விருதுகளும் வழங்கப்பட்டன. அதே போல் TVS லங்கா ஊழியர்களுக்கு விஷேட பயணப் பொதிகள் மற்றும் பணப் பரிசில்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

சேவை விநியோகத்தர்களுக்கு அதிகரித்து வரும் தொழில் துறை ஆக்கபூர்வ மாற்றங்கள் குறித்த அறிவூட்டல் மற்றும் அவர்களது செயற்றிறனை ஊக்குவித்தல் ஆகிய இரு நோக்கங்களைக் கொண்டதாக இந்த விழா அமைந்திருந்தது.(த)

# தேசிய சேமிப்பு வங்கியினால் 53 மாணவர்கள் கௌரவிப்பு

வடமராட்சி, ஜூலை 15

கடந்த வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் சிறுவர் கணக்கை வைத்திருக்கும் 53 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் அதன் முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் வட வலய முகாமையாளர் வி.அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகர சபைத்தலைவர் ச.பா.ரவீந்திரன்,வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

53 மாணவர்களும் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். (த-8)

# செலானின் 'பரிசு மேல் பரிசு' ஐந்தாவது கோடீஸ்வர் தெரிவு




செலான் வங்கியின் 'பரிசு மேல் பரிசு' வெகுமதி வழங்கல் திட்டத்தின் ஐந்தாவது சீட்டிழுப்பு அண்மையில் இடம் பெற்றபோது, ரூபா ஒரு மில்லியன் பணப் பரிசினை வென்றெடுக்கும் அதிர்ஷ்டசாலி வெற்றியாளராக நுகேகொடை கிளையின் வாடிக்கையாளரான என்.எஸ்.கே. ஆராச்சிகே தெரிவு செய்யப்பட்டார்.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள செலான் வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில், வங்கியின் த்லைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மொஹான் பீரிஸ், நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராஜா, பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன ஆகியோரிடமிருந்து ஐந்தாவது தொகுதி வெற்றியாளர்கள் தமக்குரிய வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனத்தின் வருடாந்த விநியோகத்தர் சந்திப்பு



இலங்கை முழுதும் பரந்து காணப்படும் டயர் விநியோகத்தர்களை கௌரவிக்கும் வகையில், றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனத்தின் மூலம் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் ஒன்றுகூடல் நிகழ்வு இவ்வருடமும் 'Su ccess Trail Top Dealer Awards -2012' எனும் தலைப்பில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தை சேர்ந்த மஸ்கெலிய பெருந்தோட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அநுர ஏக்கநாயக்க, றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் குழும பணிப்பாளரும் தேசிய உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளருமான சுனில் லியனகே மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு அளுத்தகம ஈடின் றிசோர்ட் மற்றும் ஸ்பா ஹோட்டலில் கோலாகலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந் நிகழ்வின் விசேட விருந்தினராக இந்தியாவின் பிர்லா டயர் நிறுவனத்தின் உப தலைவர் பயிஜூ ராதா கிருஷ் ணன் கலந்து கொண்டிருந்தார்.

வடக்கு கிழக்கு பிராந்தியங்கள் உள்ளடங்கலாக இலங்கையின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த டயர் விநியோகத்தர்கள் 1500 இற்கும் அதிகமானவர்கள் தெரிவு செய்யப்பட்டு 60 விநியோகத்தர்களுக்கு தமது குடும்பத்தினர் சகிதம் வருடாந்தம் ஒன்று கூடும் இந்த றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனத்தின் விநியோகத்தர் ஒன்றுகூடல் நிகழ்வானது இந்த நாட்டின் டயர் விநியோகத்தர்கள் மத்தியில் பெரும் வர வேற்பைப் பெற்றுள்ளது.

றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் இவ்வருடம், மீள் நிரப்பிய டயர், விற்பனை ஆகிய இரு பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு சான்றிதழ்கள், பணப்பரிசுகள் மற்றும் வெளிநாட்டு சுற்று [illegible]ன வழங்கப் [illegible]ன. இந்த விசேட விருதுகளுக்கு மேலதிகமாக, இவ்வருட விருதுகள் வழங்கல் நிகழ்வில், 'மாகாண சிறப்புத்தேர்ச்சி' மற்றும் 'வர்த்தகநாம சிறப்புத் தேர்ச்சி' ஆகிய பிரிவுகளிலும் விருதுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் வழங்கல் நிகழ்வில், மீள் நிரப்பிய டயர் பிரிவில் முதலாமிடத்தை நீர்கொழும்பைச் சேர்ந்த ஆசிரி டயர் டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் எச்.எம்.வசந்த குமார வெற்றிபெற்றார். இந்தப்பிரிவின் இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே திக்வெல்ல பகுதியைச் சேர்ந்த சாந்தி டயர் மார்ட் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி எம்.ஏ.டி.ஜே.சாந்திரத்ன மற்றும் ரம்புக்கனை சிசிர டயர் ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.டபிள்யு. சிசிர குமார ஆகியோர் வெற்றி பெற்றிருந்தனர். விற்பனை பிரிவில் முதலாமிடத்தை நீர்கொழும்பைச் சேர்ந்த ஆசிரி டயர் டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் எச்.எம். வசந்த குமார வெற்றிபெற்றிருந்தார். இவருக்கான விருதை நிகழ்வின் விசேட அதிதியாக பங்குபற்றிய இந்தியாவின் பிர்லா டயர் நிறுவனத்தின் உப தலைவர் பயிஜூ ராதாகிருஷ்ணன் வழங்கியிருந்தார்.

இந்தப் பிரிவில் இரண்டாம் மற்றும் மூன்றா மிடங்களை முறையே அனுராதபுரத்தை சேர்ந்த ஒடோ டயர் ஹவுஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பீ.ஏ. சுனில் பிரேமரத்ன மற்றும் பன்னல ஹிருணி டயர் ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஐ.ஏ.கருணாதிலக ஆகியோர் வெற்றி பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்ப 1986, 2இல் செவ்வாய், கிரகபாவம் 30, உத்தராட நட்சத்திரம் 26 வயதுடைய மணமகளுக்கு வெளிநாட்டுப் பிரஜாவுரிமையுடைய மணமகன் தேவை. (லக்,2,4,7,8,,12 செவ்வாயுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்)
தொடர்பு: சகோதரன்: 077 5023469
(20414) (45-6-7)

## காணி விற்பனைக்குண்டு

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 5227107
(20452)(6-7-8)

## வாகனம் வாடகைக்கு

15,000 Km ஓடிய, Full Body அடித்த கிமோ வாகனம் மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 3762934
(20416)(6-7-8)


## நல்லூர்க்கந்தன் திருவிழாவுக்கான கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 15

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபை கலாசாரப் பிரிவால் நடத்தப்படும் கட்டுரைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலையில் நடை பெறவுள்ளது.

(வ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 ★ 04 ★ 1939

மறைவு
08 ★ 07 ★ 2010

### விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம்

(முன்னாள் ஒளிப்பதிவாளர், விஜயாஸ் ஸ்ரூடியோ, புலோலிதலைவந்தலை)

அன்பு அண்ணாவே அருமைச் சகோதரனே
என்னைவிட்டுப் பிரிந்து ஆண்டு இரண்டு
ஆனதுவோ, ஆறவில்லை எனது துயரம்
அனாதையாய் நிற்கின்றேன் தெய்வமாய்
நின்று காத்திடுவீர்.

அன்புத் தங்கை
ராசாத்தி

அன்பு மாமாவே,எனக்கு ஒரு தாய் மாமன்
உண்டு என்று பெருமையுடன் நினைத்து
இருந்தேன் ஆண்டு இரண்டு ஆனாலும்
உங்களை இழந்த துயரத்தை ஈடுசெய்ய
முடியாமல் தவிக்கின்றேன் இன்று வரை.......

அன்பு மருமகன்
ஜெகன்.

60/37, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(20408)(5-6-7)


## வாடகைக்கு

கூலி வாகனம் (10 அடி) வாடகைக்கு உள்ளது.
தொடர்பு: 078 8307 080
(20410)(45,6,7)

## கடைத் தொகுதி வாடகைக்கு

கண்டி வீதி, சின்னக் கிணற்றடிக்கு அருகில் (அரஸ்கோ நிறுவனத்திற்கு சமீபமாக) வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 657 9966, 078 911 2233
(20403)(5-6-7)

## வீடு வாடகைக்கு

வட்டுக்கோட்டையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு : 072 7288795, 021 3217560
(20407)(6-7-8)

## கடை வாடகைக்கு

இல. 40, (8B) ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள 10'X37' நீள அகலமுடைய கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : 077 0761177
(20413)(6-7-8)

## தேங்காய் எண்ணெய் ஆலை இணுவில்

தேங்காய், கொப்பறா எண்ணெய் பாக்கிக் கொடுக்கப்படும்.
(கே.கே.எஸ். றோட், இணுவில். - இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
(20402)(5-6-7)

## தேவை

புடைவை நிலையத்திற்கு விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள் மட்டும்) உடன் தேவை.
சுன்னாகம் அதனை அண்டிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது
தொடர்பு : 071 1191121, 071 6199379
(20395)(6-7-8)


# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி 13.07.2012 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும்,செல்லம்மா காலஞ்சென்ற பவளம் ஆகியோரின் சகோதரியும் இந்திராணி, மகாராணி, ரகுநாதன்(ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், மனோகரன், கனகலிங்கம், சுதர்சன் ஆகியோரின் மாமியும், சோபிதா, தறோஷன், அனோஜா, தவீதா, சிந்தூரா, பானுதன், அபினா, விஜிதன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.கனகலிங்கம்,
மிஷன் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
(20415)(6-75)


## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில், சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 4767213
(20393)(6-7-8)

## விற்பனைக்கு

நகைத் தொழிலுக்குரிய கம்பி தகடு அரைக்கும் இயந்திரம் மற்றும் டை இயந்திரம் விற்பனைக்கு உள்ளது.
(20409) தொடர்பு: 0788307080 (6,9,10)


## வைர விழா - கிளிநொச்சி இந்துக்கல்லூரி 28 செப்ரெம்பர் 2012

எதிர்வரும் 28.09.2012 கிளி/இந்துக்கல்லூரியில் வைரவிழா கொண்டாடப்படவுள்ளது. அன்றையதினம் உங்கள் எல்லோரையும் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
60 ஆம் ஆண்டு வைரவிழா மலர் வெளியீட்டில் பல சிறப்பம்சங்களை உள்ளடக்க உள்ளோம். பாடசாலை வரலாறு இற்றை வரை கற்பித்த அதிபர், ஆசிரியர்களின் விவரம், அமரத்துவம்அடைந்த ஆசிரியர் விவரம் மற்றும் பாடசாலையில் மிக சிறப்பாக நடந்தேறிய சம்பவங்கள், கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களின் கீழ்வரும் விவரங்களை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

01. முழுப் பெயர் :
02. கல்வி கற்பித்த வருடம் :
03. கற்பித்த பாடம் :
04. சொந்த இடம் :
05. நிழற்படம் 1 :

மேலும் இம்மலர் சிறப்புற பாடசாலையில் பலர் ஒன்றுசேர்ந்து எடுத்த படங்கள் மற்றும் பாடசாலையின் சிறப்பைச் சொல்லும் மறக்க முடியாத சம்பவங்களின் தொகுப்பு என்பவற்றை எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 3208202, 077 1510242
Sathyan.health@gmail.com
Kn.hinducollege@gmail.com

Dr. த. சத்தியமூர்த்தி
செயலாளர், கிளி/ இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
(19283)(6-7-8)

# மரண அறிவித்தல்

## இராசையா புஷ்பவதி



அரியாலை திருமகள் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசையா புஷ்பவதி நேற்றுமுன்தினம் (13.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், கோபாலசிங்கம், காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் சகோதரியும், இந்துமதி, உதயகுமார், காலஞ்சென்ற பாலரஞ்சனி ஆகியோரின் பாசமிகு தாயும், மகேந்திரன், சிங்கராஜ், ரஜனி ஆகியோரின் மாமியும், கமலாம்பிகை, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் புஷ்பவதி ஆகியோரின் மைத்துனியும், மைதிலி, சர்மிலி, காயத்திரி, யதிஷ், நிரோஜினி, சுகாசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சியாம், சிரிக்கா, கெல்வின், சவீனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்து இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(20451) (6,7,10)

# மரண அறிவித்தல்

## செபமாலைமுத்து நீற்றம்மா



ஊர்காவற்றுறை சென்மேரிஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை முத்து நீற்றம்மா கடந்த (09.07.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற லோ. செபமாலை முத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சவினம்மா மற்றும் மரியதாஸ், மரியசீலி, ஸ்ரீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற றெஜினோல்ட் (முன்னாள் முகாமையாளர் - மக்கள் வங்கி) மற்றும் றொபின், றூபி (முன்னாள் ஊழியர், ப.நோ.கூ. சங்கம்), றொபட், றீச்சேட் ஆகியோரின் அன்புத் தாயும், மல்லிகா, அமலநாயகி, பரிமளா, சுமி, மெசியதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்ஸ்டா, பெனிஸ்ரா, அன்றூக், பீற், கனிஸ்டா, றீற்றா, இனோக்தாஸ், திமோத்தாஸ், சுபேக்தாஸ், பிரியந்தினி, பிறீத்தா, பிரியந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.07.2012) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலியைத் தொடர்ந்து நல்லடக்கத்திற்காக ஊர்காவற்றுறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெரேசா கொலனி,
மணிக்குறி வீதி, ஊர்காவற்றுறை.

தகவல்:
மகன்மார், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(20412) (45,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனை பாம்பு தீண்டியது

வடமராட்சி, ஜூலை 15

பாம்பினால் கடியுண்ட சிறுவன் ஒருவன் சிகிச்சைக்காக பருத்தித் துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கம்பர்மலையைச் சேர்ந்த இ.லாவண்யன் (வயது 14) என்ற சிறுவனே பாம்பினால் கடியுண்டவராவார்.

வீட்டில் வைத்து பந்து ஒன்றினை விளை யாடிக் கொண்டிருந்த வேளை வீசப்பட்ட பந்து வேலியில் தொங்கவே அதனை எடுக்க வேலியில் கை வைக்கவே வேலியில் நின்ற சாரைப் பாம்பு மீது அவரது கை பட்டுவிட்டது. உடனடியாக அவரது கையை பாம்பு கடித்து விட்டதாக சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டது. (த-8)

## வரணி வீதியில் இளைஞர்கள் அட்டகாசம்

சாவகச்சேரி, ஜூலை 15

வரணிப் பகுதியில் ஆட்டோவில் வந்த இனம்தெரியாத இளைஞர்கள் சிலர் நேற்று முன்தினம் வீதியில் வந்தவர்களை தாக்கியதுடன் வீதியால் சென்ற பயணிகள் பஸ் வண்டியையும் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (10-31)


## வீடு விற்பனைக்கு

பொன்னாலை வீதி மானிப்பாயில் 2 பரப்புக் காணியுடன் பயன்தரு மரங்கள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: 077 477 9410
(20458)(5-6)

## எமது சிகிச்சைகள்


* இருதய நோய்
* புற்றுநோய் தணிப்பு
* ஈரல் பிரச்சினைகள்
* மூட்டுவலி, இடுப்புவலி
* புரோட்டஸ்டிரேட் பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* மனஅழுத்தம்
* இருமல், சளி
* படுக்கைப் புண்
* நீரிழிவுப்புண்
* விஷ வைரஸ் பாதிப்பு

Hotline: 0777708310
0777708434

Tel : 551 78 97
555 18 79
555 84 42
Fax : 551 77 56

வளமான வாழ்வுக்கு நலமான இதயம் தேவை

இருதய நோயினால் அவதிப்படுபவர்கள் சுகம் பெற முடியும்.விரும்பும் பலனை ஆயுர்வேத மருந்தினால் அடைய முடியும்.அது இருதயத்திற்கான இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். நெஞ்சு வலியை நீக்கும். சிக்கலான சிகிச்சை இன்றி நலமடைவீர்கள்.




இருதய அடைப்புக்கள் அறிகுறி
இருதயம் எரியும் உணர்வு
குறைவான சுவாசம்
நெஞ்சு வலி

இந் நோய்களால் துன்பப்படுகிறீர்களா....?
மூட்டு வலி
மூட்டுகளில் வீக்கம்
மூட்டுகளில் இறுக்கம்
நடமாடுவது கஸ்டம்
முதுகு வலி
கழுத்து வலி
உடனே எங்கள் மருத்துவரை சந்தியுங்கள்



FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)
(வி/1330)(2-6-7)

Free Consultation
Daily @ World Trade Centre
Monthly Clinics are conducted islandwide

Level 5 / East Tower / 1C,
World Trade Centre, Colombo 01.
Website: www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI, AN ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## கார் விற்பனைக்கு



TOYOTA AXIO 141 Year 2010 / 07 X HID LIMITED PEARL WHITE WITH TV, DVD REVERSE CAMARA SCOOP LIGHT FULL OPTION
ஸ்ரீ ரங்கநாதன் ட்ரேடர்ஸ்,
190, கே.கே.எஸ், றோட், யாழ்ப்பாணம்.
(C/1324)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் செல்லையா இலகுப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)



எமது ஆலயத்தின் முன் னாள் தலைவரும் சிறந்த சமூக சேவையாளரும், புங்குடுதீவு சேர் துரைசுவாமி வித்தியாலயம்,புங் / ஊரை தீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபரு மான ஓய்வு பெற்ற ஆசிரியமணி அமரர் செல்லையா இலகுப்பிள்ளை அவர்களின் மறைவினால் துயருற் றிருக்கும் அன்னாரின் குடும்பத் தினருக்கு சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவ ரின் ஆன்மா பாணா விடைச் சிவனின் பாதங் களில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தான பரிபாலன தர்மகர்த்தா சபையினர்.
புங்குடுதீவு-07 (20423)(5-6-7)

## வாகனம் விற்பனைக்கு

LEYLAND G45 மூன்று கியூப் இரண்டு டிப்பர்கள் LI 6128 (50x67500) 25,000 கிலோ மீற்றர் ஓடியுள்ளது. மற்றும் LH 8238 (44x48300) 50,000 கிலோ மீற்றர் ஓடியுள்ளது.
இவை இரண்டும் ஆகக்கூடிய கேள்விக்கு மிகவும் அவசரமான விற்பனைக்கு உண்டு.
உரிமையாளர் நாட்டை விட்டுச் செல்லவுள்ளார்.
கொழும்பில் பார்வையிடலாம்.
தொலை பேசி இலக்கம் :
071 8151260
(வி/1331)(2-6-7)

## முகவர்கள், மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர்கள் தேவை



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை மற்றும் உர வகைகளை திங்கள், செவ்வாய், ஆகிய நாள்களில் (July 16, 17)
Green Grass Hotel, Hospital Road, Jaffna
மொத்தமாகவும், சில்லறையாகவும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.
(வி/1333)(2-6-7)
தொடர்பு : 0714920857/0112370616

## Spot Admission For EUROPE

ஐரோப்பிய நாட்டு பல்கலைக்கழக/கல்லூரிகளின் உயர்கல்வி ஆலோசகர் தற்போது இலங்கையில், நேர்முகப்பரீட்சைகள் நடத்தி ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

2012 August, September அனுமதிக்கான Spot Admission இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் யாழ் மண்ணில், அடுத்த மாதம் 4ம், 5ம் திகதிகளில் மட்டக்களப்பில்



எங்களிடம் மட்டுமே!!
VISA 100%

விசா கிடைத்தபின்பு பாடநெறிக்கான கட்டணம் ரூ 150 000 மட்டுமே... வருடத்திற்கு US $2900

* MBBS
* Engineering
* Aircraft Flight Operation (Pilot)
* Management
* Hotel & Tourism
* Computing
* Automation
* Marketing
* Banking
* Nursing • Law
* HR • Design

1000's of courses...

* பட்டப்படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
* IELTS அவசியமில்லை
* ஆகக்குறைந்த கல்வித்தகைமை O/L
* Sponsorship தேவையில்லை
* கற்கைநெறியின் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி
* விடுமுறைநாட்களில் விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வேலைவாய்ப்புகள்
* குறைந்த வாழ்க்கைச் செலவு
* குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கொள்ளும் வசதி

(வி/1327)(2-6-7)

STUDY/ VISIT/ BUSINESS
• Sweden • New Zealand • Italy
• German • Singapore • UK
• France • Ukraine • Cyprus

072 62 69 956
077 354 64 00
87, பேராதெனிய வீதி, கண்டி.

Rohaka (Pvt) Limited
வெளிநாட்டுப் பட்டப்படிப்பிற்கான ஆலோசகர்கள்
91, 5 வது மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 04.
(மயஸ்ரிக் சிட்டி அருகில், சிங்கர் கட்டிடத்தொகுதியில்)
தொலைபேசி. 0112 590 445 www.rohaka-global.com

Baurs
Established 1897

A. Baur & Co. (Pvt.) Ltd. is a long established diversified Trading and Manufacturing Company. We recognize that our employees are our most important resource. We are committed to their Development and Professional Growth.

# BAURS IS LOOKING

## FOR A DELEGATE - SURGICAL PRODUCTS

For Medical & Surgical Equipment, Instruments & Consumables Marketing in North & East

**Requirements:**

1. G.C.E (Advanced Level) in Bio Science
2. Minimum of 3 years experience in Sales & Marketing of Medical/Surgical products
3. Excellent communication skills with proficiency in English
4. Preferably a resident from North/East
5. Should possess a valid driving license and willing to travel extensively and work in any part of the country under minimum supervision

Please forward complete CV giving full details of the applicant within 07 days of this advertisement together with contact telephone numbers of two non related referees and copies of relevant certificates to:

The Director - Human Resource
A. Baur & Co. (Pvt.) Ltd. No. 5 Upper Chatham Street Colombo 1

(Applicants should mention the post they are applying for, on the top left hand of the envelope)

A.Baur & Company (Private) Limited is an equal opportunity company. Canvassing will be a disqualification

agriculture chemicals consumer education engineering exports healthcare optics tourism

(வி/1334)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரவணைப்பதி ஸ்ரீ செல்வக்கதிர்

# பொன்னி சாமி அம்மன் ஆலயம் ஜீர்ணோத்தாரனை

### முருகனின் திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ ஆசிகள்



சரவணை பதி பெரிய காடு என்னும் பதியில் வேண்டுவார் வேண்டுவதை அருள் மருந்து கொடுத்து செல்வக் கதிர்காமம் முருகன் பெயரை கொண்ட முருகப்பெரு மானும் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு முன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பெரிய காடு மத்தியில் வாழும் வறுமைக்குட்பட்ட மக்களின் தாய் தந்தையாக இருந்த முருகப்பெருமானுக்கு கடந்த 5 மாதங்கள் புதிதாக ஆலயத்தை அமைப்பதற்குக் கிராம மக்களின் முயற்சினாலும் அமைச்சர் அவர்களின் உதவியாலும் இன்றைய பொன்னாளில் முருகப்பெருமான் பரிபாலகரோடு பெரிய ஆலயமாக அமைந்து குடமுழுக்கு விழா சிறப்பாக நடக்கிறது. இந்த முருகப்பெருமானின் நம்பிக்கை பேரின் அந்த ஆலய மண்ணை எடுத்து நம்பிக்கையுடன் நெற்றியில் பூசினால் உடம் பில் உள்ள நோய் அகலும். இந்த கைங்கரியத்தை ஊர்மக்கள் முருகன் மேல் வைத்திருக்கும் பக்தி எங்களுக்கு காட்சிதருகின்றது. அனைத்து உலக முருகன் அடியார்கள் அனைவரும் இந்த கும்பாபிஷேகத்தில் பங்கு பற்றி முருகனின் திருவருள் பெற்று பேரானந்த பெரு வாழ்வும் ஆலய பரிபாலன சபையின் முயற்சியால் சீக்கிரம் கும்பாபிஷேக விழா நடை பெறுகின்றது. இந்த நேரத்தில் எல்லோரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி எமது நல் ஆசியை கூறுகிறேன்.

கும்பாபிஷேக பிரதம குரு ஜோதிட சிகாமணி, நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்.

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

ஆன்மிகமும் அமைதியும் நிறைந்த சரவணைக் கிராமத்தில் செல்வக் கதிர்காம முருகனுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். அருள் நிறைந்த



பொன்னி சாமி அம்மா ஆலயம் என அழைக்கப்படும் இத்திருக்கோயில் புதுப்பொலிவு பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. இத்திருக்கோயிலை நன்முறையில் பராமரித்து வரும் தர்மகர்த்தாவும் ஆலய பரிபாலன சபையும் எடுத்த நன் முயற்சி மெச்சத்தக்கது. கீர்த்தி மிக்க முருகப் பெருமானின் பேரருளால் திருப்பணிவேலைகள் துரிதமாக நிறைவு பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்வினைத் தருகிறது. சரவணை முருகனின் கும்பாபிஷேகத்தோடு எம் மண்ணில் நிரந்தர நிம்மதி உருவாக வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

*''யாவர்க்குமாம் என்றும் இன்னுரைதானே''*

கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை. தலைவர், சிவபூமி அறக்கட்டளை

### ஆளுநர் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

''செல்வக்கதிர்காமம்'' என எல்லோராலும் அழைக்கப்படும் சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். தீவகத்தில் பல்வேறு சிறப்புக்களையும், மக்களின் நோய் தீர்க்கும் வல்லமையும் கொண்ட இந்த முருகன் ஆலயம் சிறிய ஆலயமாக நீண்ட காலமாக சரவணை மக்களால் பராமரிக்கப்பட்டு வந்ததை நான் நன்கு அறிவேன். தீராத நோய் கொண்டோர் இவ்வாலயத்தை நாடி வந்து அங்கு சில நாள்கள் தங்கி முருகனின் அருளால் நலமாக வீடு திரும்பிச் செல்வதாக அறிய முடிகின்றது.

இவ்வாறு சிறப்புப் பெற்ற ஆலயம் மிகவும் சிறிய கட்டட அமைப்பைக் கொண்டதாகவே நீண்ட காலம் பராமரிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர்வுகளினால் குறிப்பிட்ட சில காலம் கைவிடப்பட்ட நிலையிலும் தற்போது மக்களின் பங்களிப்பாலும், அரச உதவிகளாலும் ஆலயம் புனரமைக்கப்பட்டு தற்போது மகா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பது சரவணைக் கிராமத்திற்கு மட்டுமல்ல தீவகப் பிரதேசத்திற்கே சிறப்பானதாகும். ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகனின் அருளால் தீவகம் நிறைவான வளத்தையும், மகிழ்ச்சியான வாழ்க்கையையும் பெற பிரார்த்திக்கின்றேன். அத்துடன் கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றேன்.

செயலாளர், ஆளுநரின் செயலகம், வட மாகாணம்.



### நலம் தருவான் முருகன் நலம் தருவான்

சரவணப் பொய்கையில் அவதரித்த பெருமான் சரவணைப் பதியிலே குடிகொண்டு தனக்கென ஓர் ஆலயத்தை அமைக்க அருள் கொடுத்து அருளாட்சி வழங்கும் பெருமான் காணும் மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெற இறைவனை வேண்டுகின்றேன்.

ம. கந்தையா, செயலாளர், ஆலயபரிபாலனசபை.

### மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நல் வாழ்த்துக்கள்

குடிசையிலே குடியிருந்த குமரனுக்கு புதிய கோயில் கட்டியதை அறிந்து மிகவும் ஆனந்தமாக இருந்தது. இக் குடிசைக் குமரன் பல புதுமைகள் செய்தவன். தீராத நோய்களையும் பிணிகளையும் தீர்த்தவன், முருகனுடைய புதுமைகள் சொல்லி அடங்காது. இம் முருகனுக்கு புதிய ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெறுவதை அடுத்து மகிழ்ச்சி அடைகின்றேன். மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல முருகனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

கந்தையா சண்முகம்பிள்ளை பொருளாளர், சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் ஆலய பரிபாலனசபை.

(சி/1072) (2-6-7)

### Message from the Hon. Governor, Northern Province

I extremely happy to send this blessing message in line with the



"Maha Kumbabiseka' ceremony of Sri Sellakathirgama Murugan Temple, Saravanai, Velani.

I understand that the temple of Sri Sellakathiragama is one of the historical, ancient temple in Island area. People of Saravanai village and surrounding areas are strongly believed that 'Maha Kumbabisekam' of Murugan Temple good start for prosperous of Island areas. I also believe that rehabilitation of religious and culturai value places to promote resettlement and development of the Islands.

I congratulate temple committee and wish all the best.

**G.A. Chandrasiri Governor, Nothern Province.**

### பிரதேச செயலரின் வாழ்த்து



''உள்ளம் உருகுதையா முருகா உன்னை நினைக்கையிலே'' ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்திருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் சரவணைப்பதி ஸ்ரீ செல்லக் கதிர்காம முருகன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வூர் மக்களின் முருக பக்தியும் கடின உழைப்பும், விடாமுயற்சியும் இந்த ஆலயத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றுகின்றது. அத்துடன் இந்த ஆலயவளர்ச்சியில் ஆலய பரிபாலன சபையின் பங்கும் மிகவும் சிறப்பானது. வேண்டுவார்க்கு வேண்டுவதை எல்லாம் தந்து அடியார்கள் துயர் போக்கி ஆட்கொள்பவன் முருகன், சரவணைக் கிராமத்தின் நடுவே வீற்றிருக்கும் எழிலுருவான முருகனது திருக்கோலத்தை கண்டு பக்தி பரவசத்தால் மெய்யுருக வழி படும் அடியவர்கள் சகல செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் முருகனை வணங்கி வாழ்த்துகின்றேன். வாழ்க.

நந்தகோபாலன், பிரதேச செயலர், வலி. தெற்கு, உடுவில்.



### முருகன் அடியார்களே

வேல்கொண்டு வினை தீர்த்த குடிசையிலே குடியிருந்த முருகனுக்கு புதிய ஆலயம் அமைக்க நாம் விரும்பி மேற்படி சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் ஆலய பரிபாலன சபையினருடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கேட்ட உடன் நிதி உதவி தந்துள்ளார். அத்துடன் முருகன் அடியவர்களின் பங்களிப்புடனும் இவ்வாலயம் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். இன்று (2012.07.15) கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற முருகனின் அருள் வேண்டி முருகனிடம் வேண்டுகின்றேன்.

சதாசிவம் இந்திரன்,தர்மகர்த்தா
சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் ஆலயம்

### அடியவர்க்கு கந்தன் அருள் புரியட்டும்

வரலாற்றுச் சிறப்பும் வழிபாட்டு மரபும் ஒருங்கே அமையப்பெற்ற யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கு பகுதியைச் சூழ்ந்துள்ள ஸப்த தீவுகளில் ஒன்றாகிய வேலணைப் பதியிலே சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காமம் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. கதிர்காமக் கந்தனது அருளுக்குப் பாத்திரமான சாமி அம்மா என்பவரால் ஸ்தாபிக்கப்பெற்ற இந்த ஆலயம் நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்கியது சிறப்புக்குரியது. இந்த ஆலய மூலஸ்தானத்திற்கு அருகில் இருக்கும் புற்று மண் நோய்தீர்க்கும் மருந்து. இங்கு பல அடியவர்கள் வந்து நோய் தீர்த்து சென்றதாக அறியக்கிடக்கிறது.

இவ் ஆலயம் சிறப்புற தற்பொழுது அமையப் பெற்று கும்பாபிஷேகம் என்னும் பெருவிழாவைக் காண்பது மிகச் சிறப்பானது. இந்த விழா கைகூடுவதற்கு அரும்பணி ஆற்றிய அத்தனை அடியவர்களுக்கும் கும்பாபிஷேகம் சிறப்புடன் அமைய வாழ்த்தி எல்லாம் வல்ல கந்தப் பெருமானை வணங்குகின்றேன்.

[illegible]லன், இந்து கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

### சரவணைப்பதி ஸ்ரீ செல்லக் க

இலங்கையின் வட புலத்தே அமைந்து யாழ் தீவக
ணிலே உள்ள சரவணை என்னும் அழகிய கிராமத்தில்
வரை திருமணம் செய்து ஒரு பெண் பிள்ளையும் ஓர் ஆ
தில் நோய் ஏற்பட்டதனால் பல மருத்துவர்களிடம் காட்
லுக்கு தன் மகளைகொண்டு சென்று அந்நோயை தீர்
அங்கே தங்கியிருந்தார். ஒருநாள் அம்பாள் கனவிலே தே
கொண்டு செல் அங்கு உன்பிள்ளை நலம்பெறும் என்று க
கதிர்காம கந்தனிடம் சென்றார் கந்தனுக்கு நேர்த்திக்க
''முருகா'' நான் செல்லப்பாக்கியத்தை தான் திரும
செல்வம் இல்லையே எனமன முருகி வேண்டி ம
போல் பொன்னி யின் முன்வந்து ஒரு சிறிய வேல்
என்று கூறி சென்றார். பொன்னியும் அந்த வேலைக்
வந்தார். அப்பொழுது அக்குடிசை வீட்டில் ஓர் அதிச
வேல் போன்று காளான் முளைத் தது. அதனை கண்ட
ஆனால் கிறிஸ்வரான அவரது கணவன் நம்பவில்லை
தினம் தினம் அந்த அதியம் நிகழ்ந்தது. இதை அறிந்த
கணவன் நம்புவதாக இல்லை பொன்னியும் முருகப்
கணவனுக்கு கனவில் தோன்றி தனது வருகையைக் காட்
மேற்படி சரவணைக் கிராமத்தில் புளியங்கூடல் சந்திய
ஓவசியர் என்பவரது வீட்டில் பெறுமதிமிக்க நகைக
கேட்டபோது அவரிடம் முருகனிடத்தே இதனை
உருக்கொண்டு நேரடியாகவே சென்று அந்த ந
அப்பொருள்களை மீட்டுக்கொடுத்தார். இந்தச் செய்தி எ
எங்கும் தெரிந்தது. அதன் பின் பொன்னியின் கண
காளான்முளைத்த இடத்தில் இருந்து மருந்து (மண்
பிணிகளும் தீர்ந்தன. பொன்னி என்ற பெண் பொ
ஓலைக்குடிசை ஒரு சிறிய கோயிலா மாறியது. பொன்
செய்து கொண்டும் தனது இறைவன் அழைப்பை (இ
அறிவித்தார். தான் 1966 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் 5 ஆ
என்றும் தன்னை சமாதி வைக்க வேண்டும் என்றும் அ
நாளில் நேரத்தில் இறைவனடியில் சமாதி அடைந்தார்.
பக்கத்தில் இப்பொழுதும் சமாதிவைக்கப்பட்டுள்ளது. (இ
வரலாற்றுப் புத்தகத்திலே வெளிவரும்) பொன்னி சா
அண்ணன் கணபதி சரவணை சிறிது காலம் இறைப

முருகனும் தன்னுடைய இறை அருளை தன்னு
இராமனுடைய மனைவி சீதை என்பவரை தெரிவு செ
பூண்டார். சாமி அம்மா என்று எல்லா மக்களாலு
முருகனுடைய அருளை முருகன் அடியார்களுக்கு அ
பிறந்து ஆனைக்கோட்டையில் வாழ்ந்த முருகன் பாக்
பாக்கியசாமியார் என்று எல்லோரும் அழைப்பார்கள்
ஆலயத்திற்கு பக்கதில் ஒரு சிவன் கோயிலைக் கட்டி வ
2000ஆம் ஆண்டுவரை முருகனுக்கு தொண்டுசெய்த

2000ஆம் ஆண்டு முருகனுக்கு ஒருகோயில்கட்டவே
என்பவர் ஊர் மக்களிடம் முருகன் அடியார்களிடம் கேட்
கையினால் தீவக மக்கள் இடப்பெயர்வை மேற்கொண்
ஆம் ஆண்டு மீண்டும் வந்தபோது முருகன் ஆலயத்தின்
தர்மகத்தா மாதன் சதாசிவம் என்பவர் மேற்படி கோயிலை
டினார். இதனால் 2000ஆம் ஆண்டு ஒரு ஆலய பரிபால
கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளர் மனோ
ஒருபுதிய ஆலயம் அமைப்பதற்கு ஆதரவு கேட்ட உடன் அவரு
நாகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான
கிராமதில் உள்ள ஆலயங்கள் மீது அன்பும் கருணையும் உ
ரூபா ஐந்துலட்சம் வழங்கி பின் பகுதி பகுதியாக பண உ
12 வருடங்களின் பின் முருகனுக்கு மகா கும்பாபிஷேகம்



### முருக

2012.07.15 ஆம் திகதி எ
பெருமானுக்கு புதிய கோயில்
ணிய போது ''யாம் இருக்க ப
காட்டிய பாதை ஈழமக்கள் ஜன
டக்ளஸ் தேவானந்தா அவர்க
உடன் ஏற்றுக்கொண்டு ஆலய
ளார். அத்துடன் முருகன் அடியா
ஆண்டு புதிய ஆலயம் அமைப்
கட்டி முடிக்கப்பட்டு முருகனை எழுந்தருளச் செய்து
செல்வக்கதிர்காம முருகன் ஆலய பரிபாலனசபையி
இந்தக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லா
நல்லான் தேவன், தலைவர், சரவணை ஸ்ரீ செ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திர்காம முருகன் தேவஸ்தானம்

# ன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 15.07.2012

### ல்லக் கதிர்காம முருகன் ஆலய வரலாறு

து யாழ் தீவகற்பத்தின் ஸப்த (ஏழு) தீவுகளில் ஒன்றான வேலணைத்தீவி
 கிராமத்தில் வாழ்ந்த பொன்னி என்ற பெண் செல்லப்பாக்கியம் என்ப
ளயும் ஓர் ஆண் பிள்ளையும் பெற்றெடுத்தார். அப்பெண் பிள்ளைக்கு சிறுவய
களிடம் காட்டியும் நோய் தீரவில்லை. இதனால் நயினை நாகம்மாள் கோயி
நோயை தீர்த்து சுகம் பெறவைக்க வேண்டும் என்று அம்பாளை வேண்டி
 கனவிலே தோன்றி இந்தப் பிள்ளையை கதிர்காமத்தில் உள்ள முருகனிடம்
பறும் என்று காட்சி கொடுத்தார். உடனே பொன்னி தன்பிள்ளையை கொண்டு
 நேர்த்திக்கடனாக தானும் தனது மகளுமாக காவடி எடுத்து நிறைவுசெய்து
 தான் திருமணம் செய்துள்ளேன் உங்களிடம் வருவதற்கு என்னிடம்
வண்டி மலையில் இருந்து இறங்கிவரும்போது முருகன் மெய்யடியார்
றிய வேல் கொடுத்து நான் உன்னிடம் சிறிது காலம் செல்லவருவேன்
த வேலைக்கொண்டு வந்து தனது ஒலைக்குடிசையில் வைத்து வணங்கி
ல் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. காளான் வடிவினிலே நாகபாம்புபடம் எடுக்க
தனை கண்டபொன்னி ஆனந்தமடைந்தார். முருகனை வணங்கினார்.
ம்பவில்லை காளான் வடிவில்வந்தவற்றை பிடிங்கி எறிந்தார், அழித்தார்.
இதை அறிந்த ஊர் மக்கள் இந்தக் காட்சியைவந்து பார்தனர் ஆனால் அவரது
ம் முருகப்பெருமானை வேண்டினார். முருகப் பெருமானும் பொன்னியின்
கையைக் காட்சிகொடுத்தார். அத்துடன் ஓர் அதிசயத்தையும் நிகழ்த்தினார்.
டல் சந்தியையும் சரவணைச் சந்தியையும் இணைக்கும் வீதியில் சிங்க
மிக்க நகைகள் களவுபோய்விட்டன. அவர்கள் பொன்னியிடத்தே வந்து
த இதனை முறையிட்டு வேண்டிய போது முருகன் பொன்னியில்
று அந்த நகைகள் மறைத்து வைக்கப் பட்டுள்ள இடத்தில் இருந்து
ந்தச் செய்தி எங்கும் பரவியது அயற் கிராமங்களில் இருந்து யாழ். மாவட்டம்
ரியின் கணவரும் நம்பினார். மக்களும் நம்பிக்கையுடன் வந்தார்கள்.
ருந்து (மண்) எடுத்து உடல்முழுவதும் பூசி நீராட தீராத நோய் களும்
பெண் பொன்னிசாமி அம்மா என்று அழைக்கப்பட்டார். அவருடைய
யது. பொன்னி சாமியம்மா முருகனுடைய அருளுடன் பற்பல புதுமைகள்
ழைப்பை (இவ்வுலக வாழ்க்கையை நிறைவுசெய்தல்) எலலோருக்கும்
ம் மாதம் 5 ஆம் திகதி இரவு 10 மணி 10 நிமிடத்தில் இறைபதம் அடைவேன்
 என்றும் அதற்கு இடமும் காட்டினார். சொன்னபடியே மேற் குறிப்பிட்ட
அடைந்தார். பொன்னிசாமி அம்மாவின் திரு உடல் முருகன் ஆலயத்திற்குப்
டுள்ளது. (இன்னும் பல அதிசயங்கள் சாட்சியங்களுடன் விரிவாக ஆலய
பொன்னி சாமி அம்மா சமாதி அடைந்தபின் பொன்னி சாமி அம்மாவின்
லம் இறைபணி செய்தார்.

ள தன்னுடைய [illegible] ளுக்கு காட்டுவதற்காக அதே இடத்தை சேர்ந்த
 தெரிவு செய்தார் சீதைமாமி அம்மாவும் இல்லறம் துறந்து துறவறம்
 மக்களாலும் பக்தியுடன் அழைக்கப்பட்டார். சீதைசாமி அம்மாவும்
ார்களுக்கு அருளினார் சீதைசாமி அம்மாவின் காலத்தில் சரவணையில்
முருகன் பாக்கியமும் இல்லறம் துறந்து முருகனுக்கு தொண்டுசெய்தார்.
ழைப்பார்கள். பாக்கியசாமியார் தன்னுடைய உழைப்பினால் முருகன்
லைக் கட்டி வழிபட்டார் சீதைசாமி அம்மா 1970 ஆம் ஆண்டு தொடக்கம்
ாண்டுசெய்து 2011.11.23 ஆம் திகதி இறைபதமடைந்தார்.
யில் கட்டவேண்டும் என்று கோயிலை நிர்வகித்த தர்மகர்த்தா மாதன் சதாசிவம்
களிடம் கேட்டுக்கொண்டதனால் 1991 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்
 மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கும் பின் வன்னிக்கும் சென்று 1998
 ஆலயத்தின் தோற்றத்தை கண்டு கதிகலங்கி நின்றனர். கோயிலை நிர்வகித்த
டி கோயிலை புதுப்பொழிவுடன் அமைத்திட முருகன் அடியார்களிடம் வேண
லய பரிபாலன சபை அமைக்கப்பட்டது. ஆலய பரிபாலனசபையினர் ஈழமக்
ாளர் மனோ தோழர் (மதனராசா) என்பவரை அணுகி முருகனின் அருணைக்கூறி
 உடன் அவரும் பரிபாலனசபையினரை அழைத்துக் கொண்டு ஈழமக்கள் ஜன
மைச்சருமான டக்ளஸ் தேவனாந்தாவிடம் சென்று கதைத்தபோது சரவணைக்
ருணையும் உள்ள எமது அமைச்சர் உடனே அதற்கு சம்மதித்து முதற்கட்டமாக
தியாக பண உதவிசெய்து கோயிலை கட்டிமுடிப்பதற்கு உதவி வழங்கினார்
ம்பாபிஷேகம் 2012.07.15 ஆம் திகதி இன்று நடைபெறுகின்றது.

### முருகன் மெய் அடியார்களே

ஆம் திகதி எமது சரவணை கிராம மக்களுக்கு புதிய நாள் எம் முருகப்
திய கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று எண
ம் இருக்க பயம் ஏன்'' என்று முருகப் பெருமான் அருள்தந்து எமக்கு
ழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான
ந்தா அவர்களை நாங்கள் அவரை அணுகி எமது எண்ணத்தை கூறிய
ண்டு ஆலயம் அமைப்பதற்கு வேண்டிய பெரும் நிதி உதவியை தந்துள்
ருகன் அடியார்களும் எமது கிராமமக்களின் பங்களிப்புடனும் 2000 ஆம்
லயம் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டு இன்று புதுப் பொலிவு டன்
நளச் செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு சரவணை ஸ்ரீ
லனசபையினராகிய நாம் பெருமகிழ்ச்சிகொள்கின்றோம். அத் துடன்
ற எல்லாம் வல்ல முருகனை வணங்கி வாழ்துகின்றோம்.

ணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் ஆலய பரிபாலனசபை.

### கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
### எனது இறைவேண்டுதலும் நல் ஆசிகளும்

மாணிக்கப் பிள்ளையாருக்கு முதல் வணக்கம் செலுத்தி மாணிக்க கங்கையை மருவிக் கோயில் கொண்ட செல்வக்கதிர்காம முருகப் பெருமான் பிள்ளையின் பிணி தீர்க்க வேண்டித் தன்னை நாடி



வந்த பொன்னிச்சாமி அம்மா அவரது கணவர் செல்லப்பாக்கியம் ஆகியோர் முன் சாமியார் வேடத்தில் தோன்றிக் கொடுத்த வாக்கிற்கு அமைய 1964 ஆம் ஆண்டு முற்பகுதியில் பொன்னிசாமி அம்மாவின் குடிசையைக் குமர கோட்டமாக்கி, குடிசை குமரனாய்க் கோயில் கொண்டு எழுந்தருளி, சாதி மத பேதமின்றி தங்களை பீடித்துள்ள தீராத நோய் நொடி களை, பேய் பிணிகளை நீக்க வேண்டி வந்த அடியார்களுக்கு சரவணை செல்வக்கதிர்காம முருகன் அருளால் மின்சாரம் போன்று தெய்வீக சக்தி பொருந்திய மருந்து எனும் மண்கொண்டு நோய் நொடிகளைத் தீர்த்தும், திருக் கைவேலின் மகிமை கொண்டு பேய் பிசாசுகளைத் துரத்தியும் பொன்னிசாமி அம்மா அவர்கள் ஆற்றிய தொண்டு அளப்பரியதும் மகிமை மிக்கதுமாகும். இது மட்டுமல்ல கல்வி, குடியிருப்பு, பொருளா தாரம் ஆகியவற்றால் மிகவும் பின்தங்கிய மக்கள் மத்தியிலே முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளிய பின்னர் இம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பல.

கல்வியில் வளர்ச்சி கண்டுள்ளனர். பல பட்டதாரிகளும், ஆசிரியர்களும் உருவாகியுள்ளார்கள். பலர் மேலை நாடுகளுக்கும், மத்தியகிழக்குக்கும் சென்றுள்ளதன் மூலம் பொருளாதார வளர்ச்சியும் குடியிருப்பு வசதிகளும் மேம்பாடடைந்து வருகின்றன. இத்துணை வளர்ச்சிக்கும் முருகப்பெருமான் இப்பகுதியில் எழுந்தருளியமையே மூலகாரணமாகும். அத்துடன் நான் குடிசைக் குமரனிடம் வந்த நாள் முதல் இப்பகுதி வாழ் மக்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டு அவர்களுக்கு நான் வழங்கிய அறிவுரைகளும், ஊக்குவிப்புக்களும் பக்கபலமாக அமைந்தன என்றால் மிகையாகாது. இதற்கே நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பெருமகிமை கொண்ட செல்வக்கதிர்காம முருகப்பெருமானுக்கு புதிதாக ஆலயம் கட்டுவதற்கு முடிவெடுத்து பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அமைச்சரான மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பரிபாலனசபையினர் வேண்டிக் கொண் டதன் பேரில் அவர்களினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடனும் மற்றும் கொடை வள்ளல்களது நிதியுதவியுடனும் புதிய முருகன் ஆலயம் கட்டப்பட்டு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவுள்ள மையானது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும். எனவே கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேற எனது நல்லாசிகளை வழங்குவதில் பெரு மிதமடைகின்றேன்.

சரவணையூர் சின்னக்குட்டி கந்தசாமி
சமாதான நீதிவானும், ஆலய ஆரம்பகாலத் தொண்டனும்

### சண்முகக் கடவுளின் அருட் கடாட்சம்

யாழ். வேலணைத்தீவின் சரவணைக் கிராமத்தில் பொன்னியம்மையின் அரும் தவத்தின் பேறாம் குடிசைக் குமரனாய்த் தோன்றி



வேண்டும் மெய்யடியார்களுக்கு வேண்டிய வரம் நல்கியும் எண்ணிலடங்கா அற்புதங்கள் புரியும் சரவணைப்பதி ஸ்ரீ செல்வக்கதிர்காம கந்தவேள் பெருமான் குடிசையில் தோன்றிய பாலன் இன்று எம் சிந்தனைக்கு எட்டா ஆலயம் அமைத்து புதுப் பொலிவுடன் அருளாட்சி புரிந்து ஜீர்னோர்தாராண மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இவையாவும் முன்னவன் முன்னின்றால் முடியாதது ஒன்றுமில்லை என்பது போல் அம்மை அப்பன் கடாட்சத்தால் இனிதே நிறை வெய்தியது என்பதில் எமக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை. எம்பெரு மானை வணங்கினால் எல்லாப் பேறும் எல்லோர்க்கும் கிடைத்து விடும். சண்முகக் கடவுளின் அருட் கடாட்சம் இந்த விழாவில் கலந்த மெய்யடியார்கள் மற்றும் அவனியில் உள்ளோர்கள் பேரானந்த வாழ்வு பெற எம்பெருமானின் தாழ்பணிந்து வாழ்த்துகின்றேன்.

[illegible]
சரவணைப்பதி [illegible]
ஆலய பரிபாலன சபை, சரவணை மேற்கு, வேலணை.

### முருகன் அடியார்களுக்கு!



வேலணைப் பிரதேசத்தில் சரவணைப்பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமான் இந்த ஆலயத்தில் அருள் நிலையில் நின்று அனைவருடைய அன்பையும் பெறுகின்றவனாக வீற்றிருக்கின்றான். செல்வக் கதிர்காம முருகனாக அன்பின் பூஜைகளை ஏற்று அருள் புரிகின்ற அருளாளனாக வீற்றிருக்கின்றான். இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தை தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. புண்ணிய காரியத்தை செய்யும் ஆலய பரிபாலன சபையினருக்கும், ஊர்மக்களுக்கும் முருகனுடையஅன்பு கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

### பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
### சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
### டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ் தீவகப் பகுதியில் வேலணை, சரவணை மேற்கு 02ஆம் வட்டாரத்தில் எழுந்தருளி இருக்கும் சரவணைப்பதி ஸ்ரீ செல்லக் கதிர்காம முருகன் தேவஸ்தானத்தின் மகா கும்பாபி ஷேகத்தினை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதையிட்டு நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

1962 ஆம் வருடம் உருவாகியுள்ள இவ்வாலயம் பின்னர் 1991 ஆம் வருடம் யுத்த அனர்த்த சூழ்நிலை காரணமாக இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்றிருந்த நிலையில் கைவிடப்பட்டு சேதமாகி இருந்ததை நானறிவேன்.

2000 ஆம் ஆண்டில் நான் வடக்கின் அபிவிருத்தியில், புனர் வாழ்வு புனரமைப்பு மற்றும் இந்து கலாசார அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த சந்தர்ப்பத்தில் இந்தப் பகுதி மக்கள் இந்தப் பகுயில் மீளக் குடியமர்ந்திருந்த நிலையில் என்னைத் தொடர்புகொண்டு இந்த ஆலயத்தின் மீள் நிர்மாணம் குறித்து கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று நான் முதற்கட்டமாக 5இலட்சம் ரூபாவினை வழங்கியிருந்தேன். அது முதற் கொண்டு இதுவரை 21 இலட்சம் ரூபாவினை இந்த ஆலய மீள் நிர்மாணிப்பிற்காக என்னால் வழங்கக் கிடைத்துள்ளமையையிட்டு நான் மகிழ்ச்சி அடை கின்றேன். இந்த நிலையில் இவ்வாறான உதவிகளைப் பெற்று இவ்வாலயத்தை சிறந்த முறை யில் நிர்மாணிப்பதற்குப் பங்களிப்பாற்றியுள்ள அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற வாழ்த்துகின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா பா.உ
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
இணைத் தலைவர் யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்ட இணைப்புக் குழு

### விழாச்சிறப்புற வாழ்த்துக்கள்

சரவணை செல்லக்கதிர்காம முருகன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நீண்ட இடப்பெயர்விற்குப் பின்பு இப்பிரதேச மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் பங்குபற்றி இடிபாடுகளிலிருந்து இப்பிரதேச மக்களின் வாழ்க்கையை மீளவும் கட்டி எழுப்ப கிடைத்த சந்தர்ப்பத்தில் இவ்வாலயத்தின் வரலாற்றுப் பெருமைகளையும் இதன்பால் இப்பிரதேச மக்கள் கொண் டுள்ள அதீத பக்தியையும் நம்பிக்கையும் நன்கு அறிவேன்.

நீண்ட காலமாக சிறிய ஆலயமாக இருந்து தீவக மக் களின் அதீத நம்பிக்கையை ஆட்கொண்ட இவ்வாலயம் இன்று இப்பகுதி மக்களால் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெரு விழாவைக் காணும் இந்நாளில் இப்பிரதேச மக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் இதன் சிறப்புக்கு அயராது பாடுபட்டுவரும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கு நன்றியையும்,வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜே.எக்ஸ்.செல்வபிரகாசம்,
உதவி செயலர், ஆளுநர் செயலகம், வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 வருடங்களாக புனரமைப்பு ஏதுமின்றி காணப்படும் அரியாலை கிழக்கு வீதி

கொழும்புத்துறை, ஜூலை 15

அரியாலை கிழக்குப் பகுதிக்கான பிரதான வீதி கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது மிகவும் சிதைவுற்ற நிலையில் உள்ளதாக அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாவலடி, பூம்புகார், பனையடி, அரியாலை கிழக்கு, முனைப்பகுதிகளுக்குச் செல்லும் ஒரே ஒரு பாதையாக இந்த வீதி உள்ளது. நாவலடியிலிருந்து அரியாலை கிழக்குப் பகுதி வரையிலான வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளை யடுத்து தற்போது பெருமளவு குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இவர்கள் அன்றாட போக்குவரத் துக்கு இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை இந்தப் பகுதி நெற்செய்கைப் பிரதேசமாக இருப்பதால் நெற்செய்கைக் காலங்களில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துக் காணப் படும். அத்துடன் காலை, மாலை வேளை களில் இடம்பெறும் இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் பஸ் சேவையும் வீதி சீரின்மையால் சிரமங்களை எதிர்கொள்வ தாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அடுத்து வரவுள்ள மழைக்காலத்துக்கு இடையிலாவது இந்த வீதியைப் புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-135)


## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை

flex அருள்




செல்வம் கொழிக்கச் செய்யுங்கள்
லக்ஷ்மியை அழைக்க எண்
Sri Lanka Colombo 0777 614 186
மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்! Rs. 15,000/=
Z தமிழ் CAPTAIN TV MEGA TV JAYA TV
| தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம். 527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | இந்து கலாசார மண்டபம் H.S.C. ஹால் இல. 302/5, இன்னர் ஹார்பர் வீதி, திருகோணமலை. |
| **Tel : 075 0919 866** | **Tel : 0750 920 122** |

**15-07-2012 முதல் 21-07-2012 வரை**

**7 தினங்கள் மட்டுமே!**

**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள்**
**பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
**பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.**




(சி/1322)

பழைய டிஸ்யூ புடைவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.
பழைய காலத்து கல்வைத்த நகைகள் லாக்குடி, ஜடயில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்
குறிப்பு : எங்களுக்கு மேலே உள்ள இரண்டு கிளைகள் மட்டுமே வேறு கிளைகள் கிடையாது.
இந்த விளம்பரத்தை கொண்டு வந்து பட்டு புடவை கொடுத்தால் 1 ஜோடி வெள்ளி கொலுசு (30TH) இலவசம்.
காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிறு கடை உண்டு. கார் பார்க்கிங் வசதி உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கண்ணீர் விடும் கற்பகதருக்கள்



05



03

தொல்லையாகும் தொலைபேசி



பாவம் மன்மோகன்!

28



06

வலி தெரியா முட்கள்




26

கிள்ளுக்கீரையாகும் கல்வி


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் | 15 ஜூலை 2012 | ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்தெட்டு



■ *ஓரண்யன்*

# இடுக்குகளில் கசியும் உண்மைகள்

அந்த நாட்டு மன்னன் தன்னுடைய காதுகளை எப்போதும் ஒரு பட்டுத்துணியால் மூடியிருப்பார். அந்தப் பட்டுத்துணி மர்மம் பல நாள்களாக எவருக்கும் பிடிபடவேயில்லை. ஒருமுறை மன்னனின் ஆஸ்தான நாவிதனுக்கு நோயேற்பட்டது. எனவே மன்னன் சவரம் செய்துகொள்வதற்காகப் புதிதாக ஒரு நாவிதன் அரண்மனைக்கு அழைக்கப்பட்டான். அப்போதுதான் மன்னனின் காதிலிருந்த பட்டுத்துணி அகற்றப்பட, மர்மம் விலகியது. வழமையாக ஒரு மனிதனுக்கு இருப்பதைவிடவும் மன்னனின் காதுகள் சுளகு போல அசாத்தியமான முறையில் பெருத்திருந்தன. அதை மறைக்கவே மன்னன் பட்டுத்துணியால் காதை மறைத்தார் என்ற உண்மை நாவிதனுக்குப் புரிந்தது.

அரண்மனையை விட்டு வெளியேறிய மறுகணமே அவன் தன் நண்பர்களிடம் "ராசா காது சுளகுக் காது" என்று பட்டுத்துணி மர்மத்தைப் போட்டுடைத்தான். இதைக் கேள்வியுற்ற மன்னன் அவனின் நாக்கைத் துண்டித்துப் புதைத்து விட்டார்.

நாக்கைப் புதைத்த இடத்தில் வளர்ந்த புற்களை ஒரு மாடு தெரியாத்தனமாக மேய்ந்துவிட்டது. அதற்குப் பிறகு எப்போது பார்த்தாலும் "உம்பா! எங்கட ராசா காது சுளகுக்காது" என்று கத்தத் தொடங்கிவிட்டது. இதுவும் மன்னனின் காதுகளில் விழ, மாட்டுக்கு 'பரலோகப்பதவி' அளிக்கப்பட்டது. மாட்டின் தோலை ஒருவன் எடுத்து அதனை அரண்மனையின் பேரிகையாக உருவாக்கினான். அந்தப் பேரிகையை அடிக்கும்போது "டும்... டும்... டும்...! எங்கட ராசா காது சுளகுக்காது" என்றே அது முழங்கியது. இதனால் நாட்டுமக்கள் எல்லோருக்குமே மன்னனின் காதுகள் சுளகுக் காதுகள் என்ற உண்மை தெரிந்துவிட்டது. எல்லோருக்குமே உண்மை தெரிந்துவிட்டதால் சுளகுக் காதுகளை மறைப்பதில் பயனில்லை என்று கருதி, மன்னன் தன் காதுகளை போர்த்தியிருந்த பட்டுத்துணிக்கு விடுதலை அளித்தான்.



சிறு வயதில் செவி வழியாக பரிமாறப்பட்ட இந்தக் கதை இன்றைக்கும் உலவிக்கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கதையில் வரும் மன்னன்கள் இப்போது பெருகிவிட்டார்கள். அவர்கள் தங்கள் காதுகளை மட்டுமல்லாது, தங்களைச் சூழ உள்ள மக்களின் காதுகளையும் இறுகப் பொத்தத் தொடங்கிவிட்டார்கள். அப்போதுதான் அவர்கள் செய்கின்ற திருகுதாளங்கள் மக்களின் செவிகளுக்கு போய்ச்சேருவதைத் தடுக்க முடியும். சனங்களின் காதுகளை அடைப்பதற்காக அதிகாரம் தன்னுடைய ஆயிரமாயிரம் கரங்களையும் களத்தில் இறக்கியது. ஆனாலும் எல்லாக் காதுகளையும் பொத்த முடியவில்லை. சிறிய இடைவெளிக்கால் உட்புகும் காற்றில் ஒட்டிக் கொள்ளும் ஒலித்துணிக்கைகள் உண்மைகளை எப்படியேனும் உரத்துச் சொல்லிவிடுகின்றன. என்னதான் பொத்திப்பொத்தி வைத்தாலும் எந்தப் பெரிய உண்மையும் வெளிப்படுவதற்கு சின்ன இடுக்கே போதும்.

காதுகளைப் பொத்தும் முயற்சியில் அதிகாரத்தின் கைகள் வலித்தது தான் மிச்சம். உண்மைகளின் ஒலிகளை ஒடுக்க முடியவில்லை. முன்னரைக் காட்டிலும் ஒலியின் மெல்லிய அதிர்விலும் உண்மை பலமாக ஒட்டத்தொடங்கியது. ஆகவே அதிகாரத்துக்கு இருந்த இன்னொரு வழி சுளகுக்காது மன்னன் செய்ததைப் போல ஒலிகளின் நாக்குகளை அல்லது குரல்வளையைத் துண்டித்து விடுவதுதான்.

உண்மைகளின் நாக்குகளாக இலத்திரனியல் யுகத்தில் பேருருக் கொண்டிருப்பவை இணையங்கள் தான். அவற்றின் பார்வையும், பரவுகையும் அதிவீரியம் கொண்டவை. எந்தத் திக்கிலிருந்து எந்த உண்மை புறப்படப்போகிறது என்பதைக் கணித்து எவரும் எதிர்நடவடிக்கை செய்யமுடியாது. ஏனைய ஊடகங்களை விடவும் இணையங்களின் வெளிப்படுத்துகை துரிதமானது. காலத்தை அநாயசமாக[illegible] ஒரு நொடிப்பொழுதிலேயே உலகிலுள்ள எல்லாக் கண்களையும் காதுகளையும் அடைந்துவிடும் வல்லமை கொண்டவை.

யாரிடமும் தோற்றுப்போகாத வல்லரசுகள்கூட, இணையத்தின் முன்னால் 'நிறம் கரிந்திட, நிலம் விரல் கிளைந்திட' தோற்றுப்போய் தலை குனிந்து நிற்கும் நிகழ்வுகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இணையத்தின் அதிரடியான தாக்குதலின் விளைவுக்கு தொழில்நுட்பத்தில் கொடிகட்டிப் பறக்கும் அமெரிக்காவே வீழ்ந்து போகலாமென்பதற்கு நல்லதொரு உதாரணம் 'விக்கிலீக்ஸ்'.

ஜூலியன் அசாஞ்சே என்ற இணையக் கில்லாடியும் அவனது சில சகாக்களும் மூடிய அறை ஒன்றுக்குள் உட்கார்ந்திருந்தபடியே உலகத்தின் பொலிஸ்காரனை மாதக் கணக்கில் 'ஓ'வென்று ஒப்பாரி வைக்குமளவுக்கு ஆட்டிப்படைத்து விட்டார்கள்.

எந்தவொரு தொழில்நுட்ப வலைக்குள்ளும் சிக்காதவண்ணம் அமெரிக்கா தனது தூதரகங்களுக்கிடையே பரிமாறிய கேபிள் தகவல்களை உலகத்தின் முன்னால் அம்மணமாக்கி அமெரிக்காவை தலை குனிய வைத்தது 'விக்கிலீக்ஸ்' என்ற இணையம்.

அமெரிக்காவே இணையச் சூறாவளியில் சிக்கிச் சின்னாபின்னமாகிப் போகையில், இலங்கை எம்மாத்திரம்?

எல்லோரது கண்களும் குருடாகிவிட்டதாக எண்ணிக்கொண்டு, இலங்கையில் முள்ளிவாய்க்கால் என்ற சிறு துண்டு நிலத்தில் பெருகவைக்கப்பட்ட இரத்த ஆற்றில் புதைந்து கிடந்த உண்மைகளை ஆதாரங்களோடு 'சனல் 4'உடன் கூட்டுச் சேர்ந்து வெளிப்படுத்தியவை இணையங்கள்தான்.

தவிர இன்னமும் தமிழர்களின் விடுதலை அவாவைத் துணிவோடு சுமந்துநிற்பவையும் இணையங்களே. புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களாலேயே இந்த இணையங்களில் பெரும்பாலானவை நெறிப் படுத்தப்படுகின்றன.

அதனால் உள்ளூர் ஊடகங்களுக்கு இருக்கும் உதறல் இவற்றுக்குக் கிடையாது. அரசு இவற்றைத் தண்டிக்க வேண்டுமானாலும் நாடு கடந்து தன் வன்முறைக்கரத்தை நீட்ட வேண்டியிருக்கும். ஏற்கனவே சர்வதேசத்தின் முன்னால் நாறிக் கிடக்கும் இலங்கையின் பெயர் இத்தகைய எல்லை மீறும் அதிகாரத் தனத்தால் இன்னமும் கெட்டுப்போக வாய்ப்புண்டு. அதனால் இணையங்களின் குரல்வளையை நசுக்க வேறு வழிகளை நாட வேண்டிய நிலை இலங்கைக்கு.

அண்மையில் இரண்டு இணையங்கள் மீது அரசு பாய்ந்திருந்தது. இதன்மூலம் முதன்முறையாக இணைய ஊடகங்களுக்கும் இலங்கையில் பாதுகாப்பு இல்லை என்ற உண்மை எல்லோராலும் உணரப்பட்டது.

அத்தோடு விடவில்லை அரசு. தனக்கு எதிரான, தன்னை விமர்சிக்கும், தமிழ்த் தேசியக் கருத்துகளை விதைக்கும் இணையங்களையும் இலங்கையில் தடை செய்தது. இதனால் ஏராளமான இணையங்கள் தங்களுடைய வழமையான இயங்குதளத்தில் செயற்பட முடியாது போயின. அவை தத்தம் இயங்குதள முகவரிகளை சற்று மாற்றியமைத்தோ அல்லது தடைசெய்யப்பட்ட இணையங்களைப் பார்வையிட உதவும் 'புரக்ஸி' இணைப்புகள் ஊடாகவோதான் தமது தகவல் பரிமாற்றத்தை இப்போது மேற்

(தொடர்ச்சி 'சூரியகாந்தி' 26ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்

இந்தத் தேர்தல் தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், அம்பாறை மாவட்டத்தில் ஆறு வேட்பாளர்களையும், திருகோணமலை மற்றும் மட்டக் களப்பு மாவட்டங்களில் தலா மூன்று வேட்பாளர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலின் கீழ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிறுத்தவுள்ளது.

# எதிர்பார்த்த முடிவுதான்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டது. இது அனைவராலும் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். காரணம் எப்போதும் ஆளும் தரப்புடன் ஒட்டிக் கொள்வதிலே அவர்கள் வல்லவர்கள்.

இந்தத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைச்சர்கள் கூறிவந்த நிலையில், அந்தக் கட்சியின் இன்னொரு தரப்பினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இதனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுமா அல்லது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியுடன்இணைந்து போட்டியிடுமா என்பது தொடர்பான கேள்விகள் எழுந்தன.

ஆயினும் அதற்கு நேற்று முன்தினம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆட்சியிலுள்ள அரசை பகைக்க விரும்பவில்லை. அதனுடன் ஒட்டிக் கொண்டு பயணிக்கவே விரும்புகிறோம் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அரசுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இம்முறை முஸ்லிம் காங்கிரஸுக்கு உள்ளே பலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன் கிழக்கில் உள்ள முஸ்லிம் மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோரும் அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுச் சேர்வதை விரும்பவில்லை. இதனால் அவர்கள் தனித்து அல்லது வேறு வழியில் கிழக்கில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக எழுந்தது. இது குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் பல முறை கூடிக் கலைந்தது. முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

இதனால் மு.கா. தனித்துப் போட்டியிடுமா? அரசுடன் இணைந்து கொள்ளுமா? என்ற பலத்த எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்தது. சிலவேளை அது தனித்துப் போட்டியிடுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன என்று ஆருடம் கூறப்பட்டது.

இந்த ஆருடத்தை உண்மையாக்குவது போல மு.கா. பொதுச் செயலர் ஹசன் அலி கடந்த புதன்கிழமை மட்டக் களப்பு மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் திணைக் களத்துக்குச் சென்று வேட்பு மனுவுக்கான விண்ணப்பத்தை தனித்துப் பெற்றுவந்தார். இதனால் மு.கா. தனித்துப் போட்டியிடப் போகின்றது என்ற பெரும் எதிர்பார்ப்பு எழுந்தது.



இதனால் மு.கா. தனித்துப் போட்டியிடுமா? அரசுடன் இணைந்து கொள்ளுமா? என்ற பலத்த எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்தது. சிலவேளை அது தனித்துப் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன என்று ஆருடம் கூறப்பட்டது.

ஆயினும் அந்த எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் தவிடு பொடியாக்குவது போல கிழக்குத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இந்த முடிவு பெரும்பாலும் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். காரணம் தற்போது அரசுக்குள்ளேயே மிக முக்கியமான அமைச்சுப் பதவி ஆகிய நீதியமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் தலைமையை ரவூப் ஹக்கீம் வகிக்கிறார். அவ்வாறு இருக்கையில் எப்படி முஸ்லிம் காங்கிரஸ் கிழக்குத் தேர்தலில் தனித்துக் களமிறங்கும் என்ற எதிர்பார்ப்பு வலுவாக இருந்தது. உண்மைதான். ஆட்சியில் அமரும் அரசுகளுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நெருக்கடி கொடுக்காமல் அவர்களுடன் ஒட்டி இணைந்து பணிந்து போவதுதான் பொதுவாக மு.காவின் கொள்[illegible] இருக்கிறது. அதனா[illegible] போதும் அரசைப் பகைத்துக் கொண்டு வெட்டி ஓடுவதற்கு அது விரும்புவதில்லை. இந்தத் தேர்தலிலும் அதைத்தான் மு.கா. செய்திருக்கிறது.

அதற்காக அரசுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டதாக காரணம் கற்பிக்கின்றது. எவ்வாறான உடன்படிக்கையாக இருந்தாலும் அரசு கேட்கும் போதெல்லாம் அது உடன்படிக்கைக்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தாலும் வளைந்துகொடுக்கும் நிலையில்தான் மு.கா. இருக்கிறது- இருந்துகொண்டு வருகிறது.

இந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் முடிவுக்காக நீண்ட நாள் காத்திருந்தது [illegible] ரஸ் தனித்துக் களமிறங்கினால் அவர்களுடன் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தி கிழக்குத் தேர்தலில் வெற்றியைத் தமதாக்கிக் கொள்ள திட்டமிட்டிருந்தது கூட்டமைப்பு. ஆயினும் அந்தத் திட்டம் பலிக்கவில்லை. இப்போது கிழக்குத் தேர்தலில் தனித்துக் களமிறங்கி கிழக்கில் பலத்தை நிரூபிக்க வேண்டிய இக்கட்டான நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தேர்தல் தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், அம்பாறை மாவட்டத்தில் ஆறு வேட்பாளர்களையும், திருகோணமலை மற்றும் மட்டக் களப்பு மாவட்டங்களில் தலா மூன்று வேட்பாளர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலின் கீழ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிறுத்தவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் முடிவு தெரிந்து கூட்டமைப்பு ஏற்கனவே தேர்தலுக்கான ஆயத்தப்பணிகளில் இறங்கியிருந்தது. வேட்பாளர்கள் தெரிவு விடயத்தில் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடுவதற்கான வகையிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அத்துடன் கிழக்கின் பல இடங்களிலும் கூட்டமைப்பின் தலைவர்கள் நேரடியாகச் சென்று மக்கள் சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளனர். ஒருவேளை முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முன்வந்தால் அது பற்றிப் பின்னர் ஆராய்ந்து வேட்பாளர் தெரிவில் முடிவுகளை மேற்கொள்வது என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது.

இப்போது மு.கா. அரசுடன் இணைந்து போட்டியிடவுள்ளதால் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடவுள்ளது. கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் இது பெரும் சவாலான விடயம்தான். கிழக்கில் கணிசமாகவுள்ள முஸ்லிம் மக்களின் வாக்குகளையும் பெற்று கிழக்கு மாகாண சபையை கைப்பற்றுவதற்கு கூட்டமைப்பு கடுமையாக உழைக்க வேண்டிய இக்கட்டு நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் இரு மாகாணங்களிலும் ஆட்சியைக் கைப்பற்றினால் வடக்கு - கிழக்கு இணைப்பை மேற் கொள்வது குறித்து இரண்டு அரசுகளும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இரு தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் நடந்த மக்கள் சந்திப்பு ஒன்றில் கூறியிருந்தார். அவரின் கூற்றைப் போல கிழக்கு மாகாண சபையைக் கூட்டமைப்புக் கைப்பற்றுமாக இருந்தால் அது மிகப் பெரும் வரலாற்று வெற்றியாக - சர்வதேச ரீதியில் ஈழத்தமிழர்களையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் முத்திரையிடும் ஒரு தேர்தலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில் கிழக்குத் தேர்தல் விவகாரம் இப்போது சூடு பிடித்திருக்கிறது. இதில் வெற்றி முஸ்லிம் காங்கிரஸுக்கா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கா? என்பதே இப்போதுள்ள போட்டி. இந்தப் போட்டியில் வெல்வது யார்? பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லையாகும் தொலைபேசி

■ பஞ்சவர்ணன்

பாடசாலை செல்லும் பிள்ளையில் இருந்து வீட்டில் இருக்கும் பாட்டிவரை இன்று கைத்தொலைபேசிப் பாவனையில் இருந்து தப்பவில்லை. கைத்தொலைபேசி தற்போது அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்டது. பலா் ஒன்றுக்கு மேற்பட்ட தொலைபேசிகள் வைத்திருப்பதும், பல 'சிம்' அட்டைகளைப் பயன்படுத்துவதும் கூட சாதாரணமாகிவிட்டது. கைப்பேசி வைத்திருப்பது ஒருவரது தரா தரத்தை எடை போடுவதாக இருந்த காலம் போய் கைப்பேசியின் தரத்துக்கு ஏற்ப ஒருவரது தராதரத்தை எடைபோடும் காலம் வந்துவிட்டது.

கைத்தொலைபேசிப் பாவனை பல அனுகூலமான விடயங்களைத் தந்துள்ளது என்பது உண்மையே.

சில முக்கிய விடயங்களுக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு, பலரைச் சந்தித்து முடி வெடுக்க நேர அவகாசமற்ற சந்தர்ப்பங்களில் கைத்தொலைபேசியே கைகொடுக்கின்றது. போக்குவரத்து விரயம், நேர விரயம், தேவையற்ற அதீத பணவிரயம் போன்றவற்றுக்கு நல நிவாரணியாகக் காணப்படுகிறது. குறுஞ் செய்திகள், படங்கள், வலைப்பின்னல்கள் போன்ற விசேட வசதிகள் நவீன கைத்தொலை பேசியில் இருப்பது மேலும் அனுகூலமானது. வானொலி, கணிப்பான்கள் போன்றனவும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இப்படியான பலவசதிகள் உள்ளபோது அந்த வசதிகளை உரிய முறையில் பயன்படுத்தத் தவறுவதால் பிரதி கூலங்கள் ஏற்பட வாய்ப்பாகி விடுகின்றன. குறிப்பாக இளைஞர், யுவதிகளின் சீரழிவுக்கு இவை முக்கிய பங்கு வகிக்கின்றன என்ற வாதத்தில் பெரும் உண்மையும் இருக்கவே செய்கிறது. தவறான தொடர்புகளை இலகுவாக ஏற்படுத்த இவை துணைபோவது கவலைக்குரியதே. தவறான, பாலியல் சார்ந்த குறுஞ்செய்திகள், படங்கள், இணையத் தளங்கள் போன்றவற்றுக்காக இவர்கள் இதைப் பயன்படுத்துவது மிகப்பெரிய சீரழிவைச் சமூகத்துக்குள் விதைத்து விடுகின்றது என்பதும் உண்மையே.

கைத்தொலைபேசியைப் பயன்படுத்துபவர்கள் உரியமுறையில் பயன்படுத்த வேண்டும். சமூக ஆர்வலர்கள் இதில் அக்கறை காட்ட வேண்டும். சட்டம் சரியாகச் செயற்படவேண்டும் என்பதுதான் இன்றைய தேவை.

அண்மைக் காலங்களில் கைத்தொலைபேசியை சோதனையிடும் பொலிஸாரிடம் பல இளைஞர்கள் சிக்கி வருகின்றனர்.


பாலியல் ரீதியான படங்கள் உலாவு வதும், சமூகப் பிறழ்வுகளை ஏற்படுத்தக் கூடிய செய்திகள் பரிமாற்றம் செய்வதும் பிடிபட்ட இளைஞர்களிடம் இருந்து கிடைத்திருக்கும் ஆதாரங்களாக அவர்களது கைத்தொலைபேசி கள் சாட்சியம் கூறுகின்றன.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் இதில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும். வீட்டில் பெற்றோர் கண் காணிக்க வேண்டும். மாணவர் கைகளில் இருந்து கைத்தொலைபேசியை களைவதே இதற்கு மிகப்பெரிய தீர்வாக அமையலாம்.

**அறிவியல் /மருத்துவப் பார்வையில்**

கைத்தொலைபேசிப் பாவனைகளை அதிகரிக்க, கைத்தொலைபேசி நிறுவனங்கள் அதீத விளம்பரப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றன. பல்வேறுபட்ட தொலைபேசி நிறுவனங்களது போட்டிகளால் இணைப்புகளின் இலாபகரங்களை அதிகரித்துக் காட்ட விளைவதால் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புக்களைப் பெற்றுக் கொள்கின்றனர். நிறுவனங்கள் தமது தரங்களை நிலை நிறுத்த இணைப்புகளின் சீர்த்தன்மையை மேம்படுத்தப் பல தொலைத் தொடர்புக் கோபுரங்களை நிர்மானிக்க வேண்டிய தேவை உள்ளது.

கிராமங்கள் தோறும் புதிது புதிதாகத் தொலைத் தொடர்புக் கோபுரங்கள் முளைவிட, தொலைபேசிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதால் அவற்றின் கதிரலைகள் மக்களிடையே பாதிப்புகளை ஏற்படுத்துவதாக நம்பப்படுகிறது. மூளைப் பாதிப்புகள், புற்றுநோய்த் தாக்கங்கள், கர்ப்பம் கலைதல் மற்றும் இடிமின்னல் தாக்கங்கள் போன்றன அதிகம் ஏற்பட ஏதுவாகின்றன. இப்படியான சலனங்கள் சமூகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.



இவற்றின் எதிரொலிப்பாக, தொலைத் தொடர்புக் கோபுரங்களை நிர்மாணிக்கப் பெருந்தொகைப் பணத்துக்காக நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்த வர்களுடன் அயலவர்கள் சண்டையிட்ட சம்பவங் கள் நிறையவே உள்ளன.

இலாப நோக்கில் வியாபாரத்தில் இறங்கிய இவர்கள், அயலுறவுகளின் விரிசல்களால் நட்டம் அடைந்துள்ளனர். சில பிரதேசங்களில் மக்கள் ஒன்று திரண்டு எதிர்த்த சம்வங்களும் உள்ளன. இதற்கு பிரதேச சபை, சுற்றுச் சூழல் அதிகார சபை போன்றன மக்களுக்கு சமாதானமாக நல்ல பதில் எதையும் முன்வைக்கத் தவறியுள்ளதே வேதனைதரும் விடயம்.

மருத்துவ ரீதியாக இதுபற்றிய உண்மைத் தன்மைகளை அறிந்துகொள்ள மகப்பேற்று மருத்துவர் கே.சுரேஸ்குமாரைத் தொடர்பு கொண்ட போது அவர் கூறிய விளக்கம் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது.

கருச்சிதைவுகளும், புற்றுநோய்களும் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவே அவர் கூறுகின்றார். தொலைபேசிக் கோபுரங்களால் மனிதருக்கு மட்டுமல்லாது விலங்குகள், தாவரங்களுக்கும் கூட பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஜேர்மனியில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் பசுக்களின் நடத்தைப் பிறழ்வு, பால் உற்பத்திக் குறைவு ஏற்படுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மருத்துவர் சுரேஸ்குமார் மேலும் கூறியதாவது:-

கைத்தொலைபேசிகள் 300 MHZ இலிருந்து 3000 MHZ வரையான வானொலி அலைவரிசையில் இயங்குகின்றன. இந்த அலைவரிசைகள் 10 இலிருந்து 100 சென்ரிமீற்றர் வரையான அலை நீளங்களை உடையவை. இந்த அலை வரிசைகளின் கதிர்வீச்சுக்குத் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு உட்படுவது ஆபத்தானது. தொலைபேசிக் கோபுரத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் இதே போன்ற ஆபத்தான கதிர்வீச்சுத் தாக்கத்துக்கு தொடர்ச்சியாக உட்படுகின்றனர்.

இந்த வகைக் கதிர்வீச்சால் மனிதனுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றி பல ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. இதன் பாதிப்பால் கடுமையான உடல் அயர்ச்சியில் இருந்து, கலங்களின் டி.என். ஏயின் சிதைவு வரை பாதிப்பு ஏற்படலாம்.

கலிபோர்னியாவில் செய்யப்பட்ட ஆய்வு, குறைந்த அளவே உள்ள இந்தவகைக் கதிர் வீச்சுக்கள் கூட இழையங்களுக்கும், டி.என்.ஏக்களுக்கும் சிதைவை ஏற்படுத்தும் என்பதைக் கண்டறிந்துள்ளது.

இந்தக் கதிர் வீச்சினால் நோய் எதிர்ப்பு சக்தியின் வீரியம் குறைவடைவதுடன், சிறுவர்களில் இரத்தப் புற்றுநோய் ஏற்படலாம் என்பதையும் ஆஸ்திரேலியாவில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

தொலைபேசிக் கோபுரத்திற்கு அண் மையில் வசிக்கும் குழந்தைகளில் தூர வசிக்கும் குழந்தைகளை விட இரத்தப் புற்றுநோய் ஆபத்து இரண்டு மடங்கு அதிகமாக உள்ளதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

அத்துடன் தொலைபேசிக் கோபுரத்திற்கு அண்மையில் வசிப்பதால் பாதிப்பு, மூளைக் கட்டிகள் போன்ற நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன.

இவற்றைவிட பாதகம் குறைந்த நித்திரைக் குழப்பம், உடல் அயர்ச்சி, கிடு கிடுப்பு, பதற்றம், மன அழுத்தம் என்பனவும் ஏற்படலாம். மறதி, மலட்டுத் தன்மை போன் றனவும் ஏற்படலாம் என சில ஆய்வுகள் கூறுகின்றன.

**யாழ்.மாவட்டத்தில் உள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| டயலொக் | - 42 |
| எயார்ரெல் | - 35 |
| ரெலிக்கொம் | - 13 |
| எடிசலாட் | - 9 |
| ஹட்ச் | - 9 |
| மொபிற்றல் | - 8 |
| லங்காபெல் | - 8 |
| செல்டல் | - 4 |
| சன்டெல் | -2 |
| எபிசி றேடியோ | -1 |
| ஜி.ரி.இசற் | -1 |

இது இப்படி இருக்க இந்தப் பாதிப்புகள் ஏதும் ஏற்படாது என்பதுவும், எமது கோபுரங்கள் தகுந்த பாதுகாப்பு விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளது என்பதுவும் தொலைபேசி நிறுவனங்களின் வாதமாகும் என்கிறார்.

பெண்கள் இடுப்பில் அல்லது அருகில் செல்போன்களை வைத்திருப்பதால் அவர்களது கருப்பையும், சூலகமும் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு மலட்டுத்தன்மை ஏற்படலாம்.

கருவுற்றவர்களாயின் கருவை இந்தக் கதிர்வீச்சுக்கள் பாதிக்கலாம். ஆண்களுக்கும் இந்தக் கதிர்கள் விதைகளைப் பாதிப்பதுடன், விந்து உற்பத்தியையும் பாதித்து மலட்டுத் தன்மையையும் ஏற்படுத்தலாம். எனவே தொலைபேசியை இடுப்பில், பிறப்புறுப்புகளுக்கு அண்மையில், குழந்தைகளுக்கு அருகில் வைத்திருப்பதை தவிர்ப்பது நல்லது என்றும் அவர் ஆலோசனை கூறுகிறார்.

சமூக ஆர்வலர்கள், பசுமை விரும்பிகளும் நல்லதொரு விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது மேலும் வலுவூட்டும். இவர்கள் மக்களைக் காப்பாற்றலாம். சூழல் மாசுறுவதைத் தடுக்கலாம். ✱

"அடிமைகளின் மீட்பர்"
"வெற்றி பெறலாம் வாங்க"
என்ற இரு தொடர்களும்
இன்றைய சூரிய காந்தியில்
இடம்பெறவில்லை.
அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் அங்கிகளால் மறைக்கப்படும்

# சமூக பயங்கரவாதம்

■ சந்திரசேகர ஆஷாத்

ஞாயிறு காரம்

> தமிழ் மக்கள் மீதும் அரசுக்கு எதிராகச் செயற்படும் நேர்மையான சக்திகள் மீதும் வன்கொடுமைகளையும் கொலைகளையும் நடத்த ஏவிவிடப்பட்ட பாதாள உலகக் கோஷ்டியினரும் புத்த பிக்குகளும் இப்போது தென்னிலங்கையிலும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டப் புறப்பட்டு விட்டனர். அரசின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட இவர்கள் இப்போது அரசுக்கே தலையிடியாகிவிட்ட நிலையில் ஒரு சிலராவது கைது செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

1917ஆம் ஆண்டில் ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சி வீழ்த்தப்பட்டு விடுதலை பெற்ற சோவியத் யூனியன், மாமேதை லெனின் தலைமையில் உருவாக்கப்பட்டது. தொழிலாளி, விவசாயி மக்களால் உருவாக்கப்பட்ட சமவுரிமை ஆட்சி அதிகாரத்தை ஒழித்துக்கட்ட, புரட்சி எதிர்ப்பாளர்கள் நடத்திய உள்நாட்டுப் போர்கள் ஏறக்குறைய மூன்று வருடங்கள் தொடர்ந்தன. எனினும் சோவியத் செஞ்சேனையும் மக்களும் தங்கள் விடாப்பிடியான உறுதியான அர்ப்பணிப்புகளுடன் கூடிய வீரஞ்செறிந்த போராட்டங்கள் மூலம் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

போர்களில் தோற்கடிக்கப்பட்ட பிற்போக்கு சக்திகள் மலைப் பிரதேசங்களிலும் நாடுகளிலும் பதுங்கியிருந்தவாறு இரவுவேளைகளில் கிராமங்களுக்குள் புகுந்து கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகள் போன்ற பயங்கரங்களை மேற்கொண்டனர். வயல் நிலங்களையும், மேய்ச்சல் புல்வெளிகளையும் எரியூட்டி மக்களை வறுமையில் தள்ள முயன்றனர்.

இந்த நடவடிக்கைகளின் அடிப்படையைச் சரியாகப் புரிந்து கொண்ட லெனின் சமூக பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுமாறு மக்களை அறைகூவி அழைத்தார். பெண்களுக்கும் ஆயுதம் வழங்கி தற்காப்புப் போராட்டங்களில் ஈடுபடத் தூண்டினார். சோவியத் செஞ்சேனை மக்களுடன் இணைந்து போராடியது.

ஒரு சில மாதங்களில் சமூக பயங்கரவாதம் வேரோடு அழிக்கப்பட்டது. கொலை, கொள்ளை, வன்புணர்வு, பொருளாதார அழிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட சமூகப் பயங்கரவாதிகளில் ஒரு பகுதியினர் அழிக்கப்பட்டனர்; ஏனையோர் சரணடைந்தனர்.

இத்தகைய வன்முறை சார்ந்த சமூக விரோதச் செயல்களையே சமூகப் பயங்கரவாதம் என லெனின் அழைத்தார்.

இலங்கையிலும் பயங்கரவாதம் பற்றி நிறையவே பேசப்பட்டது. இன்றும் பேசப்பட்டு வருகிறது. இங்கு 30 ஆண்டுகளாகப் பயங்கரவாதம் நிலவியதாகவும் அது இப்போது ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் இனி அதைத் தலையெடுக்க விடப் போவதில்லை எனவும் அரச தரப்பில் கூறப்படுகிறது. அதாவது தமிழ் மக்கள் தமக்கு மேல் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கும் அரச பயங்காரவாதத்துக்கும் எதிராக நடத்திய போராட்டம் பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்பட்டது. இந்தியா, சீனா உட்பட வல்லரசு நாடுகளின் உதவியுடன் தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போர் தோற்கடிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து இலங்கை அரசு கொடிய பயங்கரவாதத்தை அழித்துவிட்டதாகத் தம்பட்டம் அடித்தவாறே அரச பயங்கரவாதத்தைச் சுதந்திரமாகக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்த அரச பயங்கரவாதத்தின் அனுசரணையுடன் தமிழ் மக்கள் மீது சமூக பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. கொலை, கொள்ளை, வன்புணர்வு, ஆள்கடத்தல், கப்பம் கோரல், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கொலை, நில அபகரிப்பு என தமிழ் மக்கள் மீதான சமூகப் பயங்கரவாதம் சுதந்திரமாகவே அரங்கேற்றப்பட்டது. இவற்றுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. அப்படித் தவிர்க்க முடியாமல் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தாலும் அவை இழுத்தடிப்புக்கள் காரணமாகப் பூசி மெழுகப்பட்டு விடும்.

தமிழ் மக்கள் மீதான இன அழிப்பை அரங்கேற்றும் முகமாக சுதந்திரமாக உலவவிடப்பட்ட சமூக பயங்கரவாதம் இப்போது சிங்கள மக்கள் மேலும் பாய ஆரம்பித்துள்ளது. தமிழ் மக்கள் மீதும் அரசுக்கு எதிராகச் செயற்படும் நேர்மையான சக்திகள் மீதும் வன்கொடுமைகளையும் கொலைகளையும் நடத்த ஏவிவிடப்பட்ட பாதாள உலகக் கோஷ்டியினரும் புத்த பிக்குகளும் இப்போது தென்னிலங்கையிலும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டப் புறப்பட்டு விட்டனர். அரசின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட இவர்கள் இப்போது அரசுக்கே தலையிடியாகிவிட்ட நிலையில் ஒரு சிலராவது கைது செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

அதிலும் மஞ்சள் அங்கிகளை அணிந்து கொண்டு சமூகப் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிலரைக் கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது.

மஞ்சள் அங்கி அணிந்த பௌத்த பிக்குகளை மகான்களாகவும் புனிதர்களாகவுமே சிங்கள மக்கள் கருதி வருகின்றனர். அவர்கள் சாதாரண மக்களுக்குரிய சகல ஆசாபாசங்களையும் துறந்து சமூகத்தை நல்வழிப் படுத்துவதற்காகத் தங்களையே அர்ப்பணித்த உத்தம சீலர்களாகப் போற்றப்படுகின்றனர். உலக இன்ப, துன்பங்களில் ஆழ்ந்துபோய்விடாமல் இருப்பதற்காகத் திருமணமே செய்யாமல் வாழ்பவர்கள், அதன் காரணமாகவே சங்கங்கள் அமைத்து அன்பு, கருணை, தூய்மை என்ற அடிப்படையில் பௌத்த தர்மத்தைப் பரப்புபவர்கள்.

ஆனால் பெரும்பான்மையான பௌத்த பிக்குகளைப் பார்க்கும்போது இந்தக் கொள்கைகளை அவர்கள் எப்போதோ நிராகரித்துவிட்டார்கள் என்பது புரியவரும்.

புத்தபெருமான் அரச போகத்தைத் துறந்து அரச மரத்தடியில் அமர்ந்து ஞானம்பெற்றார். இவர்களோ அரச மரத்துக்கு தங்கவேலி போட்டு நிறைவு செய்துவிட்டு அரசாட்சியில் பங்காளிகளாகிவிட்டனர். முற்றும் துறந்த இவர்கள் மதவிகாரைக்காகவும் ஆடம்பர வாகனங்களுக்காகவும் ஒருவர் ஆடையை ஒருவர் பிடித்திழுக்குமளவுக்கு நிலை தாழ்ந்துவிட்டனர். இனவன்முறைகளிலும் பள்ளிவாசல்களை இடிப்பதிலும் தமிழ் ஆலய வளாகங்களில் புத்தர் சிலைகளை நிறுவுவதிலும் தலைமை தாங்கி கடையர்களுக்கும் தங்களுக்கும் எவ்வித பேதமும் இல்லை என்பதை நிறுவி வருகின்றனர்.

இதே சமூக பயங்கரவாதக் கரங்கள் சிங்கள மக்கள் மத்தியிலும் தொல்லை தரத் தவறவில்லை. பௌத்த சிலைகளைத் திருடி விற்பது, புதையல் அகழ்வது என இவர்களின் அடாவ[illegible] வருகிறது.

[illegible] வன்புணர்வு போதைபொருள் வர்த்தகம் என்பன தொடர்பாகத் தென்னிலங்கையைச் சேர்ந்த சங்கநாயக்கர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதை அடுத்து காலிச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அதன் பின்பு சிறைச்சாலை அதிகாரிகளும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து காலி சிறைச்சாலைக்குள் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அங்கு 44 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன. அதில் மேற்குறிப்பிட்ட பிக்குவிடம் கைப்பற்றப்பட்ட தொலைபேசி மிகவும் சக்தி வாய்ந்த 3 ஜி வகையைச் சேர்ந்ததாகும்.

பாதாள உலகக் கோஷ்டித் தலைவர்கள் சிறையில் இருந்தவாறே கொலை, கொள்ளை, கப்பம் பெறுதல் போன்ற சமூக பயங்கரவாதச் செயல்களைக் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் தமது சகாக்களை வழி நடத்தி மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. அதேபோன்ற குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட இந்த மஞ்சள் அங்கிப் பிக்குவும் தொலைபேசி மூலம் தனது கையாள்களை வழிநடத்துகிறாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. சிறைகளில் அடிக்கடி சோதனைகள் மேற்கொள்வதும் அங்கு கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்படுவதும் வழமையாக இடம்பெறும் சம்பவங்கள். அப்படியானால் ஒவ்வொரு முறையும் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்ட பின்பு உணவுப் பொதிகள் கூடப் பரிசோதித்து அனுப்பப்படும் சிறைச்சாலைகளுக்கு உள்ளே எப்படி போய்ச் சேர்கின்றன? இந்தப் பிக்குவுக்கு எப்படித் தொலைபேசி கிடைத்தது?

இதிலிருந்தே இந்தப் பிக்குவுக்கு பாதாள உலகக் கோஷ்டித் தலைவர்களைப் போன்ற பல கையாள்களும் சிறை அதிகாரிகள் மட்டத்தில் செல்வாக்கும் உண்டு என்பது தெட்டத் தெளிவாகிறதல்லவா? மஞ்சள் அங்கிகளில் துறவிகளாக இருப்பதாகக் காட்டிக் கொண்டு சமூக பயங்கரவாதிகளாக விளங்குகிறார்கள் என்ற சந்தேகம் எழுவதில் என்ன தவறு இருக்க முடியும். இது மட்டுமன்றி மிருந்தலை விகாரையின் பீடாதிபதி 9 வயதுச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் அடைக்கப்பட்டதை நாம் மறந்து விட முடியாது. லண்டனில் வாழ்ந்து வந்த இலங்கைப் பிக்கு ஒருவருக்கு ஒரு சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 7 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் புதையல் தோண்டும் குற்றச்சாட்டில் பல பிக்குகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தொன்மையான விகாரைகளின் பெறுமதிமிக்க புத்தர் சிலைகளைக் களவாடி வெளிநாட்டவர்களுக்கு விற்கவும் சில பிக்குகள் பின் நிற்பதில்லை. இங்கு உற்றுநோக்கப்பட வேண்டிய சில முக்கிய விடயங்கள் உண்டு. 1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிரகம் நடத்தியபோது நடத்தப்பட்ட சிங்களக் காடையர்களின் வன்முறைகளுக்கு புத்த பிக்குகளே தலைமை தாங்கினர். 1958 இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராகப் பிரதமரின் வீட்டின் முன் சத்தியாக்கிரகம் நடத்தி பிக்குகளே தமிழ் மக்கள் மீதான இன அழிப்பைத் தொடக்கி வைத்தனர். 1977, 1983 ஆகிய ஆண்டுகளில்கூட பிக்குகளே வீதியில் இறங்கி வன்முறைகளை வழிநடத்தினர். அனுராதபுரம் தர்காஇடிப்பு,தம்புள்ள பள்ளிவாசல் இடிப்பு, தெஹிவளை தர்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல் என அனைத்துக்கும் பிக்குகளே தலைமை தாங்கினர்.

அதாவது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக சட்டவிரோத நடவடிக்கைகளில் பிக்குகள் ஈடுபடும்போது அரசும் சிங்கள புத்திஜீவிகளும் அவர்களுக்கு ஆதரவு வழங்கினர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பலன் பிக்குகளின் சமூக பயங்கரவாதம் சிங்களப் பகுதிகளிலும் தனது கரங்களை விரிக்கின்றது.

ஆனால் சமூகப் பயங்கரவாதத்தை நீண்ட நாள்களுக்கு மஞ்சள் அங்கிகளால் மறைக்க முடியாது என்பது மட்டும் உண்மை. எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவைத் தேர்தலில் பெரும் வெற்றிபெற வைத்ததும் அவரைச் சுட்டுக் கொன்றதும் பிக்குகள் என்பதே வரலாறு. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் விடும் கற்பகதருக்கள்

## யாழ்.நகரில் நடந்த கொடுமை

■ கலைவாணி



நகரை அழகுபடுத்தும் நோக்கில் யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பனை மீள் நடுகைத் திட்டம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியளிக்கவில்லை எனக் கருதமுடிகிறது.

யாழ். முனியப்பர் வீதியில் கூடலாகச் செழித்து வளர்ந்திருந்த பனைமரங்களை வேரோடு பெயர்த்தெடுத்து பொது நூலகத் தின் வெளிப்புறத்தைச் சுற்றி நடுகை செய்யப்பட்டது. ஆரம் பத்தில் நூலக வளாகத்தின் உட் புறத்தில் அவற்றை மீள்நடுகை செய்யத் திட்டமிடப்பட்டிருந் தது. ஆயினும் அதற்கு நூலகரின் அனுமதி கிட்டாத காரணத்தால் அவை நூலகத்தின் வெளிப்புறத் தில் மீள்நடுகை செய்யப்பட்ட வடலிப்பருவம் தாண்டி வளர்த்து விட்ட மரங்கள் என்ற காரணத்தி னால் அவற்றின் மீள்நடுகை எதிர் பார்த்த விதத்தில் எந்தவிதமான பயனும் அளிக்கவில்லை.

குருத்தெறிந்து தழைப்பதற் குப் பதிலாக முற்றிலும் கருகிய நிலையில் பட்ட மரங்களாக அவை இன்று காட்சி தருகின்றன. அது மட்டுமின்றி பெயர்த்தெடுக்கப் பட்டு பல நாள்கள் கடந்த போதும் அவை மேலும் மீள் நடுகை செய் யப்படாமல் போட்ட நிலையில் காணப்படுகின்றன.

''மீள்நடுகை செய்யப்பட்ட அம்மரங்களுக்கு அவை தழைப் பதற்கு அவசியமான எந்தவித மான இரசாயன மருந்துகளையோ தண்ணீரோ பயன்படுத்தவில்லை. துறைசார் நிபுணர்களது ஆலோச னைகளையோ வழி காட்டல் களையோ பெறப்படாமல் வேறு இடத்தில் பெயர்த்தெடுக்கப் பட்டு நடப்பட்டது'' என்று குற் றம் சாட்டப்படுகிறது.

தற்போது சுட்டெரிக்கும் வெயி லில் புதிதாக ஒரு மரம் நடப்பட் டால் அது துளிர்த்து வருவது என்பது இலேசானகாரியமல்ல என்று பசுமை ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்..

இந்த நிலையில் வேரோடு உறுதியாக நிலத்தில் வளர்ந்த பனை மரங்களைப் பெயர்த் தெடுத்து வேறோர் இடத்தில் மீள்நடுகை செய்வது என்பது மிகுந்த அவதானத்துடன் மேற் கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பணியாகும்.

யாழ்.மாநகரசபையின் தான் தோன்றித் தனமான செயல் தொடர் பாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினத்திடம் கேட்டபோது அவர் சொன்னார்,

''யாழ். மாநகர சபையானது பனை மீள் நடுகை தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களையோ, அனுமதிகளையோ சபையிடம் பெறவில்லை. அவ்வாறு மாநகர சபை உதவியை நாடியிருந்தால், தகுந்த ஆலோசனைகளையும், தொழில்நுட்ப வசதிகள், இரசா யன மருந்துகள் ஆகியவற்றை வழங்கி இருப்போம். பிடுங்கப் பட்ட மரங்களின் பக்க வேர் களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள் ளது என்ற காரணத்தினால் தளிர்த்து வளர்வது சாத்தியமற் றது.

யாழ். மாநகரசபை, வீதி அதி காரசபையுடன் இணைந்தே இந் தப் பணியை மேற்கொண்டுள் ளது. அண்ணளவாக 15-20 மரங் கள் வரை வீணாக்கப்பட்டிருக் கின்றன. பனை அபிவிருத்திச் சபையிடம் ஆலோசனைகளைப் பெறவில்லை''-என்றார்.

தற்போது வீதி அகலிப்புப் பணிகள் அதிகமாக முன்னெடுக் கப்பட்டு வரும் நிலையில் பல் லாயிரக்கணக்கான பலதரப்பட்ட மரங்கள் தறித்து அழிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் சில பனைமரங் களும் அடங்கும். பல்வகை பயன்தரம் பனைமரங்கள் வேக மாக அழிக் கப்பட்டு வருவது குறித்து அரசு கண்டுகொள்ளாதது குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அது குறித்து பெரும் கவலை அடைகின்றனர். ஆனால் வீதி அபிவிருத்திப் பணிக்களுக்காக இவ் விதம் மரங்கள் பெரும் அளவில் அழிக்கப்படுவதை நியா யப்படுத்துகிறது வீதி அபிவிருத்தி அதிகார சபை

அபிவிருத்தி தவிர குடாநாட் டிலே அதிகளவாக இராணுவ அரண்கள் அமைப்பதற்காகவும் பனை மரங்கள் அழிக்கப்பட்டுள் ளன. தேவைக்கு அதிகமாக இவ் வாறு மரங்கள் வெட்டப்பட்டு வீணடிக்கப்படுவது கவலைக் குரியதே.

வேம்பு, பலா, மா போன்ற பயன்தரு மரவகைகள் பருவ காலத்தில் மட்டுமே பயன்தரக் கூடியவை. ஆனால் பனை மரம் நீண்ட நெடுங்காலம் மனிதருக்கு முற்று முழுதாக பயன் அளிப் பதால் நம்முன்னோர்கள் கற்பகதரு எனப் போற்றும் பெருமை படைத் தது. தன் ஆயுள் முழுவதும் மனிதர்களுக்குப் பயன்தரவல்லது. ஏனெனில் நுனியிலிருந்து மரத் தின் கீழ் உள்ள வேர் வரையும் பயன்தரக்கூடி யது. நீண்டகாலம் பயன் தரக்கூடிய பனைமரங் களை தறித்து அழிப்பது மிகவும் வேதனைக் குரியது.

இப்பனை மரங்கள் பொது வாக பயிரிடப்படுவதில்லை. இயற்கையிலேயே வரண்ட நிலப் பரப்பில் வளர்ந்து ஆயுள் முழுவ தும் பயன்தரக் கூடிய தன்மை கொண்டவையவை.

ஆசிய நாடுகளில்தான் பனை மரங்கள் அதிகமாகக் காணப்படு கின்றன எனத் தகவல்கள் கூறுகின் றன.

இலங்கை முழுவதும் 11 மில்லியன் பனைகள் உண்டு, யாழ். மாவட்டத்தில் அண்ணள வாக 35 லட்சம் பனைமரங்கள் உண்டு என பனை அபிவிருத்திச் சபை தெரிவிக்கின்றது.

மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற போர் காரணமாக வும் பல்வேறுபட்ட தேவைகள் காரணமாகவும் பலமரங்கள் சேத முற்றும், அழிக்கப்பட்டும் விட் டன. தற்போது இருக்கும் பனை களின் எண்ணிக்கையை அறி வதற்காக மதிப்பீட்டு திணைக் களத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலகத்திடமும் அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளது என பனை அபிவிருத்தி சபையினர் தெரி வித்தனர்.

ஒரு பனை மரமானது சுமார் 30 மீற்றர் உயரம்வரை வளரக் கூடியது. இப்பனையிலிருந்து ஆண்டொன்றுக்கு 180 லீற்றர் பதநீர், 25 கிலோ பனைவெல் லம், 16 கிலோ பனங்கற்கண்டு, 11.5 கிலோ தும்பு, 2.25 கிலோ ஈர்க்கு, 10 கிலோ விறகு, 10 கிலோ ஓலை, 20 கிலோ நார் ஆகியன கிடைக்கப் பெறுகின்றன.

அவ்வாறே பனையிலிருந்து அழகுப் பொருள்கள், உணவுப் பொருள்கள் என 801 வகையான உற்பத்திகள் பெறப்படுகின்றன. ஆனால் பனையிலிருந்து கிடைக்கும் பொருள்களில் இருந்து தற்போது 15 வீதம் ஆனவையே உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. மீதி 85 வீதம் வீணடிக்கப்படுகின்றன.

''தற்போது பனையைப் பயன் படுத்தி பனம் பொருள்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் கள் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உண்டு. அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் சந்தைப்படுத்தலை யும் ஊக்குவிப்பது பனை அபி விருத்திச் சபையின் பொறுப்பு'' என தலைவர் பசுபதி சீவரத்தி னம் தெரிவித்தார்.

தற்போது அருகிவரும் பனை களுக்கு மீண்டும் புத்துயிர் கொடுப் பதற்காக பனை நாற்று விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் மட்டும் 10 ஆயிரம் நாற்றுக்கள் நடுவதற்கு திட்டம் இடப்பட்டுள்ளது. இதற் காக 2 லட்சம் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது. ஏனைய மாவட் டங்களிலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனை நாற்றுகள் நடப் படவுள்ளன.

எதிர்வரும் நூற்றாண்டில் பனை மரங்களின் உற்பத்திகள் இருக் குமா என்பது கேள்விக்குறிதான். ஆனால் எமது சமூகத்தின் அடை யாளமாகவும், தனித்துவமாகவும் ஏழை மக்கள் வாழ்வில் ஓர் அங்க மாகவும் விளங்கும் பனைகளை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்வது பனை அபிவிருத்திச் சபையினது கடமை மட்டுமல்ல எம் எல்லோரது கடமையும் கூட. ✱



வேரோடு உறுதியாக நிலத்தில் வளர்ந்த பனை மரங்களை பெயர்த் தெடுத்து வேறோர் இடத்தில் மீள்நடுகை செய்வது என்பது மிகுந்த அவதானத் துடன் மேற் கொள்ள வேண்டிய பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி தெரியா முட்கள்...



## எனது தவறு

பல்கலைக்கழகத்தில் நான் ஆண்டுகள் கற்கைநெறியை 2008 இல் தொடர்ந்த நான், அதன் முதலாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சையின்போது ஆங்கிலப் பாடத்தில் சித்தியடையத் தவறினேன். எனக்கு அதன் பின்னர் மீள் பரீட்சை மூலம் அந்தப் பாடத்தை சித்தியெய்துவதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் இருந்தன. முதலாவது சந்தர்ப்பத்தை அக்கறையின்றி விட்டுவிட்டேன்.

இரண்டாவது சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்தேன். பரீட்சை நடை பெற்ற தினத்தில் உடல் உபாதை காரணமாகத் தோற்றவில்லை. அதற்கான மருத்துவச் சான்றிதழும் நான் கொடுக்கவில்லை.

கடைசி சந் தர்ப்பம் 2011 நடைபெறவேண்டிய இரண்டாம் அரையாண்டுப் பரீட்சையில் தோற்றுவதுதான். அதற்காக விண்ணப்பித்தேன். ஆனாலும் பல்கலையில் இடையிடையே ஏற்பட்ட தடங்கலால் குறித்த பாடப் பரீட்சை 2012 ஜனவரியிலேயே நடைபெற்றது. இது என்னுடைய பெருந்தவறு.

■ விகேளம்

தொலைபேசிகள் அடிக்கடி பேசிக் கொண்டன 'உனக்கு எங்கே வந்திருக்கு' இதுதான் அந்த உரையாடலின் முதலாவது கேள்வி. இப்படியான அழைப்புக்கள் பல எனக்கும் வந்தன. கேள்வி- 'உனக்கு எங்கே வந்திருக்கிறது' எனது பதில்- 'எனக்கு எங்கேயும் வரவில்லை'..... கேள்விகளும் பதில்களும் தொடர்ந்து கொண்டே சென்றன. பலருடன் உரையாடல் அலுத்தே போய் விட்டது. பேஸ்புக்கிலும் ஒன்லைனில் இருப்பவர்களும் இதே கேள்வியைத்தான் பகிர முனைந்தார்கள் இதனால் பல தடவைகள் ஓப்லைனிலேயே இருந்து விட்டேன்.

வடக்குக் கிழக்கில் பட்டதாரிப் பயிலுநர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வும், நியமனமும் குறுகிய காலத்துக்குள் முடிவுற்றன. இதன்போது நீண்டகாலமாக வேலையற்று இருந்த பட்டதாரிகள் பலர் உள்வாங்கப்பட்டனர். இதன்போது அதிர்ஷ்டவசமாக கடந்த வருடம் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அந்த அதிர்ஷ்டம் எனக்குத் துரதிர்ஷ்டமானது.

மீள் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் நடந்து முடிய அதற்கான பெறுபேறு ஆறுமாதங்களின் பின்னர் மாணவர்களின் அழுத்தம் காரணமாக வெளியிடப்பட்டது. பெறுபேறு எப்போது வெளியாகும் என்று கேட்பதற்குப் பல தடவைகள் ஏறியிறங்க வைக்கப்பட்டேன். பிழை என்மீது ஆகையால் ஏறித்தான் ஆகவேண்டும்.

சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவு போன்ற தமது உரிமைகளுக்காக அந்த நெருக்கடியான காலப்பகுதியில் வேலை நிறுத்தத்திலும் போராட்டத்திலும் பல்கலைக்கழக கல்வி சார், கல்வி சாரா ஊழியர்கள் மாறிமாறி ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பிரச்சினை எனக்கு மட்டுமாக இருக்கவில்லை. பல பேரின் பிரச்சினை. அதன் தன்மைகளும் வடிவங்களுமே மாறுபட்டிருந்தன.

ஐயா, எங்களுக்கு படிப்பு முடிந்து விட்டது என்று ஒரு கடிதம் தந்தியள் எண்டால் அதையாவது காட்டி வேலை எடுத்திடுவம், அழாத குறையாக ஒருநாள் பீடாதிபதியிடம் கெஞ்சினேன். "நீங்கள் தவறை விட்டுவிட்டு எங்களை வந்து கேட்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை" I can't do that இதை மட்டுமே சொல்லி முடித்த அவர், கடிதம் தர மறுத்துவிட்டார். ஐயா ஆங்கிலப் பாடம் தான் உள்ளது. அதன் பெறுபேறும் அந்த டிப்பாட்மன்டில் போட்டுவிட்டார்கள். இந்தச் சம்பவங்களை மட்டுமாவது உறுதிப்படுத்திக் கடிதம் தாருங்கள் என்றே நான் கேட்டிருந்தேன். அது எந்த விதத்திலும் நியாயமற்றது என அவர் மறுத்துவிட்டார்.

ஒன்றுமே செய்யமுடியாது. எனக்குப் பின்னும் பலர் வரிசையில் நின்றுகொண்டிருந்தார்கள் அந்தத் துணிவோடு நான் திரும்பி வந்துவிட்டேன்.

எல்லாப் பாடங்களும் பூர்த்தி செய்யாமையால் ஸ்ரேட்மன்ட் எடுப்பதற்காக விண்ணப்பத்தை முன்பு பூர்த்தி செய்யவில்லை. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரே அதனைப் பூர்த்தி செய்து கொடுத்திருந்தேன். பட்டதாரிகளுக்கான நியமனம் தொடர்பில் மாணவர்களின் நெருக்கடி கூடியதால் இரக்கமனதோ என்னவோ கல்வி சார் ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பின் மத்தியிலும் துணைவேந்தரின் அறிவுறுத்தலின் கீழ் துரிதமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஸ்ரேட்மன்ட் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்போதும் போட் மீற்ரிங், செனட் மீற்ரிங் இழுபறி. ஒருவாறாக கடந்த 10ஆம் திகதி ஸ்ரேட்மன்ட் தருவதாகச் சொன்னார்கள். போனபோது பரீட்சைக் கிளைக்கு எனது 'பயில்' வந்திருக்கவில்லை. எனது அடையாள அட்டையை வேண்டி இருந்த பயில்களுக்குள் இறங்கித் தேடிய ஊழியர் ஒருவர் "உங்கள் பயிலைக் காணவில்லை கீழேதான் கேட்க வேண்டும்" என்றார். சரி பறவாயில்லை என்று விட்டுக் கீழே இறங்கிச் சென்று அடையாள அட்டையைக் காட்டி இந்தப் பயிலை மேலே அனுப்பவில்லையாம் என்றேன். எனது பயிலைத் தேடிச் சென்ற ஊழியர் திரும்பவும் வந்து என்னை "நீங்கள் ஸ்ரேட்மன்ட் போம் நிரப்பிக் கொடுத்தீர்களா" என்று கேட்டார். (அவரே இரண்டு வாரத்துக்கு முன்னர் எனது விண்ணப்பத்தைப் பொறுப்பேற்றிருந்தார்) தேடி எடுத்து எப்படியோ மேலே அனுப்பி வைத்திருந்தார்கள், 'துரிதமாக' ஸ்ரேட்மன்டையும் நான் பெற்றுவிட்டேன். வெளியில் வந்தபோது சில மாணவர்கள் மேலே பார்த்துக் கண்டபடி திட்டியவாறே இருந்தார்கள்.

இந்தச் சம்பவம் எனக்கு நேர்ந்த உண்மை அனுபவம். அவர் அவர் தங்கள் சுயத்துக்காக தங்கள் தங்களின் நியாயங்களை முன்வைப்பார்கள். நான் எனது வேலைக்காக எனது சுயத்தை முன்வைத்திருந்தேன். பல்கலைக்கழகம் பல்வேறு காரணங்களைக் காட்டி இழுத்தடிப்புச் செய்தது. படித்தவர்கள் மத்தியில் மனிதாபிமானம் எங்கு போயிற்று என்ற கேள்வி! இதில் நானும் ஒருவனாக இருக்கலாம். பிழை என்மீதிருக்கலாம். காலத்தைத் தவறவிட்டது எனது தவறே. ஆனால் நாட்டுச் சூழல் கல்வியைத் தொடர முடியாத நிலைமை போன்ற பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கேள்விகள் "இவர்களுக்கு மனமே இல்லையா?" என்பதே.

அவர்கள் தாமாகத் தவறிழைக்கவில்லை. பரீட்சையில் 'பெயில்' விடவெளிச் சூழல் பல இதற்குக் காரணமாக இருக்கின்றது. தினமும் நேரிலும் ஊடகங்களிலும் இந்த அவலங்களை நாங்களே பார்த்தோம், கண்டோம், கேட்டோம். எங்கள் சமூகம் திருந்தி முன்னுக்கு வரவேண்டும் என்பதை விட நான் முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் எங்களிடத்தே மேலோங்கி உள்ளது.

பிழையை விட்டுவிட்டு அதைச் சரி என நியாயப்படுத்த நான் முன்வரவில்லை. இப்படியான பிழைகளை முதலில் படிக்கும்போது மாணவர்கள் விடக்கூடாது. பிழையை விட்டுவிட்டு அதை மன்னியுங்கள் மாற்றி அமையுங்கள் என்று மேலிடத்தில் உள்ளவர்களை கெஞ்சக் கூடாது. அவர்களின் அதிகாரம் எங்குவரை செல்கின்றது எனச் சோதிக்கக் கூடாது. அவர்கள் நீதிபதிகள் நாங்கள் குற்றவாளிகள். முள் இருக்கும் இடத்தைப் பார்த்துத்தான் கால் வைக்க வேண்டும். முள் குற்றிவிட்டால் முள்ளுக்கு வலி தெரியாது. அது எமக்கே வலிக்கும், விளைவையும் தரும். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தானா

# தொடர்கிறது சூதாட்டம்

"பொது மக்களை ஏமாற்றும் ஒரே குறிக்கோளுடன் வேறு எது பற்றியும் அலட்டிக் கொள்ளாது நியாயத்தை வார்த்தைகளால் மட்டும் உறுதிப் படுத்திய ஏமாற்றுப் பேர்வழிகளுள் ஆறாவது அலெக்சாண்டர் மன்னருக்கு நிகராக வேறு எவரும் இருந்திருக்க முடியாது." உலகின் ஏமாற்றும் பேர்வழிகள் குறித்து கருத்து வெளியிட்ட மாக்கியாவெல்லி ஒரு சமயம் தெரிவித்த கருத்து இது.

நாட்டு மக்களிடம் இருந்து அறவிடும் வரியை, அது பொதுமக்களது நிதியான போதிலும் தன்னிச்சைப்படி அதனைக் கொள்ளையிடும் இன்றைய அரசின் போக்குக்கு, இந்த உதாரணம் மிகப் பொருத்தமான ஒன்றாகும். அரசின் பிரதான வருமான மார்க்கம் பொது மக்களிடமிருந்து அறவிடும் வரிப்பணமே.

அந்த வரிப் பணத்தையே கொள்ளையிடும் அரசின் செயற்பாடு பங்குச் சந்தை வர்த்தகம் வீழ்ச்சி கண்டதை அடுத்து வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதி பத்து ஆயிரம் கோடி ரூபா பெறுமதியுள்ள கணக்காகும். இது நாட்டின் சமூகப் பாதுகாப்பு நிதிகளில் முன்னிலை வகிக்கும் என்று 65 லட்சம் தனியார் நிறுவன ஊழியர்கள் ,மற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் சேவையாற்றும் ஒரு கோடி 13 லட்சம் ஊழியர்களுக்குச் சொந்தமான நிதியே அதுவாகும்.

இந்த நிதியிலிருந்து பத்து லட்சத்து 98 ஆயிரத்து 800 ரூபா, பங்குச் சந்தையில் பங்குகளை விலைக்கு வாங்குவது உட்பட பலதரப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகளுக்கு என்று அரசால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

லாப்ஸ் காஸ் நிறுவனம், சிலோன் கிறேப், கலதாரி ஹோட்டல் நிறுவனம், பிரமுக வங்கி மற்றும் சம்பத் வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் பங்குகள் விலைக்கு வாங்கப்பட்டுள்ளன. அதேபோன்று யுகதனவ் அனல் மின் உற்பத்தி நிலையத்துக்கும் இந்த நிதியிலிருந்து ஒரு தொகைப் பணம் முதலீடு செய்யப்பட்டது என்ற தகவல்களும் வெளியாகாமல் இல்லை.

அது உண்மையானால் அதற்கென சீனாவிடமிருந்து கடனாகப் பெறப்பட்ட நிதி எதற்காகச் செலவிடப்பட்டது என்ற கேள்வியும் எழுகிறது.

எது எவ்வாறான போதிலும் பின்னடைவு நிலையிலுள்ள வர்த்தக வங்கிகளின் பங்குகளை வாங்க, ஊழியர் சேமலாபநிதி அரசால் சூறையாடப்பட்டுள்ளது.

1958 ஆம் ஆண்டின் ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தில் 19 ஆம் இலக்க விதி, சட்டமா அதிபரால் 2002 ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் , அதன் பிரகாரம் நீண்டகால நிதி ஸ்திரம் கொண்ட நிறுவனங்களில் மட்டுமே ஊழியர் சேமலாப நிதியிலுள்ள பணத்தை முதலீடு செய்ய இயலும் என்றும் விதிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அது தொடர்பான முடிவு ஊழியர் சேமலாப நிதியைக் கையாளும் உயர் அதிகாரத் தரப்பாலேயே மேற்கொள்ளப்பட இயலும் எனவும் விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது. ஆயினும் புதிதாக நியமிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிச் சபைக்கு இந்த நிதியைக் கையாளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தச் சபையே இந்தக் குறிப்பிட்ட தொகையைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை உறுதியாகி வருவதாக நிலைநாட்டும் நோக்கில் பின்னடைவு கண்டுவரும் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் அரசியல் லாபம் ஈட்டும் நோக்கம் முன்னெடுக்கப்படுவது தெளிவாகிறது. 2010-2011 நிதி ஆண்டுகளில் இவ்வாறு 10 லட்சத்து 98 ஆயிரத்து 800 ரூபா பணம் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இருந்தும் , ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அரச ால் பெறப்பட்ட நிதித்தொகை குறித்த விவரம் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் மத்திய வங்கியால் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான காலாண்டு அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்.

ஆயினும் 2010 ஆம் ஆண்டுக்கான அறிக்கைக்குப் பின்னர் இதுவரை மத்திய வங்கி அத்தகைய அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. அதேபோன்று 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஊழியர் சேமலாப நிதிக்கென ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் அந்த நிதியில் வைப்பிலிடப்படவில்லை. அவ்விதம் வைப்பிலிடப்படாத பணம் 10 லட்சத்து 3 ஆயிரத்து 459 ரூபாவாகும். இந்தத் தொகை ஊழியர் சேமலாப நிதியில் வைப்பில் இடப்படாமை தொடர்பாகக் கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் கேள்வி எழுப்பியிருந்தும் அதற்கான விளக்கம் தொழில் ஆணையாளர் நாயகத்தால் இன்று வரை சமர்ப்பிக்கப்படாமையும் தெரிந்ததே

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் ஊழியர் சேமலாப நிதிக்குப் பொறுப்பான உயரதிகாரிகள் , ஊழல் மோசடி தொடர்பாக விசாரிப்பதற்காக பொதுச் சொத்துக்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தைக் கூட்டும் முயற்சியும் கைவிடப்பட்டது.

கணக்கீட்டு நடவடிக்கை நிலைமை எவ்வாறமைந்த போதிலும், அரசால் ஊழியர்களது பாதுகாப்பு நிதியின் ஒரு பகுதி சூறையாடப்பட்டுள்ளது. இது நாட்டின் தனியார்துறை ஊழியர்களுக்குச் சொந்தமான பணமாகும். கடந்த ஆண்டு மே மாதத்தில் ஓய்வூதியச் சட்டத்தை நிறைவேற்ற முயன்ற அரசின் முயற்சிக்கு ஊழியர்கள் காட்டிய எதிர்ப்பு அடக்கி ஒடுக்கப்பட்ட சம்பவத்தில் ஊழியர் ஒருவர் உயிரிழக்கவும் நேரிட்டது. ஊழியர்களின் எதிர்ப்புக் காரணமாக ஓய்வூதியச் சட்டமூலம் கைவிடப்பட்ட போதும், ஊழியர் சேமலாப நிதியிலிருந்து பெருந்தொகைப் பணத்தை அரசு இரகசியமாக பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ளதை தனியார் துறை ஊழியர்களில் பலர் இதுவரை அறிந்திருக்கவில்லை.

தனியார்துறை ஊழியர்களது மாதாந்த அடிப்படைச் சம்பளம் ஏழாயிரத்துக்கு உட்பட்ட சிறு தொகையே. எந்தவொரு தனியார்துறை ஊழியரும் ஒரு நிறுவனத்தில் ஐந்து ஆண்டு கால சேவைக்கு மேல் தொடர்ந்து சேவையாற்றுவதில் பலதரப்பட்ட இடர்பாடுகளைச் சந்திக்க நேர்கிறது. சில ஊழியர்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் கடமையின் போது விபத்துக்களில் சிக்க நேரிடுகிறது. பலர் தொழில் சிரமம் காரணமாக நோயாளிகளாக நேர்கிறது. அவர்களுக்கு அவர்களது வாழ்க்கையில் உள்ள ஒரே பாதுகாப்பு இந்த ஊழியர் சேமலாப நிதி மட்டுமே. அந்த விதம் ஊழியர்களது எதிர்கால வாழ்க்கைக்குப் பாதுகாப்பளிக்கும் அவர்களது ஊழியர் சேமலாப நிதியை அரசு தனது முதலீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவது நியாயமற்றதொரு செயற்பாடே. அரசு தனது பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபட ஊழியர்களது சேமலாப நிதியைப் பயன்படுத்துகிறது என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

சிக்கலுக்கு உள்ளாகியுள்ள நாட்டின் பொருளாதாரச் சரிவின் மத்தியில், தனது அரசியல் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காக நாட்டு மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தும், நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தினரின் சேமலாப நிதியைச் சுரண்டும் அரசின் இத்தகைய செயற்பாடுகள் நீதி நியாயமற்றவையே

# அரவணைப்பு அவசியம்

**ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு விவரம் தெரியும் காலம் வரையாவது பெற்றோரின் அன்பும் ஆதரவும் அவசியம் என்பது சொல்லித் தெரியவேண்டிய விடயம் இல்லை.**

■ சுவாதி

வளர்ந்து வரும் நாகரிக மோகத்தில் இன்று கணவனும் மனைவியும் உழைத்தால் மட்டுமே வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியும் என்ற நிலைமையாகிவிட்டது.

இந்த வகையில் இன்று பெண்களும் வேலைக்குக் கிளம்பிவிட்டனர்.

இந்த நிலையில் குடும்பங்கள் ஆதரவற்றுச் சிதறடிக்கப்பட்டுவிடுகின்றன. வீடுகளில் இருந்து ஆறுதல் அளிக்கும் பெண்கள் வேலைக்குச் செல்லும் நிலையில் வீட்டில் உள்ள அவர்களது பிள்ளைகள் மட்டுமன்றி வயோதிபத்தை எட்டிப் பார்த்துக்கொண்டு இருக்கும் அவர்களது பெற்றோரும் வேதனையில் மூழ்கிவிடுகின்றனர். அவர்களையும் பராமரிக்க ஒருவர் இல்லாது போய்விடுகின்றனர்.

பராமரிப்பு என்பது உள ரீதியான பராமரிப்பில் ஆரம்பமாகிறது. வீட்டில் இருந்து சமைத்து உண்டு ஆறுதலாக இருந்து பேசி அவர்களுக்கு ஆறுதல் கூறி, நடக்கும், நடக்கப்போகும் இன்ப துன்பங்கள் தொடர்பாக மனம் விட்டு பேசி அதற்கான தீர்வுகள் எடுப்பதற்கான காலம் இன்று மலையேறிப்போய்விட்டது.

அதிகாலையில் எழுந்தால் இயந்திரம்போல் வீட்டு வேலைகள், பிள்ளைகளின் வேலைகள், கணவனுக்கான பணிவிடைகள் என்று காலம் நகர்ந்து கொண்டு செல்கிறதே தவிர நடக்கும் நடக்கப் போகும் பிரச்சினைகள் குறித்து பேச எங்கு நேரம் இருக்கிறது.

இந்த நிலையில் மனம் விட்டுப் பேச வாய்ப்பு ஏற்படாத போது குடும்பங்களுக்கு இடையில் பிரிவுகளும் ஏற்படுவதற்கும் இது வாய்ப்பாக அமைந்து போய் விடுகின்றன.

அது மட்டுமன்றி பிள்ளைகள் மீதான கவனிப்புகளும் இதனால் குறைவடைந்து போகின்றன. இந்த நிலையில் சீரான எதிர்கால சந்ததியை நாம் பெற்றுக் கொள்ள முடியாது போகும் நிலைக்கும் எமது சமூகம் தள்ளப்படுகிறது.

பிள்ளைகள் மீதான கவனம் குறைவடையும் போது அவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் அதிகரித்துச் செல்ல வாய்ப்பு ஏற்படும். பாசத்துக்காக ஏங்கும் ஒரு குழந்தை இனந் தெரியாதவர்களால் காட்டும் நயவஞ்சகப் பாசத்துக்கு அடிமையாகும் நிலையில் அந்த நய வஞ்சகர்களால் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதன் பின்னர் வாயில் வயிற்றில் அடித்துக் கொள்வதால் எதுவும் நடந்து விடப் போவது இல்லை.

ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு விவரம் தெரியும் காலம்வரையாவது பெற்றோரின் அன்பும் ஆதரவும்ஒரு பிள்ளைக்கு அவசியம் என்பது சொல்லித் தெரியவேண்டிய விடயம் இல்லை.

இவ்வாறான நிலைகள், பிரச்சினைகள் தெரிந்தும் அவசியம் கருதித் தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலைக்குச் சில குடும்பப் பெண்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது மறுக்கப்பட முடியாத கருத்து.



இது ஒரு புறம் இருக்க தொழில் வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் தாய்மாரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தொழில்வாய்ப்புக்காக 18 வயதுக்குக் குறைவான குழந்தைகள் உள்ள தாய்மார்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற் கொள்வது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று செய்திகள் வெளியாகியுள்ளமை மனதுக்கு சற்று ஆறுதல் தருவதாக இருக்கின்றது.

குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளமை உண்மையில் பாராட்டத்தக்க விடயம்.

சட்டம் வகுக்கப்படுவதற்கு முன்னர் சமூகத்தை தெளிவுபடுத்தி வேண்டு கோள் ஒன்றை முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன் புரி சேவைகள் அமைச்சுடன் ஒன்றிணைந்து அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருக்கும் தாய்மார் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்குச் செல்லும் நிலை தவிர்க்கப்படுமிடத்து - இதற்கான சட்டம் நடைமுறைக்கு வருமிடத்து நாட்டில் பிள்ளைகள் மீதான கவனம் எடுக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை சற்றாவது அதிகரித்துச் செல்லும்.

இந்த நிலையில் எமது சமூகத்தின் இருப்புக்கு இது வழி ஏற்படுத்திக் கொடுக்கும் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ தமிழ்ச்செல்வன்

இன்று தமிழகத் திரைத்துறையில் இருந்து வெளிவரும் பெருமளவிலான திரைப்படங்கள் வியாபார நோக்கிலேயே எடுக்கப்படுகின்றன. இவ்வகையான படங்களில் சமூக விரோதிகளுக்கும் நாயகர்களுக்கும் இடையே பேசப்படும் போட்டி வசனங்களும் அவர்களுக்கு இடையே நடக்கும் சாகச சண்டைகளும் மட்டுமே கதையாக மையப்படுத்தப்படும். நாயகர்கள் வசனம் பேசிக்கொண்டே இருப்பார்கள். சமூகத்திற்கான போதனை செய்துகொண்டே இருப்பார்கள். கற்பனைகளில் நடக்காத சாகசங்களைப் புரிந்துகொண்டே இருப்பார்கள். இதில் கொடுமை என்னவென்றால் இவ்வகையான திரைப்படங்களை உலகெங்கும் உள்ள தமிழர்கள் வரவேற்று மகிழ்வார்கள்.

தமிழ்த் திரைத்துறையின் இன்னொரு பரிமாணமும் உண்டு. இவ்வகையான திரைப்படங்கள், நிகழ்கால நடைமுறையை தோலுரித்துக் காட்டுவதிலும், திரைக்கதை யதார்த்த நிலையில் இருந்து தடம்புரளாத தன்மையிலும் நிகழ்கால வியாபார உலகிற்காக எவ்வித சமரசமும் செய்யாத தன்மையிலும் படைக்கப்படும். சில வேளை பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கும். பல வேளைகளில் மக்களின் பார்வைக்கும் சிந்தனைக்கும் வராது.

மாற்று சினிமாவில் தமிழ் மக்களை தன் பக்கம் கவர்ந்தவர்கள் என சமீப கால இயக்குநர்களில் பாலா, அமீர், சேரன், வசந்தபாலன், ராம், சற்குணம், ஜனநாதன் உள்ளிட்டவர்களை சொல்லலாம். வியாபாரம் மட்டுமே நோக்கமாகக் கொண்டு போதைகளாலும் ஆபாசங்களாலும் சிதைந்துவரும் தமிழ்த் திரைப்படங்களை அவ்வப்பொழுது தங்கள் படைப்பின் மூலம் மாற்றுத் திசைக்கு வழிகாட்டுபவர்களாக இவர்கள் நிற்கிறார்கள். உலகத்திற்கான தமிழ்த் திரைப்படங்களை படைக்க இப்பொழுது வந்து சேர்ந்திருப்பவர் பாலாஜி சக்திவேல்.

இவர் தனது முதலாவது படத்தில் ஷங்கரை போன்றே ஊழல், இலஞ்சத்தை அழிக்கிறேன் என்ற பேரில் விக்ரமை வைத்து 'சாமுராய்' சாகசம் செய்ய முற்பட்டவர், நல்ல வேளையாக அதில் இருந்து விலகி சமூகத்திற்கான உண்மையான திரைப்படங்களை எடுக்கத் தொடங்கினார். 'காதல்', 'கல்லூரி' களில் தன்னை சிறந்த இயக்குநராக மிளிர வைத்தவர், வழக்கு எண் 18/9 படத்தில் தமிழ்த்திரையுலகின் பிதாமகன்களில் ஒருவராகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளார்.



கல்லூரிகளில் இருக்கும் திரைப்பட பாடத்துறையில் இயக்குநர் வசந்தபாலனின் 'வெயில்' திரைப்படமும் பாடத்திட்டத்தில் இருப்பதுபோல பாலாஜி சக்திவேலின் 'வழக்கு எண் 18/ 9' படமும் வைக்கப்படலாம். தமிழ்த் திரையுலகில் முளைத்த செந்தாமரை இந்தப் படம்.

முகம் தெரியா நடிகர், நடிகைகள். ஆர்ப்பாட்டமில்லா வசனங்கள், ஆபாசமில்லாப் பாடல்கள், திரைக்கதையை நகர்த்திச் சென்ற பாங்கு, கூர்மையான வசனங்கள் ஏதும் இல்லாமலேயே சொல்லவேண்டிய செய்தியை கதாபாத்திரங்களின் பார்வையிலும் செய்கையிலுமே சொல்லிய நெறிமுறை என சொல்லிக்கொண்டே போகலாம். சம்பிரதாயமான ஒரு பாராட்டை முன்னுரையாகத் தருவதுகூட, இந்தப் படைப்பின் இயல்புக்கு விரோதமாகி விடுமோ என யோசிக்க வைக்கும் அளவு ஒரு நேர்மையான படம் வழக்கு எண் 18/9.

**சம்பிரதாயமான ஒரு பாராட்டை முன்னுரையாகத் தருவதுகூட, இந்தப் படைப்பின் இயல்புக்கு விரோதமாகி விடுமோ என யோசிக்க வைக்கும் அளவு ஒரு நேர்மையான படம் வழக்கு எண் 18/9.**

திரைப்படம் கூறும் செய்தி இரண்டுதான். காதல் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. இன்னொன்று சட்டம் பணக்காரர்களுக்கு மட்டும் எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொடுக்கும். சட்டத்தால் பலியாவது ஏழைகள் மட்டுமே. திராவகம் வீசப்பட்டு முகம் வெந்த நிலையில் துடிதுடிக்கும் பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கேயே காவல்துறையின் விசாரணை தொடங்கும் காட்சியில் இருந்து தொடங்குகிறது திரைக்கதை. பாதிக்கப்படும் அப்பெண்ணின் தாய்தான் ஏழை இளைஞன் மீதான தனது சந்தேகத்தை காவல் அதிகாரியிடம் தெரிவிக்கிறாள் என்றாலும், சாதாரண தெருவோரக் கடையில் வேலை பார்க்கும் இளைஞன் எப்படி திராவகம் வீசுவான்? ஏன் அவ் ஏழைப்பெண் வேலை பார்க்கும் பணக்கார வீட்டில் சம்பவம் நடைபெறும்? அடுக்குமாடி குடியிருப்பு பகுதியினுள் ஏழை ஒருவன் திராவக பாத்திரத்தோடு நுழைய முடியுமா? என்றெல்லாம் யோசிக்காமல் விசாரிக்க கிளம்புகிறது காவல்துறை. எல்லா குற்றங்களுக்கும் முதலில் சந்தேகத்திற்கு உள்ளாவதும் விசாரிக்கப்படுவதும் ஒரு ஏழைதான் என்பதுதான் இந்த சமூகத்தின் அவலநிலை என்ற உண்மையை சத்தமில்லாமல் சொல்லியிருக்கிறார் இயக்குநர். விசாரணையில், ஏழை நாயகனின் பின் கதை தர்மபுரியின் வறட்சி மிக்க கிராமத்தில் அம்மனிதர்களின் துயர் மிகு வாழ்க்கையைப் பற்றி கண்ணீர் அத்தியாயத்தோடு தொடங்குகிறது. ஆனால், விசாரணை முடிவில் இளைஞனின் கண்ணீர்க் கதையும் அந்த வேலைக்காரி மீதான காதலும் மட்டுமே தெரியவருகிறது. அடுத்ததாக,

---

## புத்தர் மீண்டு(ம்) வந்தார்.

"தாங்கள் ஞானம் பெற்றது எங்கு?"
ஆர்வமுடன் வினவினேன்,
"போதி மரம்" என்றார்.

"அந்த மரத்தில் கிளைகள் ஏராளம்
இருக்குமே?"
"ஏராளமான கிளைகளில் ஏராளமான
பறவைகள் இளைப்பாறுமே?"
"இளைப்பாறும் பறவைகள் அடிக்கடி
எச்சமிடுமே?"

"ஓ... எச்சங்களைப் பொருட்படுத்தாது,
அமர்ந்திருந்ததால் தானோ என்னவோ
உங்களுக்கு ஞானம் கிட்டியது...!"

வரிசையாய் வினாக்களை எழுப்பி, நானே
விடையைக் கண்டுகொண்டேன்.

நீதி:
அவமானங்களைத் தாண்டு, ஞானம்/
ஞாலம் வசப்படும்.

- [illegible]

---

# நிமிர்த்த முடியா சரிவு

■ வ.ரங்கன்



அமெரிக்க பங்குச் சந்தை வெகு மோசமான சரிவை எதிர்நோக்கியிருக்கிறது என்று பீற்றர் [illegible] என்ற அமெரிக்கப் பொருளாதார அறிஞர் எச்சரித்திருக்கிறார்.

2008ஆம் ஆண்டு ஏற்பட்ட சரிவைவிட மிக மோசமானதாகவும் தீர்வு காண முடியாததாகவும் இனிவரும் சரிவு இருக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'யுரோ பசுபிக் கபிட்டல்' என்ற நிறுவனத்தின் தலைமை நிர்வாகி அவர். பங்குச் சந்தைகளைத் தொடர்ந்து கவனிப்பதுடன் அதில் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வருகிறார். தொழில் அதிபர், பொருளாதார ஆலோசகர், விமர்சகர் என்ற சிறப்புகளும் அவருக்கு உண்டு.

"இந்தச் சரிவைத் தடுக்க முடியாவிட்டாலும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அமெரிக்க வங்கிகள் அனைத்தும் வட்டி வீதங்களை உடனடியாக உயர்த்துவது நல்லது. அமெரிக்க வங்கிகள் தாங்கள் தரும் கடன் மீது இப்போது வசூலிக்கும் வட்டி வீதம் மிக மிகக் குறைவு என்பதால் அவற்றுக்கு லாபம் இல்லை, பொருளாதாரத்துக்கும் நன்மை இல்லை.

வட்டி வீதம் அதிகரித்தால்தான் உண்மையான தொழில் முகவர்களுக்குத் தொழிலில் ஆர்வம் ஏற்படும். உண்மையான, நிலையான வருமானத்துக்கு அது வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாமாக முன்வந்து தனது முன்னாள் நண்பன் ஒருவன் மீது சந்தேகம் இருப்பதாக சாட்சியம் கூறுகிறாள் சம்பவம் நடைபெற்ற வீட்டு உரிமையாளரின் மகள். முன் பாதியில் கடந்து சென்ற பல காட்சிகள் மீண்டும் திரையில் வருகிறது. முன்பாதியில் ஏழைகளின் திரைக்கதையாக வரும் அனைத்து காட்சிகளும் பணக்கார பெண், ஆண் கதாபாத்திரத்தின் கதையின் கோணத்தில் திரைக்கதையாக உருண்டோடுகிறது. பார்க்கும் காட்சிகள் அனைத்தும் ஏற்கனவே பார்த்த காட்சிகள் என்பது நன்கு தெரியும்படி எடுக்கப்பட்டிருந்தாலும் திரைக்கதையின் ஓட்டம் புதுக் காட்சியாக கண்முன் நிறுத்துகிறது. இப்படி, இரண்டு கோணங்களில் பயணிக்கும் இந்தக் கதை, ஒரு மையப் புள்ளியில் இணைவதே தெரியாமல் இணைகிறது. திரைக்கதையில் அத்தனை நேர்த்தி. மேலும், பெற்றோர் இறந்ததைக்கூட மறைத்துவிடும் அந்த முறுக்கு தயாரிக்கும் நிறுவனத்தின் முதலாளியின் கொடூர மனம், நடைபாதையில் பசி மயக்கத்தில் வீழ்ந்து கிடப்பவனை எல்லோரும் வேடிக்கை மட்டுமே பார்த்துச் செல்லும்பொழுது, அவன் பசியைத் தீர்க்க உதவி புரிவதோடு அவனுக்கு வேலையும் வாங்கிக் கொடுக்கும் ஒரு பாலியல் தொழிலாளியின் இரக்க குணம், மெல்ல மெல்ல உயிர் விட்டுக் கொண்டிருக்கும் கிராமத்து கட்டைக் கூத்திலிருந்து சினிமா வாய்ப்புத் தேடி வரும் சின்னசாமியின் வேடிக்கையான பேச்சும் அழிந்து வரும் கூத்து தொடர்பாக அவர் பேசும் கூர்மையான மிகச்சிறிய வசனம், நொடியில் குணம் மாறும் அந்த தள்ளு வண்டி சாப்பாட்டுக் கடை முதலாளி, மகளைக் காக்க எல்லோர் மீதும் எரிந்து விழும் வயதான வேலைக்காரியின் பாதுகாப்பு உணர்வு, இவர்கள் அனைவரையும் நம் கண் முன்னால், நம் சமூகத்தில், நம் உறவினர்களில், நம் நண்பர்களில் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறோம். அதோடு, வெள்ளித்திரையில் 'கர்ஜிக்கும்' கதாநாயகர்களின் உண்மை 'குரலை' பற்றி படப்பிடிப்பு காட்சியில் அப்பட்டமாக காட்டுகிறார்கள். ஆனால் இவர்கள் அத்தனை பேரது நடிப்பையும் யதார்த்தத்தையும் ஓரிரு காட்சிகளில் முறியடித்து வாகை சூடுகிறார் பொலிஸ் அதிகாரியாக வரும் முத்துராமன். தமிழ் சினிமாவில் இதுவரை இவ்வளவு இயல்பாக காவல் அதிகாரி வேடத்தை யாரும் செய்ததில்லை என்றே சொல்லலாம். புதிதாக பழகும் ஆண்களுடன் பெண்கள் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இத்திரைப்படம் ஓர் உதாரணம். செல்லிடப் பேசியை தவறாகப் பயன்படுத்தி பெண்களை இழிவுபடுத்தும் ஆண்களில் பள்ளி மாணவர்களும் அடங்குகிறார்கள் என்பதனை பெற்றோர்களுக்கு எச்சரிக்கை மணியாக அடித்து சொல்லியிருக்கிறார்கள்.

திரைக்கதையில் முகம்காட்டாத ஏழை கதாநாயகியின் தந்தை பொதுவுடமை சித்தாந்தக்காரர் என்பதனை கதாநாயகியின் வீட்டில் இருக்கும் புத்தகங்கள், தாய் மற்றும் படத்தின் இறுதியில் நாயகி பேசும் வசனங்களிலேயே காட்டி விடுகிறார் இயக்குநர். ''உலகில் நடக்கும் அநியாயங்களை கண்டு உங்கள் மனம் கொதித்தால் நாம் இருவரும் தோழர்களே' என்றார் சேகுவாரா. உலகில் நடக்கும் அநியாயங்களுக்கெல்லாம்கூட குரல் கொடுக்க வேண்டாம், முதலில் உங்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்களுக்காகவாவது குரல் கொடுங்கள் என்பதே திரைப்படம் முடியும் பொழுது நமது மனதினில் தோன்றும் சிந்தனையாக இருக்கிறது.

★

---

கோலும்'' என்று அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ''வட்டி வீதம் இவ்வளவு குறைவாக இருந்தும் வங்கிகளிடம் கடனைப் பெற்று யாரும் தொழில்துறை மீட்சிக்கு உதவிவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். பொருள்களுக்குத் தேவை இருந்தால்தான் அவற்றை உற்பத்தி செய்வார்கள். வட்டி குறைவாக இருக்கிறதே என்பதற்காகக் கடன் வாங்கி, உற்பத்தி செய்து யாரும் அடுக்கி வைத்துக் கொள்ள மாட்டார்கள்'' என்பதுதான் அவரது அனுபவபூர்வமான பதிவு.

இப்போது அமெரிக்கர்களில் பெரும்பாலானவர்கள் அமெரிக்க டொலர்களையும் அமெரிக்க அரசு விற்பனை செய்யும் கடன் பத்திரங்களையும் வாங்கிக் குவிக்கின்றனர். ''இவை வெறும் வெற்றுக்காகிதங்களாக மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை, இந்தக் காகிதங்களால் முதலீட்டாளர்களுக்கு லாபம் ஏதும் கிடைக்கப் போவதில்லை'' என்பதும் அவரது கருத்து.

பாதுகாப்பான முதலீடு என்று கருதித்தான் டொலர்களையும் அரசு கடன் பத்திரங்களையும் இப்படி வாங்கிக் குவிக்கின்றனர்; பங்குச் சந்தையில் உண்மையில் என்ன நடக்கிறது என்றே தெரியாமல் பெரும்பாலான முதலீட்டாளர்கள் செயல்படுகின்றனர்.

அமெரிக்கப் பொருளாதாரம் இப்போது மீட்சி அடைந்திருப்பதாக நாம் காண்பது வெறும் போலித் தோற்றமே! இந்த நிலையில் பொருளாதார நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதற்கு உதவும் என்று கருதி அமெரிக்க அரசு டொலர் நோட்டுகளைச் சகட்டு மேனிக்கு அச்சிட்டு வெளியிடுவதால் நன்மை ஏதும் இல்லை என்பதும் அவரது கருத்து. ''போதை மருந்து சாப்பிடும் ஒருவருக்கு, அவர் சுருண்டு படுத்துவிடாமல் இருக்க மேலும் மேலும் போதை மருந்தைக் கொடுத்துக் கொண்டே இருப்பதைப் போன்றது இந்த டொலர் அச்சடிக்கும் நடவடிக்கை. ஒரு நிலைமைக்கு மேல் போதை மருந்தால் அந்த நபரின் உயிருக்கே ஆபத்து நேரிடுவதைப்போல பொருளாதாரத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடும்.

''வட்டியை உயர்த்துவதால் வங்கிகளுக்கு வருமானமும் லாபமும் கிடைக்கும். கடனை அடைக்க வேண்டும் என்பதால் கடன் பெற்றவர்கள் தங்களுடைய உற்பத்தியில் கவனம் செலுத்தி உண்மையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்பர்'' என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்கப் பொருளாதாரத்துக்குக் கூறப்படும் யோசனைகளும் பரிகாரங்களும் அப்படியே தமக்கும் பொருந்தும் என்று பிற நாடுகளும் கருதிவிட முடியாதுதான்; ஆனால் ஆசிய பங்குச் சந்தைகளில் மறைமுகமாகவும் ஐரோப்பிய பங்குச் சந்தைகளில் நேரடியாகவும் பாதிப்பை ஏற்படுத்துவது அமெரிக்க டொலரின் மதிப்பு என்பதை மறுக்க முடியாது. அத்துடன் நம்முடைய தேவைக்கான மூலப் பொருள்களை வாங்கவும் நம் நாட்டில் தயாரான பொருள்களை விற்கவும் டொலர் தான் தேவைப்படுகிறது.

எனவே இந்த எச்சரிக்கைக்கு நமது அதிகாரிகளும் வரவிருக்கும் ஆபத்தை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். அரசும் மத்திய வங்கியும் தமது கொள்கைகளை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

---

# அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்

■ அருவி

''என்ர தம்பி காதலிச்சுத்தான் கலியாணம் செய்தவன். சரி! தான் விரும்பின பிள்ளையைத்தானே கலியாணம் செய்திட்டான் என்று நாங்களும் விட்டிட்டம். ஒருநாள் வந்து கஷ்டமா இருக்கு வெளிநாடு போகப்போறன் எண்டு என்னட்டை கிடந்த நகைகளை எல்லாம் வாங்கிக்கொண்டு போயிற்றான். சரி போனவன் உழைச்சு அனுப்புவான்தானே என்று பார்த்தால் நகையும் வரேல்லை, காசும் வரேல்லை. ஆள் மட்டும்தான் திரும்பி வந்தான் வெறுமையாக...'' என 30 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் அருகிலிருந்த பெண்ணிடம் தனது மனப் பாரத்தை இறக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

கோயில் அமைதியாக காற்றோட்டமாக இருந்தது. தழுவிச் சென்ற தென்றலை அனுபவித்தாளா அந்தப் பெண் என்று தெரியவில்லை, ஆனால் சோக ரேகைகள் முகத்தில் ஓட அவள் கதை சொல்லிக் கொண்டிருந்தாள்.

''இப்ப எங்க உங்கட தம்பி.....'' கதைகேட்டுக்கொண்டிருந்த பெண் மெல்லக்கேட்டாள்.

''இப்ப இங்கதான் நிற்கிறார். மனுசிக்காறி வேலைக்குப் போனா பிள்ளையைப் பார்க்கிறதுதான் இவருக்கு வேலை. அவையளிட்ட தோட்டம் இருக்கு அதிலை வேலை செய்து கொண்டு காலத்தை ஓட்டுறார்...'' பெருமூச்சு விடுகிறாள். அவர்கள் கதையில் எனக்கு சுவாரஸியம் ஏற்பட்டுப்போக கடவுளைக் கைவிட்டு அவர்கள் கதைக்கு காது கொடுத்தேன்.

''வீட்டில இருக்கேக்க அதில கிடக்கிறத இதில தூக்கிப் போடமாட்டான், ஒரேயொரு ஆம்பிளைப்பிள்ளை எண்டு அம்மாவும் பொத்திப் பொத்தி வளர்த்தா. எங்களுக்கு சாப்பாடு இல்லையெண்டாலும் முட்டைப் பொரியலோட அவனுக்கு சாப்பாடு தேடிடுவா.... மகன் எண்டா அவ்வளவு பாசம் அம்மாவுக்கு.....

''இப்ப அவன் அம்மாவோடயும் சண்டை. நாங்கள் இருக்கிற காணித் துண்டையும் வீட்டையும் தன்ர பெயருக்கு எழுதித் தரட்டாம். தங்கச்சிக்கும் 28 வயதாகிப் போயிற்று, அம்மாக்கு வேற வயசு போயிட்டுது... வயசுக்கு வந்த அக்கா, தங்கச்சி... அப்பா இல்லை, பொறுப்பா பாப்பான் எண்டு நம்பி இருந்தவனே எங்கள நடு ரோட்டுக்கு கொண்டு வந்திருவான் போல கிடக்கு. யோசிச்சு யோசிச்சு அம்மாவுக்கும் வருத்தம். தானும் இல்லை எண்டா நானும் தங்கச்சியும் என்ன செய்யப் போறம் எண்டுதான் அவவுக்கு ஒரே கவலை... எனக்கெண்டா என்ன செய்யிறது எண்டே தெரியேல்ல. அதுதான் இந்த ஆண்டவன் சன்னிதானத்திலே அழுது தீர்த்திட்டுப் போவம் எண்டு வந்தனான்.....''



அந்தப் பெண் மெல்லக் குனிந்து தன் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். எவ்வளவு நேரம்தான் நானும் சாமி கும்பிடுவது போலவே பாவனை செய்து கொண்டு அவர்கள் கதையைக் கேட்டபடி இருக்க முடியும். மெல்ல அங்கிருந்து வெளியேறினேன். அவர்கள் கதை என் தலையைக் குடைந்து கொண்டே இருந்தது.

உண்மையிலே உறவுகள் எவ்வளவு புனிதமானது? அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை என அன்பெனும் கூட்டில் கட்டுண்டு ஒற்றைக் கண்ணில் அடிபட்டால் மற்றக் கண்ணிலும் வலிபட்டு, ஒருவருக்கு ஒன்று என்றவுடன் துடித்துப் போய் நிற்கும் அந்தத் துடிப்பு இப்போது எங்கே தொலைந்து போனது.? வீட்டுக்கு வீடு வாசல்படி போல் எந்த வீட்டை எடுத்துக் கொண்டாலும் ஒற்றுமை என்பது இப்போ ஓடி ஒளிந்து விட்டது.

பெற்றவர்களைக்கூடத் திரும்பிப் பார்க்காத பிள்ளைகளும், அக்கா தங்கையாய், அண்ணன் தம்பியாய் இருந்தவர்கள் இப்போ ஒருவருக்கொருவர் எதிரிகளாயும் சம்பந்தமே இல்லாத இரு துருவங்களாய்ப் பிளவுபட்டுப் பிரிந்து போவதற்குத்தான் காரணம் என்ன....?

காசும் பணமும், போட்டியும் பொறாமையும், காரணம் என்பார்கள் சிலர். வீட்டுக்கு வரும் மகராசிகள்தான் காரணம் என்பர் இன்னும் சிலர். அதை விட இன்று ஒவ்வொரு வீட்டிலும் உயிர்த் துடிப்பாய் மாறிக் கொண்டிருக்கும் சின்னத்திரைத் தொடர்கள்தான் எல்லோரையும் கெடுத்து விட்டது என்று விவாதம் நடத்துவர் இன்னும் சிலர்.

ஒவ்வொருவரும் ஒருமுறை தங்கள் கடந்த காலம் பற்றித் திரும்பிப் பார்த்தால் இந்தப் பிளவுகளும் பிரிவினைகளும் பிரச்சினைகளும் வருமா? சிறுபிள்ளைப் பருவத்தில்... மூத்தவர்கள் இளையவர்களை தோளில் போட்டு தூங்க வைத்திருப்போம், கூடி விளையாடி இருப்போம், பள்ளிக்கு அழைத்துச் சென்றிருப்போம், பாடம் கற்றுக் கொடுத்திருப்போம், தலை சீவி உடுப்புத் தோய்த்து, குளிப்பாட்டி என தனிப்பட்ட கடமைகளைக்கூடச் செய்திருப்போம். பரீட்சைகளில் வெற்றி பெற்றபோதும், நல்ல பட்டம் பதவிகள் கிடைத்தபோதும், பெரு மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக் குதித்திருப்போம். ஒருவருக்குத் துன்பம் என்றால் எல்லோரும் சூழ்ந்து இருந்திருப்போம். தெருக்களில் யாராவது சீண்டினால்கூட துள்ளிக் குதித்துக் கொண்டு சண்டைக்குப் போயிருப்போம். ஆனால் எல்லாமும் கடந்து இன்று உறவுகளின் பாசப் பிணைப்பு என்பது அந்தரத்தில் தொங்கும் பாலமாகி விட்டது. இந்த உறவுப் பாலத்தை இழுத்துக் கட்டி சீர் செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் யாருக்குரியது?

அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள்
அந்த நினைவுகள் நெஞ்சினில் திரும்பிடத் திரும்பிட ஏக்கங்கள்
அது ஒரு அழகிய நிலாக்காலம்... இந்த அழகிய நிலாக்காலத்தை எதிர்பார்த்து காத்துக் கிடக்கிறது இரத்த பாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரம்யன்

# ஷேக்ஸ்பியரின் கல்லறை



இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் என். சபாரத்தினம் அவர்கள் ஷேக்ஸ்பியர் படைப்புக்கள் பலவற்றை ஆய்ந்து கற்றவர். அதனால் ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை வரலாறும் கூட அவருக்கு அத்துப்படி.

சபாரத்தினம் கல்லூரி அதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதியாக ஒருமுறை இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். லண்டனில் அவரை வரவேற்று உபசரிக்கவும் முக்கியமான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் பெண்மணி ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார். லண்டனில் வரலாற்று முக்கிய இடங்கள் பலவற்றுக்கும் அழைத்துச் சென்ற அவ்வம்மையார் வெஸ்மின்ஸ்டர் தேவாலயத்தில் பொயட்ஸ் கோனர் என்றழைக்கப்படும் கவிஞர்களுக்கான நினைவுச் சின்னங்களும் கல்லறைகளும் இருக்கும் இடத்தில் ஷேக்ஸ்பியரின் கல்லறையை பார்க்க விரும்புகிறீர்களா என்று கேட்டாராம்.

அதைக் கேட்டதும் மேற்கொண்டு நடக்காமல் நின்றுவிட்ட சபாரத்தினம் அதெப்படி ஷேக்ஸ்பியரின் கல்லறை அவர் பிறந்த ஊரான ஸ்ட்ராட்போர்ட் ஒன் அவோனிலுள்ள தேவாலய வளவில் அல்லவா இருக்கிறது. இங்கு எப்படி அதைக் காட்டப் போகிறீர்கள் என்று கேட்டாராம்.

அம்மையார் சிரித்துவிட்டு ஆங்கில இலக்கியம் தெரியும், ஷேக்ஸ்பியரைப் பற்றியெல்லாம் தெரிந்தவர்கள் போல் இங்கு வரும் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்கள் அனைவரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்டுள்ளேன். உங்களைப் போல் விடயம் தெரிந்தவர்கள் குறைவு. அவர்கள் ஊர் சுற்றிப் பார்க்க வந்தவர்களாகத் தான் இருப்பார்கள். அதனால் அவர்களிடம் எனக்கு மதிப்புக் குறைந்துவிடும் என்று கூறி மிக மரியாதையுடன் தம்மை நடத்தினார். என்று சபா தெரிவித்துள்ளார்.

**ஆபிரகாம் லிங்கனின் கெட்டிஸ்பேர்க் உரை**

அமெரிக்காவில் கெட்டிஸ்பேர்க் போர் (The Batlle of Gettisburg) என்பது அங்கு நடந்த மிகப் பிரபல்யமான உள்நாட்டு யுத்தமாகும். 1863 ஆம் ஆண்டு ஜூலை 1,2 மற்றும் 3 ஆம் திகதிகளில் அந்த யுத்தம் நடந்து முடிந்தது. அந்த போர்க்களப் பகுதியானது தேசிய வீரர்கள் துயிலும் பகுதியாக அப்போதைய அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கனால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்தச் சமயத்தில் ஆபிரகாம் லிங்கன் நிகழ்த்திய இரண்டு நிமிட சொற்பொழிவானது இன்று உலக பிரசித்தமாகவுள்ளது. அது மட்டுமல்ல அமரத்துவமாகவும் நிலைத்துவிட்டது. இந்தச் சொற்பொழிவில்தான் "இங்கே மரணித்தவர்கள் எவரும் வீணே மரணமாகவில்லை. கடவுளின் கவனிப்பிலுள்ள இந்தத் தேசமானது மீளவும் புதிய சுயேச்சையான ஒரு மறுவாழ்வைப் பெற்றுக்கொள்ளும். மக்களால் மக்களுக்காக உள்ள இந்த மக்கள் அரசானது இந்த மண்ணிலிருந்து ஒருபோதும் அழிந்து போகமாட்டாது" என்ற பிரசித்தமான வாசகத்தை வெளியிட்டார்.

இதில் இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால் லிங்கன் அன்று பேசிய அந்தச் சொற்பொழிவு இன்று அமரத்துவம் பெற்றுவிட்டாலும் அந்தக் காலத்தில் இருந்த பத்திரிகைகள் எல்லாம் உள் பக்கங்களில் அதனை வெளியிட்டிருந்தன. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட எட்வேர்ட் எவரெட் என்ற புகழ்பெற்ற சொற்பொழிவாளரின் இரண்டு மணி நேரப் பேச்சு எல்லா பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் வெளியாகியிருந்ததாம்.

**அசை போட ஒரு விடயம் 36**

**அமெரிக்காவின் இலச்சினை**

அமெரிக்காவின் இலச்சினை (முத்திரை)யை வடிவமைப்பதற்கென 1776 ஜூலை 4 ஆம் திகதி அன்று ஒரு குழு அமைக்கப்பட்டது. பெஞ்சமின் பிராங்க்லின், ஜோன் அடாம்ஸ் மற்றும் தோமஸ் ஜெபர்சன் ஆகியவர்கள் இந்தக் குழுவில் இருந்தனர். அவர்கள் உருவாக்கிய இலச்சினையில் ஒரு வழுக்கைத் தலையுடனான கழுகு அதன் வாயில் 'பலவற்றிலும் ஒன்று' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட நாடா. அதன் கீழ் தாடையில் போரைக் குறிக்கும் அம்புகளும் அமைதியைக் குறிக்கும் ஒலிவ் இலைக் கிளையும் இருக்கின்றன. அதன் பின்புறம் முழுமையடையாத பிரமிட்டும் அதற்குமேலே ஒரு கண்ணும் (இறைவன் கண்காணிப்பதான அடையாளம்) காணப்படுகின்றன.

**பாரதியின் பாடல்**


தமிழ் நாட்டின் புகழைக் குறிப்பதற்கான பாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்றதாம். அதில் சுப்பிரமணிய பாரதியாரும் கலந்து கொண்டார்.

ஆனால் அவருக்கு பரிசு கிடைக்கவில்லை. அவரது அந்தப் பாடல் மட்டுமல்ல அதைப் போன்ற அவரது பாடல்கள் எல்லாம் இன்று நிலைத்து நிற்கின்றன. போட்டியில் வெற்றி பெற்ற பாடலும் எதுவென்று எவருக்கும் தெரியாது. பாடலாசிரியரையும் யாரும் அறியமாட்டார்கள்.

# நிற்காமல் போவது எதற்காக?

■ சோபனா





"திரும்பி வரும்போது முறிகண்டிக் கச்சான் வாங்கிக் கொண்டு வாங்கோ" நான் பயணத்துக்கு தயார்படுத்திக்கொண்டு இருக்கும் போது முறிகண்டிக் கச்சானை ஞாபகப்படுத்தினாள் எனது பேர்த்தி. எனது பேர்த்திக்குக் கூட கச்சான் என்றவுடன் முறிகண்டிக் கச்சான் தான் நினைவுக்கு வந்தது.

வவுனியா, கொழும்பு எனப் பயணத்துக்கு வெளிக்கிட்டால் போதும், என்ன பிள்ள வாங்கிக் கொண்டு வாறது எணக் கேட்டால் 'முறிகண்டிக்கச்சான்' என்பதுதான் பதிலாக இருக்கும்.

அந்தளவுக்கு ஏ-9 பாதையூடாகப் பயணிக்கும் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தது 'முறிகண்டிக்கச்சான்'.

வழிப்பிள்ளையார் எனப் பெயர் பெற்ற முறிகண்டிப்பிள்ளையாரின் வாசலில் வாகனத்தை நிறுத்தி விட்டு "அப்பா பிள்ளையாரே" என தேங்காய் உடைத்து வணங்குவதும் , அங்கிருக்கும் உண்டியலுக்குள் பத்தோ, இருபதோ காசைப் போட்டு வணங்குவதும் இனமத வேறுபாடின்றி பயணம் செய்யும் அனைவர் மத்தியிலும் காணப்படும் ஒரு வழக்கம்.

முறிகண்டிப்பிள்ளையாரின் தரிசனம் மக்களுக்கு கிடைத்தது போக வன்னி மாவட்ட சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு ஓர் அரிய இடமாக இது உள்ளது.

ஆனால் தற்போது முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு ஏற்பட்ட நிர்வாகக் குழறுபடி எல்லாவற்றையும் மாற்றமடையச்செய்துள்ளது.

வவுனியா, கொழும்பு மற்றும் திருமுறிகண்டி தாண்டிச்செல்லும் பயணிகள் தமது உடலின் இயற்கை உபாதைகளைப் கழிப்பதற்கும், பயணக் களைப்பைப் போக்குவதற்கும் முறிகண்டிப்பிள்ளையார் ஆலயம் எப்போது வரும் என எதிர்பார்த்திருப்பார்கள். இப்போதும் அந்தப்பழக்க தோசம் இன்னும் மாற்றம் பெறவில்லை. பஸ் ஏறியவுடன் முறிகண்டி வரட்டும் ஏதாவது வாங்கிக் கொண்டு போகலாம் என நினைத்துக் கொண்டே பயணம் செய்வார்கள்.

அன்று நானும் அப்படித்தான் பயணம் செய்தேன். எனது பேத்தி கேட்ட "முறிகண்டிக்கச்சான்" வாங்க வேண்டும் என்ற எண்ணம் பஸ்ஸில் பயணிக்கும் போது இருந்தது.

முறிகண்டியை அண்மித்தபோது பஸ்ஸில் இருந்த அனைத்துப் பயணிகளும் உசார் அடைந்தனர். ஆனால் சாரதி வாகனத்தை நிறுத்துவதற்கான எந்தவித அறிகுறியும் தெரியவில்லை. முறிகண்டிப்பிள்ளையாரை எட்டிப் பார்த்துக் கும்பிட்டு விட்டு வாகனத்தின் வேகத்தைக் குறைக்காமல் ஓட்டிக்கொண்டிருந்தார்.

முறிகண்டிப்பிள்ளையார் வருகுது என எதிர்பார்த்த பயணிகள் பஸ் நிறுத்தப்படாததால் ஆரவாரமாகக் கதைக்கத் தொடங்கினார்கள். இப்ப பஸ் முறிகண்டியில் நிற்பாட்டுறது இல்லையாம். இரத்தினபுரம், பரந்தன் அங்கால இருக்கிற தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களின் ஹோட்டல்களில்தான் நிற்பாட்டுகிறதாம். அவர்களின் ஆரவாரத்துக்கு ஏற்றாற் போல் இரத்தினபுரத்தில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு முன்பாக பஸ் நிறுத்தப்பட்டது.

பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் முக்கால்வாசிப்பேர் இறங்கவே இல்லை. இறங்கியவர்களில் அரைவாசிப்பேர் காற்றோட்டத்துக்காக பஸ்ஸின் அருகே இறங்கி நின்றார்கள் (பெரிய ஹோட்டல் என்பதால் காசு அதிகம் செலவாகும் என நினைத்தார்களோ தெரியாது).

அப்போது ஒரு சிறுவன் "முறிகண்டிக்கச்சான்" எனக்கூறிக்கொண்டே கச்சான் சரைகளுடன் வந்தான். பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் ஆர்வத்துடன் இரண்டு, மூன்று கச்சான் சரைகளை வாங்கிக் கொண்டார்கள்.

ஏ-9 வீதியின் கிளிநொச்சியூடாகச் செல்லும் தனியார் மற்றும் அரச பஸ்களின் நிலைப்பாடு இதுதான். தூர இடங்களுக்கு பயணித்துக் கொண்டிருக்கும் பயணிகளுக்கு ஓய்வு கொடுக்க நினைக்கும் பஸ் சாரதிகள் தமது நலன்களை மட்டுமே கருத்தில் கொள்கிறார்கள். தமக்கு ஆதரவு கொடுக்கும் ஹோட்டல்களுக்கு முன்னால் ஏனோ தானோ என பஸ்களை நிறுத்தி எந்தவிதப் பலனும் இன்றி ஓய்வைக் கொடுக்கிறார்கள்.

முறிகண்டிப் பிள்ளையார் முன்னால்தான் வாகனம் நிறுத்தப்படவேண்டும் என்பது பயணிகளின் ஆவல் கிடையாது. ஆனால் பயணிக்கும் அனைவருடைய நலன்களையும் கருத்தில்கொண்டே வாகனங்கள் ஓய்வுக்காக நிறுத்தப்பட வேண்டும் என்பது பயணிகளின் அவா.

ஏ-9 வீதியின் திருத்தப் பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் பயண நேரம் ஓரிரு மணித்தியாலங்கள் சற்றுக் கூடுதலாகவே தேவைப்படும் நிலையில் பயணிகளுக்குப் பயணக் களைப்பு சற்று அதிகமாகவே இருக்கும்.

இதனைவிட வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து வருகை தரும் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பஸ்கள் அதிகமாக வன்னி ஏ-9 வீதியூடாகச் செல்லும் போது நிறுத்தாமல் வவுனியா தாண்டி பஸ்கள் நிறுத்தப்படும்போது பயணிகள் பல்வேறு உபாதைகளுக்கு ஆளாகுகின்றனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் குறிப்பாகக் கைத்தொழில்கள் மூலம் பொருள்களைத் தயார்ப்படுத்தும் தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாமல் சிரமம் அடைகின்றனர். இதனால் உற்பத்திகள் கடைகளில் தேக்கமடைகின்றன.

நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்யும் ஏ-9 பாதையூடாகத் தமது பொருள்களைச் சந்தைப்படுத்த முடியும் என நம்பியிருந்த வன்னி மாவட்ட உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே லாபமாகக் கிடைத்துள்ளது. இதுதொடர்பாக ஏ-9 பாதையூடாக பயணம் செய்யும் பஸ்களின் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் செய்யப்பட வேண்டியது முக்கிய தேவையாக உள்ளது. பயணிகளின் நலன்கருதியும் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க வேண்டியும் ஏ-9 பாதையூடாக பயணிக்கும் வாகனங்களை குறிக்கப்பட்ட இடங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைதேகியின் வரவு




எஸ்.பரிமளகாந்தி,
அரியாலை.

அவன் அந்தத் தனியார் வைத்தியசாலை வாசலில் காத்து நின்றான். பார்வையில் ஏக்கமும் கவலையும் சூழ்ந்து கிடந்தது. தனியே தன் சுமைகளைச் சுமப்பது மிகவும் கடினமான காரியமாகப்பட்டது.

காலை நேரம் சினேகிதர்கள் விழித்தெழுந்திருப்பார்கள் என்ற நினைப்பில் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். மது மயக்கத்தில் நித்திரை வெறியில் இருந்த அவர்கள் கலவரமடைந்து போனார்கள். ''இன்று பத்தாம் திகதியல்லவா? உன் நித்திக்கு சத்திரசிகிச்சை என்று சொன்னனியல்லவா இப்ப வாறம். இரவு நல்லா அடிச்சிட்டுக் கிடந்ததால எழும்பப் பிந்தி விட்டது'' என்று இருவரும் சொல்லிவிட்டு அரக்கப்பரக்க வந்துசேர்ந்து தோளைத் தொட்டதும் ஓர் உற்சாகம் திரும்பி வந்தது போல் இருந்தது. இவனின் இந்த நட்புதான் எல்லோருக்கும் பிடித்தவிடயம். இவனிடத்தில் நட்பாகப் பழகிவந்த அவனது காதலி வைதேகி இறந்து நான்கு வருடம் கழிந்துவிட்டதால் அவளை எல்லோரும் மறந்தே போனார்கள். அந்த வைதேகியை இவனும் இவனது நண்பர்களும் சேர்ந்து செய்த கேலியே அவளது மரணத்துக்கு வித்திட்டது என்னவோ உண்மை தான். கடைசியாக இவனிடம் பேசிய அவள் கூறியது இதுதான். ''என் உரிமையை நிலை நாட்ட நான் உங்களிடம் வருவேன்'' என்பது தான். கொஞ்ச நாள் நண்பர்களின் தலை தொங்கித்தான் போனது படிப்படியாக அவனின் இழப்பின் துயரம் தேறத் தொடங்கி இப்போது நான்கு வருடம் உருண்டோடி விட்டது.

இப்போதும் அவன் அந்த நண்பர்களுடன் தான் சுற்றுகின்றான். அவனது இன்றைய உறவான நித்தியாவின் காதல் கடந்து திருமணத்தில் முடிய உதவியவர்களும் இவர்கள் தான். நித்தியை சில காரணங்களுக்காக அவர்களின் பெற்றோருக்குப்பிடிக்காது போனாலும், நித்தியின் பெற்றோருக்கோ பேரப்பிள்ளையை நோக்கிய புதிய விருப்பம் இருந்தது. தாமும் விட்டுக்கொடுக்காது இவர்களின் திருமணத்தில் விருப்பம் இல்லாதது போலவே சிலகாலம் நடந்து கொண்டனர். மொத்தமாக இரு குடும்பத்தினரதும் எதிர்ப்புக்கு மத்தியில், இவனும் நித்தியும் இணைந்தது என்னவோ உண்மைதான். அந்தச் சிறு கூட்டில் இவனும்அவளும் காதல் சிட்டுக்களாய் வாழ்ந்ததற்கு இப்போது வரவிருக்கும் அந்தப் பிஞ்சே சாட்சியாய் அமையப் போகின்றது. இந்தக் காலத்தில் சத்திரசிகிச்சை என்பது சாதாரணமாகிப் போனாலும் தனக்கென்று வரும்போது நெஞ்சு திக் திக் என்று அடித்துக்கொள்கின்றது.

பிள்ளை குறுக்காக இருக்குது சத்திரசிகிச்சை செய்துதான் பிள்ளையை வெளியே எடுக்கவேண்டுமென்று வைத்தியர் சொன்ன நாளிலிருந்து இவனுக்கும் நித்தியாவுக்கும் சிறு மனக் குழப்பம் ஏற்பட்டது. அம்மா இருந்தால் கொஞ்சமாவது ஆறுதல் கிடைத்திருக்கும் என்று நித்தியா அடிக்கடி சொல்லிக்கொண்டு இருந்தாள். அன்று பத்தாம் திகதி. பிரசவம் என்பது மறுபிறப்பென்று பெரியவர்கள் சொல்லும் நிலையில் அந்த மறுபிறப்புக்கு அவளை அழைத்துச் சென்று விட்டிருந்தார்கள். அதனால்தான் என்னவோ பயம் கலந்த மனம் பதகளித்துக் கொண்டிருந்தது.

காலை ஆறுமணி அந்தப் பிஞ்சின்,அழுகைக் குரல் இவன் காதில் விழ விரைந்து அவர்களுக்கென ஒதுக்கிய அறைக்குச் சென்றான். அங்கு நின்ற தாதி அவனிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு நித்தியாவிக்கு பிரசர் கொஞ்சம் கூடினமாதிரி இருக்குது. சிறிது நேரம் கழித்துத்தான் அறைக்குக் கொண்டுவருவோம் எனச் சொல்லிச் சென்றுவிட்டாள். அந்த நேரத்தில் நித்தியாவையும் குழந்தையையும் கவனிக்கவென ஏற்கனவே பேசிவைத்த ஆயா வந்து சேர்ந்தாள். ''கொஞ்சம் நேரம் போட்டுது தம்பி'' என்று சொன்னவாறு அச் சிசுவை ஏந்திக்கொண்டாள். இது என்ன சோதனை என்று அவன் குனிந்த நிலையில் அழும்போது அங்கு வந்த வைத்தியர் ''ஒன்றுக்கும் பயமில்லை ஏன் கவலைப் படுகிறீர்கள்'' எனத் தேற்றிவிட்டுச் சென்றார்.

காலை பதினொரு மணிக்கு நித்தியைக் கொண்டுவந்து கட்டிலில் படுக்க வைத்தார்கள். அத்தனை வலியோடும் அவனைப் பார்த்து அவள் புன்னகைக்க வயிற்றில் பால் வார்த்த நிலையை அடைந்தான். அச்சிறு குடும்பச் சந்தோஷத்தைப் பார்த்தபின் நண்பர்கள் இருவரும் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்கள்.

அன்று பிற்பகல் தேவை கருதி அவன் வெளியே சென்றபோது வைத்தியசாலை வரவேற்பறையில் தனது தாயார் யாரையோ விசாரித்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. யாரைப் பார்க்க வந்திருப்பார்கள்? ஒருவேளை நித்தியையும் குழந்தையையுமாக இருக்குமோ என்ற எண்ணத்தோடு காத்து நின்றான். அவனது ஆசை நிராசை ஆகவில்லை. தாயார் அவர்களது அறையை நோக்கிச் சென்றபோது அவனும் அவரின் பின் சென்று நின்று கொண்டான். அந்தச் சிறு பிஞ்சின் கைகளையும் கால்களையும் தடவியபடி ''பாரம்மா அப்பம்மா வந்திருக்கிறேன்'' என்று தூக்கிக் கொஞ்சி, காசும் கொடுத்து விட்டுச் சென்று விட்டார்கள். அவனுக்கும் அவளுக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அங்கிருந்த ஆயா ''போகப்போக எல்லாம் சரிவரும்'' என்று ஆறுதல் சொல்ல ஆனந்தக் கண்ணீரே வந்து விட்டது.

மறுநாள் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். பத்தியம் பார்க்கவென ஆயாவும் அவர்களுடனே வந்துவிட்டாள். பிள்ளையைத் தூக்கவென அப்பம்மாவும் வந்து சேர்ந்து கொண்டாள். [illegible] வந்தது ஆயா மூலம் அம்மம்மாவுக்கு தெரிந்துவிட அவரும் பெரிய பரிசுக்குவியலோடு வந்து சேர்ந்து கொள்ள, நர்த்தகி வந்த வேளைதான் இரு குடும்பமும் ஒன்றான மகிழ்ச்சியில் திக்கு முக்காடித்தான் போனார்கள். நர்த்தகி தொட்டிலில் கிடப்பதை விடுத்துப் பாட்டிமார் மடியில் படுப்பது என்பது வாடிக்கையாகி விட்டது.

நர்த்தகியின் அழகான கண்ணும் சிரிப்பும் அவளை தொட்டுச் செல்லும் போதெல்லாம் அவனிடம் ஒரு பரிவு மனதை வாட்டுவதை அவன் உணர்ந்தான். அவளுக்கு பல் முளைத்து பாற்பற்கள் இருபது ஆனபோதும் அவளது சிரிப்பு யாரையோ நினைவூட்டுவதுபோல் அவனுக்கு இருந்தது. நர்த்தகிக்கு அகவை மூன்றாகியது. குடும்பங்களும் ஒன்றாகியது.

அவளின் பிறந்த நாள் விழாக்களை எல்லாம் உற்ற நண்பர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தான் இவன். ஆனாலும் நர்த்தகி தகப்பனைக் கண்டால் ஒரு புன்னகையுடன் பாட்டியின் மடியில் ஏறி இருந்து கொள்வாள். இவனும் கரைச்சல் கொடுப்பதில்லை. நித்தியின் சொல்லையும் கேட்கமாட்டாள். பாட்டியின் சேலைத் தலைப்பைப் பிடித்தபடி பின்னே செல்வாள். இது ஒரு குறையாகத் தாய்க்குப் பட்டாலும் எதென்டாலும் பிறகு பார்ப்போமென்ற கணவனின் குரலுக்கு பணிந்தே போய்விடுவாள். நேசறிக்குப் போவதென்றாலும் பாட்டியுடன்தான் செல்வாள்.

ஒருநாள் இவன் நர்த்தகியைக் கூட்டிக் கொண்டு கோயிலுக்குச் செல்ல விரும்பி ''நர்த்தகி அப்பாவுடன் கோயிலுக்கு வாறீங்களா. அங்கு தேரடியில் இருந்து மண்விளையாடலாம்'' என்ற கேள்விக்கு, ஏன் அங்க உங்களது நண்பர்கள் வருவினம் தானே, பிறகேன் நான் அங்கு வரவேண்டும்?

என்று அவள் மறுகேள்வி கேட்க அவனுக்கு மூளையில் சிறு பொறி ஒன்று மின்னிப்போனது. ஏன் எனது நண்பர்களை இவளுக்குப் பிடிப்பதில்லை, அவர்களைக் கண்டாலே ஒதுங்கிப்போகிறாள். அவர்களும் கேலியா ஒருநாள் கேட்டுவிட்டார்கள். ''எங்களைக் கண்டால் ஓடி ஒளியச் சொல்லியா நர்த்தகியை வளர்க்கிறாய்?'' என்று. அவனோ சிறு சிரிப்போடு இந்தக் கேள்வியைச் சமாளித்துக் கொண்டான். இருந்தாலும் அவனுக்கு ஒரு உறுத்தல் இல்லாமல் இல்லை. அம்மாப்பாட்டியா அப்பாப்பாட்டியா நர்த்தகிக்குப் பிடிக்கும்'' எனக்குப் பிடிப்பது அப்பாவைத்தான் என்று அழுத்தமாக அவள் சொல்லும்போது அது அவனின் காதில் விழும். எல்லாம் ஒன்றுக்கொன்று முரணாகப் படுவதாக அவன் நினைத்துக் கொள்வான்.

வழக்கமாகக் கூடும்தேரடியில் நண்பர்கள் அனைவரும் கூடிக்கதைக்கும்போது நர்த்தகியைப் பற்றியும், கதை வந்தது.''ஏனடா? நர்த்தகி எங்ளோட சேருகிறாள் இல்லை'' என்று நண்பன் கேட்க ''அட போங்கடா அவன் என்னோடையோ தாயோடையோ சேர்கிறாள் இல்லை எண்டு நான் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறன் நீ என்னடா என்றால்''...என்று இழுத்தான் இவன். ''ஆமாடா நான் ஒன்று கேட்கிறன் நர்த்தகியைப் பார்க்கும்போது எனக்கு ஒரு ஆளைப் பார்க்கும் ஞாபகம் வருகுது மச்சான்'' என்று நண்பன் சொல்ல, இவனுக்கோ மூளையில் ஒரு மின்னல். எங்கோ ஒரு மறைந்துபோன அவளின் நினைவுகள் ஞாபகத்துக்கு வருவது போல இருந்தது. ''வைதேகியை ஒருக்கா ஞாபகப்படுத்திப் பாரேன்'' என்றதும் இவன் சிலைபோலானான்.

ஆமாடா நர்த்தகியின் கண்ணும் சிரிப்பும் வைதேகியையே ஞாபகப்படுத்துகிறது. அதுதான் எங்கயோ பார்த்தமாதிரி இருக்கு. என்று நினைத்துக்கொண்டே இருந்தனான்.'' என்று சொன்ன இவன், பல கேள்விகளுக்கான விடைகள் நிலைநாட்ட வந்து விட்டாளா? என்ற கேள்விக்கு விடை தெரியாமலேயே நடந்து சென்றான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி மறைந்துவிட்டது பக்தி கலந்த ஒற்றுமை

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்




கன்னாதிட்டிப் பகுதி செல்வச் செழிப்புள்ள பகுதியாக விளங்கியது. இன்றும்தான் கன்னாதிட்டிச் சந்தியிலிருந்து கிழக்கே கொஞ்சம் பள்ளமாகச் செல்லும் வீதி முன் கிறவல் வீதியாக இருந்தது. இந்த வீதியில் சில யார் தூரம் சென்றதும் சக்தி வாய்ந்த ஸ்ரீ காளி கோயில் உயர்ந்தபடிகளுடன் காட்சியளிக்கும். வடக்கு நோக்கி இருக்கும் அம்மன் சந்நிதிக்கு முன்பான கன்னாதிட்டி வீதியின் மறுபக்கத்தில் அருமையான பிள்ளையார் கிழக்கே பார்த்தபடி வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். பிள்ளையாருக்கு அருகே கன்னாதிட்டி தாமரைக்குளம். இந்தக் குளம் இப்போது பல பக்கங்களிலும் சுருங்கி சிறிய குளமாக இரண்டு பக்கங்களிலிருந்து வழிந்தோடி வரும் மழை நீரை பழைய பெரிய கால்வாய் மூலம் வண்ணாங்குளத்துக்கு தேக்கி அனுப்பும் குளமாக இன்றும் இருக்கிறது. கால்வாயிலும் குப்பைகள் தாம் குவிந்துள்ளன. காளி கோயிலுக்கு முன் குளத்தின் ஒரு பகுதி கேணியாகப் பயன்படுத்துவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் குளத்துடன் சேர்த்து கோயிலுக்கு எதிரே கிழக்குக் கரையில் ஒரு கிணறு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கிணற்றடி விரும்பத்தகாத சிலரின் இருப்பிடமாக மாறியதால் அந்தக் கிணறு மூடப்பட்டது. இப்போது வண்ணான்குளத்தையே காணவில்லை. கன்னாதிட்டிக் குளத்தின் மற்றைய கரையோரங்கள் காலைக் கடன் கழிக்கும் இடமாக முன்பு பயன்படுத்தப்பட்டன. பின்னர் கஸ்தூரியார் வீதியருகே குளத்தின் பக்கம் பொதுமலகூடம் அமைக்கப்பட்டது. கரையைப் பயன்படுத்தியோர் கைதானார்கள். மலகூடமும் இன்றில்லை. காளி கோயிலைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் வலது பக்கத்தில் ஒரு ஒழுங்கை. கன்னாதிட்டி ஒழுங்கை என்றும் பின்னர் ஒழுங்கையின் முடிவிலிருக்கும் பெரியவளவில் உள்ள வைரவர் கோயில் காரணமாக வைரவர் கோயில் ஒழுங்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தக் கன்னாதிட்டி ஒழுங்கையிவிருந்து தான் சேணிய தெரு தொடங்குகின்றது. நான் பிறந்ததும் என்னைப் பெற்ற தாயார் இறந்ததும் இந்த கன்னாதிட்டி ஒழுங்கையிலிருந்த இருவேறு வாடகை வீடுகளில் தான். பல வருடங்களின் பின் நான் குடும்பஸ்தனாகி நான் பெருமாள் கோயில் முன்பான கோயில் காணியில் மதிப்புக்குரிய அறங்காவலர் சபையின் அங்கீகாரத்துடன் கட்டி வாழ்ந்த வீடு இருபது வருடங்கள் வாழ்ந்த நிலையில் 1990 ஆம் ஆண்டில் நாங்கள் இந்தியா சென்றிருந்த போது பொருள்களோடு கோயிலைச் சொல்லி கொள்ளையடித்துவிட்டார்கள், புதிதாக அறங்காவலர் என வந்தவர்கள். இப்போது அறங்காவலர் சபையைத் தெரிவு செய்யும் ஆதீன மகா சபையே பிளவுபட்டு நிற்கின்றது. இன்று ஆதீன மகா சபையே அறங்காவலர்களாம். மொத்தம் 15 பேர். முன்னோர் கோயிலுக்கு எழுதி வைத்த காணியையும் வீடுகளையும் அபகரிப்பதில் போட்டி நடக்கிறது. மகா சபையின் பாதி உறுப்பினர் புறக்கணிப்பிலுள்ளனர். பத்மசாலிச் செட்டிப் பிள்ளைகள் என்ற சேணியச் செட்டியார்களின் முதல் பரம்பரை காருகவினைஞர் என்ற நெசவாளர்களாக குணபூஷண சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்ததாக ஒரு வரலாற்றுக் குறிப்பு தெரிவிப்பதாகவும் நல்லார்க்கு அடியான் வரம்பு என்று கோயிலோடு சம்பந்தப்பட்ட காணி உறுதியொன்றிலிருந்து அறியப்படுவதால் நல்லார்க்கு அடியான் பரம்பரையும் இந்தக் கோயிலோடு தொடர்பு கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. வரலாற்றாசிரியர்கள் இந்தக் கோயிலின் மூலம் குறித்து ஆராய்ந்தறிந்து வெளியிட வேண்டியது அவசியம். ஆலய வரலாறுகளை ஆராய்ந்து எழுதி வரும் வரலாற்றாசிரியர் என்.கே.எஸ்.திருச்செல்வம் எழுத வேண்டும். இன்றைய ஆலய நிர்வாகிகள் இதற்குச் சம்மதிப்பார்களா?

அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கோயிலில் வாழ்ந்தவர்கள் நெற்றியில் நாமம் தரித்து நாராயணன் நாமத்தை உச்சரித்து வாழ்ந்தனர். தீட்சை பெற்றவர்கள் விரத நாள்களில் மார்பிலும் புஜங்கள் மற்றும் நெஞ்சு, வயிறு முதலிய அங்கங்களிலும் நாமம் தரித்து கோயிலில் தரிசனம் செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. வீதிகளில் பாவோடும் போதும் நாமம் தரித்தவர்கள் எல்லோரும் பாவா, ரா, ரா, இக்கட, அக்கட என தெலுங்கு வார்த்தைகள் பேசி உறவுமுறை சொல்லி ஒற்றுமையாக உழைப்பார்கள். இன்று கோவிந்த சாமி வீட்டுத் தறிக்கு பாவோடினால் 'அதற்கு' அந்தப் பகுதியிலுள்ள பலரும் சேர்ந்து நின்று பாவோடிக் கொடுப்பார்கள். ஒரேநாளில் இப்படி ஒத்துழைத்து இரண்டு மூன்று பாவோடும் பணி நடைபெறும். இன்று கோவிந்தசாமி வீட்டுப் பாவோடினால் இரண்டு மூன்று அல்லது நான்கைந்து நாள் கழித்து நாராயணசாமி வீட்டுத் தறிக்கு பாவோடுவார்கள்.

இவர்கள் பாவோடும் போதும் வீட்டில் இருக்கும்போதும் அவர்களுடைய தாய் மொழியாகவும் வீட்டு மொழியாகவும் விளங்கிய தெலுங்கு மொழியிலேயே உரையாடினர். இவர்கள் பேசிய தெலுங்கு மொழிக்கு எழுத்து வடிவம் இருக்கவில்லை. அது பேச்சு மொழியாகவே இருந்தது. பாரதியார் பாடிய சுந்தரத் தெலுங்கு ''தெலியலேதுராமா பக்தி மார்க்கமு....'' தியாகராஜ சுவாமிகள் உருகிப் பாடியது. ஈழநாடு நிர்வாக ஆசிரியராக இருந்த திருவையாறு கே.பி.ஹரன் அவர்களின் வீட்டு மொழியும் தெலுங்கு.

நாமமும் தெலுங்கு மொழியும் வைஷ்ணவத்தின் அடையாளமாகவே இங்கு விளங்கின. குணபூஷண சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாணம் வந்த தென்னிந்தியா காரைக்கால் பகுதியில் உள்ள திருமலை ராயன் பட்டணத்தைச் சேர்ந்தவர்களுடன் இன்றும் தொடர்புள்ளவர்கள் இங்குள்ளனர்.

நாமம் வைஷ்ணவத்தின் புனிதமான அடையாளம். இந்தியாவில் வைஷ்ணவர்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் நாமம் தரித்தே வாழ்கின்றனர். இங்கு நாமம் தரித்த பரம்பரை சி.வெங்கடாசலம் செட்டியாருடன் முடிந்து விட்டதாகச் சொல்லலாம். அவர் வாய் என்றும் திருவாய் மொழிப் பாசுரங்களையே எந்நேரமும் உச்சரித்துக் கொண்டே இருந்ததால் அவரை திருவாய் மொழி சி.செ.என்றும் அழைத்தார்கள்.

அவரின் ஒரு மகன் ஸ்ரீரெங்கநாதன் இப்போதும் கனடாவிலிருந்து அடிக்கடி தொடர்பு கொள்வார். குடும்ப உறவு கொண்டவர்கள் நாம். இப்பொழுது பெருமாள் கோயிலுக்கு உரிமை கொண்டாடுபவர்களும் கோயில் நிர்வாகிகள் என்று சொல்லிக் கொள்பவர்களும் நாமக் கட்டியைப் பார்த்திருப்பார்களா என்பதே சந்தேகம். கோயில் ஐயர்மார் கூட நாம தாரிகளல்லர்.

# குழந்தைகளின் ஆரோக்கியமே சமுதாயத்தின் ஆரோக்கியம்

■ சோபனா

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பார்கள் . இது மருத்துவ ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். மனிதனின் உடல் ஆரோக்கியம் நோயற்ற வாழ்விலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தனது உடல்,உள ஆரோக்கியம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். முக்கியமாக குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பில் பெற்றோர்களின் கவனம் அவசியமான ஒன்றாகும்.

''இன்றைய குழந்தைகளே நாளைய எதிர்கால இளைஞர்கள்''. சிறு பிராயத்தில் இருந்தே குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பாக பெற்றோர் கவனத்துடன் இருக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக போசாக்கு குறைபாட்டால் சிறு பிள்ளைகள் நோய் வாய்ப்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் புள்ளி விவர அடிப்படையில் தகவல் வெளியிட்டுள்ள நிலையில் சிறுவர்களின் ஆரோக்கியம் எந்தளவுக்கு பாதுகாப்பானதாக இருக்கின்றது என்பதை தெரிந்து கொள்ள முடிந்துள்ளது.

சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிப்படையும் போது அவர்கள் உடல், உள ரீதியாக பாதிப்படைந்து சிறு பராயத்திலேயே ஆரோக்கியமற்ற குழந்தைகளாக வளர வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டு விடுவார்கள்.

யாழ். மாவட்டத்தில் கிராமம், நகரம் என வேறுபாடின்றி சத்தான உணவை உட்கொள்ள முடியாமல் சிறுவர்கள் பாதிப்படைகிறார்கள். கிராமப் புறங்களில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களை வாழ்க்கைச் செலவு வாட்டி வதைப்பது ஒரு புறமாக இருக்கும் போது பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான , சத்தான உணவுகளை பெற்றுக் கொடுக்க முடியாமல் வெறும் பசிக்கு மட்டும் உணவு எனும் போக்கில் பிள்ளைகளின் வயிற்றுப் பசியைப் தீர்த்தால் போதும் என்பதையே நினைத்துக் கொள்வார்கள்.

கிராமப் புறங்களில் வறுமை காரணமாகச் சிறந்த ஆரோக்கியத்தை பேண முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள போது, நகர்ப் புறங்களில் இயந்திரமான வாழ்க்கை முறையில் உடனடியாகக் கடைகளில் கிடைக்கும் உணவுகளை பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். இதன் காரணமாக குழந்தைகள் போசாக்கு குறைபாட்டால் பெரிதும் பாதிப்படைகிறார்கள் .



அரசின் புதியதொரு திட்டமாக வடக்கில் பின் தங்கிய பாடசாலைகளில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு முட்டையும் பேரீச்சம் பழமும் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இது வறிய மாணவர்களின் உடல் ஆரோக்கியத்துக்கு கிடைத்த வரப்பிரசாதமாக அமைந்தாலும் மாணவர்களின் ஆரோக்கியத்தை ஒரு வேளை கிடைக்கும் முட்டையாலும் பேரீச்சம் பழத்தாலும் நிறைவேற்றிட முடியாது.

கடந்த காலங்களில் இயற்கையாகக் கிடைக்கும் உணவு வகைகள் போசாக்குடையவையாக இருந்த படியால்தான் எமது முன்னோர்கள் நீண்ட ஆரோக்கியத்துடன் , கூடிய வயதுவரை நோயற்றவர்களாக வாழ்ந்துள்ளனர். இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

ஆனால் தற்போது சிறுவயதிலேயே குழந்தைகள் கடும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுக்கு மூல காரணம் குழந்தைகளின் உடல், உள ஆரோக்கியம் தொடர்பாக அக்கறை கொள்ளாமையே.


சிறுவர்களின் ஆரோக்கியம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். முக்கியமாகச் சிறுவர்களின் மூளை வளச்சி பெறும் காலப் பகுதியில் சத்தான உணவுகளை உட்கொள்ள பழக்கப்படுத்த வேண்டும். குழந்தைப் பருவத்தில் உடல் , உள ஆரோக்கியம் பாதிப்படையும் போது மந்த குணமுள்ள அறிவுத்திறன் குறைந்த பிள்ளைகளாக எதிர்காலத்தில் உருவாக வேண்டிய நிலை ஏற்படும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி நோய்கள் அற்ற சமுதாயத்தை உருவாக்க முன் வர வேண்டும்.

இல்லையேல் ஆரோக்கியமற்ற சந்ததிக்கு அத்திபாரம் இடுபவர்களாக நீங்கள் மாறி விடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் பொய்யாத உத்தமன்

இலக்கியக் காட்சி
141



கோசல நாட்டு மன்னன் அரிச்சந்திரன். அவன், கன்னோசி நாட்டு மன்னன் மகள் சந்திரமதியை மணஞ்செய்து கொண்டு உண்மை பேசும் உத்தமனாக உள்ளத்தால் பொய்யாதவனாக மண்ணுலகிலும், விண்ணுலகிலும் புகழ்பெற்றுச் செங்கோல் செலுத்தி அரசாண்டு வருகிறான். அந்த அரிச்சந்திரனுக்கு உற்ற துணைவியாகச் சந்திரமதியும் வாய்க்கப் பெற்றாள். இவர்களுக்கு லோகிதாசன் என்னும் மகன் "இவன் தந்தை எந்நோற்றான் கொல்?" எனும் சொல்லுக்குப் பொருந்த அவதரிக்கிறான். அதனால் இவர்கள் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அந்தக் காலத்தில் தேவேந்திரன் சபையில் ஒரு கேள்வி பிறந்தது. "சத்தியந்தவறாத, நற்குண நற்செய்கையுடைய ஒரே மனைவியை உடைய அரசன் யாராவது பூலோகத்தில் இருக்கிறானா?" என்பது கேள்வி.

"ஆம், இருக்கிறான். அவன் பெயர் அரிச்சந்திரன்" என்கிறார் முனி சிரேட்டரான வசிட்டர். "போர்முறைக்கும், வேதமுறைக்கும் மனுநீதி, பொறுமை, உண்மை என்பவற்றுக்கும் உரித்துடையவன்" என மேலும் கூறுகின்றார்.

இவையெல்லாம் விசுவாமித்திரருக்குச் சினத்தை மூட்டின. "பல தார விருப்பினன், வீணன், பொய்யன், பொறுமையற்றவன். இவனையா நல்லவன் என்று சொல்லுகிறீர்கள்" என்று விசுவாமித்திரர் வசிட்டர் கூற்றை மறுக்கிறார். அதனால் வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் இடையில் பெரிய வாக்குவாதம் ஏற்படுகிறது. இது அரிச்சந்திரனுக்குச் சத்தியசோதனையாய் அமைகிறது. அரிச்சந்திரன் 'உண்மை பேசுபவனல்லன்' என நிரூபிப்பேன். அன்றேல் எனது தவத்தில் பாதியை அவனுக்கு வழங்குவேன் எனச் சபதம் செய்து விசுவாமித்திரர் பூலோகத்துக்கு வந்துவிடுகிறார். அரிச்சந்திரனுடைய அரண்மனைக்குச் சென்று தவஞ்செய்வதற்குப் பணம் தேவையெனக் கேட்டு வாங்குகிறார். சிறிது நேரம் கழித்து அந்தப் பணத்தை அரசனிடம் கொடுத்து தேவையான பொழுது வந்து பெற்றுக் கொள்வேன் எனக் கூறிப் போய்விடுகிறார் முனிவர்.

காலம் நகர்கிறது. திடீரென ஒருநாள் வந்தவர், பணத்தைப் பற்றி எதுவும் கதைக்கவில்லை. தவம் செய்வதற்கு அவனது அரண்மனை வளாகத்தை தரும்படி கேட்கிறார். மறுவார்த்தை இன்றி அரசனும் அரண்மனையைக் கையளிக்கிறான். அவன் வெளியேற ஆயத்தமாகிற பொழுதில் தான் முன்பு அரசனிடம் கொடுத்த பணத்தைத் தரும்படி முனிவர் கேட்கின்றார்.

முனிவருக்கு சொந்தமாகிவிட்ட அரண்மனையிலிருந்து அரசன் எதையும் எடுத்துக் கொள்ள முடியாதுதானே. அதனால் "ஒரு சில நாளில் பணத்தைத் தந்துவிடுகிறேன். ஒரு காவலனை உடன் அனுப்புங்கள்" என அரசன் கேட்டுக் கொண்டதும் அவ்வாறே ஒரு காவலனை முனிவர் அனுப்புகிறார். "பணம் தரவில்லை" என்று சொல்லும்படி முனிவர் அரசனைக் கேட்கிறார். ஆயினும் அரசன் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அரண்மனையை விட்டு வெளியேறிய அரசன், மனைவி சந்திரமதியுடனும் மகனுடனும் அடுத்து உள்ள காசி நருக்குப் போகிறான். சுக்கிரன் என்ற காவலனும் உடன் செல்கிறான். அங்கே, மனைவி சந்திரமதியையும் மகன் லோகிதாசனையும் விலைகூறி வீதிவழி (விதி வழி) போகிறான் மன்னன். இடைவழியில் முனிவரது பணத்தை 'இல்லை' என்று சொல்லு, நான் திரும்பிப் போய்விடுவேன் எனக் கேட்கிறான் சுக்கிரன். அப்படிச் சொல்ல (பொய் சொல்ல) மாட்டேன், எப்படியும் தருவேன் என்று கூறிச் செல்கிறான் அரிச்சந்திரன்.

ஓரிடத்தில் ஒருநாள் ஒரு பார்ப்பனன் வந்து, சந்திரமதியையும் மகனையும் விலைகொடுத்து வாங்குகிறான். அந்தப் பணத்தில் முனிவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைச் சுக்கிரனிடம் கையளிக்கிறான் அரிச்சந்திரன். இந்த அளவில் முனிவரின் சோதனை முடிந்துவிடவில்லை. இதுவரை உன்னோடு அலைந்து திரிந்ததற்குக் கூலி தா என வற்புறுத்துகிறான் காவலன். அதற்கு அரிச்சந்திரனிடம் பணம் இல்லை. அதனால் தன்னைத்தானே விலைகூறி விற்ற பொழுது அந்த ஊரில் சுடலைக் காவல் வேலை கிடைக்கிறது மன்னனுக்கு. அந்தப் பணத்தில் காவலன் கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டு காவற் பணியில் அமர்கிறான் கோசலநாட்டுக் கோமகன். சுடலைக் காவலன், பிணம் சுடுவோர் பிணத்தின் வாயில் போடும் அரிசியும் காசும் பிணத்தைச் சுற்றும் புடைவையும் பெற்றுக் கொள்ளவேண்டும். தவறினால் பிணஞ் சுட அனுமதி தரக்கூடாது என்பதிலும் அரிச்சந்திரனது செங்கோல் தொடர்கிறது.

இனி, பார்ப்பன் வீட்டுக்குச் சென்ற வேலைக்காரனான சந்திரமதியையும் மகன் லோகிதாசனையும் பார்ப்போம்.

**அல்லியும் மகனும் அந்த மறையவன் மனையிற் சேர்ந்து**
**சொல்லிய பணிகள் எல்லாம் நோர்வறச் செய்து பின்னும்**
**எல்லில் ஓர் சாமம் என்ன எழுந்திருந்து ஏவல் முற்றி**
**அல்லில் ஓர் சாமம் சென்றால் அளித்த கூழ் உண்டு உறங்கி**

மிகுந்த துன்பத்துடன் நாள்களைக் கழிக்கிறார்கள். அரண்மனையில் தோழியரும் பணிப்பெண்களும் குற்றேவல் செய்யச் சுகபோகமாக வாழ்ந்த சந்திரமதியின் சந்திரவதனத்தில் வியர்வை சிந்த வேலை செய்வதைக் கண்டு தேவமாதரும் வேதனைப்பட்டார்களாம்.

**"கையினில் உலக்கை பற்றிக் காந்தளில் உதிரம் பாய**
**மெய்யினில் வியர்வை சிந்த விழியினில் அருவி பாய**
**நெய்யினில் முடித்த கூந்தல் நெல்குத்தும் கொடுமை காணா**
**மையினில் திகழ்வேற் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தார்"**
[கூந்தல்- கூந்தலையுடைய பெண், மறுகி- வருந்தி]

எனச் சந்திரமதி படும் துன்பத்தைக் காட்டுகிறார் புலவர். இத்தனை வேதனைகளையும் கணவனுடைய உண்மைபேசும் உறுதிப்பாட்டுக்காக உயர்வுக்காகவே சந்திரமதி அனுபவித்து

**'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை"** [குறள்- 53] என்னும் வள்ளுவரின் பொய்யாமொழிக்கு இலக்கணமாகிறாள் சந்திரமதி.

இவ்விதமான கஷ்டத்தின் உச்ச நிலையை அனுபவித்து ஈற்றில் தனது உயிரையே விடுகின்ற மகனையும் பார்ப்போம். லோகிதாசனை அயல்வீட்டுச் சிறுவர்களோடு விறகு சேகரிக்க காட்டுக்குச் செல்ல வைக்கிறார் எஜமான். ஒருநாள் விறகுக் கட்டோடு வரும்போது தருப்பைப் புற்கள் இருப்பதைக் கண்ட லோகிதாசன் அந்தப் புற்களைக் கொண்டு போனால் அந்தணரான எஜமானன் மகிழ்ச்சியடைவார் என்ற எண்ணத்தில் விறகுக் கட்டை வைத்துவிட்டுப் புற்களை வெட்டுகிறான். அப்போது அரவந்தீண்டி இறந்து போகிறான்.

உடன் சென்ற சிறுவர்கள், அந்த உடலை இலைகுழைகளால் மூடி வைத்துவிட்டு வந்து சந்திரமதியிடம் கூறுகின்றனர். விறகு கொண்டு வரும் சிறுவர்களோடு தன் மகன் வராமையால் ஏங்கிக் கொண்டு நின்ற லோகிதாசனின் தாய் இந்தச் செய்தி கேட்டதும் பதைத்துப் போகிறாள்.

**"பாவியேன் மகனே என்பள் பதைப்பள்; மென்முகத்தில் மோகிக்**
**தாவியே விழுவள்; நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்;**
**காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி ஏங்கி**
**ஆவியைத் தேடித் தேடி அலமரும் உடலம் ஒத்தான்"** எனக் காட்டுகிறார் புலவர் அவளது நிலைமையை.

இதுவரை அவளுக்கு உயிராக பற்றுக்கோடாக இருந்த மகன் இல்லாததனால் அவளது உடல் உயிரற்று அலமந்தது எனப் புலவர் கூறுவது இலக்கியநயம் வாய்ந்தது. பிள்ளையைத் தேடி உடனே போக முடியாது; பொல்லாத எஜமான். பிள்ளை இறந்துவிட்டானாம் என்று சொன்னதும் அவன் சீறி விழுகிறான்.

**"சினக்கடுஞ் சொல்லாற் சீறித் திடுக்கிட உரப்பி வீணி!**
**எனக்குறு குறையே அன்றி என் பொருட்கு அழிவு வந்தால்**
**உனக்குறு குறைதான் உண்டோ? உறுவிலைப் பட்ட பையல்**
**தனக்கோரு தாயும் உண்டோ? தவிர்க்க நீ போவது"** என்றான்.

விலைக்கு வாங்கிய சிறுவன் இறந்தால் எனக்குத்தானே நட்டம், உனக்கு இல்லையே, போகவேண்டாம் என்று உரத்துக் கத்துகிறான் எஜமானன். ஆனாலும் பெற்றதாய் படும் வேதனையைக் கண்டு சற்று மனம் இரங்கி "விடியமுன் வந்துவிடவேண்டும், போ" என்கிறான். மற்றைய சிறுவர் சொன்ன குறிப்பின்படி காட்டுக்கு ஓடிப்போய் தன் மகனது இறந்த உடலைக் காண்கிறாள்.

"..............................
**நாடினாள் கழுகும் பேயும் நரிகளும் குறளும் துன்றிக்**
**கூடிய குழுவின் நாப்பன் குமரனைச் சென்று கண்டாள்"** என்கிறார் புலவர்.

எமது கோமான் என்றோ ஒருநாள் எம்மை மீட்க வரும்போது எம் மகன் எங்கே என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன்? அப்பா லோகிதாசா! என்று வாய்விட்டுக் கதறி அழுதாள். காட்டில் அவளது அழுகைக் குரலே எங்கும் எதிரொலித்தது. ஊர்க்கோழிகள் கூவும் ஒலி கேட்டதும் பொழுது புலரப் போகிறது, எஜமானன் சினந்து சீறுவான் என்று எண்ணியவளாய் மகனின் உடலைச் சுமந்துகொண்டு சுடலையைத் தேடி நடக்கிறாள்.

சுடலையைக் கண்ட சந்திரமதி அவசர அவசரமாகப் பிணத்தைச் சுடுவதற்கான செயலில் ஈடுபட்டாள். ஆனால் சுடலையின் ஒழுங்குமுறை பற்றியோ அதற்கென ஒரு காவலாள் இருப்பது பற்றியோ யாதும் அறிந்திலாள். ஏற்கனவே பிணம் எரித்துவிட்ட இடத்திலிருந்த கொள்ளிக் கட்டைகளைப் பொறுக்கியெடுத்து அடுக்கி அதன் மேல் தனது குமாரனின் உடலை வைத்து எரித்தாள். புதிய இடத்தில் தீச்சுவாலை எழக்கண்ட காவலன் அங்கே ஓடினான். பெண் ஒருத்தி நின்று பிணஞ் சுடுவதைக் கண்டு அதனைக் கால்களால் இடறி அணைத்தான். "யாரடி கள்ளி! நீ இந்த அர்த்த சாமத்தில் வந்து எனக்குத் தரவேண்டிய பொருள்களைத் தராமல் பிணஞ் சுடுகிறாய்" என்று ஏசினான்.

"ஐயா! இவ்வூர் வழக்கம் எனக்குத் தெரியாது. நான் யாரும் அற்ற அநாதை. இறந்துபோன என் மகனைச் சுடுவதற்கு இங்கு வந்தேன். என்னிடம் பணம் ஏதும் இல்லை. என் மீது கருணை காட்டுங்கள்" என்று அவன் காலில் விழுந்து அழுதாள் சந்திரமதி. அப்போது அவளது கழுத்தில் மின்னும் தாலியைக் காவலன் காண்கிறான். "கழுத்தில் மங்கலநாண் இருக்கவும் யாருமற்றவள், பொருள் இல்லை என்கிறாயே?" எனக் கேட்கிறான் அரிச்சந்திரனான காவலன்.

ஐயோ இது என்ன சோதனை; சத்தியசோதனை!

**"அலைவிலா அரிச்சந்திரற்கு அல்லது**
**தொலைவில் யாவர்க்குந் தோற்றரு மங்கலம்**
**புலையன் காணவும் போதுவதோ"** என உலையின் மீது மெழுகொத்து உருகினாள் சந்திரமதி.

அன்பின் கடலான என் தலைவன் என்னை விற்றபோது என் குலப்பெருமை, அழகு, பொறுமை, தவம் எல்லாம் போகலாம். என் கற்பு நிலை போவது எப்படி? இந்தப் புலையனுக்கு மங்கல நாண் எப்படித் தெரிந்தது? என்பதற்காக அழுகிறாள். அப்படியானால் நீ?... எனக் கேட்டுத் தெரிந்துகொண்ட அரிச்சந்திரன் இறந்தது தன் குலக்கொழுந்து என அறிந்ததும் பெரிதும் வேதனைப்பட்டுக் கலங்கி நின்றான். மகனே உன்னை அரவம் கடித்தபோது கொடுமைக்காரனான என்னைப் பற்றி என்ன நினைத்தாய் அப்பா? என்னைக் கட்டிப்பிடித்த உன்னை அந்தணன் பிடித்து இழுத்தபோது இரங்காத என்னைக் காண்பது பாவம் என எண்ணி உன் உயிரை மாய்த்தாயோ மகனே என வாய்விட்டுப் புலம்பினான்.

"எப்படியாயினும் இந்தப் புலையனுக்குத் தர வேண்டிய பொருள்களை உனது எஜமானிடம் பெற்றுவா" என மனைவியை அனுப்புகிறான் அரிச்சந்திரன்.

சந்திரமதி மறையவன் வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு சிறுவனின் பிணம் கிடப்பதைக் கண்டு மனந்தடுமாறி அது தனது மகன் என எண்ணி அதைத் தன் மடி மீது வைத்து அழுது கொண்டிருக்கிறாள்.

அந்த வேளையில் அரசனது காவலர் வந்து அவளையும் பிணத்தையும் கொண்டு போய் அரசன் முன் விடுகின்றனர். அவ்வூர் அரசனது பிள்ளையைக் கடத்திய கள்வர் ஆபரணங்களை எடுத்துவிட்டுப் பிள்ளையைக் கொன்று விட்டுப் போய்விட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டு சந்திரமதி தலையில் விழுகிறது. மரணதண்டனை பெற்ற சந்திரமதியைக் காவலர் சுடலைக்குக் கொண்டு செல்கின்றனர்.

சுடலையில் சந்திரமதியைச் சிரச்சேதம் செய்யவிருப்பவன் அரிச்சந்திரன் என்பது தெரிந்திருந்த விசுவாமித்திரர் அந்தச் சுடலைக்கு விரைந்து போகிறார். "சந்திரமதியின் தண்டனையை இல்லாமல் செய்கிறேன் எனக்குப் பணம் தருமதி இல்லை என்று ஒருமுறை சொன்னால் போதும்" என அரிச்சந்திரனைக் கேட்கிறார்.

"யாரிடம் இந்த வார்த்தை சொல்ல வந்தீர்; நான் அப்படி ஒருபோதும் சொல்லமாட்டேன்" என்று உறுதிபடக் கூறுகின்றான் காவலனாக நின்ற அரிச்சந்திரன்.

**"சுடச்சுட பொன்போல் ஒளிவிடுந்துன்பந்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"** [குறள் 267] என்ற வள்ளுவர் கூற்று இங்கே மனங்கொள்ளத்தக்கது. இப்பொழுது அரிச்சந்திரன் யார்; சந்திரமதி யார்; இறந்த லோகிதாசன் யார் என்பது ஊர் அறிந்த செய்தியாகிறது. ஊர் மக்கள் சுடலையில் திரண்டு நிற்கின்றனர்.

**"தெய்வந் தொழா அள் கணவன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"** [குறள் 55]

தலை தாழ்த்திக் கணவனைத் தொழுது கொண்டு சந்திரமதி முன்னே வந்து நிற்கிறாள். சுடலைக் காவலன் வாளை ஓங்கிக் கொண்டு "சந்திரமதி கற்புடைப் பெண்ணானால், நான் சத்தியம் தவறாது ஒழுகுவது உண்மையானால் இவள் இறவாது இருக்கட்டும்" என்று சொல்லி அவளது கழுத்தை வெட்டுகிறான். என்னே அற்புதம் அந்த வாள் அவள் கழுத்தில் மாலையாகிறது. தேவர்கள் பூமாரி பொழிந்து அரிச்சந்திரனை வாழ்த்தினர். முனிவரும் அவனை வாழ்த்தியதோடு தனது தவத்தில் பாதியை இழந்தவராகத் தேவலோகம் திரும்பினார். உண்மைக்கு என்றும் அழிவில்லை. சுடலைக்காவலன் அரிச்சந்திரனாகிறான். தாதி, சந்திரமதியாகிறாள். லோகிதாசன் உயிர் பெறுகின்றான். அரச குடும்பத்தைக் கண்டு மக்கள் பாராட்டி மகிழ்கின்றனர். கற்பு நிலை ஆண், பெண் இருவருக்கும் பொது என்பது உறுதியாகின்றது.

இந்த அரிச்சந்திரன் கதையை நாடகமாகப் பார்த்த மோகனதாஸ்காந்தி உண்மை பேசுவதென்ற கொள்கையைக் கடைப்பிடித்து மகாத்மா காந்தியாக காந்தியடிகளாக வாழ்ந்து சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்தை (உலக வல்லரசை) வென்று இந்தியாவுக்கும் தொடர்ந்து ஏனைய நாடுகளுக்கும் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார் என்பது உண்மையின் உயர்வால் ஆகும். உண்மைக்குப் பல சோதனைகள் வரும் என்பதைக் காட்டி மகாத்மா காந்தி தமது சுயசரிதைக்கு 'சத்தியசோதனை' என்று பெயர் வைத்தார் என்பதும் நாம் மனங்கொள்ளத்தக்கது.



**"உள்ளத்தாய் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்"**

(குறள்- 294)

மட்டுவில் நா.நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் வலியோ, விதியோ


ஆழ்கடல் எங்கும்- அன்று
ஆண்ட பெருங்கூட்டம்
கப்பல் ஓட்டிய தமிழன் என
பெருமை பேசிய பேர் இனம்
இன்று....

வாழ வழி இன்றி
வழிதெரு எங்கும் கையேந்தி-இனி
இங்கு எதுவும் இன்றி
வாழ்வின் விடியல் தேடி
கள்ளத் தோணியில்
கடல் தனில் போகையில்
கடல் அன்னை அவள்-தன்
அலைக் கரங்களால்
கட்டி இழுத்து தன்னுள்
இறுக்க அணைத்து கொள்ள-அவன்
விடும் கண்ணீர்
கடலினுள் கலந்ததால்
கடவுளுக்கும்
தெரியவில்லை-அதனால்
கண் விழிக்கவில்லை.....

எம் இதயத்தின் வலிகளை
இனி யாரிடம் உரைக்க
இது தான் எம் இனத்தின் விதியோ
இனி எம் வலிதீர்த்திட
வழி இல்லையோ?

தி.தனுசியன்

# வரச் சொல்லுங்கள்.....



ஒரு தடவை ஒரே ஒரு தடவை
வரச் சொல்லுங்கள் அவர்களை
என்னுடைய கிராமத்துக்கும்

அவசர அவசரமாக
ஒரே நாளில் போடப்பட்ட
காப்பெற் வீதி
முதல் நாளில் பொருத்தப்பட்ட
தெரு விளக்குகள்
பார்த்துப் பார்த்து செய்யப்படும்
பாதுகாப்புக் கடவைகள்
வீதி சமிக்ஞை ஒழுங்குகள்..

ஆகாய வழியாக வந்திறங்கி
விழாக் கொண்டாடிச்
சென்ற அவர்களின் கண்களுக்கு வந்த இடம்
வசந்தமாய்த்தான் தெரிந்திருக்கும்...

வந்தவரெல்லாம் ஒரே ஒரு தடவை
என்னுடைய கிராமத்துக்கும்
வந்தால் போதும் யாவும் மாறிவிடும்...

இன்றும் காவோலையை
குடையாய் பிடிக்கும் மக்களின்
கிடுகு வீட்டுக்குள்
முழங்கால் தொட்டு நிற்காது வெள்ளம்
மண்ணெண்ணெய் விளக்கில்
பள்ளிப் பாடம் கற்ற சிறார்கள்
மின்சார ஒளியில் கற்றிடுவர்

ஒரு வேளை மட்டுமே வரும்
குடிநீருக்காய் வீட்டுப் பெண்கள்
தொட்டியடியில் காத்திருக்கமாட்டார்கள்
சமயத்தில் திருத்தப்படும் வீதிகளில்
கூழாங்கற்கள் குடித்தனம் நடத்தமாட்டா...

காப்பெற் வீதியில் மணிக்கொரு
பேருந்து வேகம் கொள்ளும்
புழுதி பறக்க முகத்தை மூடி யாரும்
மரநிழலிலும் வெட்ட வெளியிலும்
கால் கடுக்க காத்திருக்கமாட்டார்கள்
எப்போதாவது வரும் ஒரு பேருந்துக்காய்...

இப்படி மாறவேண்டும்
என்னுடைய கிராமம்
என் கனவுகள் நனவாக வேண்டுமெனில்
ஒரு தடவை ஒரே ஒரு தடவை
வரச் சொல்லுங்கள் அவர்களை
என்னுடைய கிராமத்துக்கு

அம்மு குட்டி

# இது விதியா ?



தாகமான
வாழ்வதிலே
பசியைப் போக்க
வேகமான
முடிவுரைகள்
வேண்டாம் தோழா
வாழ்கின்ற வயதிலேயே
முடிவுரையா
வலிக்கிறது நெஞ்சம்
இதுவிதியா
மதி கொண்டு
சிந்தித்து நடந்திடப்பா
கதியிழக்காமல்
இனி வாழ்ந்திடப்பா

# இவைதானா சாட்சி

சீரிழந்து
போகுதெம் இயற்கை
சிறப்பிழந்து
போய்விடுமா
வாழ்க்கை
யார் பொறுப்பெனப்
புரியாமல்
ஆடுகின்ற
கூத்தெப்போ
முடியும்
திசைகளெங்கும்
மனம் நடுங்கும்
காட்சி
முடிவுரைக்கு
இவைதானா சாட்சி

புலோலியூர் வேல்நந்தன்.

# நினைவுகளில்...



என்னவளே
என் கனவுகளில்
உன்னை அழைக்கிறேன்
கண்ணின் மணியாய்
இருப்பவளே
நினைவுகளை
உன்னிடம்
சொல்ல முடியாதவனாய்
ஏனெனில்
என் நினைவுகள்
உன்னைப் பற்றிய
கனவுகளே!

சிந்து சிவதாஸ்,
சுதுமலை தெற்கு.

# அன்றும்.... இன்றும்....

அன்று அனைத்துமே
இரகசியமாய், ஓசையின்றி
திரை மறைவில்
அரங்கேறின-ஆனால்
இன்று அனைத்துமே
வெளிப்படையாய்,
ஓசை நயத்துடன்
திரை முன்பே அரங்கேறி
ஆட்டம் காணுகின்றன
பல மலிந்து சந்தைக்கு
வருகின்றன-சில
மெலிந்து சுவடுகள் இன்றி
எச்சங்களுடன் காட்சிப்
படுத்தப்படுகின்றன-அதிலும்
பல முகவரியற்ற மடல்களோடு
இன்றும் பயணிக்கின்றன.
அன்றும், இன்றும்
ஒரே ஒரு வேறுபாடு தான்
அன்று குறிப்பிட்ட
சில இடங்களில்
இன்று குறிப்பிட முடியாத
பல இடங்களில்.....

கு.சக்தீனா,
வேரவில்.



# மானிடா!



இந்தப் பாரினில் நீ
நினைத்ததை அடைய
என்னவோ செய்கிறாய்-ஆனா
உன் தாயின் விருப்பை
நிறைவேற்ற என்ன
செய்கிறாய்-சற்று
சிந்தித்துப் பார்-மானிடா!
உலகில் உள்ள அனைத்தையும்
உன்னால்-ஏன்
உலகையும் கூட
உன்னால் ஆழ முடியும்
ஆனால் -உன் தாயைப்
போல இன்னொரு
தாயை உன்னால்
வாங்க முடியுமா....?

கு.சக்தீனா
வேரவில்

# தூது!

வானத்துக் கார் மேக
திரைக் கூட்டங்களை
உனக்காய்
என் நினைவை கூறி
தூது
அனுப்புகின்றேன்
ஒளி வீசும் அந்த
நிலவினிலே
எனக்காய் ஏதாவது பேசி
விடு!

ச.சோபியா,
முதலி கோயிலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்கள் மாறவேண்டும்



சிவாஜினி, சுரேஸ்குமார்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம் எவ்வளவுதான் வளர்ச்சியடைந்த போதும் பெண்களின் வளர்ச்சி மீதும் அவர்களுக்கான விருப்பு வெறுப்புகளிலும் அக்கறை கொள்கின்றதா என்று அலசி ஆராய்ந்து பார்க்கும்போது கிடைக்கும் விடை வெறும் பூச்சியமே.

இன்று எங்கள் நாட்டிலும் சரி உலக அளவில் பார்த்தாலும் சரி பெண்கள் பல்வேறுபட்ட துறைகளில் படித்துப் பட்டம் பெற்றுப் பெரிய துறையில் இருக்கிறார்கள். இந்த நிலைகளை நினைத்துக்கொள்ளும் போது ஒவ்வொரு பெண்ணுக்கும் பெருமைதான் ஏற்படுகின்றது. ஆனால் ஒரு சில இடங்களில் இதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்ற வினா எங்கள் மனங்களில் எழும்போது கிடைக்கின்ற விடைகள் நிறைய உள்ளன. அவை சரியா, தவறா என்று பார்ப்பது எங்கள் சமுதாயத்துக்கு முக்கியமாக அமைவதில்லை. ஏனெனில் அவ்வளவு தூரம் பெண்கள் மீதான அடக்கு முறை தலைவிரித்துக் கிடக்கின்றது.

உண்மையில் எங்கள் குடும்பத்திலுள்ள பெண்களின் திறமைகள், கெட்டித்தனங்கள், ஆளுமைத்திறன், கலைமீதான புரிந்துணர்வு, உயர் கல்விகள் இவை அனைத்தையும் வெளிக்கொணர முழுமையான ஆதரவோடு எந்தப் பெற்றோர் செயற்படுகின்றனர்.

பெண் என்பவள் எதிலும் முன்னுக்கும் நிற்கக்கூடாது. எப்பவும் அடுப்படியோடு இருந்து வாய்க்கு ருசியாக உணவு சமைக்க வேண்டும். வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் இவ்வளவும் ஒரு பெண்ணுக்கு போதும் என்று தான் பெரும்பாலன பெற்றோர் நினைத்துக் கொள்கின்றனர். பெண்ணுக்கும் திறமைகளுண்டு அவளும் ஆணைப் போல் சுதந்திரமாக தன்திறமைகளை வெளிக்காட்ட வேண்டும் என்பதை யாருமே உணர்வதில்லை.

எங்கள் வீட்டு பெண்களின் வளர்ச்சிக்கு நாமே தடையாக இருப்பதுதான் தாங்கொண்ணாத் துன்பம். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பெண்பிள்ளை செய்யும் திறமைகள் பற்றி பெருமைப்பட வேண்டும். ஆண் பிள்ளை என்றால் தட்டிக்கொடுப்பதும், பெண்பிள்ளை என்றால் திட்டித் தீர்ப்பதுமாக எத்தனை பெற்றோர் இருக்கின்றனர்.

குறிப்பாக நாம் வாழும் சமுதாய வளர்ச்சிக்காக பெண் தன்னால் முடிந்ததைச் செய்ய முற்படும் போது அது தமக்குக் கௌரவக் குறைவு என்று நினைத்துப் பெண்களை வேதனைப்படுத்தி அடக்கும் பெற்றோர் தங்கள் மனதளவில் சிந்திக்க வேண்டும்.

இன்று நாட்டையே கட்டியாளும் தலைவிகளாக பெண்ணினம் நிமிர்ந்து நிற்கையில், நாம் வாழும் சமுதாயத்தின் தலைவிகளாக பெண்ணினம் இருப்பது எமக்கு வெட்கம் என நினைக்கும் பெற்றோரே உங்கள் மனங்களை மாற்றிக்கொள்ளுங்கள். பெண்ணுக்குள் இருக்கும் திறமைகள் வெளிப்படுவது உங்களுக்கு' மட்டுமல்ல எம் நாட்டுக்குமே பெருமைதான்.



வந்தனா,
கரவெட்டி.

# சந்தேகம் கொள்வது ஏன்?

பல குடும்பங்கள் இன்று பிளவுபட்டு குடும்பநல நீதிமன்றை நாடி நிற்கின்றன. அதற்கான காரணங்கள் பல இருந்தாலும் மிக முக்கியமாகக் காணப்படுவது கணவன் மனைவி மீது கொள்ளும் சந்தேகம். பெண்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தமது கணவரிடம் கடந்தகால வாழ்க்கை பற்றிய இரகசியங்களைக் கூறிவிடுகின்றனர். அதில் திருமணத்துக்கு முன்னரான காதலையும் சேர்த்துத்தான். தாம் எவ்வளவு தவறு செய்கிறோம் என்று அப்போது அவர்களுக்குத் தெரிவதில்லை. புதுமனைவி அவற்றைக் கூறும் போது கணவர் ஏதோ கருணையின் பிரபு போல் கேட்டு, கடந்த காலத்தை மறக்கப் பழகு என்றெல்லாம் கூறுவார்! நாளாக, நாளாக அதனையே ஒரு காரணமாக கூறி தினம் தினம் மனைவியைச் சந்தேகப்பட்டு பிரச்சினை செய்வார். சந்தேகம் என்பது புற்றுநோயைப் போல் கொடூரமானது. மனதில் உள்ள நல்ல எண்ணங்களை மெல்ல, மெல்லக் கொன்று, இறுதியில் அரக்க குணத்தை தோற்றுவிக்கும். அளவு கடந்த பாசமே சந்தேகப்படுவதற்கு காரணம் என்று அர்த்தம் வேறு கற்பிக்கிறார்கள். இது முற்றிலும் தவறான வாதம். உண்மையான அன்பு எதனையுமே பொறுத்துக்கொள்ளும்! ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும்

ஒவ்வொரு பெண் மனதிலும், ஏதோ ஒரு சம்பவம் ஆழமாய் பதிந்து மனதை வேதனைப்படுத்தும். சில காலங்கள் ஆறாத ரணமாக இருந்தாலும், நாளடைவில் அது சரியாகிவிடும். ஆனால் அதனைக் கணவரிடம் கூறி, தம் வாழ்வின் நிம்மதி குலைய அவர்களே காரணமாகிவிடுகின்றனர். பெண்கள் நினைக்கலாம் என் கணவர் மிகவும் நல்லவர்; என்னைப் புரிந்து கொள்வார்; எனது கடந்த காலம் பற்றி கணக்கில் எடுக்கமாட்டார் என்றெல்லாம் எண்ணி சந்தோஷப்படலாம். ஆனால் ஆண்கள் அவ்வாறெல்லாம் இல்லை. எதனையும் இலகுவாக எடுத்துக்கொள்வார்கள். திருமணம், மனைவி என்றெல்லாம் வரும்போது நிறைய நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் வைத்திருப்பார்கள்; ஆனால் அது பொய்யாகும் போது அல்லது சிறு தவறு நடந்தாலும்போதும் பெண்களின் வாழ்க்கை நரகம் தான். இதனை உணர்ந்து ஒவ்வொரு பெண்ணும் வாழவேண்டும். உண்மையைக்கூறி அரிச்சந்திரன் பரம்பரை என்று பெயர் எடுப்பதை விட, இல்லறவாழ்வு இனிமையாக இருக்க உங்கள் கடந்த கால வாழ்வின் விரும்பத்தகாத சம்பவங்களை மறைப்பதே மேலானது.

# சீதனக் கொடுமை



மாடாய் உழைத்த தந்தை
மகளுக்கு மணமுடிக்க
ஆயத்தமானார்
வீடொன்றை கட்டினார்
சாதாரண வீடில்லை
மாடி வீடு
மாப்பிளை பார்ப்பதற்கு
ஓடுகின்றனர் குடும்பத்தோடு
ஓய்வின்றி
கட்டழகு நற்குணம்
பட்டமும் பதவியும் இருந்தாலும்
கோடிக் கணக்காக
கேட்கின்றனர்
மாப்பிளை வீட்டார்
பத்தரை மாற்றுத் தங்கமாம்
மாப்பிளை
பத்தேக்கர் நெற்காணியும்
பால் மாடு,சொந்த வீடும்
ஒரு கோடி பணமுமாக
கேட்டால் நெல்லின் உமிபோல்
நொருகிடும் நெஞ்சம்
இருப்பினும் கல்யாணம் தேதி குறிக்க
சீதனத்தை முன் வைத்தே
சீறுகின்றனர்....
பெண்ணிதயம் என்ன
காசு கொடுத்து வாங்கும்
பொருளா?
பெண்ணினம் பெருவாழ்வு
வாழ்ந்திட
பெண்களே பொருள் கேட்டால் ..........
பெண்களெல்லாம் தற்கொலை செய்வதா?
காலமெல்லாம்
நிழல் போல் தொடரும்
சொந்தம்
திருமண பந்தம்
சந்ததியை வளர்க்கும் பெண்ணுக்கு
சொத்தாக இருங்கள்
ஆண்கள் .... சிந்தியுங்கள்
பணம்,பொன் பொருளைத் தாண்டியும்
பெண் மனதைப்
பாருங்களேன் !

சா. ஜிந்துஜா,
கோண்டாவில்

திலகத்துக்கு
ஆக்கங்களை அனுப்ப
விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் என்னும்
முகவரிக்கு அனுப்பி
வையுங்கள் .

# பெண்களின் பங்கும் தேவை



இன்றைய பொருளாதார நெருக்கடியில் பெண்களின் பங்கு என்பது மிக அவசியம்.

அலுவலகங்கள் சென்று உழைக்க வேண்டும் என்று ஒரு சில பெண்கள் விரும்பினாலும் அதற்குக் கணவன் இடம் அளிப்பதில்லை. இவ்வாறானவர்களுக்கு பொருளாதார வசதி போதுமானதாக உள்ளதே காரணமாகிறது.

இன்று வடக்கில் மட்டும் 29 ஆயிரம் குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டுள்ளன. இவர்களுக்கான வருமானங்களை அவர்களே ஈட்டிக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். இவர்கள் தங்களது வீட்டுப் பொருளாதார சிக்கல்களைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் அளவுக்கு மாற்றம் கண்டுள்ளனர்.

படித்த பெண்கள் அலுவலகங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ பணிபுரிகிறார்கள். வேறு சிலரோ நிறுவனங்களின் உதவியோடு சுயதொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமது குடும்பத்தைத் தாங்களே நடத்திச் செல்கின்றனர்.

சிலரோ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் முயற்சி எடுக்காது அடுத்தவர்களிடம் கையேந்தி நிற்கும் நிலையில்உள்ளனர். இவர்களிடம் சேமிப்பும் இல்லாத நிலையில் குடும்பத்தை நடத்திச் செல்கின்றனர்.

இவர்கள் ஏதோ ஒரு சுயதொழிலைச் செய்தோ? சிறுவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தியோ தமது வருமானங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த வகையில் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே இன்றைய சூழலில் வாழ்கைச் செலவை ஈடுசெய்ய முடியும்.

கஜபாலினி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே நன்மைக்கு



ஒரு முயல் இருந்தது. அதற்கு எப்போதும் தூக்கமே வருவதில்லை. இதனால் மிகவும் அவதிப் பட்டுக்கொண்டிருந்தது. இது ஏதோ வியாதி. முதலில் வைத்தியரிடம் போய்க் காட்டுங்கள் என்று திருமதி முயல் கூறியது. வைத்தியர் கரடியிடம் சென்று, தன் வியாதியைப் பற்றி முயல் சொல்லியது.

''பைத்தியக்காரா! தூக்கம் வராவிட்டால் என்ன? அதற்காகக் கவலைப்படுவார்களா? மருந்து சாப்பிடுவார்களா? தூக்கத்தை வெற்றி கொள்ள முடியவில்லையே என்று உலகில் பலர் ஏங்குகிறார்கள். இது வியாதியுமில்லை, ஒன்றுமில்லை. அப்படியே வியாதி என்று நினைத்தால் எல்லாம் நன்மைக்கே என்று சும்மா இருந்துவிடு'' என்று கரடியார் கூறினார்.

சில நாள்கள் கழித்து காட்டில் ஒரு விளையாட்டுப் போட்டி நடந்தது. ''ஓட்டப் பந்தயத்தில் என்னை ஜெயிக்க முடியாது'' என்று முயல் சவால் விட்டது. பழைய பஞ்ச தந்திரக் கதையைப் படித்திருந்த ஆமை, ''என்னிடம் உன் சவால் எல்லாம் நடக்காது என்றது. ''அப்படியானால் பந்தயம் வைத்துப் பார்த்து விடுவோம்'' என்றது முயல். பந்தயம் ஆரம்பமானது. முயல் சிட்டாய், 'ஜெட்' போல் பறந்தது. வெகு தூரம் சென்று திரும்பிப் பார்த்தது. ஆமை வருகிற அடையாளமே இல்லை. சரி, சற்று நேரம் மரத்தடியில் தூங்கலாம் என்று படுத்தது. தூக்கம் வந்தால்தானே,

வைத்தியர் கரடியை சபித்தது முயல். . ''சரி, தூக்கம்தான் வரவில்லையே, மீதி தூரத்தையும் ஓடி விடலாம்'' என்று ஓடியது. பந்தயத்தில் ஆமையை வென்றது. அன்றிரவு தொலைக்காட்சியில் ''முதல் பரிசு பெற்ற முயல்'' என்று முயலின் படத்தைக் காட்டினார்கள். அதைப் பார்த்தபோதுதான் தூக்கம் வராத வியாதியும் ஒரு நன்மைக்கே என்று முயல் உணர்ந்தது.

# வாரியார் சொல்லிய 2



வருவதும் போவதும் - இன்பமும் துன்பமும்
வந்தால் போகாதது - புகழும் பழியும்
போனால் வராதது - மானமும் உயிரும்
தானாக வருவது - இளமையும் மூப்பும்
நம்முடன் வருவது - பாவமும் புண்ணியமும்
அடக்க முடியாதது - ஆசையும் துக்கமும்
தவிர்க்க முடியாதது - பசியும் தாகமும்
நம்மால் பிரிக்க முடியாதது - பந்தமும் பாசமும்
அழிவைத் தருவது - கோபமும் பொறாமையும்
எல்லோருக்கும் சமமானது - பிறப்பும் இறப்பும்

அ. சாம்பவி, தரம் -08
யா/ சா. இ. க

## பொதுஅறிவு

1. ஐ.நா.ச. என்பதன் விரிவாக்கம் யாது?
ஐக்கிய நாடுகள் சபை
2. ஐக்கிய நாடுகள் சபை எப்போது உருவாக்கப்பட்டது?
1945 ஒக்ரோபர் 24
3. ஐக்கிய நாடுகள் தினம் எப்போது கடைப்பிடிக்கப்படுகின்றது?
ஒக்ரோபர் 24 இல்
4. ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்புரிமை பெறும் நாடுகள் எத்தனை?
5 நாடுகள்
5. ஐக்கிய நாடுகள் சபையினுடைய சர்வதேச நீதிமன்றம் எங்கு அமைந்துள்ளது?
நெதர்லாந்தின் ஹேக் நகரில்


## கூடு

குருவிக்கூடு சிறியது
குஞ்சு வாழச்சிறந்தது
உருவில் சிறிய கூடு தான்
உன்னால் கட்ட முடியுமா
ஒற்றுமையாக விரல்கள் இருப்பதால்
உந்தன் கைக்கு மிகுந்த பலம்
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்
தேடித் தேடிப் படிப்பவர்
தெளிந்த அறிவை அடையலாம்
ஓடி ஓடி உழைப்பவர்
உயர உயர ஏறலாம்
கிலு கிலுவென மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை


க.தேனுகா
புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை





க.சுலஸ்ஜனா,
தரம்- 8, கிளி/ கிராஞ்சி
அ.த.க.பாடசாலை.



ஜோதிகா, தரம்- 7,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.



கருணைராஜா யதுகுலன், தரம்- 7,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ந.டிலக்ஸ்ஷா,
தரம்- 8, கொழும்புத்துறை.இ.ம.வி.



[illegible]
யா/[illegible]
வித்தியாலயம்.

## விடை தெரியுமா? 168

### உங்களுக்கும் பரிசில்கள்

1. கண்கள் இருந்தும் பார்வை இல்லாத பிராணி எது?
2. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
3. உலகிலேயே மிகப்பெரிய தீவு எது?
4. சைக்கிளைக் கண்டுபிடித்தவர் யார்?
5. சார்க் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் **"சிறுவர்கதிர்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 166

1. நோர்வே
2. இந்தியா
3. இரத்தினபுரி
4. தீக்கோழி
5. ஐக்கிய நாடுகள் சபை

### வெற்றி பெற்றோர் விவரம் (167)

★ சி.நிரோஜன், தரம்- 5, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
★ ம.சிவேகா, தரம்- 6, இறம்பைக்குளம் மகளிர் ம.வி.
★ ச.லக்ஷ்மிகரன், தரம்- 7, வவுனியா தமிழ் ம.ம.வி.
★ ம.தவநிசா, தரம்- 3, குமுழமுனை ம.வி.
★ வி.நிசாந்தி, தரம்- 3, மகாஜனக் கல்லூரி.
★ கு. திவ்வியா, தரம்- 7, சன்மார்க்க மகா வித்தியாலயம்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 22.07.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துறையின் முன்னேற்றம் மக்களை எங்கு கொண்டு செல்கிறது?

மருத்துவர்
கு.சுஜாகரன்




ஓரளவு எமது மொழியைப் பேசுவார்கள் என்று நினைத்து அயல் நாடு சார்ந்த மருத்துவர்களை நாடியும் அயல் நாட்டுக்குச் சிசிச்சைக்கெனச் சென்றனர். ஆனால் அவர்களோ ஆங்கில சொற்கள் கலந்த தமிழ் மொழிக் கலவை மூலம் அவசர அவசரமாகப் பேசி எமது மக்களைச் சிந்திக்கவோ, நோய்களைத் தெளிவாகத் தெரிவிக்கவோ சந்தர்ப்பம் கொடுக்காது சிகிச்சைகளை வழங்கினர்.

கடந்த காலங்களில் நமது மக்கள் மருத்துவத்துறையில் பலவித சிக்கல்களை அனுபவித்து வந்தனர். அதாவது முதலில் நோய்கள் தொடர்பான விழிர்ப்புணர்வு மற்றும் அவற்றை ஆரம்பத்தில் கண்டறியும் வழிமுறைகள் எதுவுமே தெரியாதவர்களாகத் தான் இருந்தனர். இதற்கு மாறாக அவர்களிடம் பாரம்பரியமாக இருந்து வந்த சில தவறான அபிப்பிராயங்கள், அதாவது மூடநம்பிக்கைகள் தான் மேலோங்கி நின்றன. இதனால் ஒவ்வொருவர் சொல்லும் கதைகளைக் கேட்டு ஒரு குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் மூலம் நோய்களுக்கான சரியான தீர்வைச் சரியான நேரத்தில் பெறத்தாமதித்து அதனால் பெரியளவில் பின் விளைவுகளை எதிர்கொண்டனர்.

அடுத்ததாக எமது மக்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட போரால் உரிய இடங்களுக்குப் பயணிக்கவோ, தகுந்த மருத்துவ ஆலாசனைகள் பெறவோ சந்தர்ப்பம் இல்லாது போனது. அக்கால கட்டத்தில் அவர்கள் இவற்றைப் பற்றி சிந்திக்கவோ, திட்டமிடவோ முடியாது வேறு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். அதனையும் தாண்டி நகர்ப் பகுதிக்கும் தலைநகருக்கும் வந்தாலும் மருத்துவ சிகிச்சை வேளைகளில் மொழிப்பிரச்சினை காரணமாக வைத்தியர்களிடம் தமது நோய் நிலை பற்றிக் கூறமுடியாமலும், அவர்கள் கூறுவதை விளங்க முடியாமலும் அவதியுறும் அவல நிலை தொடர்ந்தது.

எமது மொழி பேசி சேவை புரியக் கூடிய வைத்தியர்கள் எமது மக்கள் பற்றிச் சிந்திக்காமல் தம்மைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இருந்ததால் வெளிநாடுகள் சென்றடைந்தார்கள். இதனால் மக்கள் மருத்துவம் சார்ந்த விடயங்களில் சொல்லமுடியாத துன்பங்களை அனுபவித்தனர்.

இவற்றின் காரணத்தால் ஓரளவு எமது மொழியைப் பேசுவார்கள் என்று நினைத்து அயல் நாடு சார்ந்த மருத்துவர்களை நாடியும் அயல் நாட்டுக்குச் சிசிச்சைக்கெனவும் சென்றனர். ஆனால் அவர்களோ ஆங்கில சொற்கள் கலந்த தமிழ் மொழிக் கலவை மூலம் அவசர அவசரமாகப் பேசி எமது மக்களைச் சிந்திக்கவோ, நோய்களைத் தெளிவாகத் தெரிவிக்கவோ சந்தர்ப்பம் கொடுக்காது சிகிச்சைகளை வழங்கினர்.

பிந்தியதாக இவர்கள் தெரிந்து கொண்ட விடயம், தேவையற்ற பல பரிசோதனைகள், தேவையற்ற சிகிச்சைகள் எல்லாம் வெறும் வியாபார நோக்குடனேதான் எல்லாம் என்பது.

இவ்வாறு சோதனைச் சுமைகளில் சிக்கித் தவிக்கும் எமது மக்களுக்குத் தேவைப்படுவது என்ன? முதலில் அவர்களுக்கு தமது உடல் ஆரோக்கியம், நோய்கள், நோய்களைத் தடுக்கும் முறைகள் சிகிச்சை முறைகள், மற்றும் அவற்றில் உள்ள நன்மைகள் என்பவற்றைத் அவர்கள் தாய் மொழியில் தெரியப்படுத்த வேண்டும்.

இதன் மூலமே ,தமக்கான சரியான சிகிச்சை முறைகளைத் தெரிவு செய்யக்கூடிய நிலையில் அவர்கள் இருப்பார்கள். இதற்கு எமது மொழியில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைக் கட்டுரைகள் என்பன முக்கிய பங்காற்றும்.

கடந்த காலங்களில் இவற்றுக்கான சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்தன. ஆனால் தற்போது இவற்றுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும் இது போன்ற பத்திரிகைகளை நாம் மக்கள் சார்பில் பாராட்ட வேண்டும். பெண் நோயியல் முக்கிய புற்றுநோயான கர்ப்பப்பை வாசல் புற்று நோயை ஒழுங்கான பரிசோதனைகள் மூலம் வெளிநாடுகளில் முற்றாகத் தடுத்துவிட்டனர். ஆனால் எமது மக்களோ இதற்கான பரிசோதனைகளைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை எனக் கூறுகிறார்கள். இதனால் தொடர்ந்தும் புற்றுநோய்களுக்கு ஆளாகிவிட்ட இப்போது புற்றுநோய் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. இது தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவதன் மூலம் இவ்வாறான புற்றுநோய்களை ஒழிக்கக் கூடிய அறிவை மக்கள் பெறமுடியும்.

குடும்பமாக வாழும் தம்பதிகள் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய சரியான தகவல்களை அறியாது அவற்றின் பக்க விளைவுகள் பற்றிய பயத்தில் கருத்தடுப்பு வகைகள் எதனையும் பாவிப்பதில்லை. இதனால் எதிர்பாராத கருத்தரிப்புகள் மற்றும் அதன் பின்னரான நடைமுறைச் சிக்கல்கள் எனப் பலவற்றை எதிர்கொள்கின்றனர். ஆகையால் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான சரியான தகவல்களும் அறிவூட்டலும் மக்களுக்கு மிக அவசியம்.


குழந்தைப் பாக்கியம் தாமதமடைதல் தொடர்பாக பலவித சந்தேகங்களும் அதன்மூலம் கூட்டுக் குடும்பங்களில் பலவித பிரச்சினைகளும் கூடிக்கொண்டே போகின்றன. அத்துடன் குழந்தைப் பாக்கியத்தைத் துரிதப்படுத்தும் சிகிச்சை முறைகள் மற்றும் சிகிச்சைக்குச் செல்ல வேண்டிய இடங்கள் பற்றி சரியான வழிநடத்தல், விளக்கங்கள் இல்லாது மக்கள் அவதிப்படுகின்றனர். இந்தத் துறையில் இது குறித்துச் சரியான விளக்கங்கள் மக்களுக்கு தேவைப்படுகின்றன.

காலத்தின் தேவையாக மருத்துவத்துறையில் மக்கள் எதிர்கொள்ளும் பலவிதச் சிக்கல்களுக்கு சில உதாரணங்களே இவ்வாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

எமது மக்கள் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்ப எமது மொழியில் ஊடகங்கள் வாயிலாக தகுந்த, எளிதில் பொதுமக்களால் விளங்கக் கூடிய சரியான கருத்துக்கள் சென்றடைய வேண்டும்.

# வளமான வாழ்வுக்கு இயற்கையுடன் இணைந்த விவசாயம்

அர்ச்சனா உதயரட்ணம்
விவசாயபீடம்-யாழ்.பல்கலைக்கழகம்
4 ஆம் வருட மாணவி



எமது நாட்டில் வேளாண்மை நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1970 களில் அறிவியல் தொழிநுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பசுமைப் புரட்சியாக மாற்றப்பட்டது. இந்தப் பசுமைப் புரட்சியின் மூலமாக செயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்ற உரங்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் விவசாயத்தில் அதிக ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கின.

இந்த வகையான செயற்கையான உரங்கள் மற்றும் நச்சுத் தன்மை கூடிய பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்தும் போது எமது வளமான நிலங்கள், வளம் குன்றி விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலங்களாக மாற்றம் பெறுகின்றன.

இதன் மூலமாக நாம் உட்கொள்ளும் உணவுப் பண்டங்களிலும் நச்சுப் பொருள்கள் கலந்து கொள்கின்றன. இந்த வகையான உணவுப் பொருள்களை உட்கொள்ளுகின்ற போது காலப்போக்கில் அவற்றில் புற்று நோய்களை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

மேலும் நமது அடிப்படை வாழ்வாதாரமான நீர் வளமும் தற்பொழுது மிகவும் மோசமாகப் பாதிப்படைகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் நிலத்தடி நீரையே பயன்படுத்துகின்றனர். இந்த வகையான விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் மிதமிஞ்சிய நிலையிலுள்ள செயற்கை இரசாயனங்கள் நிலத்தடி நீரையும் மாசுறச் செய்கின்றன.

இவற்றைத் தடுப்பதற்கு நாம் மண்ணை வளமாக்கி இயற்கையுடன் இணைந்த ஒரு விவசாயத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும். இயற்கை முறையில் மிகவும் எளிமையான உத்திகளை மேற்கொண்டு, எமக்கு [illegible] யில் கிடைக்கும் பொருள்களை பயன்படுத்துவதன் மூலமாக நாம் இயற்கையுடன் இணைந்த விவசாயத்தை மேற்கொள்ளலாம்.

இயற்கை சார் கலவைகளைக் கொண்டு இலகுவில் பசளைகள் தயாரிக்க முடியும்.

1.அமுத கரைசல்

இந்தக் கரைசலானது துரித வளர்ச்சி ஊக்கியாக செயற்படக் கூடியது. இதனைத் தயாரிப்பது மிகவும் எளிமையானது, ஒரு கிலோ அமுதக் கரைசலை தயாரிப்பதற்கு ஒரு கிலோ மாட்டுச் சாணம், ஒரு தடவையில் மாடு பெய்யும் சிறுநீர், ஒரு கைபிடி பனை வெல்லம் என்பவற்றை எடுத்து 10 லீற்றர் நீரில் 24 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். 24 மணி நேரத்தில் இந்தக் கரைசல் தயாராகிவிடும். பின்பு இந்தக் கரைசலின் ஒரு லீற்றருக்கு 10 லீற்றர் (1:10) என்ற அளவில் நீரைச் சேர்த்து செடிகளுக்கு அடிக்கலாம்.

2.பஞ்ச கௌவியம்

பசுவின் ஐந்து பொருள்களான பால், தயிர்,நெய், சாணம் மற்றும் சிறுநீர் ஆகியவற்றைச் சேர்த்து பெறப்படும் கலவை இதுவாகும்.

முதலில் மாட்டுச் சாணத்தையும் நெய்யையும் நன்கு பிசைந்து 4 நாள்கள் ஈரத்துணியால் மூடிவைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இந்தக் கலவையைப் பிசைய வேண்டும். பின்னர் கலவையுடன் மாட்டு சிறுநீர், தேவையான அளவு நீர் சேர்த்து மட்பானையில் ஊற்றி 15 நாள்கள் விட வேண்டும். தினமும் 3 வேளை கலவையைக் கலக்க வேண்டும். பின் 16 ஆம் நாள், புளித்த தயிரையும், பாலையும் மற்றும் பனை வெல்லத்தையும் இந்தக் கலவையுடன் சேர்த்துக் கலக்க வேண்டும். ஒரு வாரம் ஊறவிடுகின்ற போது பஞ்ச கௌவியம் தயாராகும். இந்தக் கலவையை 35-50 லீற்றர் நீருடன் சேர்த்து கலக்கி பயன்படுத்தலாம். இந்தப் பஞ்ச கௌவியம் நுண்ணூட்டக் குறைபாட்டை நீக்குவதுடன், பூச்சிகளையும் விரட்டும் தன்மை கொண்டது. அத்துடன் பயிரில் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கின்றது.

### இயற்கை பூச்சி விரட்டிகள்

இயற்கையாக நமது பிரதேசத்தில் அரிதாகக் காணப்படும் சில தாவர இனங்களே இயற்கை பூச்சி விரட்டிகள் ஆகும்.

ஆடாதோடை, வேம்பு, ஆடுதின்னாப்பாலை, ஊமத்தை, எருக்கலை, காட்டாமணக்கு, கற்றாழைப்பூ, நொச்சி, துளசி, தும்பை போன்ற தவரங்களைக் குறிப்பிடலாம்.

இந்த மூலிகைச் செடிகளில் ஏதேனும் 5 வகையைத் தெரிவு செய்து, 2 கிலோ வீதம் எடுத்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை நன்கு இடித்து, மண்பானையில் போட்டுக் கொள்க. பின் அந்தப் பானையின் கழுத்து வரை மூழ்கும்படி மாட்டு சிறுநீரை ஊற்றி 10 நாள்கள் வரை விடுக. பின் ஒரு லீற்றர் கரைசலுடன் 10 லீற்றர் நீர் கலந்து பயன்படுத்தலாம். இந்த வகையான இயற்கையுடன் இணைந்த விவசாயத்தை மேற்கொள்ளும் போது எமக்குக் கிடைக்கக் கூடிய பயன்கள் அதிகமாகும்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''இதற்கு ஏற்றாற் போல் சுத்தமான இயற்கை முறையில் விளைகின்ற உணவுப் பொருள்களை உணவுக்காகப் பயன்படுத்துவதன் மூலம், எம்மையும் எமது வருங்கால சந்ததியையும் நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 223

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | 4 | 5 |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | 11 | |
| 12 | | | 13 | | | | |
| | 14 | 15 | | | | 16 | |
| 17 | | | | | 18 | | |
| | | | | 19 | | | 20 |
| 21 | | | | | | 22 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இரக்கப்படல்
4. நீரில் வேக வை
6. பிழை அல்ல
7. மனிதன் எழுப்பும் ஒலி
8. ஆசைப் பெருக்கத்தை ஏற்படுத்துவது
11. பூமி
12. செல்வம்
13. மக்கள்
14. நண்பகல்
16. காலால் விடுவது
17. இரத்தம்
18. மரம்
19. நித்திரை செய்வது இதன் மீது
21. ஆசைப்படல்
22. பாய்

### மேலிருந்து கீழ்

1. முத்தி
2. அடிமையானவர்
3. பழக்கமானது
4. மத்திய கிழக்கில் முக்கிய மொழி
5. முன்னைய காலத்தில் போர்வீரன் பழகியிருக்க வேண்டிய ஒன்று
9. வரவேண்டியது
10. கோபம்
15. பொருள்களின் மூன்று நிலைகளுள் ஒன்று
16. வலிமையான உலோகம்
17. தேவைக்கு வழங்கும் ஒத்தாசை
18. மறி
19. இது நமக்கு முப்பத்திரண்டு
20. பிடிக்கப்பட்டவர்.

* வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

* ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 221 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விவசாயி (4) அமுது (7) ரதம் (8) சேவகன் (9) சம்பிரதாயம் (10) ரம் (12) வணிகம் (14) பரு (15) நரி (16) ஏலம் (17) ஆதவன் (19) பத்திரிகை (20) தாடி

### மேலிருந்து கீழ்

(1) விரசம் (2) வதம் (3) சாம்பிராணி (4) அவயம் (5) முகம் (6) துன் (8) சேதாரம் (11) வரும்படி (12) வரி (13) கத்தரி (14) பல (15) நம்ப (16) ஏன் (17) ஆதி (18) வகை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 223**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 25.07.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.223இல்வெற்றி பெறுவோர்களது விபரம் 29.07.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 221 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ம.கேசவன்,**
இல.13 D/8, உருத்திரபுரம், கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
**செல்வன் க.பிரதீப்,**
தரம்- 11, யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.

**3 ஆம் பரிசு**
**எஸ்.அருணாசலம்,**
மாசேரி, வரணி

**4 ஆம் பரிசு**
**எம்.எவ்.மஸ்கரா,**
இல.76, மூர் வீதி, மன்னார்.

**5 ஆம் பரிசு**
**நா.சுந்தரலிங்கம்,**
கள்ளப்பாடு வடக்கு, முல்லைத்தீவு.

**பாராட்டுப் பெறுவோர்**

**கோ.சிவானந்தவல்லி,**
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

**ஆ.சோதிமணி,**
இல.189, பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி.

**கு.குலறமணன்,**
சீவ் சைற் லேன், வில்சன் வீதி, திருவையாறு, கிளிநொச்சி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# இலக்கியமும் சமூகமும்




ஒரு மொழியின் தொன்மையை அதன் செம்மையைப் பறைசாற்றி நிற்பன இலக்கியங்கள். இந்த இலக்கியங்கள் விதி முகத்தானும் மதிமுகத்தானும் வாழ்நெறியைப் புகுத்துவன. உலகின் செம்மொழி அங்கீகாரம் பெற்று மிளிரும் நம் தமிழ் மொழியிலும் அன்று தொட்டு இன்றுவரை ஆற்றல்மிகு இலக்கியங்கள் உருவாகிப் பரிமளிக்கின்றன.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரலாறு இருப்பது போல இலக்கியத்துக்கும் நீண்ட வரலாறு உண்டு. தனி மனிதனிலிருந்து தேசியம் வரையான மாற்றங்கள் அனைத்தும் இலக்கியப் போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இன்று நம்மால் பேணப்படும் இலக்கியங்கள் யாவும் எதிர்காலத்தில் பேணப்படும் எனக் கொள்ளமுடியாது. ஆனால் பேணப்படாவிட்டாலும் பேசப்பட்டு பாதுகாக்கப்படும் என்பது உறுதியானது.

நாம் கற்பதற்கென நிறைய இலக்கியங்களும் நூல்களும் உள்ளன. அதாவது ஒருவன் ஒரு நூல் எழுதுகின்றான் எனின் அவன் முன்பு நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் கூறுவான். அத்துடன் அவன் தன் வாழ்விலே அறிந்தவற்றையும் கற்றவற்றையுமே நூல் வடிவாக்குகின்றான். இந்த வகையில் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி ஆகும். கடந்த கால சம்பவத்தைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் இலக்கியம் உள்ளது.

இலக்கியங்கள் சமுதாயத்தின் பிரதிபலிப்புகளாகும். ஒரு காலத்தில் எழுகின்ற இலக்கியங்கள் அந்தக் காலத்தில் மேலோங்கியுள்ள பிரச்சினைகள் பற்றிக் கூறுவனவாகவே அமைகின்றன. அதேநேரத்தில் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் மாறுபட்ட தளங்களிலிருந்தே நோக்கப்படுகின்றன. எனவே ஒரு குறிப்பிட்ட காலத்தின் சரியான நிலையைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு அந்தக் காலத்தில் எழுந்த சகல இலக்கியங்களையும் விளங்கிக் கொள்வதும் அந்தக் காலத்து சமூக அரசியல் நிலைமைகளை அறிந்துகொள்வதும் அவசியமாகும்.

இலக்கியங்கள் காலத்தின் பதிவுகளாக இருப்பினும் இலக்கியங்களில் அந்த இலக்கியத்தின் சிருஷ்டிகர்த்தாவின் மனப்பதிவுகளும் மறைபொருளாய் கலந்திருக்கும் என்பதையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையோடு தொடர்புடையது. மனித வாழ்க்கையிலிருந்து மலர்வது ஏட்டிலக்கியம். அறிமுகப்படுத்தப்படாத காலகட்டத்திலே ஆதிகால, பாமர மனிதன் இயற்கை ஒலி இரசனையால் தூண்டப்பெற்று தானும் அதைப் போலக் குரல் எழுப்பத் தொடங்கினான். மொழியும் அவனுக்கு துணைவர அவனது வாயிலிருந்து பாடலடிகள் பிறக்கத் தொடங்கின. அவையே பிற்காலத்தில் நாட்டார் பாடல்கள் எனும் முத்திரைகளாக வளர்ந்தன.

இவ்வாறாக அன்று தொட்டு இன்றுவரை எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் அந்தக் கால சமூகத்தை மையக்கருப் பொருளாகக் கொண்டு அங்கு காணப்பட்ட ஏற்றத்தாழ்வு நிலைகளால் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு அவ்வாறான நிலைகள் இனியும் வருங்கால சமூகத்தில் தொடர்ந்து நிலைத்து நிற்கக் கூடாது என்பதற்காக அவற்றைப் பல்வேறு வடிவங்களில் சீரமைத்து எமக்கு தந்துள்ளார்கள். இந்த இலக்கியங்களைக் கொண்டு நம் சமூகத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லாது நேரிய பாதையில் நெறிப்படுத்த இந்த இலக்கியங்களை நல்வழிப்படுத்த முனைந்திடுவோம்.

ம.அ.மரியஜெனிற்றா, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15/07/2012



மருத்துவர் நி.தர்ஷனோதயன்,
வைத்திய அதிகாரி,
மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை.

# நினைத்ததை சாதிக்க...

ஒரு காரியத்தைத் தொடங்கும்போது நமக்கு அதில் ஈடுபாடு இருந்தால் அதை முடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் அந்தக் காரியத்தை முடித்துவிட்டுத்தான் மறுகாரியம் என்ற முனைப்புத் தோன்றும்.



வரலாற்றின் எந்தப் பக்கத்தில் வெற்றிக் கதை இருந்தாலும் அதை ஒருமுறைக்கு இருமுறை ஆழ்ந்து படித்துப் பாருங்கள். 'முடியும்' என்று முயன்றவர்களே முன்னேறியிருக்கிறார்கள். வெற்றி கண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் நடைபெற்ற வியட்நாம் போரையே எடுத்துக் கொள்வோம். அமெரிக்கர்கள் முழுமையான ஆயுத பலத்தோடு வியட்நாம் மக்களின் சுதந்திர உணர்ச்சியை அடக்கி ஒடுக்க முயன்றார்கள். வியட்நாம் மக்களிடம் ஆயுத பலம் இருக்கவில்லை. ஆனால், மன உறுதி இருந்தது. அமெரிக்கர்களின் ஏகாதிபத்திய உணர்வை எதிர்த்துப் போராடி முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

பயங்கரமான ஆயுதங்களை எல்லாம் அமெரிக்க இராணுவத்தினர் பயன்படுத்தினார்கள். ஆனால் வியட்நாமியர்களை அவர்களால் அடிபணிய வைக்க முடியவில்லை. பல ஆண்டுகள் போர் நடைபெற்றது. முடிவில் அமெரிக்கர்கள் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு வியட்நாமிலிருந்து வெளியேறினர்.

முடியும் என்கிற சொல்லுக்கு மகத்தான மந்திரசக்தி உண்டு. ஒரு அடிப்படையில் மனோதத்துவ உண்மையை நாம் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சில விடயங்கள் பார்க்கும்போது கஷ்டமாகத் தோன்றும். எந்தக் கடினமான காரியத்தையும் சுலபமாக முடிக்க ஒரு வழி உள்ளது. அதை முதலில் நீங்கள் நம்ப வேண்டும்.

நாம் சிறு வயதில் கேள்விப்பட்ட இந்தக் கதையை இப்போது மறுபடியும் நினைவுபடுத்திப் பார்ப்போம். பத்துக் குச்சிகளை ஒன்றாகக் கட்டி அதை முறிக்க முயன்றபோது முறிக்க முடியவில்லை. ஆனால் கட்டைப் பிரித்து ஒவ்வொரு குச்சியாக முறிக்க முயன்றபோது அது முடிந்தது.

ஒரு நிலையில் முடியாது என்ற காரியம் மற்றொரு நிலையில் முடியும் என்றாகிவிட்டது. முதலில் முடியாது என்பது ஒரு தோற்றம். அடுத்து முடியும் என்பது ஒரு வழி. ஆகவே நாம் மேற்கொள்ளும் எந்த விடயத்துக்கும் இரண்டு நிலைகள் உள்ளன. முதல் நிலை முடியாது என்பது. அது வெறும் தோற்றம் தான் என்பதையும் புரிந்துகொண்டால் அடுத்த நிலையை அடைந்து விடுவோம். முதல் நிலையிலேயே மலைத்து விட்டால் அடுத்த நிலைக்குப் போகும் எண்ணமே நமக்குத் தோன்றாது. வெறும் தோற்றங்களைக் கண்டு மலைப்பது வாழ்க்கையல்ல. வழியைக் கண்டுபிடித்து முன்னேறுவதுதான் வாழ்க்கை. கூட்டாக இருக்கும் குச்சிகளை தனித் தனியாக பிரித்து முறிக்கலாம் என்ற எண்ணம் ஒருவனுக்கு எப்போது ஏற்படுகிறது. எப்படியும் முடியும் என்று எண்ணும் போதுதான் ஏற்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே ஒடிக்க முடியாது என்னும் முடிவுக்கு நாம் வந்துவிட்டால் அதற்கு அடுத்த கட்டத்தைப் பற்றியே சிந்திக்கமாட்டோம்.

எனவேதான் நெப்போலியன் என்ற மாவீரன் "முடியாது என்கிற சொல் முட்டாள்களின் அகராதியில்தான் இருக்கிறது" என்றான். முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்ப முயற்சிக்கு முன்னுரை; எழுச்சிக்கு வித்து; செயலுக்கு ஆதாரம்; வெற்றிக்கு ஊன்றுகோல். நம்புகின்றபோது நம்பிக்கை. நாம் அதன்மீது ஆசைப்படும்போது அது கிடைப்பதில்லை. ஆனால் அதன்மீது நம்பிக்கை வைக்கும்போது அது கிடைக்கத் தொடங்குகிறது. அதாவது அடைந்தே தீருவது என்று நீங்கள் தீர்மானம் செய்து கொள்ளும்போது உங்களால் சும்மா இருக்க முடியாது. அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறீர்கள். எல்லா முயற்சிகளுமே வெற்றி கொடுத்து விடுவதில்லை. சில முயற்சிகள் வெற்றியளிக்காமலும் போகலாம். ஆனால் உங்களுடைய சங்கல்பம் உறுதியானதாக இருக்கும்போது நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறீர்கள்.

வெற்றிகிட்டும்வரை முயற்சியைத் தொடருகிறீர்கள்.

நம்பிக்கையின் இரகசியமே இதுதான். அதாவது நம்பிக்கையோடு தொடரும்போது சந்தர்ப்பங்கள் தாமாகவே உருவாகின்றன. அழுத்தமான நம்பிக்கையில்லாமல் வாழ்க்கையில் எவரும் முன்னேறுவதில்லை. நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் அது உடனே வெற்றிகரமாக நடந்து முடிந்தவிடும் என்று சொல்ல முடியாது. சிரமங்கள் தோன்றும். பிரச்சினைகள் எதிரே வரும். இதையெல்லாம் கண்டு ஒருவர் எப்போது சோர்வடைகிறான் என்றால் செய்யும் விடயத்தில் ஈடுபாடும் நம்பிக்கையும் இல்லாதபோதுதான்.

ஒரு காரியத்தைத் தொடங்கும்போது நமக்கு அதில் ஈடுபாடு இருந்தால் அதை முடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் அந்தக் காரியத்தை முடித்துவிட்டுத்தான் மறுகாரியம் என்ற முனைப்புத் தோன்றும்.

இதற்கு மனோதத்துவத்தில் ஒரு சொற்றொடர் உண்டு. "ஆக்கபூர்வமான அணுகுமுறை" என்று அதற்குப் பெயர். இதைச் சில மனோதத்துவ அறிஞர்கள் இன்னும் அழுத்தமான வார்த்தைகளால் உறுதியான 'ஆக்கபூர்வ அணுகுமுறை' என்று அழைக்கிறார்கள்.

அதாவது எவ்வளவு கடினமான விடயத்தையும் இந்த அணுகுமுறையை மேற்கொள்கிறவர்கள் முடியாது என்றுவிட்டு விடுவதில்லை. முயற்சி செய்து எப்படியும் முடிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இவர்கள்தாம் தமது எந்தக் காரியத்தையும் நடத்தி முடிக்கிற ஆர்வம் படைகிறார்கள். * * *




"..யாரோ ஒருவன் சொன்னான் என்று சீதையை நடுக்காட்டில் விட்டு வரும்படி தன் தம்பியிடம் கூறி அனுப்பியபோது இராமனின் மென்போக்கு எங்கே போயிற்று?..."

-உரும்பிராய் ஞானாம்பிகை

## வடிவங்கள்தான் வேறுபடும்

ஒவ்வொரு பக்கத்துக்கும் மறுபக்கமுண்டு. உதாரணமாக எல்லோர் சொத்தையும் பொதுவுடைமையாக்கினால் சோஷலிசம், அதையொருவன் தனியுடைமையாக்கினால் முதலாளித்துவம். இராவணனுக்கும் தசரதனுக்கும் கூட, நூலிழையில்தான் வேறுபாடு. இராமன் முற்றிலும் மாறுபட்டவன், பண்பாடென்பது இங்கிருந்துதான் தோற்றம் பெறுகிறது. அன்பிருக்கும் இடத்தில்தான் பண்பாடு இருக்கும். அன்பிருக்கும் இடத்தில்தான் சந்தேகமுமிருக்கும். இராமனின் அழகுதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலம். அவன் இளகிய மனம் கொண்டு சூர்ப்பனகையைக் கூட மணம் முடித்திருந்தால் யுத்தமே ஏற்பட்டிருக்காது.

தவிர காந்தியடிகளுக்கு மெல்லுணர்வு மட்டுமே இருந்திருந்தால், யேசுநாதருக்குக் கூட அவ்வாறே இருந்திருந்தால் உலகின் விதியே மாறியிருக்கும். போராட்டம் என்பது எல்லோருக்குள்ளும் இருக்கும். வடிவங்கள்தான் வேறுபடும்.

இ.ஜெ.பாலன், கொக்குவில்.

## இராமனும் மனிதனே

கணமேனும் கணவனைப் பிரிய விரும்பாத பத்தினி சீதை. அதனாலேயே இராமனுடன் வனவாசம் சென்றாள். அங்கு இராவணனால் கடத்தப்பட்டாள். மீண்ட பின் தன் தூய்மையை நிரூபிக்கத் தீக்குளித்தாள். பதினான்கு வருட வனவாசத்தின் பின் அயோத்தியில் தான் கர்ப்பவதியான பின்பும் கூட அவள் இராமனைப் பிரிந்து தாய் வீடு செல்ல விரும்பவில்லை.

அவ்வாறான பெண் ஒரு தெய்வத்தை எவனோ ஒருவன் சொல் அறிந்து இராஜ நீதி என்ற பெயரில் கானகம் அனுப்பியது முறையா? வேற்றான் வீட்டில் சில மாதங்கள் தங்கியிருந்த ஒரு மாதுவை ஒரு வேந்தன் எப்படி வைத்திருக்க முடியும் என வினவுவது மாதர் குலத்துக்கே இழுக்காகும். மாற்றான் இடத்தில் இருந்தும் மனதளவிலும் மாசடையா மகவை வைத்திருப்பது வேந்தனுக்கு மட்டுமல்ல அவன் மக்களுக்கும் சிறப்பாகும்.

இராமனின் செயலான சீதையின் அக்கினிப் பரீட்சை சீதையை உதாசீனப்படுத்துகிறது. சீதையின் பக்கம் போதியளவு ஆதாரங்கள் இருந்தும் முறையான விசாரணை இன்றி அவளைத் தண்டித்தமை இராஜ நீதிக்குப் புறம்பானதே. கர்ப்பிணி ஒருத்தியை நடுக்காட்டில்விட்டதுடன் இராமனின் மென்போக்கு கரைந்துவிட்டது. சீதைக்கு ஆரண்ய வாசம் அளித்தான் இராஜா இராமன். பின்னர் தனிமையில் அழுதானாம் சீதா இராமன். இதிலிருந்து இராமனும் சாதாரண மனிதனைப்போல் குழம்பிய உளப்போக்கை பெற்றிருந்தான் என்பது தெளிவாகிறது.

சூர்யா, பருத்தித்துறை.

## வாசகர்களே!

உரும்பிராய் ஞானாம்பிகையின் கருத்தை ஒட்டியும், வெட்டியும், கீறியும், கிழித்தும், சேர்ந்தும், தோள் கொடுத்தும் உங்கள் கருத்து எதுவானாலும்

'சூரியகாந்தி' 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 100 சொற்களுக்குள் அனுப்பி வையுங்கள்



தரமும் பண்பும் கண்டு பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராற்றல் கொண்ட நாடக நடிகன் கலைப்பரிதி ச.உருத்திரேஸ்வரன்



52

■வயாவிளான் தவமைந்தன்

ஈழத்தமிழரின் நாடக வரலாற்றில் நாடக அரங்கக் கல்லூரியின் பங்களிப்பானது வரலாற்றுச் சாதனைகள் கொண்டதாக இருப்பதை யாவரும் அறிவர். இந்தக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான நடிகர்கள் உலகம் முழுவதும் ஈழத்து நாடக மரபைத் தற்காலத்தில் பேணி வருகின்றனர். இங்கே உருவாக்கப்பட்ட சிறந்த நடிகராகவும் நாடக நெறியாளராகவும் நாற்பதுக்கும் அதிகமான நாடகங்களில் நடித்த பட்டறிவு கொண்ட முதிர்ந்த கலைஞராகவும் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப் பணியாற்றி வருபவர் நாடகச் செம்மல் ச.உருத்திரேஸ்வரன்.

மறைந்த சதாசிவம் - பொன்னம்மா தம்பதியரின் மகனாக 28.05.1947இல் அரியாலையில் இவர் பிறந்தார். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, யாழ்.மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்று குண்டகசாலை விவசாயக் கல்லூரியில் விவசாயத்துறை டிப்ளோமாவை நிறைவு செய்தார். 1972இல் அரச பணிக்கான நியமனம் பெற்று விவசாய முகாமையாளராக அநுராதபுரம், கோப்பாய், பதுளை போன்ற இடங்களிலும் கமநலசேவைத் திணைக்களத்தில் தலைமைப்பீடப் பெரும்பாக உத்தியோகத்தராகவும் பதில் உதவி ஆணையாளராகவும் பணியாற்றி 2009இல் ஓய்வு பெற்ற பின்னர் மீள் நியமனம் வழங்கப்பட்டு மீண்டும் இரண்டு ஆண்டுகள் சேவையாற்றியவர்.

யாழ்ப்பாணத்தின் கலைக் கிராமங்களுள் ஒன்றான அரியாலையே இவரது பிறந்த ஊர் என்பதால் குழந்தைப் பருவத்திலிருந்தே கலைச் சூழலில் வளர்ந்து வந்தார். 1919ஆம் ஆண்டிலிருந்து சுதேசிய திருநாள் என்னும் மாபெரும் கலை விழாவை ஆண்டு தோறும் இவ்வூர் மக்கள் நடத்தி வருகின்றனர். இவ்விழாவின் நிறைவு நாள் நிகழ்வாகப் பிரமாண்டமான நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தமையால் இவ்வூர்ச் சிறுவர்கள் தமது வீடுகளில் மேடை போட்டுத் திரை கட்டி நாடகம் நடிப்பதையே தமது விளையாட்டாகப் பின்பற்றி வந்தனர்.

இவ்வாறு சிறு வயதிலிருந்தே நாடகத் துறையில் ஈடுபடத் தொடங்கிய உருத்திரேஸ்வரன் தனது பதின்னான்காவது வயதில் "யார் கதாநாயகி" என்னும் நகைச்சுவை நாடகப் போட்டியில் மரிக்கொழுந்து என்னும் தாய் வேடமிட்டு நடித்தார். முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட இந்த நாடகத்தைத் தொடர்ந்து 'மலிவான மாப்பிள்ளை', 'நாகவல்லி' போன்ற நாடகங்களிலும் நடித்துப் பெயர் பெற்று வந்தார்.

1968இல் அரியாலை சுதேசிய விழாவில் மேடையேற்றப்பட்ட இராஜராஜ சோழன் என்னும் நாடகத்தில் கதாநாயகனாக நடித்துப் பெரும் புகழைத் தனதாக்கிக் கொண்ட இவர் எல்லாளன், இலங்கேஸ்வரன் போன்ற ஆற்றுகைகளிலும் சிறப்புற நடித்து நாடகத் துறையில் ஆழக் கால் பதித்துக் கொண்டார்.

குழந்தை ம.சண்முகலிங்கத்தால் 1978இல் தொடங்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியால் நடத்தப்பட்ட நாடகப் பயிலரங்குகளில் இணைந்து கொண்ட இவர் நவீன நாடக அரங்கிற்குரிய அதி சிறந்த நடிகனாகத் தன்னை வளப்படுத்திக் கொண்டார். எடுப்பான தோற்றமும் கணீரென்ற குரல் வளமும் நடிப்புத்திறனும் இசைபாடும் வல்லமையும் கொண்டமைந்த இவர் நாடக அரங்கக் கல்லூரியால் தயாரிக்கப்பட்ட புதியதொரு வீடு, சங்காரம், அவள் ஏன் கலங்குகிறாள், அபசுரம், சக்தி பிறக்குது, தியாகத் திருமணம், குருசேத்திரோபதேசம், பாரதியின் பாஞ்சாலி சபதம், தெய்வப் பாவை, நாவலர், கூடி விளையாடு பாப்பா போன்ற படைப்புக்களில் முக்கிய பாத்திரங்களில் நடித்தவர்.

இதை விட இராட்சசன், ஒதெல்லோ, கர்ணன், உயிரோவியம், சகுந்தலை, மனோன்மணி, பாதுகை, தலைநகர், சேரன் செல்வி போன்ற கிராமிய, சரித்திர நாடகங்களிலும் வி.எம். குகராஜனின் 'கதை இது தான்' என்னும் ஒளிப்படத்திலும் நடித்தவர்.

நாடக அரங்கக் கல்லூரியால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட நாடகப் பயிலரங்குகளில் வளவாளராகக் கலந்து சிறப்பித்த இவர் கடந்த ஆண்டு கனடாவிலும் நாடகப் பயிலரங்குகளை நடத்தியவர். புலோலி கிழக்கு, வடமராட்சியில் தற்போது வசித்து வரும் இவர் புழுவாய் மரமாகி, தியாகத்திருமணம், தெய்வப்பாவை, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள் போன்ற நவீன நாடகங்களை நெறியாள்கை செய்திருக்கும். நாடக நெறியாளராகவும் மும்மொழித் திறன்கொண்ட சத்திய மொழி பெயர்ப்பாளராகவும் விளங்கி வருகின்றார்.

## சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

"கிராமங்கள் தோறும் நிகழ்த்தப்பட்டு வந்த எமது நாடகக் கலையானது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்றுக்கொள்ளக் கூடிய கலைவடிவமாகத் தரம் உயர்ந்துள்ளமையும் எண்ணற்ற மாணவர்கள் இதனைக் கற்று வருகின்றமையும் எல்லையற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு ஓய்வின்றி உழைத்துப் பெரும் வெற்றி கண்டவர் எனது குருநாதரும் ஈழத்து நவீன நாடகக் கலையின் தந்தையுமான குழந்தை. ம.சண்முகலிங்கம்.

"அரங்கக் கட்டமைப்பு பற்றிய தெளிவற்ற நிலையில் கிராமங்களில் நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்த ஏராளமான நாடக ஆர்வலர்களை அரங்க நுட்பங்கள் தெரிந்த நாடக மாந்தராக உருவாக்கிய பெருமை நாடக அரங்கக் கல்லூரியையே சாரும். இக்கல்லூரியால் உருவாக்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன் என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். குழந்தை ம.சண்முகலிங்கம், அ.தாசீசியஸ், சி.மௌனகுரு, எஸ்.ரி.அரசு, ஏ.ரி.பொன்னுத்துரை, பிரான்சிஸ் ஜெனம், வி.எம்.குகராஜா போன்றோர் எனது நாடக உலகின் பேராசான்கள் என்பதிலும் ஆனந்தமடைகிறேன். சிறு வயதில் என்னை ஊக்கப்படுத்திய ஐ.எஸ்.சண்முகநாதன், ஈ.கே.குமாரையா போன்றோரும் மறக்க முடியாதவர்கள்.

"நாடகத் துறையில் பெருவளர்ச்சி கண்டு வரும் நாம், ஈழத்தமிழருக்கு உரித்தான நாடக வடிவத்தை உருவாக்குவதற்கு எதிர்காலத்தில் முயற்சிக்க வேண்டும். தொடக்க காலத்தில் தென்னிந்தியத் தாக்கம் கொண்டதாகவே நாடகங்கள் இங்கே மேடையேற்றப்பட்டன. ஆனால் தற்போது அவ்வாறு நடைபெறுவதில்லை. நாடக அரங்கக் கல்லூரியின் அடித்தளத்தில் உருவான கலைஞர்கள் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் தனித்துவமான உணர்வுபூர்வமான நாடகங்களை ஆற்றுகைப்படுத்தி வருகின்றமை போற்றுதற்குரியது" அரங்கு பற்றிய தன் மனப் பதிவை இவர் வெளிப்படுத்துகிறார்.

# ஆடி அமாவாசை விரதத்தில் காற்றோட்டிக்காய் பாவிப்பது உடல் நலத்துக்கு உகந்தது

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்


**காற்றோட்டி**
**வேறுபெயர்:- ஆதண்டை, ஆதொண்டை, காத்தோட்டி.**
**தாவரவியற்பெயர்**-Capparis zeylanica
**(கப்பாரிஸ் சைலானிக்கா)**
குடும்பம்- Capparidaceae **(கப்பாரிடேசியே)**
**ஆங்கிலப் பெயர்:**- Thorny Coper

ஆடி மாதம் காற்று மிகுந்த காலமாகும். "ஆடிக் காற்றுக்கு அம்மியும் நகரும்" என்ற பழமொழி ஆடிக்காற்றின் வேகத்தை எடுத்துக் கூறுகிறது. இவ்விதம் காற்று மிகுந்த காலத்தில் காய்ப்பதால் அதாவது ஆடிக் காற்று வீசும் காலத்தையொட்டிக் காய்ப்பதால் காற்றோட்டிக்காய் [காத்தோட்டிக்காய்] என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

காற்றோட்டிக்காயானது உணவாகப் பயன்படுத்தப்படும்போது அது உணவுச் சமிபாட்டைச் சீராக்கி குடலிலுண்டாகும் வாய்வுத் தொல்லையை [காற்றை] அகற்றுவதால் [ஓட்டுவதால்] இதனைக் காற்றோட்டிக்காய் என்றும் மருத்துவத்தில் அழைக்கப்படுகின்றது.

காற்றோட்டியானது கொடிவகுப்புக்குரியது. புதர்கள், பற்றைக் காடுகள், வரள் நிலங்களில் தானாக வளர்ந்து பிற மரங்களில் படர்ந்து காணப்படும். கூட்டிலைகள். மேற்பகுதி கரும் பச்சை நிறம். தண்டில் முள்கள் காணப்படும். ஆனி மாதத்தில் பூக்கும். ஆடி மாதத்தில் காய்களுண்டாகும். நீண்டு உருண்டையான காய்கள், பச்சை நிறம். மிகவும் கசப்புச் சுவையுடையது. பழம் சிவப்பு நிறம்.

இதன் வேர், இலை, காய் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. காற்றோட்டிக்காய் இறந்துபோன முன்னோர்கள் அதாவது பிதிர்களுக்கு மிகவும் பிரியமான ஒன்று என்று கூறி ஆடி அமாவாசையன்று உணவில் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் இந்துக்களிடையே வெகுகாலமாகக் காணப்படுகிறது. காற்றோட்டிக்காய்ப் பொரியல் இல்லாமல் ஆடி அமாவாசை விரதம் இல்லை என்றே கூறலாம். அந்தளவுக்கு அது அன்றைய தினம் உணவில் முக்கியத்துவம் பெறுகிறது. காற்றோட்டிக் காயை சிறு சீவலாக [வட்டமாக] வெட்டிப் பொரித்து உணவுடன் சேர்த்துக் கொள்வதால் வயிற்றுப் பொருமல், அஜீரணம், மூலவாயு, பீனிசம், கபநோய்கள் என்பன நீங்கும். ஆடி மாதம் தட்சிணாயனகாலத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. சூரியன் தெற்கு நோக்கிச் செல்வதும் மழைக்காலம் ஆரம்பிப்பதையும் இது குறிக்கிறது. தமிழ் மருத்துவத்தில் ஆடி மாதத்தில் வாதம் [வாயு], கபம் ஆகியன இயல்பாகவே உடலில் அதிகரிக்கின்றன. அதன் விளைவாக அவை சம்பந்தமான வாய்வு, வயிற்றுப்பொருமல், பீனிசம் போன்ற நோய்கள் ஒருவருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்விதம் அந்த நோய்கள் ஏற்படாமல் தடுக்கும் ஒரு முறையாக ஆடி அமாவாசையன்று காற்றோட்டிக்காய் பாவிப்பதைக் கருத முடியும். ஆனால் அன்றைய தினம் மட்டும் காற்றோட்டிக்காயைப் பாவிப்பதால் மேற்படி நோய்களை முழுமையாகத் தவிர்க்க முடியாது. தொடர்ந்தும் அடிக்கடி உணவில் காற்றோட்டிக்காயைச் சேர்த்து வரல் வேண்டும். காற்றோட்டிக்காயை சிறு சீவலாக வெட்டி வெயிலில் உலர்த்தி காற்றோட்டிக்காய் வற்றலாகவும் உணவில் சேர்த்து வரலாம்



**மண்டைப்பீனிசத்துக்கு**

காற்றோட்டி வேர்ப்பட்டையைத் துவைத்து நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சித் தலைக்கு வைத்துவர மண்டைப் பீனிசம், மூக்கடைப்பு, தலைவலி, சளி என்பன மாறும்.

**செரியாமைக்கு**

இதன் இலை அல்லது வேர்ப்பட்டையைக் குடிநீர் செய்து 1–2 மேசைக்கரண்டி அளவில் காலை, மாலை பருகிவர வயிற்று மந்தம், செரியாமை, வாந்தி என்பன குணமாகும்.



**Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

15.07.2012 முதல் 21.07.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- எண்ணங்கள் நிறைவேறும். உடல்நிலையில்சோர்வுகள் ஏற்பட்டு விலகும். புதிய கடன்கள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிறரின் கருத்துக்களுக்கு செவி சாய்ப்பதால், உங்களின் மேல் பிரியங்கள் அதிகரிக்கும். பெற்றோரால் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் வகையில் உதவி கிடைக்கும். புதிய வேலை வாய்ப்பு முயற்சிகள் வெற்றியளிக்கும். தொழில் நிலையில் கடந்த காலத்தில் நிலவிய தடை, தாமதங்கள் விலகி வளர்ச்சி காண்பீர்கள். பெண்களுக்கு, உயர்கல்வி முயற்சிகள் வெற்றி பெறும். அலுவலகத்தில் பணி புரிபவர்களுக்கு சம்பள உயர்வு, விரும்பிய மாற்றம் ஏற்படும்.

**இடபம்**- ஆரோக்கியம் அதிகரிக்கும். பணம் சம்பந்தப்பட்ட வகையில், சில மாற்று ஏற்பாடுகளையும் செய்து கொள்வீர்கள். பெற்றோருக்காக பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உடன்பிறப்பு விவகாரங்களில் சற்று முன்னெச்சரிக்கையான செயற்பாடு நல்லது. பெண்களுக்கு, குடும்பத்தில் பொறுப்பு அதிகரிக்கும். எதிர்பாராத உதவிகள், உறவினர்களின் வருகை என்பவற்றால் எதிர்பாராத மகிழ்ச்சி ஏற்படும். உற்றார்-உறவினர்களால் மனஸ்தாபங்கள் ஏற்படும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். முக்கியமான பணிகளை சாமர்த்தியமாகச் செய்து முடித்துவிடுவீர்கள்.

**மிதுனம்** - மன மகிழ்ச்சியான மாற்றங்கள் அதிகம் இருக்கும். சிந்தனைகள் தீவிரமாகும். அவ்வப்போது அவசரம், பதற்றம் தவிர்க்க முடியாததாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் மற்றும் கடன் வாங்கும் விவகாரங்களில் கவனம் தேவை. நிர்ணயித்த வரவுகள் வரும். கொடுக்கல், வாங்கல் விவகாரங்கள் அதிக நன்மை தராது. குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் இருக்கும். வீண்செலவுகள் ஏற்படும். தவிர்க்க முடியாமல் சில காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஊக்கம், உபயோகம், கலை ஆர்வம் இருக்கும். பணவரவு ஏற்படும், காரியம் வெற்றியாவதற்கும் உகந்த நாள்கள்.

**கடகம்**- எதிர்பார்த்த வரவுகள் வரும். எதிர்பாராத செலவினங்கள் ஏற்படும். புதிய கடன் முயற்சிகளில் தெளிவான வரையறை அவசியம். குடும்பத்தில், சில வகையில் மனக் கவலைகளும், சச்சரவுகளும் இருக்கத்தான் செய்யும். புதிய வேலை வாய்ப்பு முயற்சிகளில், தேவைப்பட்ட தகுதிகளை வளர்த்துக் கொள்ள தயக்கம் காட்டாதீர்கள். தொழில் நிலையில் தேக்க நிலை மாறி, வளர்ச்சியின் காலக்கட்டத்தில் பயணிப்பீர்கள். பணவரவு சந்தோஷம் தரும். எந்தவொரு சூழ்நிலைகளையும் சாதகமாக்கிக் கொள்வீர்கள். மனைவி மற்றும் ஏனைய பெண்களால் ஆதாயம் உண்டு.

**சிங்கம்** - எதிர்கால சிந்தனை அதிகரிக்கும். தாமதப்பட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கோப தாபங்கள் இருந்தபோதும் சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. தொழில் நிலையில் புதிய தயாரிப்புகளை வெளியிட தகுந்த காலமாகும். நிர்வாக விவகாரங்களில் நேரடித் தலையீடு அவசியம். வியாபாரத்தில் கொள்முதல் விவகாரங்களில் கூடுதல் கவனம் தேவைப்படும். அமைதியாகச் சில செயல்களைச் செய்து முடிப்பீர்கள். நினைத்த பொருளை வாங்குவீர்கள். தொழிலில் புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**கன்னி**- நீங்கள் சம்பந்தமில்லாமல், சில விவகாரங்களால் சிரமப்பட நேரிடலாம். இருப்பினும் நிதானமான செயற்பாடு தொந்தரவுகளைத் தவிர்க்கும். நிதி நிர்வாகத்தில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்துவீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பும், உற்பத்தியும் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு மனநிறைவான சூழ்நிலை ஏற்படும். மாற்றங்கள் பற்றிய சிந்தனை அதிகமாகும். சில சந்திப்புகளை பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். அலைச்சல் அதிகமாகும். சில காரியங்களை முடிக்க முடியாமல் விரக்தி ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். பணவரவு ஏற்படும். கடினம் என்று எண்ணிய காரியம் எளிதாகும்.

**துலாம்**- முக்கியஸ்தர்கள் மற்றும் பழக்கப்பட்டவர்களின் தொடர்புகள் தகுந்த நேரத்துக்கு உதவும். எடுத்துக் கொண்ட பணிகளில் உங்களின் அணுகுமுறை உங்களைச் சுற்றியுள்ளவர்களால் பாராட்டப்படும். தொழில் நிலையில் சந்தையில் நிலவும் மாற்றங்கள் அதிகம் யோசிக்க வைத்தபோதும் பாதிப்பிருக்காது. உற்பத்திச் செலவுகளில் கவனம் தேவை. அலுவலகப் பணியாளர்களுக்கு உயர் அதிகாரிகளிடம் நற்பெயரைத் தக்கவைத்துக் கொள்வீர்கள். பல விடயங்களையும் மனதில்போட்டு குழப்பிக்கொள்வீர்கள். சில விடயங்களைச் செய்து கொள்ள முடியாமல் மனம் அலைபாயும்.

**விருச்சிகம்**-உங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் கூடிவரும். ஆரோக்கியம் கூடியபோதும் மனநிலையில் தான் அடிக்கடி மாற்றங்கள் நிகழும். வெற்றியோ, தோல்வியோ எதிலும் சமநிலை கொண்ட செயற்பாடு நல்லது. தொழில் நிலையில் சில மாற்றங்களை மேற்கொள்வீர்கள். சந்தைப்படுத்துதலில் தெளிவோடு செயற்படுங்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த விற்பனை இருக்கும். எந்தவொரு காரியத்திலும் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை அலைச்சல் இருக்கும். புதிய முயற்சி, படிப்பு, உத்தியோகம் போன்றவற்றில் முன்னேற்றமான தகவல்களைப் பெறுவீர்கள்.

**தனுசு** - இழுபறியாக இருந்த காரியங்களை விரைவாக முடிக்க முயற்சிகள் மேற்கொள்வீர்கள். பண வரவுகள் தாமதப்பட்ட போதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிரமமிருக்காது. உடன்பிறப்பின் உதவிகளை யோசித்து ஏற்றுக்கொள்ளுங்கள். வெளிவட்டார பழக்க வழக்கங்களால் வீண் செலவுகளே. தொழில் மற்றும் வியாபாரத்தில் தங்களின் விரிவாக்க நடவடிக்கைகளை மறு பரிசீலனை செய்து கொள்ளுதல் நல்லது. பற்றாக்குறையும் நிலவும். தேவையற்ற பணி ஒன்றை எடுத்துக்கொண்டு அதன் வகையில் சிரமப்பட நேரலாம்.

**மகரம்**- எதிர்பார்த்த வரவுகள் சில காரணமற்ற செலவுகளும், அவசியமான செலவுகளும், உங்களை கவலை கொள்ள செய்யும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைகள் வழியில் செலவுகள் கூடுதலான போதும், சிரமம் இருக்காது. புதிய பணிகளுக்காகவோ அல்லது பணிமாற்றங்களுக்காகவோ முயற்சி மேற்கொண்டுள்ளவர்களுக்கு மிகுந்த பயனுள்ள வாரமாக இருக்கும். தொழில் நிலையில் வளர்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். சில பணிகளை முடித்தே தீர வேண்டும் என்ற சிந்தனைகளோடு செயற்படுவீர்கள், செய்தும் முடிப்பீர்கள்.

**கும்பம்** - நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று என்று இருந்தபோதும் பாதிப்பு அதிகம் இல்லாமல் கொண்டு செல்வீர்கள். வரவுகள் வரும். குடும்பத்தை அமைதியான வழியில் செயற்படுத்துவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் சாதகமான சூழ்நிலை உதவும். தொழில் நிலையில் சில மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்வீர்கள். அலுவலகப் பணியாளர்களுக்கு பணியில் கூடுதல் கவனம் சிறப்புக்களை ஏற்படுத்தும். உடல்நிலையில் அசதி ஏற்படும். சில சந்திப்புக்களை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வீர்கள். உருப்படியாகச் சில பணிகளைச் செய்து கொள்ள முடியும்.

**மீனம்**-உங்களைச் சுற்றியுள்ள எல்லா விவகாரங்களுக்கும், அதிக கவனத்தோடும், சிரமம் இல்லாமலும் தீர்வு காண முயற்சிப்பீர்கள். எடுத்துக்கொண்ட அல்லது ஈடுபடும் காரியங்களில் தெளிவான மனநிலையோடு செயற்பட வைக்கும், குடும்பத்தில் சில வகையில் குழப்பங்கள், பிரச்சினைகள் நிலவியபோதும் அமைதியான [illegible] பாதிப்பு இருக்காது. குழந்தைகள் வகையில் செலவுகளைத் தவிர்க்க முடியாததாக அமையும். [illegible] உதவிகள் தாமதப்பட்ட போதும் கிடைக்கப்பெறுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும், பணவரவு சந்தோஷம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்பாட்டுக்கு வந்தால் பாதுகாப்புக் கிடைக்கும்

தென்னவன்

தற்காலிக கருத்தடைக்கென பல்வேறு மருந்துகள் நாட்டில் பாவனையிலுள்ளன. ஆனால் ஆரம்ப காலத்தில் தற்காலிக கருத்தடைக்கான ஆணுறை மற்றும் தற்பாதுகாப்பு மாத்திரைகள் போன்றவை மக்கள் மத்தியில் பாவனைக்கு விடப்பட்டன.

ஆணுறைகளின் பயன்பாடு தற்காலிக கர்ப்பத்தடை மட்டுமல்ல, பாலியல் சம்பந்தமான எந்தவொரு நோயும் வரக்கூடாது என்பதற்காகவும் தான் தற்பாதுகாப்பு மாத்திரைகள் எதிர்பாராமல் வன்புணர்வுகள் இடம்பெறும் வேளைகளில் 72 மணி நேரத்திற்குள் பயன்படுத்தி கர்ப்பம் வராமல் தடுப்பதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தன.

தவறான பாலியல் நடவடிக்கையால் எச். ஐ. வி. நோய் ஏற்படுமாயின், அதனால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்ல வாய்ப்புண்டு. இந்த நோயால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதற்கு அரசு பல மில்லியன் ரூபா பணத்தைச் செலவழித்தும், பயன்காண முடியாத நிலைமைதான் உள்ளது. கணவன் - மனைவி உறவாக இருந்தாலும் வேண்டத்தகாத கர்ப்பத்தைத் தவிர்க்கவும் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படும் பெண்களுக்கு கர்ப்பம் ஏற்படாமல் தடுப்பதற்கும் தற்பாதுகாப்பு மாத்திரைகள் பெரிதும் கைகொடுக்கக் கூடியவை.

பாலியல் சம்பந்தமான நோய்களுக்கும் அநாவசிய கருத்தரித்தலைத் தடுப்பதற்குமாக வெளிநாட்டவரிடையே விழிப்புணர்வு உள்ளது. இலகுவானதாகவும் தற்காலிகமானதாக இருந்தாலும், இந்த நடைமுறை வெளிநாடுகளில் உள்ள மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இலங்கையின் தலை நகரமான கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் உள்ள உல்லாச விடுதிகளின் வாசல்களில் இதற்கென கருமபீடங்கள் அமைக்கப்பட்டு, பணம் செலுத்தி பட்டனை அழுத்தினால் தேவையான ஆணுறை மற்றும் தற்பாதுகாப்பு மாத்திரைகள் கிடைக்கின்றன. இந்த ஆணுறையும், மாத்திரைகளும் நாட்டில் உள்ள அனைத்து குடும்ப நல சேவையாளர்களிடமும் பெறக்கூடிய வாய்ப்புகள் அரசால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் எம்மவர்களில் பலர் குடும்பநல சேவையாளரிடம் சென்று இவற்றை வாங்குவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். இவற்றை வாங்குவதால் தம்மை இனங்கண்டு விடுவார்களே என்றும், இதனால் தமக்கு பெரும் தலைகுனிவு ஏற்படும் என்ற அச்சமும் இதற்குக் காரணமாகின்றது. இவற்றைப் பாவிப்பது எமது உடல் நலத்துக்குத்தான் என்ற விழிப்புணர்வு அனைவரினதும் மத்தியில் ஏற்பட வேண்டும்.

கருக்கலைப்பு எமது நாட்டில் இன்னமும் சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்படாத நிலையில், தவறான உடல் உறவுகளால் ஏற்படும் கருக்கலைப்புகளால் பல பெண்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுவது நாம் அனைவரும் அறிந்த விடயம்.

சில நாடுகளில் குழந்தை பெறுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எமது நாட்டில் அவ்வாறான கட்டுப்பாடுகள் இல்லாத போதிலும், போதிய இடைவெளியில் குழந்தைகள் பெறுவதற்கு தற்காலிக கருத்தடை முறைகளைப் பெண்கள் பலர் மேற்கொண்டு வருகின்றனர்.

பிள்ளைகளிடையேயான இடைவெளியை அதிகரிக்க, ஆணுறை பாவித்தல் தற்காப்பு மாத்திரை பாவித்தல் இருபாலாருக்கும் நன்மை பயக்கக்கூடியவை.

இவற்றைப் பலர் தனியார் மருந்தகங்களில் பணம் செலுத்தி வாங்குகின்றனர். இவற்றின் பாவனையை அதிகரிக்க அரச வைத்தியசாலைகளில் இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஏனெனில் வைத்தியசாலைகளுக்கு பல்வேறு தரப்பட்ட நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் மருந்து பெறுவதற்காகச் செல்கின்றனர். இதனால் ஆணுறை மற்றும் தற்காப்பு மாத்திரைகள் வாங்குவதை இனங்காண்பது குறைவாகவே இருக்கும்.

இவை மட்டுப்படுத்தப்படாமல் திறந்த அளவில் கொடுக்கப்படல் வேண்டும். இதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் ரிக்கெற் பெற்று வைத்தியரிடம் செல்லாமல், நேரடியாக வெளிநோயாளர் மருந்தகத்தில் இவற்றைப் பெறக்கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். அவ்வாறான வசதிகள் இருப்பின் ஆண்களும், பெண்களும் தாமாகவே சென்று, தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுச் செல்ல முடியும்.

இவற்றின் பாவனை ஊக்கப்படுத்தப்பட்டால், கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை, தற்காலிக கர்ப்பத்தடை முறைகள், ஊசி மருந்து ஏற்றுதல் போன்ற பிரச்சினைகள் பெண்களுக்கு ஏற்படமாட்டா. அது மட்டுமன்றி வேண்டத்தகாத நோய்களுக்கும் ஆளாக வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்காது.

# இரக்கமில்லாமல் இயற்கையும் வஞ்சித்தது

16

## இறுதி நாள்களும் எனது பயணமும்

ஆனதி

எதிரியோ நண்பனோ ஒருவன் இன்னொருவனின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் என்பது காணாமல் போய் கனகாலமாகிவிட்டதாய் நான் என் மனசுக்குள்ளேயே வெந்ததெல்லாம் என்னளவில் என்னை எரித்துக் கொண்டிருந்ததைப் போலவே ஏனைய பலரும் தமது எண்ணங்களின் வலிமையற்ற, கையாலாகாத உணர்வுகளால் காயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எதிரிப் படையினன் என்றாலும் அந்தப் படையினனுக்குள் இருந்த ஈரமான இதயம் எங்கள் மீது தனக்கிருந்த இரக்கத்தை அல்லது புரிதலை வெளிப்படுத்தவைக்க முயற்சிக்கச் செய்தது. மொழி புரியாவிட்டாலும் முகபாவத்தால் தன்னை எங்களுக்கு விளங்கப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டிருந்தான் அந்த இளம்படையினன்.

மதிய உணவு கையிலிருந்தாலும் வயிற்றில் பசி இருப்பதாகத் தெரியவில்லை. நானும் மச்சாளும் மாமியும் இரண்டு பேருந்துகளுக்கிடையில் நின்றபடியே சாப்பிட்டோம். பேருந்தின் இருக்கைகளில் தவிர வேறெங்கேயும் இருக்க முடியாத நிலை. மழை பெய்யாமல் இருந்திருந்தாலாவது வீதியில் குந்திக்கொண்டாவது சாப்பிட்டிருக்கலாம்.

இயற்கைகூட இரக்கமில்லாமல் நடந்து கொள்கிறதா அல்லது இந்த சனவெக்கையை எப்படி தாங்கப் போகிறீர்கள்? அதனால்தான் கொஞ்சமாய் பொழிந்து விட்டுப்போகிறேன் என்று சேவை செய்கிறதா தெரியவில்லை. மொய்க்கவரும் இலையான்களை விரட்டியடித்துக் கொண்டு சாப்பிட்டோம். நீண்ட நாள்களின் பின் இரண்டு கறிகளோடு சாப்பிட்டிருக்கிறோம். கறிமிளகாயும் உருளைக்கிழங்கும். என்றாலும் சிறிதளவு உணவையே உட்கொள்ள முடிந்தது.

எல்லோரும் சாப்பிட்ட பின், “அண்ணா டேஸ்ட்? அக்கா டேஸ்ட்? சாப்பாடு நல்லம்?'' என்று அந்தப் படையினான பையன் இன்முகத்தோடு கேட்டுக்கொண்டிருந்தான். உணர்வுகளைப் பரிமாற, மொழி தடையாக இருந்தது. எனினும் ஒருசில சொற்களாலாவது எங்கள் மீதான தன் கரிசனையை வெளிப்படுத்த விரும்பினான் என்பது புரிந்தது. அவன் எங்களது பேருந்துக்குரியவன். அதனால் அந்தப் பேருந்தைவிட்டு அவன் தொலைவுக்குச் செல்லவேயில்லை. அந்தப் பேருந்தை சுற்றிச்சுற்றியே நின்றான்.

பொழுது சாய்ந்து மெல்ல மெல்ல இருள் கவ்வியது. ஒரு பகல்பொழுது முழுவதையும் பேருந்திலேயும் கீழேயுமாக நின்ற நிலையிலேயே சமாளித்திருக்கிறோம் என்று நினைத்தபோது ஆச்சரியமாக இருந்தது. அதன் பின் பேருந்துகள் பத்து, இருபது மீற்றர்கள் உருளுவதும் நிற்பதுமாக ஒரு ஒழுங்கற்ற ஓட்டத்தில் நகர்ந்து கொண்டிருந்தன. எங்களது அமைதியின்மையை மேலும் அலைக்கழித்துக் கொண்டிருந்தது அந்த நகர்வு.

அன்றைய இரவு நித்திரை எல்லோரையும் படாதபாடு படுத்திவிட்டது. இருக்கைகளில் இருந்தவர்கள் ஒருவாறு தூங்கி வழிந்து சமாளித்துக் கொண்டார்கள். நின்ற நிலையிலேயே வந்த எங்களைப் போன்றவர்களை நித்திரை மிகமோசமாகத் துன்பப்படுத்தியது. தூக்கம் என்னை விழுத்திவிடுமோ என்று அச்சமாக இருந்தது. கட்டுப்படுத்த முடியாதளவு உறக்கம் உடலுக்குள் நின்றுகொண்டு உறங்கும்படி கட்டாயப்படுத்தியது. பேருந்து ஓடாமல் நின்ற நேரங்களில் வாசலோடு நின்றவர்கள் கீழே இறங்கி அந்தப் பேருந்திலேயே முதுகையோ தோளையோ முண்டு கொடுத்துக் கொண்டு உறங்கினார்கள். பேருந்து அசையும் போது திடுக்கிட்டோடி வந்து ஏறிக்கொண்டார்கள். கும்பகர்ண நித்திரை செய்யவேண்டும்போல மனம் தவியாய் தவித்தது. உறக்கம் கூட மனிதர்களை இவ்வளவு தூரம் வதைக்கும் என்பதை அப்போதுதான் உணர்ந்துகொண்டேன்.

பெய்துவிட்டுப்போன மழை காரணமாக ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த பெண்ணொருவர் பேருந்தின் வாசலோடு நின்று கொண்டிருந்தார். தாங்க முடியாத வேதனையால் அவரது கண்களில் சோகமும் வலியும் வழிந்தன. அவள் மூச்சு விடுவது 'கொர் கொர்' என்று சத்தமாய் கேட்டது. அருகில் நின்று கதைகேட்டதோடு அவளது முதுகில் ஆதரவாய் தடவிவிட்டேன். என்னவோ எனக்கு அவளுக்கு நிறைய ஆறுதல் சொல்லவேண்டும்போல இருந்தது. பேருந்து அடுத்தகட்டம் நகரும்போது மீண்டும் ஏறிக்கொண்டோம்.

மீண்டும் பேருந்து நின்றபோது இறங்கி வந்து பேருந்தில் என் முதுகை சாய்த்துக் கொண்டு தூங்கினேன். என்னால் தூங்கவும் முடியவில்லை தூங்காமல் நிற்கவும் முடியவில்லை. கால்கள்கூடத் தானாக தளர்ந்து நிலத்தில் விழுந்துவிடும் போல உழைந்து தொலைத்தன. கண்கள் விழித்திருக்கின்றனவா? உறக்கத்தில்தான் மூடிக்கிடக்கின்றனவா? என்று இனம் பிரிக்கத் தெரியாமல் இடைக்கிடை மின்விளக்கு ஒளி கலந்துவிட்டுப்போகும் இருளில் தடவிக் கொண்டு திரிந்தோம்.

ஆனால் அந்த படையினன் கம்புபோல நின்றான். தூங்கி வழியவுமில்லை. அதிகம் பேசவுமில்லை. பேருந்து நகரும்போது அதன் படியிலேயே நின்றான். பேருந்து நிற்கும்போது இறங்கி வெளியில் நின்றான். வெறும் பச்சை நிறத்திலான சீருடை அணிந்திருந்த அவன் அழுக்கடைந்த பழைய கோல்சர் கட்டியிருந்தான். துப்பாக்கியை பக்கவாட்டாக சாதாரணமாக தொங்கப் போட்டிருந்தான். சிங்களம் பேசத் தெரிந்த ஒருவர் எங்கள் பேருந்தில் வந்ததால் அவரிடம் ஏதாவது சொல்வான்.

“நீங்க பாவம். இவ்வளவுபேர் வருவிங்க எண்டு எங்களுக்குத் தெரியாது. அரசாங்கம் சொன்னது கொஞ்சப்பேர்தான் வருவிங்க எண்டு. இவ்வளவுபேர் வருவிங்க எண்டு தெரிஞ்சிருந்தால் சாப்பாடு தண்ணியெல்லாம் நிறைய ஒழுங்கு செய்திருப்பம். நீங்க பாவம். கவலப் படாதிங்க” என்று அந்தப் படையினன் சொல்வதாக அவர் எங்களுக்குச் சொன்னார்.

அந்த இரவு எங்களை நித்திரையால் வதைத்தெடுத்தபின் விடிந்தது. அந்த விடியலின் பின் ஓமந்தை தடை முகாம் கண்ணுக்குத் தெரிந்தது. தண்ணீரை போத்தல்களில் சேமித்து வைத்திருந்தவர்களில் பலர் முகங்களைக் கழுவிக் கொண்டார்கள், நானும் மச்சாளும்கூட ஒரு ரம்ளர் தண்ணீரில் முகங்களைக் கழுவிக்கொண்டோம்.

அந்தப் படையினன் இப்போது எங்களுக்கு காலை உணவை தருவித்து பகிர்ந்தான். அவித்த பயறு சிறிய பொலித்தீன் பைகளில் பொதிகளாகக் கிடைத்தன. தண்ணீரும்கூட பெறக்கூடியதாக இருந்தது. நாங்களும் தடைமுகாமின் முட்கம்பி வாயிலை நெருங்க ஆங்காங்கே தெரிந்த மழைமேகங்களை விரட்டிவிட்ட சூரியன் சுள்ளென்று மேலே கிளம்பினான்.

“போயிட்டு வாங்க. நாங்க திரும்பி போறம்'' என்றுவிட்டு அந்த படையினன் புன்னகையோடு தலையசைத்தான். பேருந்தால் இறங்கும்போது நானும் அந்த சிறியவயதுப் படையினனுக்கு புன்னகைத்துவிட்டு “நன்றி” என்றுவிட்டு வந்தேன். 'அக்கே' என்று என்னை விழித்தவன் என் காயத்தைக் காட்டி 'என்ன நடந்தது' என்று அபிநயித்தான்.

“ஷெல். போயிட்டு வாறம்” என்று நானும் சைகையால் சொல்லிவிட்டு கையசைத்தேன். அவனும் மலர்ந்த முகத்துடன் கையசைத்தான். [illegible] யாக நல்ல அபி[illegible]ப்பிராயத்தை ஏற்படுத்திய படையினன் அவன்தான். இதற்கு முன்பும் எத்தனையோ படையினரை கடந்து சென்றிருக்கிறேன். சமாதான காலத்தில் நாங்கள் படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளுக்குள் சென்றுவந்தபோது எதிர்கொண்ட வக்கிரமும் குரோதமும் கொண்டவர்களாய் சந்தித்த படையினரின் நினைவுகளும் வந்தன. எத்தனையோ விசாரணைகளை நடத்தியிருக்கிறார்கள்.

'சமாதானம் முடியட்டும் சண்டை தொடங்கட்டும். உங்களையெல்லாம் அப்ப கவனிக்கிறன் கவனிப்பு என்று பற்களை நெருமிய படையினனும், என்னைய கலியாணம் கட்டுறது? ஆ? என்று இளித்த மோட்டார் சைக்கிளை சோதனையிட்ட படையினனும் நினைவில் வந்துபோனார்கள். எரிச்சலை ஏற்படுத்தக்கூடிய அவர்களது வினாக்களுக்கும் இவனது புன்னகைக்கும் ஏணிவைத்தாலும் எட்டாது. நல்ல குடும்பப் பின்னணியை கொண்டிருப்பான் போலும் என்று நினைத்துக்கொண்டேன்.

பேருந்துகளிலிருந்து இறக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்களையும் வீதியோரமாக அடைக்கப்பட்ட தனியான கம்பிவேலிக்குள் அமர்த்தினார்கள். நானும் மாமியின் அருகிலேயே குந்திக்கொண்டேன்.

“மாமி பெரும்பாலும் எங்களைப் பிரிச்சு எடுப்பாங்கள். அப்படி கூப்பிட்டால் நான் போறன். நீங்களெல்லாரும் போயிட்டு வாங்க'' என்றேன் மெதுவாக.

“என்னபிள்ள சொல்லுறாய்?'' என்று மாமி என் கையை பிடித்துக்கொண்டார். எனினும் அதுவே எங்களை பிரிக்கும் இடம் என்று எனக்கு விளங்கியது. அந்த நேரம் அதிகாரம் தெறிக்கும் குரலொன்று ஒலி பெருக்கியில் கர்ச்சித்தது. எங்களுக்கெதிரே இருந்த சிறிய அடைப்பொன்றுக்குள் நின்று தான் அவன் கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தான். கறுத்த, மெலிந்த உடல் வாகுடைய அவன் ஒரு வளைந்த கருங்காலித் தடிபோலத்தான் கண்ணுக்குத் தெரிந்தான். ஆனால் அவனது ஒவ்வொரு சொல்லும் இடிபோல முழங்கியது.

இயக்கத்தில இருந்தாக்கள் எல்லாரும் பாதைக்கு அங்கால போங்க. எத்தின வருசம் இருந்தாலும் சரி பாதைக்கு அங்கால போங்க. பதிஞ்சிட்டு நீங்க உங்கட வீட்டுக் காரரோடயே போகலாம். ஆனா எல்லாரும் பதியணும். பதியாம போய் நாங்க உங்கள பிடிச்சா பிறகு அம்மா அப்பாவோட விடமாட்டம். நேர்மையா எழும்பிப்போ போ. போ'' என்ற அவனது கட்டளை அந்த சனத்திரளுக்குள் இருந்தவர்களில் போராட்டத்தில் இருந்தவர்களை ஒவ்வொருவராய் எழுந்துசெல்ல வைத்தது. அவனது கண்கள் எங்களின்மீது மாறிமாறி நிலைத்திருக்க அவனது கடுங்குரல் தொடர்ச்சியாக அறிவித்தது.

“போ.போ. எழும்பிப்போ. ஒரு மாதம், ஒரு கிழமை, ஏன் ஒரு நாள்தான் நீ இயக்கத்தில இருந்தாலும் சரி முதல்ல எழும்பிப் போய் பதி. எழும்பு எழும்பு” என்ற அவனது குரல் ஒவ்வொருவரையும் முதுகுக்குப் பின்னால் நின்று எழுப்பி அனுப்புவதைப் போலத்தான் இருந்தது. சனங்கள் கலபுலவென்று எழுந்தார்கள். பலரையும் அவர்களது பைகளோடு பெற்றவர்களோ சகோதரர்களோ அழைத்துச்செல்ல முயன்றார்கள். பிடித்த கையை விடாமலேயே கூட்டிச் சென்று பதிந்துவிட்டு கையோடு கூட்டிக்கொண்டு வந்துவிடலாம் என்றுதான்.

“[illegible] அங்கால போகவேணாம். இயக்கத்தில இருந்தவன் மட்டும் போ. அவன் மச்சான் இவன் கச்சான் எண்டு எவனையும் உன்னோட கூட்டிக்கொண்டு போகாத. இயக்கத்தில இருந்த நீயா? நீ மட்டும் எழும்பு. போ. வரிசையில நில்லு'' என்ற அவனது குரல் ஒலிபெருக்கியில் வந்து காதுகளில் பலமாக அறைந்து நிலைமையைக் கட்டுப்படுத்தியது.

கண்ணீரும் கலவரமும் மீண்டும் முளைத்து பலரது மன அமைதியை பிடுங்கித் தின்றன. யாரெல்லாம் எழுந்து செல்வது என்ற தெளிவை அறிவிப்பாளன் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனது வார்த்தைகளின் கட்டளைக்கு கட்டுப்பட்டவர்கள் எழுந்து சென்றுகொண்டே இருந்தார்கள்.

தன் கணவன் எங்கே என்றே தெரியாத ஒருத்தி தன் பிள்ளையை உறவினரிடம் கொடுத்துவிட்டு “பதிஞ்சிட்டு வாறன், கொஞ்சநேரம் வைச்சிருங்க'' என்றுவிட்டு எழுந்துசென்றாள்.

“அவன்தான் சொல்றானே பதிஞ்சிட்டு வரலாம் எண்டு. நான் பதிஞ்சிட்டு வாறன். நீ இவங்களோடையே இரு'' என்று தன் மனைவியிடம் சொல்லிவிட்டு இன்னொருவன் எழுந்து சென்றான்.

“வாங்க ரெண்டுபேருமே போய் பதிவம். இப்ப பிரிஞ்சிட்டால் பிறகு தேடிப்பிடிக்கிறது கஸ்ரம்'' என்றாள் ஒரு இளம்பெண் தன் காதலனின் கையை பிடித்தபடி.

இல்லம்மா. நீ உங்கட அம்மாக்களோட போ. நீ ஒரு கிழமைகூட இயக்கத்தில இருக்கேல்லத்தானே. நான்தான் ரெண்டுமூண்டு வருசம் இருந்தனான். நான் மட்டும் பதியிறன். நீ பதியாமப் போ'' என்று அறிவுரை சொன்னவனின் கையை பிடித்து எழுந்து சென்றாள் அந்த இளம்பெண்.

உண்மையாகவே போராட்டத்தில் இருந்தவர்கள் சிலர் தமது குடும்பத்தைவிட்டு பிரியாமல் அமைதியாக இருந்துவிட்டார்கள். நான் எழுந்தபோது மாமியின் கண்கள் கலங்கிவிட்டன.

“போயிட்டு வாறன் மாமி. அங்கயும் நிறையப்பேர் போறாங்கதானே. அவங்களோட போறன். சமாளிக்கிறன்'' என்று அவரது தோளில் ஆறுதலாகத் தட்டிக்கொடுத்துவிட்டு நானும் எழுந்துசென்றேன். பாதைக்கு அடுத்த புறமாக நின்ற, இயக்கத்தில் இருந்தவர்களை வரிசைப்படுத்தி எண்ணினார்கள். வரிசை நகர்ந்தபோது என் கால்களும் நகர்ந்தன. சோதனைச் சாவடியின் பெரிய பெரிய கூடாரங்களில் அமர்த்தப்பட்ட பின்புதான் அவதானித்தேன். போராளிகளாக இருந்தவர்கள் இருத்தப்பட்டோர் பல்லாயிரக்கணக்காக இருந்தார்கள்.

சுருண்டு சுருண்டு படுத்துக் கொண்டும் எதிலாவது சாய்ந்து கொண்டும் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டும் செய்வதறியாது திகைத்துக் கொண்டும் கண்ணீரை வடித்துக்கொண்டும் இருந்த எண்ணற்றவர்களையும் பார்க்கப் பார்க்க என் இதயம் வெடித்தது. தலையைப் பிடித்துக்கொண்டு நிலத்தில் குந்திவிட்டேன்.

காயப்பட்டவர்களும் கைகால் இழந்தவர்களும் குழந்தைகளை சுமந்தவர்களும் காயங்களைச் சுமந்தவர்களும் ஆண்களும் பெண்களுமாய் சோதனைச்சாவடி முழுவதையும் நிறைத்தார்கள்.

பல்லாயிரம்பேர் காத்திருக்க பத்துக்கும் குறைவான பதிவாளர்கள் அமர்ந்திருந்து எங்களைப் பதிவுசெய்தார்கள். புகைப்படங்களையும் எடுத்தார்கள்.

நானும் படையினரிடம் சரணடைந்தவளாய் நினைத்தபோது என்னையே என்னால் நம்பமுடியவில்லை. வெறுமையும் வேதனையுமாக, ஒரு அரசியல் அனாதையாய் நானே எனக்குள் முடங்கிக்கொண்டேன்.

எனக்கென ஒரு தடுப்புமுகாம் வாழ்க்கை இருக்கிறது என்பதைப் பற்றியும் அவை என்னை மேலும் வறுத்தெடுக்கப்போகும் நிலைமை பற்றியும் சிந்திக்கத் தோன்றாதவளாய் அடிபட்ட காயங்களோடு கம்பித் தூணில் சாய்ந்துகொண்டேன். விழியோரம் கசிந்த கண்ணீரைத்துடைக்க எந்த விரல்களும் நீளவில்ல.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலீப்

# வெற்றிகள் தொடருமா?




இலங்கை அணி, உலக சாதனை சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் ஓய்வின் பின்னர் முதன் முறையாக டெஸ்ட் தொடரை வென்றி ருக்கின்றது. இந்த வெற்றியை தனது சொந்த மண்ணில் பெற்றிருக்கின்றது.

2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திலகரட்ன டில்ஷான் அணியை உரிய வகையில் வழி நடத்தத் தவறியிருந்தார். இலங்கை அணி டில்ஷானின் தலைமையில் எந்தவொரு தொடரையும் வெல்ல வில்லை. இந்த நிலையில் அவரிடமிருந்து மீளப் பெறப்பட்ட அணித்தலைமை மஹேல ஜெயவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

மஹேலவின் தலைமையில் ஆஸ்திரேலிய மண்ணில் இலங்கை அணி சாதித்திருந்தது. இறுதி ஆட்டம் வரையில் முன்னேறி ஆஸ்திரேலிய அணிக்கு கடுமையான சவாலை வழங்கியிருந்தது. அந்தளவு தூரத்துக்கு சவாலாக விளங்கிய இலங்கை அணி பங்களாதேஷில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணியிடமும் அடிவாங்கி நாடு திரும்பியது. அத்துடன் இங்கிலாந்து அணிக்கெதிராக இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரிலும் இலங்கை அணி தோல்வியைத் தழுவியிருந்தது.

மஹேல பொறுப்பெடுத்த பின்னர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முக்கோண கிரிக்கெட் தொடரில் சாதித்ததைவிட இலங்கை அணி வேறெந்த வெற்றிகளையும் பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் அணித் தலைமை மீதான விமர்சனங்களும் குறிப்பாக முன்னாள் அணித் தலைவரும் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான சங்காரவின் திறமைகள் மீதும் விமர்சனங்கள் எழுப்பப் பட்டிருந்தன.



இந்த நிலையிலேயே பாகிஸ்தான் அணியுடனான தொடரை இலங்கை அணி எதிர் கொண்டது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரையில் புதிய பயிற்சியாளராகப் பொறுப்பெடுத்துக் கொண்ட வட்மோர் தலைமையிலேயே இலங்கைக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தது. வட்மோர் உலகின் மிகச் சிறந்த பயிற்சியாளர் மட்டுமன்றி இலங்கை அணியை 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்ல வைத்தவரும்கூட. அதன் பின்னர் 2003 ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் பயிற்சியாளராக வட்மோர் தனது பணிகளைத் தொடர்ந்திருந்தார்.

இலங்கை அணி இவ்வாறான சவால்களுடனேயே பாகிஸ்தான் அணியை தனது சொந்த மண்ணில் எதிர்கொண்டது. '20-20' ஆட்டங்கள், 5 ஒரு நாள் ஆட்டங்கள், 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டது.

'20-20' ஆட்டங்களில் 1:1 என்று சமநிலையில் நிறைவு செய்திருந்தது. இந்த ஆட்டங்களில் இலங்கை அணி தனது திறமையை முழு அளவில் வெளிப்படுத்தியிருந்தது. இதன் பின்னர் 5 ஒரு நாள் ஆட்டங்களில் பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டது. பாகிஸ்தான் அணி ஆசியக் கிண்ணத்தில் இலங்கை அணியை தோற்கடித்திருந்தது. அதுமட்டுமல்ல ஆசியக் கிண்ணத்தையும் வென்றிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் கடுமையான ஒரு நாள் தொடரை இலங்கை அணி சந்தித்தது.

முதலாவது ஒரு நாள் ஆட்டம் மழை காரணமாக பாதித்திருந்த போதும் இலங்கை அணி 135 ஓட்டங்களை மாத்திரமே 42 பந்து பரிமாற்றங்களில் பெற்றிருந்தது. பாகிஸ்தான் அணி இந்த ஆட்டத்தில் 6 இலக்குகளால் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டிருந்தது.

இதன் பின்னர் எழுச்சி பெற்ற இலங்கை அணி பாகிஸ்தான் அணியைப் பந்தாடியது. இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் டில்ஷானின் சதமும், பெரேராவின் இலக்கு வேட்டையும் பாகிஸ்தான் அணியை தோற்கடிக்க உதவின. மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டிருந்தது. நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் சங்காவின் துடுப்பாட்டமும், பெரேராவின் பந்து வீச்சும் கைகொடுத்திருந்தது. ஐந்தாவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியின் விளிம்பு வரை சென்று மத்தியூஸின் தனிமனித ஆட்டத்தின் மூலமே வெற்றியைப் பெற்றிருந்தது.

இதன் பின்னரான டெஸ்ட் தொடரில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 209 ஓட்டங்களால் மாபெரும் வெற்றியைப் பதிவு செய்தது. சங்காவின் இரட்டைச் சதத்தை நோக்கிய ஆட்டம் இலங்கைக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. அதன் பின்னர் இரண்டு ஆட்டங்களும் சமநிலையில் முடிய இலங்கை தொடரை இரண்டு வருடங்களின் பின்னர் கைப்பற்றியது. ஒரு நாள் மற்றும், டெஸ்ட் தொடரை இலங்கை வென்றதுடன் '20-20' தொடரை சமன் செய்து தன்மீதான விமர்சனங்களுக்கு பதில் வழங்கியது.

சங்ககார தனது 'போர்மிற்கு' மீண்டமை இலங்கை அணியின் வெற்றிக்கு பெரும்பங்காற்றியது. டில்ஷானும் தனது பங்கினை திறம்பட நிறைவேற்றியிருந்தார்.

பெரேரா மீண்டும் தனது சகலதுறை ஆட்டத்தை வெளிக்காட்டிய அதேவேளை மத்தியூஸ் ஒரு சில ஆட்டங்களைத் தவிர மற்ற ஆட்டங்களில் சகலதுறை ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. திரிமன்னே, சந்திமால் முன்னேற்றத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் இலங்கை அணி தனது திறனை முழு அளவில் வெளிக்காட்டத் தயாராகியுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவுடனான ஒரு நாள் மற்றும் '20-20' ஆட்டங்கள் கொண்ட தொடரில் இலங்கை அணி தனது சொந்த மண்ணில் வைத்து இந்தியாவை எதிர்கொள்கின்றது.

இந்திய அணியும் தனது பலமான கூட்டணியுடனேயே களமிறங்குகின்றது. ஆனாலும் இந்திய அணிக்குள் வெடித்திருக்கும் தலைமைத்துவத்துக்கான போட்டி அந்த அணியின் வெற்றியைப் பாதிக்கக் கூடும். டோனி - சேவாக், டோனி - கம்பீர், ஹோக்லி - சேவாக், ஹோக்லி - கம்பீர் என்ற ரீதியில் உள்வீட்டுப் பிரச்சினை இந்திய அணியில் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இந்திய அணி இலங்கை மண்ணில் சாதிக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றமையை இந்திய அணியின் 2009 ஆம் ஆண்டு பருவ கால சுற்றுத் தொடர் வெளிக்காட்டுகின்றது. அந்தத் தொடரில் இலங்கை அணி தோல்வியைச் சந்தித்தன் விளைவாகவே மஹேல அணித்தலைமையிலிருந்து விடைபெற்றிருந்தார்.

ஆனால் இப்போது இலங்கை அணி பலமான வீரர்களைக் கொண்ட கூட்டணியாகத் திகழ்கின்றது. இதனால் இந்திய அணிக்கு அதிகப்படியான அழுத்தங்களை வழங்கி வெல்ல முடியும். இந்திய அணி, இலங்கையுடனான ஒரு நாள் தொடரில் 5:0 என்ற கணக்கில் வெற்றி பெறும் பட்சத்தில் ஒரு நாள் தரவரிசையில் முதலிடம் பிடிக்கலாம்.

இந்தத் தொடரை இந்திய அணி இழக்குமாக இருந்தால், ஏற்கனவே உள்வீட்டுப் பிரச்சினையாக வெடித்துள்ள தலைமைப் பதவி டோனியிடமிருந்து பிடுங்கப்படலாம்.

## சாதனை வீரர் மெல்பேர்ண் அணியில்

உலக சாதனைச் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் - ஆஸ்திரேலியாவின் பிக்பாஷ் தொடரில் பங்குபற்றுவதற்காக மெல்பேர்ண் றெனிகேர்ட்ஸ் அணியுடன் இணைந்துள்ளார். ஏற்கனவே இது தொடர்பான செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் தற்போது அது உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு பருவகாலத்தை ஆஸ்திரேலியாவில் விளையாட விரும்பியதாகத் தெரிவித்த முத்தையா முரளிதரன் அதற்காக மெல்பேர்ண் றெனிகேர்ட்ஸ் அணியுடன் விளையாடக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியதாகத் தெரிவித்தார்.

கடந்த தடவை முதலாவது பிக்பாஷ் போட்டியை நியூசிலாந்திலிருந்து பார்த்ததாகவும், அது சிறந்த தொடராகக் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

முத்தையா முரளிதரன் - மெல்பேர்ண் றெனிகேர்ட்ஸ் அணி சார்பாக விளையாடவுள்ள நிலையில் டெஸ்ட் உலகின் இரண்டாவது அதி கூடிய இலக்குகளைக் கைப்பற்றிய ஷேன் வோண் - மெல்பேர்ணைச் சேர்ந்த மற்றைய அணியான மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்காக விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் டெஸ்ட் உலகின் அதிகூடிய இலக்குகளைக் கைப்பற்றிய இரண்டு வீரர்களும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்த அணிகளில் எதிரெதிர் வீரர்களாகப் பங்குபற்றவுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் வைத்து பந்தை எறிகிறார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட முத்தையா முரளிதரன் அதன் பின்னர் ஆஸ்திரேலியாவில் வைத்து ரசிகர்களால் பந்தை எறிகிறார் என்று கேலி [illegible] நிலையில் ஆஸ்திரேலியாவின் பிராந்திய அணி சார்பாகப் பங்குபற்ற [illegible] ரசிகர்களுடனான முரளியின் உறவை வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [5]

## இர்பான் பதான் அணியில் இணைப்பு



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணியில் சகலதுறை வீரர் இர்பான் பதான் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்துள்ள வேகப்பந்து வீச்சாளர் வினய் குமாருக்குப் பதிலாகவே அவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான தொடரில் அறிவிக்கப்பட்டிருந்த வினய் குமார் - காலில் ஏற்பட்ட தசைக்கிழிவு காரணமாக ஆகக்குறைந்தது 3 வாரங்களாவது தொடரில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இலங்கைத் தொடரில் வினய் குமார் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வினய் குமாருக்கான மாற்று வீரராக இடதுகை வேகப்பந்து வீசும் சகலதுறை வீரரான இர்பான் பதான் சேர்க்கப்பட்டுள்ளார். முன்னர் அணி அறிவிக்கப்படும் போது இந்தத் தொடரில் இர்பான் பதானுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கான வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. எனினும் தற்போது வினய் குமாரின் காயம் காரணமாக அவருக்கு இந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கைக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணி 5 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்கள், ஒரு 'ரி-20' சர்வதேச ஆட்டம் ஆகியவற்றில் பங்குபற்றவுள்ளது. இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் இந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட விருப்பம் இல்லாதவரை கட்டாயப்படுத்த முடியாது



விருப்பமில்லாத ஒரு கிரிக்கெட் வீரரை, டெஸ்ட் தொடரில் விளையாடுமாறு கட்டாயப் படுத்த முடியாது. ஒருவருக்கு ஆர்வமிருந் தால் மட்டுமே டெஸ்ட் வீரராக உருவாக முடியும் என்று இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் டெண்டுல்கர் (வயது - 39). சர்வதேச கிரிக்கெட் தொடரில் பல சாதனை களைப் படைத்து, தொடர்ந்து ஆடி வருபவர். அண்மைக் காலமாக சச்சினுக்கு டெஸ்ட் தொடரின் மீது ஆர்வம் அதிகரித்துள்ளது. இதனால் ஒரு நாள் மற்றும் '20-20' தொடரில் விளையாட சச்சின் ஆர்வம் காட்டுவதில்லை.

இந்த நிலையில், ஆர்வமில்லாத இளம் வீரர்களை டெஸ்ட் தொடரில் விளையாடுமாறு அவர்களை கட்டாயப்படுத்த முடியாது என்று சச்சின் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:-

இந்தியாவுக்காக டெஸ்ட் தொடரில் விளையாட வேண்டும் என்ற கனவுடன் நான் வளர்ந்து வந்தேன். இதனால்தான் என்னால் டெஸ்ட் தொடரில் சாதிக்க முடிகிறது. இதற்காக ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கு சென்ற போதும், எனது பயிற்சியாளர்கள் விரும்பும் வகையில் கடும் பயிற்சியில் ஈடுபட்டே என்னை தயார்ப்படுத்தி கொண்டேன்.

இந்திய அணியில் நான், ராகுல் டிராவிட், கங்குலி போன்ற பல வீரர்களுடன் ஜோடி சேர்ந்து விளையாடியுள்ளேன். ஜோடி சேர்ந்து விளையாடும்போது, ஒவ்வொரு சூழ்நிலையிலும் தன்னுடன் ஜோடி சேர்ந்துள்ள வீரர் எப்படி விளையாடுவார் என்பதை புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெற 20 இலக்குகளை எடுக்க வேண்டியுள்ளது. இதற்கு வேறு குறுக்கு வழி எதுவுமில்லை. இதற்கு சிறந்த துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு மட்டுமே இருந்தால் போதாது, களத்தடுப்பு சிறப்பாக இருக்க வேண்டும்.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை பிடிக்க எல்லா அணி களும் முயற்சி செய்கின்றன. இந்திய அணியைப் பொறுத்தவரை அந்த எண்ணத்தை விட்டுவிட்டு, அடுத்து வர உள்ள நியூசிலாந்து தொடரில் வெற்றி பெற கவனம் செலுத்த வேண்டும்.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்க பல படிகளை கடக்க வேண்டியுள்ளது. எனவே நியூசிலாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா என்று பல அணிகளை வீழ்த்தி வரிசையாக வெற்றிகளை பெற்றால் அதை தானாக அடைந்துவிடலாம்.

எனது ஆட்டத்தை மற்றவர்களின் முன்பு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று நான் என்றும் எண்ணியதில்லை. கிரிக்கெட் தொடரில் தொடர்ந்து அனுபவித்து விளையாட வேண்டும் என்று நினைக்கிறேன் - என்றார். (5)

## தோற்றாலும் இவர்கள் தரமிறங்கவில்லை

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி படுதோல்வியடைந்து தொடரை இழந்தது.

ஒரு ஆட்டம் மழையால் ரத்துச் செய்யப்பட்ட நிலையில் 4 ஆட்டத்திலும் மைக்கல் கிளார்க் தலைமையிலான ஆஸ்தி ரேலியா அணி மண் கவ்வியது. இந்தத் தொடருக்கு முன்பாக ஆஸ்திரேலிய அணி 123 புள்ளிகளுடன் தரவரிசை பட்டியலில் முதலிடத்திலிருந்தது. தொடரை இழந்த போதும் ஆஸ்திரேலிய அணி 119 புள்ளிகளுடன் முதலிடத்திலேயே நீடிக்கிறது. தென்னாபிரிக்க அணி 2 ஆவது இடத்தில் [ 118 புள்ளிகள்] , இங்கிலாந்து அணி 3 ஆவது இடத்திலும் [ 118 புள்ளிகள்] உள்ளது. இந்திய அணி 4 ஆவது இடத்திலும் [117 புள்ளிகள்] உள்ளது.

ஒருநாள் போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய அணி 4 ஆட்டங்களில் தோல்வியடைவது இது 4 ஆவது முறையாகும். இதற்கு முன்னர் 1993, 94 இல் தென்னாபிரிக்காவுக்கெதிராக 8 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் 4 இல் தோல்வியடைந்திருந்தது.

1994,95 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான 5 ஒரு நாள் போட்டித் தொடரில் 1–4 என்று கணக்கில் உதை வாங்கியது. 2008,09 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 1–4 என்ற கணக்கில் படுதோல்வி கண்டது. மேலும், தொடரில் ஒரு ஆட்டத்தில் கூட வெல்லாமல் வெறுங்கையுடன் திரும்புவது இது 3 ஆவது முறையாகும்.

1997 இல் இங்கிலாந்துக்கெதிராக 0–3 எனவும், 2006,07 இல் நியூசிலாந்துக்கெதிராக 0–4 எனவும் ஆஸ்திரேலிய அணி தோல்வி கண்டிருந்தது. அதேவேளையில் இங்கிலாந்து அணி தொடர்ச் சியாக அதிரடி வெற்றிகளை குவித்து வருகிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவுக்கெதிரான தொடரை வென்றது.

அதன் பின்னர் பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான தொடரிலும் வெற்றி வாகை சூடியது. தற்போது ஆஸ்திரேலியா வையும் வீழ்த்தியுள்ளது. தொடர்ச்சியாக 10 ஆட்டங்களில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதும் தற்போதுதான் நடந்துள்ளது. [5]



## சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றும் ரோயல்ஸ் சலஞ்சர்ஸ்

ஐ.பி.எல். அணியான ரோயல்ஸ் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக இந்தப் பருவகாலத்தில் தொடரில் பங்குபற்றிய முன்னணி இந்திய, வெளிநாட்டு வீரர் களுக்கான ஊதியங்கள் இன்னமும் வழங்கப்பட வில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தாம தம் குறித்து வீரர்களுக்கு எதுவும் அறிவிக்கப்பட வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்தைச் சேர்ந்த டானியல் விற்றோரி, அன்ட்ரூ மன்டொனால்ட் உட்பட வீரர்கள் பலருக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பயிற்றுவிப்பாளர்கள், பயிற்றுவிப் புக் குழுவினர் பலருக்கும் இதே நிலை ஏற்பட்டுள்ளது.

ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் உரிமையாளரான விஜய் மல்லையாவின் நிறுவனம் கடனில் சிக்கிக் காணப்படும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே விஜய் மல்லையாவின் விமான சேவையான கிங் பிஷர்ஸ் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததன் காரண மாக விமானமோட்டிகள் சேவையில் ஈடுபட மறுப்புத் தெரிவித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வீரர்களுக் கான ஊதியம் தாமதப்படுவது ஒருபுறமிருக்க, தாமதப்படுவது குறித்து அணி நிர்வாகத்திற்கும், அணியின் பணிப்பாளரும் விஜய் மல்லையாவின் மகனுமான சித்தார்த் மல்லையாவிற்கும் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களுக்கு பதில்கள் கிடைக்கப் பெற வில்லை எனவும், அதுவே வீரர்களை அதிகம் பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5)

## மார்க் பௌச்சருக்கு பதிலாக ஏ.பி.டி. வில்லியர்ஸ்



தென்னாபிரிக்க அணியின் நிரந்த டெஸ்ட் இலக்குக் காப்பாளர் மார்க் பௌச்சர் சர்வதேச தொடரிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில் இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஏ.பி.டி.வில்லியர்ஸ் இலக் குக் காப்பாளராகச் செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் சர்வதேசப் தொடரில் இலக்குக் காப் பாளராக ஏற்கனவே செயற்படும் ஏ.பி.டி. வில்லியர்ஸ், தற்போது டெஸ்ட்தொடரிலும் இலக்குக் காப் பாளராகவுள்ளார்.

மார்க் பௌச் சரின் ஓய்வை அடுத்து தென்னாபி ரிக்கஅணிதமி சொலே கிலேயை மாற்று இலக்குக் காப்பாளராக இங்கிலாந் துக்கு அழைத்த போதிலும், முத லாவது ஆட்டத்தில் ஏ.பி.டி.வில் லியர்ஸே இலக்குக் காப்பில் ஈடு படுவதற்கான அத்தனை வாய்ப் புக்களும் உள்ளன. என்னவாறான அணியுடன் களமிறங்குவது என்பது குறித்து இன்னமும் கலந்துரையாடி வருவதாகத் தெரிவித்த ஏ.பி.டி.வில்லியர்ஸ், அடுத்த கட்டம் குறித்துத் தான் மிகுந்த ஆவலாக உள்ளதாகத் தெரிவித்தார். அணிக்குத் தேவையான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், தான் இலக்குக் காப்பில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக் கள் அனேகமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

தனது இலக்குக் காப்பில் அண்மைக்கால மாக அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த ஏ.பி.டி.வில்லியர்ஸ், தனது இலக்குக் காப்பு முன்னேறி வருவதை உணர்வதாகத் தெரிவித்தார். தான் ஐ.பி.எல். தொடரிலும், ஒரு நாள் சர்வதேச தொடரிலும், '20-20' சர்வதேச தொடரிலும் ஏற்கனவே இலக்குக் காப்பில் ஈடுபட்டதையும் அவர் ஞாபகமூட்டினார்.

உலகின் முதற்தர அணியைத் தீர்மானிக்க வுள்ள தொடராக அமையவுள்ள தென்னா பிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கு இடையி லான தொடருக்காக இங்கிலாந்து சென்ற தென் னாபிரிக்க அணியின் இலக்குக் காப்பாளர் மார்க் பௌச்சர் தனது இறுதித் தொடரில் பங்கு பற்றாமலேயே காயம் காரணமாக ஓய்வினை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு


# நாய்களை விடக் கேவலமான...

இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த ஒரே வழி இந்த இழி செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதே என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை நடைமுறைப்படுத்த புதிய சட்ட ஏற்பாடுகள் குறித்து நீதி அமைச்சுடன் பேசிவருவதாக சிறுவர், மகளிர் விவகார அமைச்சின் பதில் செயலாளர் அசோக அலவத்த தெரிவித்துள்ளார். பாலியல் துஸ்பிரயோகங்களைத் தடுக்க நாடளாவிய ரீதியில் விசேட அதிகாரிகள் குழு நியமிக்கப்படவுள்ளதாக சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்திருக்கிறார்.

சாதாரண மனிதர்கள், அதிகாரிகள் வகையாக இருந்து வந்த குற்றவாளிகளுள் இப்போது அரசியல்வாதிகளும் இடம்பிடித்துள்ளனர். ஆளும் கட்சி என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இது அனைத்து மட்டங்களிலும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

அதனாலோ தெரியாது . பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்குக் கடும் தண்டனை, அதற்கான சட்ட ஏற்பாடுகள் என்று குரல்கள் எழ ஆரம்பித்துள்ளன. ஆனால் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் தற்போது அதிகரித்துள்ள துஷ்பிரயோக எண்ணிக்கையை ஓரளவேனும் குறைக்க முடியும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் வழக்கு விசாரணை, பரிசோதனை அறிக்கைகள் என்று காலம் இழுத்தடிக்கப்படாது குற்றவாளிகளாக இனங்காணப்பட்டால் விரைந்து தண்டனை விதிக்கப்படவேண்டும். அது எப்படியான தண்டனை என்பது பற்றி அனைவருக்குமே தெரியப்படுத்த வேண்டும். அதன் மூலமாக என்றாலும் எதிர்காலத்தில் ஏனையவர்கள் அவ்வாறான குற்றமிழைப்பதை தவிர்க்க வேண்டும். அந்தச் சிந்தனையே இருக்கக் கூடாது. அது தண்டனையிலும் விசாரணையிலும் தங்கியுள்ளது.



இந்த ஆண்டில் இதுவரை சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கிறது. தவிர இந்த வருடத்தின் இதுவரையான காலம் வரை 975 சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன.

இவ்வாறு முறைப்பாடுகள் உள்ளபோதும் எந்தளவுக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன, குற்றவாளிகள் என்று உறுதிப்படுத்தப்பட்ட எத்தனைபேர் கைது செய்யப்பட்டனர், சந்தேகத்தின் பேரில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து குற்றவாளிகள் என இனங்காணும் வகையில் எத்தனை பேர் அந்த சந்தேக நபர்களில் உள்ளடங்கியுள்ளனர்? என்ற கேள்விக்கான விடைகள் திருப்தியளிப்பனவாக இல்லை.

சில இடங்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றாலும் அது பெற்றோரால் மூடி மறைக்கப்பட்டு விடுகிறது. அல்லது அந்தக் குற்றத்துடன் தொடர்புபடுபவர்களால் மூடிமறைக்கப்படுகிறது. தவறின் ஆதாரங்கள் இல்லாமல் செய்யப்படுகிறது. சில இடங்களில் அந்தப் பிரதேசங்களது அதிகாரிகளும் இதற்கு உடந்தையாகிவிடுகின்றனர் என்று கூறப்படுகின்றது. எதிர்கால நலன் கருதி பாதிக்கப்படுபவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால் குற்றவாளிகள் எதிர்காலத்தில் ஏனைய சிறுவர்கள் மீதும் துஷ்பிரயோகம் செய்யும் நோக்கம் இருக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுடன் ஆளுங்கட்சி அரசியல் வாதிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறி இவ்வாறானாவர்களை பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கட்டாக் காலி நாய்களுடன் ஒப்பிட்டிருந்தார். அந்தளவுக்கு துஷ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளை இழிவாகக் கூறித் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

ஆனால் இவ்வாறான அரசியல்வாதிகளை அமைச்சர் நாயுடன் ஒப்பிட்டதனைக் கடுமையாகச் சாடிய 'சத்வமித்ர' எனும் அமைப்பின் தலைவி, துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் அரசியல் வாதிகள் நாயைக் விடக் கேவலமானவர்கள் என்று கூறினார் ''கட்டாக் காலி அரசியல்வாதிகள்'' எனும் தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையொன்று ஆங்கில ஊடகம் ஒன்றில் பிரசுரமாகியிருந்தது.

நாய்கள் வீட்டில் இருந்தாலும் சரி, கட்டாக்காலிகளாக இருந்தாலும் சரி அவற்றின் பாலியல் வேட்கையைக் குட்டி நாய்களின் மீது காட்டுவதில்லை. குட்டி நாய்கள் உடல் ரீதியான வளர்ச்சியை அடையும் வரை அந்த வேட்கை பெரிய நாய்களிடம் இருப்பதில்லை. அவ்வாறான இழிவான செயல்களில் நாய்கள் ஈடுபடுவதில்லை. கட்டாக்காலி நாய்கள் கூட செய்யாத செயல்களை கட்டாக்காலி அரசியல்வாதிகள் செய்கிறார்கள். பாலியல் அரசியல்வாதிகள் நாய்களை விடக் கேவலமானவர்கள்.

இது ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தே. ஏனெனில் பாலியல் குற்றம் புரியும், சாதாரணமாணவர்கள் பிடிபட்டாலும் அரசியல்வாதிகள் கைது செய்யப்படுவதோ தண்டிக்கப் படுவதோ இல்லை. நீதிமன்றுக்கு செல்லாமலே அவர்கள் தப்பிவிடுகிறார்கள். கொண்டு சென்றால்தானே விசாரணை என்ற ஒன்றை எதிர்கொள்ள வேண்டும்.

என்ன நோக்கத்துக்காக பாலியல் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும். என்ற சட்ட ஏற்பாடு முன்னேடுக்கப்படுகிறதோ, அது வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் பொலிஸார் சிறுவர் மகளிர் விவகார அமைச்சு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகிய மூன்று பிரிவினரும் தமது கடமையிலிருந்து சிறிதும் பின்வாங்க முற்படக் கூடாது.

தற்போது அரசியல் கலப்பில்லாததென்று எதுவுமே இல்லை. அந்தக் கலப்பு வித்தியாசங்களைத் தூக்கியெறிந்து, அரசியல்வாதிகளின் அழுத்தத்தை விலக்கிவிட்டு இவர்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்களேயானால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டம் வெற்றியளிக்கும். முகம் பார்க்க முற்படின் இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிப்பதைத் தடுக்க முடியாது.

✱

# ராஜபக்ஷவின் தப்புக் கணக்கு

இந்தியப் பத்திரிகையான 'தினமணி' நாளிதழின் நேற்றைய (14.07.2012) ஆசிரியர் தலையங்கத்தின் விவரம் இங்கே தரப்படுகிறது.

ஜனாதிபதி ராஜபக்ஷவைப் பொறுத்தவரை, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் புலியின் கலையாத தடங்களில் மனக்கலக்கம் கொள்பவராகவே இருக்கிறார் என்பதை அவரது சமீபத்திய நடவடிக்கைகளும், அறிவிப்புகளும் வெளிப்படுத்துகின்றன.

அண்மையில் இங்கிலாந்து சென்ற ராஜபக்ஷ, அங்கு வாழும் புலம்பெயர் இலங்கைத் தமிழர்களின் கடும் எதிர்ப்பால் தனது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துவிட்டுத் திரும்பியதன் தொடர்ச்சியாகத் தமிழர்கள் வாழும் இலங்கை வடக்கு மாகாணத் தேர்தலை 2013 செப்ரெம்பருக்குப் பின்னர் நடத்தலாம் என்கின்ற முடிவை அறிவித்திருக்கிறார்.

தேர்தலைத் தள்ளிப்போட அவர் அளித்துள்ள முக்கியக் காரணம் வாக்காளர் பட்டியல்தான். தற்போதுள்ள வாக்காளர் பட்டியல் 30 ஆண்டுகள் பழமையானது. தற்போது இப்பகுதியில் அமைதி திரும்பியுள்ளதால், முன்பு புலிகளின் அச்சத்தால் வெளியேறிய தமிழர்கள் திரும்பிவந்து மெல்ல மெல்லக் குடியேறத் தொடங்கியுள்ளனர். ஆகவே புதிய வாக்காளர் பட்டியலைத் தயாரித்த பின்னரே இங்கே முறையாகத் தேர்தல் நடத்தப்படும் என்கிறது ராஜபக்ஷ அரசின் அறிவிப்பு. இது விவரமற்ற பேச்சா அல்லது திட்டமிட்ட சதியா என்பதுதான் நமது சந்தேகம்.

கடந்த மூன்று ஆண்டுகளில், வடக்கு மாகாணத்தில் இலங்கை அதிபருக்கான தேர்தல் நடந்தது. தமிழர்கள் வாக்களித்தார்கள். நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதிலும் தமிழர்கள் வாக்களித்தார்கள். அதிக இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது. சென்ற ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. அப்போதும் தமிழர்கள் வாக்களித்தார்கள். இப்போது மட்டும் ராஜபக்ஷவுக்கு ஏன் எல்லோரும் வாக்களிக்க வேண்டும் என்கிற திடீர் அக்கறை?

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளைக் கொண்ட வடக்கு மாகாணத்தில் தமிழர்கள்தான் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்றனர். ஆகவே வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றால், அங்கே ஒரு தமிழர் முதலமைச்சர் பதவிக்கு வருவார் என்பது நிச்சயம். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசு இல்லாத நிலையில், இலங்கை அரசே நேரடியாக நிர்வாகம் செய்யும் தற்போதைய அதிகாரம் குன்றிப்போகும். மாகாண அரசு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கட்டுப்பாட்டில் சென்றுவிடும். இந்த அச்சம்தான் ராஜபக்ஷவைத் தேர்தலைத் தள்ளிப்போட வைக்கிறது.

இலங்கையில் தமிழர்கள் அரசியல் சக்தியாக மாறிவிட்டால், ''மேலை நாடுகளின் தீயசக்திகள்'', வடக்கு மாகாணத்தைப் பயன்படுத்தி இலங்கையைப் பிளவுபடுத்தும் என்ற பொய்க்கருத்துகள் இலங்கைப் பத்திரிகைகளில் கசியவிடப்படுகின்றன. இது ராஜபக்ஷவை நியாயப்படுத்தும் ஏற்பாடுகள்.

இத்தகைய கருத்து, குறிப்பாக இங்கிலாந்து சென்று எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்க முடியாமல் ராஜபக்ஷ நாடு திரும்பிய பிறகு உருவாக்கப்பட்டது. அதாவது, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள், தமிழர்களின் கட்டுப்பா[illegible] மாகாண அரசை [illegible] திருப்பிவிடுவார்கள் என்கின்ற அச்சத்தால் ''மேலை நாடுகளின் தீயசக்திகள்'' என்றெல்லாம் பேசுகிறார்கள்.

வடக்கு மாகாணத்தில் தமிழர் ஆட்சி ஏற்பட்டால், உலகெங்கும் வாழும் இலங்கைத் தமிழர்கள் தங்கள் சகோதரர்கள் வாழுரிமை பெற்றதற்காக மகிழ்வார்கள். எனினும், அவர்களில் பெரும்பாலோர் தாயகம் திரும்பும் நிலையில் இல்லை. இரண்டாவது தலைமுறையின் விழுதுகள் புலம்பெயர்ந்த மண்ணில் வேர்கொண்டிருக்கின்றன. புதிய தொழில், வேலை என்று வாழ்க்கையை அமைத்துக் கொண்டுவிட்ட அவர்களின் இன்றைய விருப்பம் ஈழ மண்ணில் எஞ்சியுள்ள தாயகத் தமிழர்கள், சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதுதான். தங்கள் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கூடாது என்பதுதான் அவர்களது விருப்பமாக இருக்க முடியுமே தவிர, அரசியல் செய்வது அல்ல.

ராஜபக்ஷ சொல்லும் காரணத்தை உண்மையென்றே வைத்துக்கொண்டாலும், ஒரு தமிழரின் தலைமையில் வடக்கு மாகாணத்தில் ஆட்சி அமையும்போது மட்டுமே, புலம்பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் நம்பிக்கையுடன் தாயகம் திரும்புவார்களே தவிர, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படுவதற்காகத் தாயகம் திரும்ப மாட்டார்கள்.

[illegible] ராஜபக்ஷவின் உண்மையான [illegible] வேறாக இருக்கக்கூடும். ஏற்கனவே, கடந்த மூன்றாண்டுகளில் வடக்கு மாகாணப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் பணி அதிவிரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாகாணத் தேர்தலுக்கு முன்னால் கணிசமாகக் குடியேற்றம் ஏற்பட்டுவிட்டால், தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகள் குறைவாக இருக்கச் செய்துவிட முடியும் என்பதுதான் அதிபர் ராஜபக்ஷவின் திட்டமாக இருக்கக்கூடும்.

இலங்கையின் அரசியல் சட்டம் மாற்றப்பட்டு இந்தியாவைப்போல நாடாளுமன்ற ஜனநாயக முறை நடைமுறைக்கு வராதவரை, பெருவாரியான சிங்களவர்களின் பிரதிநிதி மட்டுமே சர்வ வல்லமை பெற்ற ஜனாதிபதியாக முடியும் என்கிற நிலைமை தொடரும்வரை, இலங்கைவாழ் தமிழர்கள் சம உரிமை பெற்று வாழ முடியாது என்பதுதான் நிதர்சன உண்மை. இதை வலியுறுத்த அங்கேயும் யாருமில்லை, இந்திய அரசும் தயாராக இல்லை, சர்வதேசத் தலைவர்களும் அக்கறை காட்டுவதில்லை.

இலங்கையின் அடிப்படைப் பிரச்சினையே இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரத்தில் முழுமையான பங்கு அளிக்கப்படவில்லை என்பதுதான். அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டதால்தான், ஏன் மறுக்கிறீர்கள் என்று கேட்டவர்களை வன்முறையால் ஒடுக்கி, மனித உரிமைகள் மிதிக்கப்பட்டபோதுதான் அந்த மண்ணில் மிதிவெடிகள் பரவலாகின.


இத்தனை காலத்துக்குப் பின்னர் அங்கே இயல்பான அரசியல் சூழல் தானாகவே எழுகிறது. அதை ஏன் ராஜபக்ஷ மறுக்க வேண்டும்? அவருக்கு உண்மையிலேயே ஜனநாயகத்தின் மீது மரியாதையும், தமிழர்கள் மீது அக்கறையும் இருக்குமேயானால், அவர் வடக்கு மாகாணத் தேர்தலைத் தள்ளிப்போடாமல் உடனடியாக நடத்த வேண்டும்.

நடத்தாமல் போனால்? ஒருவேளை, சரித்திரம் திரும்பக்கூடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிள்ளுக்கீரையாகும் கல்வி

சுகந்தன்




**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.4 வீதம் கல்விக்காக அரசால் செலவிடப் பட்டது. ஆனால் இன்று அது 1.9 வீதமாக குறைவடைந்துள்ளது. இது மத்திய வருமானம் கொண்ட நாடுகள் மாத்திரம் அல்ல மிகவும் வறிய நாடுகள் தமது கல்விக்குச் செலவிடும் நிதியை விடக் குறைவானதாகும்.**

ஆசிய நாடுகளைவிட, ஏன் உலகிலேயே சிறந்த கல்வியறிவுடைய நாடாக இலங்கை விளங்குகிறது என்ற பெருமிதத்தில் கடந்த பல வருடங்களாக நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இந்தியா போன்ற நாடுகளில் பல மக்கள் எழுத்தறிவு இல்லாமல் வாழ்கிறார்கள். அன்றாட நடைமுறைகளை அறிந்து கொள்ள பத்திரிகை வாசித்து அறியும் ஆற்றல் கூட இல்லாத நிலை பல நாடுகளில் உள்ளது. ஆனால் இலங்கையில் அவ்வாறில்லை.

சாதாரண குடிமகன் கூட ஓரளவுக்கு எழுத்தறிவு உடையவனாகக் காணப்படுகின்றான். மற்றைய நாடுகளில் இல் லாத வரப்பிரசாதமாக இலவசக் கல்வி முறை எமது நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளமை இதற்கு முக்கிய காரணமாகக் கொள்ளலாம். இலவசக் கல்வியின் தந்தை என்ற பெருமையை சி.டபிள்யு. டபிள்யு.கன்னங்கரா பெற்றுள்ளார். இவர் போன்ற அர்ப்பணிப்புள்ள தலைவர்களின் பெரும் முயற்சியால் ஏழை எளிய மக்கள் கூட சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் வாழும் பாக்கியம் கிடைத்துள்ளது.

இந்த விடயங்கள் நாம் அனைவரும் அறிந்தவையே!. இதை இன்று கூற வேண்டிய தேவை என்னவென்று பலர் மனதில் கேள்வி எழுவதை நான் உணர்கிறேன். நிச்சயமாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயமாக இது இன்று மாறிவிட்டது.

காரணம் பல பெற்றோர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வியர்வை சிந்தி உழைத்து தனது பிள்ளை பட்டதாரியாவான் என்ற கனவில் தமது கஷ்டங்களையும் மறந்து பிள்ளைகளை பல்கலை அனுப்பி விட்டுக் காத்திருக்கிறார்கள். ஆனால் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக அந்த மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளதை எத்தனை பெற்றோர் இதுவரை அறிந்திருப்பார்கள்.

இவ்வாறு பல மாதங்களாக பல்கலைக் கற்றல் செயற்பாடுகள் முடங்க அதை வேடிக்கை பார்க்கிறது அரசு. அரசு இந்த நாட்டில் கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விலக்கிக்கொண்டுள்ளதா? என்று எண்ணத் தோன்றுகிறது. நாடாளுமன்றத்திடம் ஏனைய தரப்பினரும் நடத்திய பல்வேறு கலந்துரையாடல்களுக்குப் பின் 1945ஆம் ஆண்டில் கல்விச் சேவை இலவசமாக எல்லா மக்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்த இலவசக் கல்வி மக்கள் போராட்டத்தின் ஊடாகப் பெறப்பட்ட உரிமை. மக்களுக்கு கல்வியை வழங்குதல் அரசின் கடமையாகவும், ஜனநாயகத்துக்கு இட்டுச் செல்லும் வழியாகவும் விளங்குகிறது. இன்று எமது பல்கலைக்கழக கல்விச் சமூகம் தனது போராட்டத்தில் ஏன் மும்முரமாக இறங்கியுள்ளது என ஆராய்வோமானால் வெறும் சம்பள உயர்வை மட்டும் மையமாகக் கொண்டு இந்த நீண்ட போராட்டம் நடத்தப்படவில்லை. இதற்கு முக்கிய காரணமாக விளங்குவது அரசின் கல்வித்துறை தொடர்பிலான அக்கறையின்மையே.

அரச நிதியீட்டம் பெறும் கல்வி முறைமையானது 1944 ஆம் ஆண்டில் இருந்து ஸ்தாபிக்கப்பட்ட நாள் முதல் இலங்கையில் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் தூண்களில் ஒன்றாக விளங்குகிறது. ஒரு இலங்கைப் பிரஜை தனது சமூக, பொருளாதார அந்தஸ்துக்குப் புறம்பாக உயர் தரமான கல்வியைப் பெறும் சந்தர்ப்பத்தை இக் கல்வி முறை உறுதி செய்கிறது. கல்வியானது இந்த நாட்டில் வாழும் பெரும்பாலான மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் சமூக நகர்வுக்கும் வழி வகுக்கும் ஒரு கருவியாக அமைந்துள்ளது. அத்துடன் வேறு பிரமாணங்களைத் தவிர்த்து திறமைக்கு முதலிடம் கிடைக்கவும் உதவுகிறது. எனவே என்ன விலை கொடுத்தேனும் இந்தஉரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து வரும் ஒவ்வொரு அரசும் பொதுத்துறைக் கல்வி முறையை அசட்டை செய்து அதை அழிவுப் பாதையை நோக்கி நகர்த்திச் செல்வதாக கல்வியியலாளர்கள் குற்றம் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.4 வீதம் கல்விக்காக அரசினால் செலவிடப்பட்டது. ஆனால் இன்று அது 1.9 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இது மிகவும் வறிய நாடுகளே கூடத் தமது கல்விக்குச் செலவிடும் நிதியை விடக் குறைவானதாகும். இந்தச் சிறிய முதலீட்டிலும் பல்கலைக்கழகத்துக்கு செலவிடும் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (G.D.P) 0.52 வீதம் மாத்திரமே. இது 2010இல் 0.27 வீதமாகவும், 2012 இல் இதைவிடச் சரிவு நிலையிலும் உள்ளது.

உலகளாவிய ரீதியில் ஏற்கப்பட்டவாறு உள்நாட்டு உற்பத்தியில் (G.D.P) ஆறு வீதமேனும் கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்பதே பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் கோரிக்கையாகும். இதைவிட பல்கலைக்கழகங்களில் பெரியளவில் விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகிறது. 40 வீதமான மாணவர்களே கற்பித்தலுக்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் தேவையான அடிப்படைப் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

போதிய வருமானம் கிடைக்காமையால் உயர் தகைமை கொண்டவர்கள் பல்கலைக்கழக ஆசிரியர் தொழிலில் நாட்டம் இன்றி வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கல்விக்கான முதலீடுகள் இறங்குநிலையில் செல்வது வேடிக்கையாக உள்ளது.

இன்றைய அரச கொள்கையைப் பின்பற்றினால் வெறுமனே 'மென்திறன்களை' மட்டும்தான் மாணவர்களுக்குக் கற்பிப்போம். உயர்கல்வி ஆழமற்றதாகவும், குறுகிய காலத்துக்கு மட்டும் பயனுடையதாகவும், அர்த்தமற்றதாகவும், வேலை வாய்ப்புக்களை உருவாக்காததாகவும் மாறிவிடும் என்று பேராசிரியர் ஒருவர் விளக்குகிறார். "உயர் கல்வி அமைச்சும் அரசும் இன்று நாம் எவ்வாறு பல்கலைக்கழகங்களை நடத்த வேண்டும் என்று எமக்கு கட்டளை போடுகிறமை கவலைக்குரியது" என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

மற்றும் தேவையற்ற அரசியல் தலையீடுகள் பல்கலை நிர்வாகத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ளது. இதனால் எந்தத் தீர்மானங்கள் எடுப்பினும் அது அரசுக்குச் சார்பாக எடுக்கப்பட வேண்டிய இக்கட்டு நிலையும் ஏற்பட்டுள்ளது.

இராணுவத்துடன் இணைந்து முன்னெடுக்கும் தலைமைத்துவப் பயிற்சி போன்ற அநாவசியமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தற்போதைய அரசு பெருந் தொகைப் பணத்தை அள்ளி வீசிவருகிறது. இந்த நிதியும் பல்கலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்தே எடுத்துக் கொடுக்கப்படுகிறது.

நாட்டில் கல்வித்துறை தொடர்பான செயற்பாடுகளையும் முன்னெடுக்க தகைமை ஈட்டிக் கொண்ட கல்வியியலாளர்கள் பலர் இருக்க கல்வி விடயத்தை இராணுவத்திடமும் அரசியல்வாதிகளிடமும் கையளிப்பது வேடிக்கையாக உள்ளதாக ஆசிரியர் சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது.

இது போன்ற செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்தி மீண்டும் எமது நாட்டின் அழியாச் சொத்தான கல்வியை பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# இடுக்குகளில் கசியும் உண்மைகள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள முடிகிறது. தடைப்பட்டியலிலிருந்து தப்பிப்பிழைத்த உள்ளூர் இணையங்களையும் அரசு சும்மா விடுவதாக இல்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்கோ ஒருநாள் அவை தம்மைக் குதறக்கூடும் என்ற அச்சம் அரசுக்கு உண்டு. எனவே அவற்றை இப்போதே தட்டிவைத்தால்தான் சரிவரும் என்ற நினைப்போடு இணையங்கள் மீதான தன் இரும்புப் பிடியை ஆட்சிபீடத்தினர் இறுக்கியுள்ளனர்.

இணையங்களை ஒரு லட்சம் ரூபா செலுத்தி பதிவுசெய்ய வேண்டும் என்றும் அந்தப் பதிவினை ஒவ்வொரு வருடமும் 50 ஆயிரம் ரூபா செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் தடாலடியாக ஒரு போடு போட்டுள்ளது அரசு. தனிநபர்கள் சிலரின் கைக்காசிலேயே பெரும்பாலான இணையத் தளங்கள் உயிர் [illegible] றன. உண்மை [illegible] வேண்டும் என்ற அவாவிலேயே அவர்கள் கைப் பொருளையும், நேரத்தையும் செலவழித்து இணையங்களை இயக்கி வருகிறார்கள். ஒருசில இணையத்தளங்கள் தம் விளம்பரத்துக்காகவும், வியாபாரத்துக்காகவும் சமூகச் சீரழிவான விடயங்களைப் பதிவேற்றினாலும் அநேக இணையங்கள் சமூக அக்கறையோடே தொழிற்படுகின்றன. இந்தச் சமூக அக்கறையின் விளை [illegible] ல் அரசின் அல்லது அரசு [illegible] பள்ளிகளின் உண்மை முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடுகிறது.

இது அவர்களின் எதிர்கால இருப்புக்கு உலைவைக்கும் விடயமாக மாறிவிடுவதால், இணையங்களைத் தடைசெய்ய அல்லது அவற்றின் குரல்வளையை நசுக்க அவர்கள் எல்லோரும் கூரிய நகம் கொண்ட தம் நச்சுக்கரங்களால் முயற்சித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆனாலும் ஆயிரம் கரம்கொண்டு மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை. உண்மைகள் அந்த நச்சுக்கரங்களைச் சுட்டெரித்துக்கொண்டு வெளிப்பட்டே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்புரண்ட தம்புள்ள

## பின்னணியும் பிரிவுகளும்

தமிழில்-தங்கா




தம்புள்ள பள்ளிவாசல் தொடர்பான சர்ச்சை தொடர்பான விவகாரத்தின் பின்னணி குறித்து அப்பிரதேசவாசியான கருப்பையா என்பவர் சிங்களத்தில் எழுதி அனுப்பிய கட்டுரையின் தமிழாக்கம் இது.

தம்புள்ள பள்ளிவாசல் இடிப்பு விவகாரம் நீறுபூத்த நெருப்பாக அமுங்கிக் கிடக்கின்றது. எனினும் சூடு பிடித்துவரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின் காற்று இன்னும் வேகமாக வீசத் தொடங்கினால் இந்த விவகாரம் விரைவில் கனன்று எழுந்து விஸ்வரூபம் எடுத்து எரியக்கூடும் என்ற எதிர்வு கூறலையும் நாம் ஒதுக்கிவிடமுடியாது.

தம்புள்ள புனிதப் பிரதேசம் என்று உரிமை கொண்டாடப்படும் பகுதியில் ஏனைய மதங்கள் சார்ந்த கட்டடங்கள், கட்டமைப்புக்கள் இருப்பது பற்றிய விவகாரமே சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது என்று எல்லோரும் எண்ணுகிறார்கள். அது அப்படி அல்ல.

வண. சுமங்கல தேரர் இப்பிரச்சினையில் மதரீதியிலான சகவாழ்வுக்கமைய நடந்து கொள்ளவில்லை. அரசியல் ரீதியிலான பழைய வன்மங்களைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே அவர் இவ்விடயத்தில் செயற்பட்டார் என்பது பலர் அறியாத விடயங்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தம்புள்ளத் தொகுதி பிரதம அமைப்பாளரும், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோனுடன் இருந்த பழைய வன்மங்களைத் தீர்த்துக் கொள்ளும் விதத்தில் இவ்விவகாரம் கிளறி விடப்பட்டது என்பதே உண்மை. வண. சுமங்கல தேரரின் அதீராத அரசியல் வன்மம், போராட்டக் கோஷங்கள், ஊடகப் பேட்டிகள், அறிவிப்புக்கள் என்பவையூடாக வெளிப்பட்டு வெடித்துப் பரவியது.

பிரதேசத்துக்குப் பொறுப்பான அரசியல் பலவான் என்ற ரீதியில் அமைச்சர் ஜனக பண்டார, தம்புள்ள புனிதபூமிப் பிரச்சினைக்கு, சகலராலும் ஏற்கத்தக்க நீதியான தீர்வொன்றைக் காண முயன்றிருந்தாலும் வண. சுமங்கல தேரரோ இனவெறிப் போக்கில் விடாப்பிடி பாணியில் பிடிவாதமாக நின்றார்.

புனிதபூமித் திட்டத்தைச் செயற்படுத்துவதில் ஏற்பட்டு வந்த தாமதம் என்ற குற்றச்சாட்டுக்கு மேலதிகமாக இம்முறை இஸ்லாம் மற்றும் இந்துமத வழிபாட்டுத் தலங்கள் புனிதபுமி பிரதேசத்துக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன எனக் கூறும் அளவுக்கும் பிரச்சினை நீண்டு சென்றது.

இஸ்லாமியர்களிடமிருந்து கப்பம் பெற்றுக்கொண்டு அமைச்சர் ஜனக பண்டார, அவர்கள் பக்கம் சார்ந்து பக்கப்பாட்டுப் பாடுகிறார் என விமர்சித்து வண. சுமங்கல தேரர் நேரடிப் போராட்டத்தில் குதித்தார். இவரது இப்போராட்டத்துக்கு மாத்தளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேலுமொரு நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவும் கிட்டியிருந்தது. அவர் கடந்த பொதுத் தேர்தல் வேளையிலிருந்தே அமைச்சர் ஜனக பண்டார மீதான தமது அரசியல் வன்மத்தை எந்த விதத்திலாவது தீர்த்துக்கொள்ளக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தவர்.

தம்புள்ள பிரதேசத்தில் வாழும் இந்து மதத்தவர் வழிபட்டுவந்த காளியம்மன் கோவிலுக்குத் தன் ஆதரவாளர்களுடன் சென்ற வண. சுமங்கல தேரர், அக்கோவிலை உடனடியாக அகற்றிவிடுமாறு ஆர்ப்பாட்டம் செய்து அச்சுறுத்தல் விடுத்ததுடன் இந்தப் போராட்டம் தொடங்கியது.

வண. சுமங்கல தேரரின் இந்த அருவருக்கத்தக்க விபரீத நாடகத்தைக் கண்ட அமைச்சர் ஜனக பண்டார, உயர்மட்ட அரசியல் ஆதரவுடன், சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தம்புள்ள பிரதேசத்தில் வாழும் சிங்கள - தமிழ் - முஸ்லிம் இனத்தவர்கள் தத்தமது மத வழிபாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அவர் இப்பிரச்சினையில் நடுநிலை நின்று செயற்பட்டுள்ளமையானது, இத்தகைய பிரச்சினையொன்று உருவாகும் வேளையில் கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க முண்டியடிப்போர் போன்று செயற்படும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் ஒரு பாடமாகும்.

கள யதார்த்தத்தின்படி புனிதபூமிகளின் எல்லைகளுக்கு வெளியே இஸ்லாமிய பள்ளிவாசல் போன்றே இந்துக் கோயில்களும் அமைந்துள்ளன என்று கூறப்படுகிறது. அதுவே உண்மையெனில், மற்றும் சில பௌத்த மதத்துறவிகளையும் தம்முடன் இணைத்துக் கொண்டு நாட்டையே குழப்பத்துக்கு உள்ளாக்கிவிட வண. சுமங்கல தேரருக்கு இருந்துள்ள தேவை என்ன?

வண. சுமங்கலதேரரின் இத்தகைய முயற்சி வெற்றிகண்டிருக்குமானால், இந்தநாட்டில் மற்றுமொரு இனக்கலவரம் தலைதூக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும். எனவே இனமென்ற ரீதியில் நாம் மென்மேலும் தீவிர அவதானத்துடன் செயற்படவேண்டியுள்ளது. இந்தவிடயத்தில், தம்மை பௌத்தர்கள் எனக் கூறிக் கொள்ளும் சில தேசத்துரோகிகளும்கூட வண சுமங்கல தேரருடன் இணைந்து செயற்படுகின்றனர். இது இனத்துரோக - தேசத்துரோக - குற்றமொன்றாகக் கொள்ளத்தக்கது.

வண. சுமங்கலதேரர் மேற்கொண்டு வரும் பெரும் வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக அவரிடம் போதிய பணமுள்ளது. அரசியல் பலமே அவரிடம் இல்லாததொன்று. அவர் தம்புள்ள மாநகரசபைத் தேர்தலுக்குச் சுயேச்சைக் குழுவொன்றை நிறுத்தியமை, தம்மிடம் இல்லாத அரசியல் பலத்தையும் ஈட்டிக் கொள்ளும் நோக்கிலானதொன்றே. ஆனால் தம்புள்ள மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் அக்குழுவின் நோக்கம் கனவாகிப் போனது அதனாலேயே அவர் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மீது காழ்ப்புணர்வு கொண்டார். தலைமைத் தேரர் என்ற அங்கீகாரம் ஈட்டியுள்ள பௌத்த தேரரொருவர் இவ்விதம் செயற்படுவது உண்மையில் கவலைக்குரியது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் என்று இந்தநாட்டின் சகல இனத்தவரும் நாட்டில் அந்நியோன்யமாக வாழ்வதைப் பொறுக்காத வண. சுமங்கல தேரர் தரப்பு - நாட்டு மக்களது அரசியல் ஆதரவு பெற்று நாடாளுமன்றத்தில் அல்லது மாகாண சபையில் பிரதிநிதித்துவம் பெற்றுக் கொள்ள இயலாத இத்தகைய தீவிர தீய சக்திகள் - நாட்டை நாசப்படுத்த முயற்சித்து வருவதை குறிப்பிட்ட தம்புள்ள சம்பவத்தின் மூலம் எம்மால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

# பொய்களுக்குக் கூச்சம் இல்லை

உசிலமணி -

உண்மைகள் எப்போதும் உறங்குவதில்லை என்ற உண்மை பலருக்குத் தெரிவதில்லை. ஓர் உண்மையை மறைக்கப் பொய்யைச் சொன்ன பின்னர் அந்தப் பொய்யை மறைக்க எத்தனை பொய்கள். உண்மை என்பது சர்வதிகாரிகளின் ஆட்சி அகராதியில் இல்லாததொன்று. இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை பேரினவாதிகளுக்கும் இது தகும்.

''அடக்குமுறையாளர்களுக்கு இருப்பது ஒற்றை வழியல்ல, பல வழிகளைத் திறப்பத்தில் கில்லாடிகள். எடுத்ததைப் போடுவதிலும், போடுவதை எடுப்பதிலும் கூச்சம் அவர்களுக்கிருப்பதில்லை'' என்ற புதுவையின் வரிகளும் இலங்கை அடக்குமுறையாளர்களின் உண்மை நிறத்தை தோலுரித்துக் காட்டுகின்றன.

உண்மையை மறைப்பதற்காய் அடிக்கடி பொய் சொல்லும் சிங்கள அரசு, அதற்காய் மாட்டிக் கொள்வதை வழக்கமாகவே கொண்டுள்ளது. தனது முகத்திரை கிழிந்தும் நாகூசாமல் மீண்டும் பொய் சொல்ல அவர்கள் தயங்குவதில்லை.

அண்மையில் இந்தியாவின் 'எக்கனமிக்ஸ் அன்ட் பொலிட்டிக்கல் வீக்லி' வார இதழின் செய்தியாளர் வடமாகாணத்திற்கு வந்து மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம், 5 பொது மக்களுக்கு ஓர் இராணுவச் சிப்பாய் இருப்பதாகத் தகவல் வெளியிட்டார்.

தனது உண்மை முகம் வெளிக்கொணரப்படுவதை விரும்பாத இலங்கை அரசு, உடனடியாகவே மறுப்பை வெளியிட்டது. இலங்கையின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூர்ய, யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரம் இராணுவத்தினரே நிலைகொண்டுள்ளனர், இந்திய வார இதழ் வெளியிட்ட செய்தி பொய்யானது என்று சொன்னார்.

இந்திய வார இதழ், வடமாகாணத்திலேயே 5 பொதுமகனுக்கு ஓர் இராணுவத்தினர் என்று குறிப்பிட்டிருந்ததே ஒழிய யாழ்ப்பாணத்தில் மட்டும் அவ்வாறு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. இராணுவத் தளபதியோ உண்மையை மறுப்பதற்காக பொய்யை திட்டமிடாது தெரிவித்திருக்கின்றார். வடமாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் தொகையை தெரிவிக்காது வெறுமனே யாழ். மாவட்ட இராணுவத்தினர் எண்ணிக்கையை தெரிவித்திருக்கின்றார்.

இதன் மூலம் போர் நடைபெற்ற பகுதியான கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் அதிகப்படியான இராணுவத்தினர் இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை அவர் தெளிவுபடுத்தவில்லை. அதனை விட இராணுவத் தளபதி யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரம் இராணுவத்தினரே உள்ளனர் என்று கருத்துரைப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இராணுவப் பேச்சாளர் யாழ்ப்பாணத்தில் 15 ஆயிரத்து 600 இராணுவத்தினர் உள்ளனர் என்று குறிப்பிட்டார். இதனை விட யாழ். மாவட்ட இராணுவத் தளபதி கடந்த ஜூலை மாதம் சிங்கள நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலிலும், யாழ். மாவட்டத்தில் 15 ஆயிரத்து 600 இராணுவத்தினர் உள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனடிப்படையில் வடக்கில் 5 பொது மகனுக்கு ஓர் இராணுவ வீரர் என்ற உண்மையை மறைக்கவே இராணுவத் தளபதி பொய்யுரைத்திருக்கின்றார் என்பது தெட்டத் தெளிவாகின்றது.

இதனைப் போன்றே இது நாள் வரையிலும், இறுதிப் போரில் படையினர் எந்த விதமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடவேயில்லை என்று கோயில்களில் கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்யாத குறையாகக் கூறி வந்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தற்போது தன் வாயினை மெல்லத் திறந்து, மேலிடத்துக்குத் தெரியாமல் சில இராணுவ வீரர்கள் தவறு செய்திருக்கலாம் என்று தெரிவித்திருக்கின்றார்.

'சனல் -4' ஊடகம் ஆதாரத்துடன் இராணுவத்தினரின் கொடுமைகளை வெளியிட்டபோது, ஆட்சியாளர்களின் பல்லவியாக அவற்றை மறுதலித்திருந்தது இலங்கை அரசு. அத்துடன் தமது சிங்கள இராணுவத்தினர் உத்தமர் என்றும் சில தேசத்துரோகிகளே இவ்வாறான பொய்பரப்புரைகளை மேற்கொள்கின்றனர் என்றும் அரசு வாதிட்டிருந்தது.

காலம் மெல்ல செல்ல செத்த உண்மைகள் மெல்ல மெல்ல வெளிக்கிளம்பத் தொடங்கியுள்ளன. அதனடிப்படையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ சில நாள்களின் முன்னர் தெரிவித்த கருத்தும் அமைந்திருக்கின்றது. தலைமைப் பீடத்துக்கு தெரியாமல் இராணுவத்தினர் சிலர் தவறுகள் இழைத்திருப்பர் என்று சொல்லி தான் தப்பும் தந்திரத்தையே கோத்தா கடைப்பிடிக்கின்றார். என்றோ ஒரு நாள் உண்மைகள் உலகுக்கு முற்றாகத் தெரிய வருகின்றபோது, தானும் விலங்கிடப்பட வேண்டிவரும் என்பதால் முற்கூட்டியே தனது தலையைக் காப்பாற்ற இவ்வாறு அவர் சொல்லியிருக்கலாம். இதன் மூலம் இலங்கை அரசின் தேசத்துரோகி வரைவிலக்கணத்தையும் சில வேளைகளில் மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

இதனைப் போன்றே இறுதிப் போரில் பொதுமக்கள் கொல்லப்படவேயில்லை என்றுரைத்த அரசு, சிறு தொகையிலான பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நீண்ட காலத்தின் பின்னர் தனது வாயைத் திறந்திருந்தது. இதன் தொடர்ச்சியாகவே இராணுவத் தளபதியும் எடுத்த எடுப்பில் இந்திய வார இதழில் செய்தியை மறுதலிக்கின்ற போதும் பின்னர் அதனை ஒப்புக் கொள்ளக் கூடும்.

உண்மைகள், அரச ஆட்சியாளர்களுக்கு என்றும் பன்மடங்கு உறைப்பாக இருப்பதால் அதனை அவர்கள் விரும்புவதில்லை. ஆனாலும் அதை மறைக்க முடியாதென்பதும் அவர்களுக்குத் தெரியும். எனவே உண்மையை உடனடியாக மறைப்பதும் பின்னர் ''ஆறின கஞ்சி பழங்கஞ்சி'' என்பதைப் போல அந்தக் கதை மெல்லத் தேய்கையில் உண்மையை மெதுவாகக் கக்குவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளது இலங்கை அரசு.

இன்னும் என்ன உண்மைகளை இலங்கை அரசு கக்குமோ ?

✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் சிங்

■ பழ. நெடுமாறன்

